விலை: யாழ்.- ரூ.30, வன்னி ரூ.20

பக்கங்கள் 52

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
இடியுடன் கூடிய மழை

சுடர் 30 | கதிர் 171 | வள்ளுவர் ஆண்டு 2046 | வைகாசி 03, ஞாயிற்றுக்கிழமை 17.05.2015

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளை உணர்வெழுச்சியுடன்



தாயகமெங்கும் நினைவு நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 18
இலங்கை அரசால், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பின் நினை வேந்தல் நிகழ்வான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நாளை 18ஆம் திகதி திங்கட்கிழமை தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், தமிழகத்திலும், தமிழ் மக்கள் வசிக்கும் புலம்பெயர் தேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.
2009 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது அரச படைகளின் பல்வேறு விதமான தாக்குதல்களில் கொத்துக்கொத்தாகப் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். மே மாதத்தின் 12 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையிலான பக்.25

## மரதன் ஓட்டத்தில் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, மே 17
தேசிய எரிசக்திப் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு ஏற்பாடு செய்திருந்த மரதன் ஓட்டப்போட்டியில் ஜனா திபதி மைத்திரிபால கலந்துகொண்டார்.
இந்த வேலைத்திட்டம் நேற்றுச்சுதந்திர சதுக்கத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து பக்.25

## தமிழ் பௌத்த சர்வதேச மாநாடு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

கொழும்பு, மே 17
தமிழ் பௌத்த சர்வதேச மாநாடு அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக தமிழகத்திலிருந்து 65 மதகுருமார் வரையில் வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்து பௌத்த நல்லுறவை பக்.25

## சம்பூர் பகுதியில் மக்களைக் குடியேற்றுவதில் தடங்கல்

ஜனாதிபதியின் வர்த்தமானிக்கு உயர் நீதிமன்று இடைக்காலத் தடை

திருமலை, மே 17
முதலீட்டு வலயத்துக்கு வழங்கப்பட்ட சம்பூர் காணியை ரத்துச் செய்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமானிப் பத்திரத்துக்கு உயர் நீதிமன்றம் இடைக் காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதனால் சம்பூர் மக்களை மீளக்குடி யமர்த்தும் நடவடிக்கையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.
சம்பூரில் இடம்பெற்ற போரின் காரணமாக 2006 ஆம் ஆண்டு அந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். பக்.25

## செம்மணி விபத்தில் இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், மே 17
யாழ். செம்மணி வீதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள் ளார். நாயன்மார்கட்டு இராணி வீதியைச் சேர்ந்த சிவலிங்கம் துசிதரன் (வயது 29) என்பவரே உயிரிழந்துள்ளார்.
ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் வாகனமும் இளைஞரின் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சியில் 'சங்கென்' நிறுவனத்தின் பொறியியலாளராகப் பணியாற்றும் இவர் நேற்று அதிகாலை அங்கிருந்து பக்.25

## எகிப்தின் முன்னாள் ஜனாதிபதிக்கு சாவுத் தண்டனை



கெய்ரோ, மே 17
எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முஹம்மது முர்ஸிக்கு நேற்று சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எகிப்திய வரலாற்றில் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி முர்ஸி. இவர் தனது ஒரு வருட ஆட்சிக் காலத்தின் பின்னர் பக்.25

## போரில் உயிர் நீத்தோரை அஞ்சலிக்கத் தடையில்லை

பொலிஸாரும் தடுக்கமாட்டார்கள் என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, மே 17
தமிழர்கள், போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவு கூரலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. அது அவர்களின் உரிமை. அதனைப் பொலிஸாரும் தடுக்கமாட்டார்கள் என்று பொலிஸ் பக்.25

## வடக்கு -கிழக்குப் பகுதியில் தேர்தல் தொகுதிகள் மாறா

பிரதான கட்சிகள் இணங்கின என்கிறார் அமைச்சர் திகாம்பரம்

கொழும்பு, மே 17
வடக்கு – கிழக்கில் தற்போது தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையை மாற்றியமைக்கக் கூடாது என்ற கோரிக்கைக்கு, பிரதான கட்சிகள் இணங்கியுள்ளதாக தேர்தல் முறைமை மாற்றியமைப்பது பக்.25

## அஞ்சலியைத் தடுப்பது உரிமை பறிக்கும் செயல்

கண்டிக்கிறார் சோபித தேரர்

கொழும்பு, மே 17
தமிழ் மக்கள் போரில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர்வதை தடுப்பது, அவர்களின் உரிமைகளையும் – உணர்வுகளையும் பறிக்கும் செயல் என்று, சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் மாதுளுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.
ஆயுதப் போராட்டம் முற்றாக முடிவுக்குக் கொண்டுவந்த பின்னரும் கடந்த ஐந்து ஆண்டுகளில் தொடர்ச்சியாக போர் வெற்றியை மட்டுமே சுட்டிக்காட்டி அரசு ஆட்சி செய்தது. ஆயுதப் போராட்டம் வடக்கில் மக்களிடையே மிகப்பெரிய தாக்கத்தை ஏற் படுத்தியிருந்த நிலையில் தொடர்ச்சியாக அந்த மக்களைப் பயங்கரவாதிகளாக சுட்டிக்காட்டி இனவாத அரசியலை முன்னைய தலைவர்கள் கையாண்டார்கள் என்றும் பக்.25

## 4 பரல் ஆயுதம் ஊரெழுவில் மீட்பு

யாழ்ப்பாணம், மே 17
ஊரெழு மேற்கில் உள்ள வீடு ஒன்றில் 4 பிளாஸ்ரிக் பரல்களில் ஆயுதங்கள் பாதுகாப்பாக நிலத்தில் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் கடிதமும் காணப்படுகின்றது.
குறித்த வீட்டுக்காரர் வீடு கட்டுவதற்காக அத்திபாரம் வெட்டியபோதே 4 பிளாஸ்ரிக் பரல்களையும் கண்டுள்ளார். அதில் ஒன்றை உடைத்துப் பார்த்தபோதே அவற்றில் ஆயுதங்கள் இருப்பது தெரிய வந்தது.
அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பக்.25


யாழ் நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்டு, குளிரூட்டப்பட்ட
பிரம்மாண்டமான காட்சியறை திறப்பு விழா அழைப்பு
112. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்
எதிர்வரும் 20.05.2015 காலை 9.00 மணிக்கு மங்கலகரமாக திறந்து வைக்கப்படுகிறது
Abi Fashion World அபி பெஷன் வேல்ட்
ஆடவர், பெண்கள், குழந்தைகளுக்கான நவீன ஆடை வகைகள் மற்றும் வீட்டு உபகரணங்கள்,
அழகு சாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்.

திறப்பு விழாவை தொடர்ந்து 3 நாள்களும் விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.
021 222 3738

ஐந்துக்கு பத்து %
* உங்கள் 5 வருட நிலையான வைப்புக்கு ஆகக்கூடிய 10% வட்டி (நிறைவடையும் போது)
வ.நி.வீ. 8.45%

| | 3 மாதங்கள் | 6 மாதங்கள் | 1 வருடம் |
|---|---|---|---|
| நிறைவடையும் போது (வ.நி.வீ) | 7.25% | 7.50% | 8.25% |
| வ.நி.வீ | 7.45% | 7.64% | 8.25% |

வேறு நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
மேலதிக விபரத்துக்கு அருகில் உள்ள சனச அபிவிருத்தி வங்கியை நாடுங்கள் அல்லது அழையுங்கள் 0242 227 928
SDBL சனச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நினைவாலயத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், ச.சுகிர்தன், வே.சிவயோகம், எ.அனந்தி ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (த-10-20)

# நினைவேந்தலுக்கு இடைக்கால தடை

## முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்தது

யாழ்ப்பாணம், மே 17

நினைவேந்தல் நிகழ்வுகளை முள்ளிவாய்க்காலில் மேற்கொள்வதற்கு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இருப்பினும், வடக்கு மாகாண சபையின் நினைவேந்தல் நிகழ்வு, முள்ளிவாய்க்காலில் நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் நாளை காலை 11 மணிக்கு, முள்ளிவாய்க்காலிலும், மட்டக்களப்பின் வாகரையிலும் செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தினால், அதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரியின் சமர்ப்பணத்தைக் கருத்தில் கொண்டு, முள்ளிவாய்க்கால் உட்பட முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு உட்பட்ட இடங்களில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினாலும் ஏனையவர்களினாலும் நடத்தப்படவுள்ள பொதுமக்கள் கலந்து கொள்ளும் பேரணியை தடுத்து நிறுத்தாவிடின் சமாதானக் குலைவு ஏற்படும் என்று மன்று கருதி குறித்த பேரணியை நடத்தக் கூடாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன், உட்பட ஏனைய அனைவருக்கும் இடைக்கால தடை உத்தரவை மன்று விடுப்பதாக, நீதிமன்றக் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி மீளவும் எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, நாளை காலை 10 மணிக்கு முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-5)

# சங்கானை கிணறுகளில் கழிவு ஒயில் இல்லை

*பரிசோதனைகள் மூலம் உறுதி*

யாழ்ப்பாணம், மே 17

சங்கானை நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதியிலும், கிணறுகளில் கழிவு ஒயில் இல்லை என்று, பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக வலி.மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் அறிவித்துள்ளார்.

சங்கானை நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பிரதேச சபையின் உப – அலுவலகப் பகுதியிலும் கழிவு ஒயில் கலந்துள்ளதாக பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து நீர் மாதிரிகள் உரிய தராதரத்துடன் பெறப்பட்டுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

சங்கானையிலுள்ள பிரதேச சபையின் உபஅலுவலகத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் பாதிப்பு இல்லை என்று பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

எனவே சங்கானை வாழ் மக்களும், அயற் பிரதேச மக்களும் எதுவித தயக்கமும் இன்றி குடிதண்ணீரைப் பயன்படுத்தலாம் என்று தவிசாளர் தெரிவித்துள்ளார். (த-5)

# உள்ளூராட்சிச் சபை நீடிப்பு மக்களுக்குத் துரோகமாகும்

## ஜனாதிபதி மைத்திரிபால கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 17

நாடாளுமன்றமோ மாகாண சபைகளோ உள்ளூராட்சி மன்றங்களோ அவற்றின் காலம் முடிந்த பின்பும் அத்னை மேலும் நீடித்துக் கொள்வது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அக்குறணையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

மக்கள் பிரதிநிதிகளின் மன்றங்கள் அவர்கள் வழங்கிய ஆணைக்காலங்களின் மேல் நீடிக்கப்படக்கூடாது ஆயுட்காலம் முடிவடைய முன்னர் உள்ளூராட்சி சபைகளை கலைப்பதாக சிலர் போலி விமர்சனம் செய்கின்றனர். மார்ச் 10 ஆம் திகதியுடன் 234 உள்ளூராட்சிச் சபைகளின் ஆயுட்காலங்கள் முடிந்துவிட்டன. எனினும் மே 15 வரை அவற்றை நீடித்தோம். இனிமேலும் இதை நீடிக்க முடியாது.

இவை மக்களுக்குச் சமீபமாக இருந்து கிராம மக்களின் நிர்வாகத் தேவைகளை மட்டுமன்றி கலை, கலாசாரம் இன்னோரன்ன பணிகளைச் சிறப்பாக நடத்தி வந்தன. இந்த காலத்தில் குறிப்பாக கிராம மக்களினால் நன்கு அறியப்பட்டுள்ள ஒருவரே வேட்பாளருக்கு முன்நிறுத்தப்படுவர்.

நீதிமன்றங்கள் அரசியல் அழுத்தங்களுக்கு அடிபணிந்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து நீதிமன்ற சுயாதீனத்தை உச்ச அளவில் உறுதிப்படுத்திப் புதிய அரசு செயற்பட்டு வருகிறது.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க போன்றோர் நீதிமன்றத்துக்கு விடுத்த வேண்டுகோளுக்கு எவ்வித அரசியல் அழுத்தங்களுமின்றிச் சுயாதீனமான தீர்ப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. இது அரசின் சுயாதீன செயற்பாடாகும்–என்றார். (த-4)

# முற்போக்குத் தமிழ்க் கட்சியின் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், மே 17

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிர் நீத்த அனைத்து உறவுகளின் ஆத்ம சாந்திக்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட அமைப்பாளர்கள் தலைமையில் கிறிஸ்தவ தேவாலயங்களில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைத் திருப்பலிகள் நடைபெறவுள்ளதாக கட்சியின் செயலாளர் நாயகம் எஸ். விஜயகாந்த் தெரிவித்தார்.

அத்துடன் இன்று முற்பகல் 10.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கடற்கரையில் புண்ணியாதானமும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையும் செய்யப்படவுள்ளதாகவும், இறுதியாகப் போர் நடைபெற்ற முள்ளிவாய்க்காலில் முல்லை மாவட்ட அமைப்பாளர் க.டக்ளஸ் தலைமையில் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாளை திங்கட்கிழமை நினைவுச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்துவதற்கும் ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-10)

# இனி ஒரு உயிரும் அழிக்கப்படக்கூடா

## புங்குடுதீவு மாணவி கொலை குறித்து அமைச்சர் டெனிஸ்வரன் கண்டனம்



யாழ்ப்பாணம், மே 16

உள்நாட்டுப் போரில் நாம் இழந்த உயிர்கள் போதும். இனி ஒரு உயிர்கூட அழிக்கப்படக் கூடாது எனத் தெரிவித்துள்ளார் வட மாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரன்.

புங்குடுதீவு பாடசாலை மாணவியின் கொலை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்,

எமது தமிழ் மக்கள் உள்நாட்டுப் போரினால் கொல்லப்பட்ட பின்பு தற்போது ஒரு சுமுகமான சூழலில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான வேளையில் வாள்வெட்டுக்களும், கொள்ளைகளும்இ கொலைகளும் பாலியல் பலாத்காரங்களும் அதிகரித்துள்ளமை மிகவும் வேதனையளிக்கின்ற விடயமாகும். அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்திலே பாலியல் பலாத்காரங்களும் கொலைகளும் அதிகரித்துள்ளன. குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் பொலிஸாரும் பொதுமக்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

யாழ். மாவட்டத்திலும் சரி ஏனைய மாவட்டங்களிலும் தற்போது போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளமையும் கொலைகள் கொள்ளைகளுக்கு காரணமாக அமைகின்றன. இவ்விடயத்தில் பொலிஸாருடன் இணைந்து எமது சமூக அமைப்புக்களும் சிவில் குழுக்களும் இணைந்து குற்றவாளிகளையும் அதற்கு உடந்தையாக உள்ளவர்களையும் இனம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி அதிகூடிய தண்டனையை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும்.

கடந்த காலங்களில் பல குற்றவாளிகள் ஏதோ ஒரு வகையில் தண்டனையில் இருந்து தப்பி விடுகின்றனர். இதனால் குற்றம் செய்பவர்களுக்கு பயம் அற்று விட்டது. இனிவரும் காலங்களில் குற்றவாளிகளுக்கு தண்டனையை பெற்றுக் கொடுக்க சட்டத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் குற்றவாளிகளை காப்பாற்றும் முனைப்புடன் செயற்பட வேண்டாம். அதிகபட்ச தண்டனைகளை வழங்குவதன் ஊடாகவே சமூகத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

கடந்த புதன் கிழமை புங்குடுதீவில் கூட்டு வன்புனர்வின் மூலம் கொடூரமாக கொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவியின் கொலை தொடர்பாக அக்குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அதிகபட்சதண்டனையை பெற்றுக் கொடுக்க பொலிஸார் தீவிரமாக செயற்படவேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-10)

# காணாமற்போன 14 வயதுச் சிறுமி சண்டிலிப்பாய் பகுதியில் மீட்பு

முல்லைத்தீவு,மே 17

காணாமற்போன 14 வயதுச் சிறுமி பெற்றோரால் சண்டிலிப்பாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டார்.

இதுபற்றி தெரியவருவதாவது:–

கடந்த மாதம் 27 ஆம் திகதி முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் பிரிவிலிருந்து பாடசாலைக்கு மேலதிக வகுப்பிற்கு செல்வதாகப் பெற்றோருக்கு கூறிவிட்டு சென்ற 14 வயது மாணவி காணாமற் போனதாக மறுநாள் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பெற்றோருக்கு நேற்றைய தினம் (15ஆம் திகதி)கிடைத்த தொலைபேசி தகவலையடுத்து சண்டிலிப்பாய்க்கு விரைந்த பெற்றோர் சிறுமியை மீட்டு வந்து நேற்றுக் காலை முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதனையடுத்துச் சிறுமியிடமும் பெற்றோரிடமும் விசாரணைகளை மேற்கொண்டுவரும் முள்ளியவளைப் பொலிஸார், மருத்துவப் பரிசோதனைக்காக சிறுமியை மாஞ்சோலை மருத்து வமனையில் அனுமதிக்கவுள்ளதா கவும் மருத்துவ அறிக்கைக்குப் பின்னரே மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தனர். (த-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவி வன்புணர்வுக் கொலை: மைத்திரிக்கு முறையிட முடிவு

யாழ்ப்பாணம், மே 17
புங்குடுதீவுப் பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமையை வன்மையாகக் கண்டிப்பதாக வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.நாகரஞ்சினி ஐங்கரன் தெரிவித்துள்ளார். இது பற்றி நாட்டின் ஜனாதிபதிக்கும் முறையிட உள்ளதாக அவர் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
எமது தேசத்தில் வரலாற்று ரீதியாக இவ்வாறான சம்பவங்கள் பதிவாகி உள்ளன. குறிப்பாக வன்புணர்வுக்கு உடபடுத்தப்பட்டு கொல்லப்பட்ட கிருஷாந்தி முதல் எத்தனையோ மாணவிகள் இவ்வாறான சம்பவங்களுக்கு உட்பட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் காமுகர்களைச் சட்டத்தின் முன்நிறுத்திப் பொது மக்கள் முன்னால் தண்டனை வழங்கப்படவேண்டும். இந்த நாட்டில் பெண்களுக்கு மாணவிகளுக்குப் பாதுகாப்பு உள்ளது என்று கூறப்படும் வெற்று வார்த்தைகளுக்கு மேலாக, அவை உரிய பொறிமுறையில் இயங்குகின்றதா? என்பதனை ஆராய வேண்டும். கடந்த காலங்களில் வெறும் வார்த்தைப் பிரயோகங்களால் இனந்தெரியாத நபர்கள் என்ற சொற்பதத்துடன் பல விடயங்கள் நிறைவுக்கு வந்துள்ளன. இந்நிலை இனிமேலும் நீடிக்குமானால் இந்த அரசிலும் நம்பிக்கை இழக்கவேண்டிய நிலை உருவாகும். இது தொடர்பில் எதிர்வரும் வாரத்தில் நாட்டின் ஜனாதிபதிக்கும் முறையிட உள்ளேன்–என்றுள்ளது. (த–4)

## மாணவியின் கொலைக்கு பாடசாலைகளில் எதிர்ப்பு




யாழ்ப்பாணம், மே 17
புங்குடுதீவு மாணவி கோரமான வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டதனைக் கண்டித்து பருத்தித்துறை சென் தோமஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்களும்,ஆசிரியர்களும் இணைந்து நேற்றுமுன்தினம் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.
வடமராட்சி ஹாட்லி மாணவர்களும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவ்வாறே நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலய மாணவர்களும் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (த–4)

# காணாமற்போனவர்கள் வெலிக்கடையில் இல்லை

### கைவிரித்தது ஆணைக்குழு

யழ்ப்பானம், மே 17
காணாமற்போனவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையில் இருப்பதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்தபோதும் அவ்வாறு எவரையும் இதுவரை அங்கு கண்டுபிடிக்கமுடியவில்லை என காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
வெலிக்கடை சிறைச்சாலையில் நடைபெற்ற பொங்விழாவில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் தங்களின் காணாமல்போன உறவினர்கள் இருப்பதாக சிலர் தெரிவித்திருந்தனர்.
இது தொடர்பில் அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டிற்கமைய காணாமற்போனோரின் உறவினர்கள் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக ஆணைக் குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.
எனினும், அங்கு காணாமற் போனவர்கள் எவரும் இருக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதேவேளை, போர் இடம்பெற்ற காலகட்டத்தில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற 14 ஆயிரம் பேரின் விவரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவர்களுள் காணாமற்போனவர்களின் பெயர்கள் இருக்கின்றனவா? என ஆய்வு செய்யவுள்ளதாகவும், அவ்விபரங்களை விரைவில் இணையத்தளத்தில் வெளியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
வெளியிடப்படும் விபரங்களின் அடிப்படையில் காணாமற் போனவர்கள் இருக்கிறார்களா? என்பதை கண்டறிய முடியும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (த–சி)

## புலிகளின் காலம் மீண்டும் வராதா என மக்கள் ஏக்கம்

### மாணவி வன்புணர்வுக் கொலையின் கண்டன அறிக்கையில் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், மே 17
விடுதலைப் புலிகளின் காலப் பகுதியில் பெண்களால் நள்ளிரவிலும் தன்னந்தனியாக நடமாடமுடிந்தது. அதுபோன்ற ஒரு காலம் மீளவும் வராதா என்று மக்கள் இப்போது ஏங்க ஆரம்பித்துள்ளனர் என்று வடக்கு விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள் ளார்.
புங்குடுதீவில் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட மாணவியின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்துகையில் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
மிருகங்கள் கூடச் செய்யத் துணியாத கொடுஞ் செயலே புரியப்பட்டுள்ளது. இந்த மாபாதகத்தில் ஈடுபட்டவர்கள் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் எந்தப் பிறவியிலும் அவர்களுக்கு மன்னிப்பே கிடையாது.
போருக்குப் பிறகு இது போன்ற கொலைகளும், சமூக விரோதச் செயற்பாடுகளும் அதிகரித்துள்ளன. இவற்றின் பின்னணியில் போதைப் பழக்கம் ஒரு பிரதான காரணமாக இருக்கிறது. விடுதலைப் புலிகளின் காவல்துறை குற்றங்களைக் கட்டுப்படுத்தியிருந்தது. இப்போது கடும் குற்றவாளிகள் கூடச் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக உள்ளது. வடக்கு மாகாண சபையும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்குரிய தீர்க்கமான வழிமுறைகளை ஆராய வேண்டும் என்று தெரிவித்தார். (த–4)

## விளை பயிர்கள் வெள்ளத்தில்

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த நான்கு தினங்களாக பெய்த மழையினால் விளை பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
காலபோக நெற்செய்கை அறுவடையின் பின்னர் நெல் வயல்களில் பயிரிடப்பட்ட உப உணவுப் பயிர்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.
வெங்காயம், கத்தரி, மிளகாய், வெண்டி, பூசணி, சணல் மற்றும் சிறுதானியப் பயிர்களான உழுந்து பயறு கௌபீ உள்ளிட்ட பயிர்கள் வெள்ளத்தில்மூழ்கியுள்ளன. (த–9)

## வறுத்தலைவிளானில் அமுக்க வெடி மீட்பு

யாழ்ப்பாணம், மே. 17
வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வறுத்தலைவிளான் பகுதியிலிருந்து அமுக்க வெடி நேற்றுக் காலை மீட்கப்பட்டு உடனடியாக வே செயழிழக்கச்செய்யப்பட்டுள்ளது.
வலி.வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில், மக்கள் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்றைய தினம் வறுதலைவிளான் சட்டம்பியார் வீதியில், அமுக்க வெடி கண்டு பிடிக்கப்பட்டது. இதனையடுத்து உடனடியாக, ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்திற்கும், இராணுவத்தினரின் கண்ணி வெடி அகற்றும் பிரிவுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.
இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த அவர்கள், அதனை மீட்டு செயழிழக்கச் செய்தனர். குறித்த பகுதிகள் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட முன்னர், இயந்திரங்களைப் பயன்படுத்தி கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டிருந்தது. தற்போது, அமுக்க வெடி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, குறித்த பகுதியில் மேலும் தேடுதல் நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.
இதேவேளை, விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வெடிக்காத நிலையில் ஐஷல்கள் மற்றும் வெடிபொருள்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–5)

## வன்புணர்வுக் கொலையால் விழித்தெழ வேண்டிய நிலை

### உயர்தொழில் நுட்ப நிறுவன மாணவர் கண்டனம்

புங்குடுதீவு மாணவி கொடுமையான வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்டமையானது மாணவர்கள் மத்தியில் அதிர்ச்சியையும், பயத்தையும், உளவியல் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று யாழ். உயர்தொழிநுட்பவியல் நிறுவன மாணவர் சமூகம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
சுதந்திரமானதும் நீதியானதுமான சூழலில்தான் கல்வி என்பது சாத்தியம். மாணவிக்கு நடந்த சம்பவம் குடாநாட்டில் மாணவர், பெற்றோர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தமாதிரியான சந்தர்ப் பங்களில் தான் எமது சமூகம் தன்னைத்தானே சுதாகரித்துக் கொள்ளவும் விழிப்புணர்வூட்டிக்கொள்ளவும் வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.
கல்வி நிறுவனங்களிலும் சமூகத்திலும் நிகழும் இத்தகைய வன்முறைச் சம்பவங்களை உயர் தொழினுட்ப நிறுவன மாணவர்களாகிய நாம் வன்னமையாகக் கண்டிக்கிறோம்.
இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மாணவர் என்ற அடிப்படையிலும் எமது சமூகம் சார்ந்த அக்கறையுள்ளவர்கள் என்ற அடிப்படையிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும் அனைத்து வன்முறைகளுக்கு எதிராகவும் குரல்கொடுப்போம் என்று மாணவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (த–4)

## அரசியல் சார்ந்த கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், மே 17
சமகால கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பிற்கான ஆவணக் காப்பகத்தின் ஏற்பாட்டில் யாருடைய கதைகள், யாரால் சொல்லப்பட்டன எனும் தொனிப் பொருளில் அரசியல் சார் கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமகால கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கை ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் வரலாறு மற்றும் பண்பாட்டுக் கற்கைத் துறைப் பேராசிரியர் சுதர்சன் துரையப்பா நிகழ்த்துவார். (த–109)

## புங்குடுதீவு மாணவியின் கொலைக்கு கண்டனம்

புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பின்னர் படுகொலை செய்யப் பட்டுள்ளமையைக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் முன்னணி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–
மாணவி சம்பவதினம் வீடு திரும்பாமை தொடர்பில் குடும்பத்தினரால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப் பட்டபோது, பொலிஸார் கீழ்த் தரமான கருத்துக்களைக் கூறி குடும்பத்தினரை அவமதித்து அனுப்பியுள்ளனர்.
பொலிஸாரின் பொறுப்பற்றவிதமான பதிலும் செயற்பாடும் குற்றவாளிகளுக்கு துணை புரிந்துள்ளன. பொலிஸார் இவ்வாறு பொறுப்பற்ற விதமாகச் செயற்படாது உடன் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால் குறித்த சிறுமியை ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்க முடியும். பொலிஸாரின் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாட்டை ... கண்டிக்கின்றோம் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த–4)

## இரணை தீவுக் கடலில் படகு கவிழ்ந்து விபத்து

### உயிர் தப்பினர் மீனவர்கள்

யாழ்ப்பாணம்,மே 17
இரணை தீவு கடற்பரப்பில் மீன் பிடிக்க சென்ற மீனவர்களின் படகு ஒன்று திடீரென வீசிய சுழல் காற்றுக் காரணமாகக் கடலுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது குறித்த படகில் மீன் பிடிக்க சென்ற குருநகர் பிரதேசத்தை ச்சேர்ந்த நான்கு மீனவர்கள் உயிர் தப்பியுள்ளனர்..
இவர்கள் சிறு காயங்களுடன் ஏனைய மீனவர்களின் படகுகள் மூலம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.நேற்று மாலை சிறிது நேரம் மோசமாக வீசிய சுழல் காற்றிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (த–7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் சேவைக்கு ஆள் சேர்ப்புக்கள்

கொழும்பு, மே17
இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பயிலுநர் பெண் பொலிஸ் கொன்ஸ்டபிள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவுத் திகதியான எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதியன்று 18 – 28 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பதாரிகள் ஜி.சி.ஈ.(சா.த) தேர்வில் கணிதம், மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்து இருக்கவேண்டும்.

இவர்களுக்கான அடிப்படைத் தமைமைகள் பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டு அதில் சித்தியடைந்தவர்கள் உடற்தகுதிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். இதில் தேர்ந்தெடுப்பவர்கள் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்குத் தோற்றவேண்டும்.மேலதிக விவரங்களை 2015.05.15 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிட்டு அறிந்து கொள்ளமுடியும்.

இதேவேளை, இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்ப முடிவு திகதியான எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி அன்று 18 – 28 வயதுக்கு உட்பட்ட இலங்கைப் பிரஜைகள் விண்ணப்பிக்கலாம்.

ஜி.சி.ஈ (சா.த) தேர்வில் கணிதம், தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

உயரம் 5 அடி 6 அங்குலத்துக்குக் குறையாது இருக்க வேண்டும். பௌதிகத் தகைமைகள் கல்வித் தகைமைகள் மற்றும் மேலதிக விவரங்களை 2015. 05. 15 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம். (த)

## மானிப்பாயில் இன்று கலைவிழா

யாழ்ப்பாணம், மே 17
மானிப்பாய் நடேஸ்வராலய நுண்கலைக்கல்லூரியின் கலை விழா இன்று பிற்பகல் இடம்பெறவுள்ளதென்று அறிவிக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த விழா இடம்பெறவுள்ளது. (த–4)

## நாகபூசணி உற்சவம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 17
நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கும், பொஸன் விழா தொடர்பான கலந்துரையாடல் அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு நாக விகாரையிலும் நடைபெறும் என வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் அறிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்த மேற்படி கூட்டம் புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ரத்து செய்யப்பட்டதாகவும் வேலணை பிரதேச செயலர் தெரிவித்தார்.(த–7)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 17
திருநெல்வேலி ஸ்ரீ நீலயதாஷி அம்பிகா சமேத காயாரோஹன சுவாமிகள் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும். மறுநாள் திங்கட்கிழமை காலை தீர்த்தத்திருவிழாவும் பிற்பகலில் கொடியிறக்கமும் செவ்வாய்க்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறும். (த–7)

## மரண அறிவித்தல்



### திருமதி பூபாலசிங்கம் யோகம்மா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வவுனியா, மகாறம்பைக்குளம், லக்ஷபான வீதியை வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கதிரவேலு பூமணியின் அன்பு மகளுமான பூபாலசிங்கம் யோகம்மா (14.05.2015) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் பூபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், கதிர்காமர்-தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பரிமளம் (கனடா), காலஞ்சென்ற தங்கராசா (டென்மார்க்), கமலாதேவி, காலஞ்சென்றவர்களான பாலையா, குணபாலசிங்கம் மற்றும் லீலாவதி, விமலாதேவி, ரஞ்சினி (மகாறம்பைக்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தி (சுவிஸ்), காலஞ்சென்ற வசந்தி, ஜெயந்தி (மகாறம்பைக்குளம்), சுகந்தி (லண்டன்), பாபு (சுவிஸ்), தமயந்தி (இத்தாலி), சசி(மகாறம்பைக்குளம்) ஆகியோரின் பாசமிகு தாயும், குமார் (சுவிஸ்), ராசன் (இத்தாலி) சசி (இத்தாலி), யசோ (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும், சுபா, துஷா, சுபேஸ் (சுவிஸ்), அஜந்தன் (மகாறம்பைக்குளம்), பிரியா (மகாறம்பைக்குளம்), தீபா, கோகுலன், நிரோசன் (லண்டன்), செல்லா கிந்து, நம்பியா (இத்தாலி), சப்றீனா, சரணியா (சுவிஸ்), ராகுலன், சிந்துஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தி யும், லாரணியா, விஜய், சந்தோஷ், விதுஸ் (சுவிஸ்), அஸ்வின், ஆதிரா ஆகியோரின் பரசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தனகக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லக்ஷபான விதி,
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(பேரன் அஜந்தன்)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் | 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29.10.1933
மறைவு 17.04.2015



தோற்றம் 22.05.1943
மறைவு 29.05.2013

அமரர் நாகமுத்து தவரத்தினம் | அமரர் தவரத்தினம் இராணி

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

935(10.6) கோப்பாய் மத்தி, கோப்பாய். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் சாந்தருபன்




திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் சாந்தருபன் கடந்த (14.05.2015) வியாழக்கிழமை சுவிஸ்லாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - மணிமேகலை தம்பதியரின் அன்பு மகனும், மேகலையின் (யசோ) அன்புக் கணவரும், தில்லைநாதன் (ஓய்வுபெற்ற ஸ்ரீலங்கா ரெலிகொம் ஊழியர்)-சிவகாம சுந் தரி தம்பதிகளின் அன்பு மருமகனும், கனுஜா, கனுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமிர்தவல்லி, இராஜேஸ்வரி, காந்தரூபன் (லண்டன்), சுரேந் திரன் (லண்டன்) காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் சுரேஸ், சசிகலா, ரதிகா, கிரிதரன் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிரங்கநாதன், சண்முகநாதன், சர்வேஸ்வரி (லண்டன்), சோபா (லண்டன்), ரஜி, தீபா, தங்க வடி வேல், நவீந்திரன், கமலாதேவி, சதீஸ்குமார் (ஜேர்மனி), கௌசலா (கௌரி-லண்டன்), சுரேஸ் குமார் (ஸ்ரீலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), சஞ்சீவ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், செல்வலதா (ஜேர்மனி), ஜெயராசா (லண்டன்), சிவதர்சினி (ஸ்ரீலங்கா ரெலிகொம் -யாழ்ப் பாணம்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (20.05.2015) புதன்கிழமை சுவிஸ்லாந்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள் (சுவிஸ்)
0041326216582

தகவல்: தில்லைநாதன் குடும்பத்தினர். [illegible] 3168
981/12A, [illegible] புரம்,
கொழும்புத் துறை, யாழ்ப்பாணம்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சீவரத்தினம் தவசேகரன்
(யாழ். கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி உத்தியோகத்தர்.)

திதி: அமாவாசை

தோற்றம் 07.01.1976
மறைவு 08.06.2013

நீங்கள் இவ் உலகை விட்டு நீங்கி ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
எம்மை விட்டு நீங்காத உங்கள் நினைவுகள்
என்றும் பசுமையாகவே இருக்கும் அப்பா

குமரகோட்டம், கோண்டாவில். குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



### இராசரத்தினம் சிவநாதன்

13.05.2015 அன்று சிவபதம் அடைந்துள்ளார். அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை மேற்கு,
வேலணை-06

திருமதி புஸ்பராணி
சுப்பிரமணியம் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி கிருஸ்ணபிள்ளை



மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி தேவி கிருஸ்ணபிள்ளை 15.05.2015 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் வைரமுத்து-நாகம்மா தம்பதியரின் மகளும், செல்லையா -சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும், கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், கோமதி, காலஞ்சென்ற சுமதி, கிருஸ்ணலிங்கம் (லண்டன்), கிருஸ்ண ரூபன் ஆகியோரின் அன்புத் தாயும், பரராஜசிங்கம், பரமேஸ்வரி, பூபாலசிங்கம், புவனேஸ்வரி, குணமணிதேவி, தனபாலசிங்கம், மகிலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், அன்ரன் தேவதயாளன், ஆனந்தரூபி ஆகியோரின் அன்பு மாமியும், தேனுஜனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் தெற்கு, சுழிபுரம்.

(C/17780) (10) தகவல்: குடும்பத்தினர்.

பிறப்பு:- 18 . 08 . 1992



இறப்பு: 16 . 05 . 2015

### சிவலிங்கம் துஷிதன்

யாழ்ப்பாணம் மருதடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் துஷிதன் நேற்று (16.05.2015) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிவலிங்கம்-சசிகலா தம்பதியரின் அன்பு மகனும், சஞ்சயன் (கனடா), சஞ்சீவன் (கொழும்பு), துஷானி, வர்ஷிகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா, சிவசம்பு-சிவபாக்கியம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 02.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 45, ராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி பந்துபாலா



பிறப்பு 1930.06.19 இறப்பு 2015.05.15

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வவுனியா, வைரவர் கோயில் வீதி 2ஆம் ஒழுங்கை, வைரவபுளியங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி பந்துபாலா 15.05.2015 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும், இந்திராணி (லண்டன்), காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் செல்வராணி (வவுனியா), ஜெயராசா (ரவி),டிரஸ்வெல் (வவுனியா),ஜோகராணி,(லண்டன்), யோகராசா(கண்ணன் - லண்டன்) ஜெயராணி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (லண்டன்), சௌவுந்தரராஜன் (வவுனியா), கேதாரகௌரி (வவுனியா), புலேந்திரன் (லண் டன்), ரஞ்சிதமலர் (லண்டன்), ஜெயராசா (லண் டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வவுனியா தட்சணாங்குளம் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வைரவர்கோயில் வீதி,
2ஆம் ஒழுங்கை,
வைரவபுளியங்குளம்,
வவுனியா.
தொடர்பு: 024 222 1917 (59805)(3.7.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## செல்லத்துரை கிருபாகரன்



பிறப்பு 29.11.1968 இறப்பு 11.05.2015

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கிருபாகரன் 11.05.2015 திங்கட்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் தங்கலட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ் சென்ற முத்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமக னும், மஞ்சுளாவின் அன்புக் கணவரும், அபிசாந், அபர்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைராசா - வல்லாம்பிகை தம்பதியரின் பாசமிகு பெறாமகனும், கலாமாலினி (பிரான்ஸ்), சுதாகரன், ரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2015) திங்கட் கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நிக்கிலஸ் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்.
தொ.பே. 021 222 4458 (59902)(45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## சின்னத்தம்பி சிவராசா (ஆசாரி)



மடத்தடி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவராசா(ஆசாரி) 15.05.2015 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் புவனேஸ்வரியின் (புவனம்) அன்புக் கணவரும், லோகேஸ்வரி(லலி), யசோதா, துஷ்யந்தன் (பாரின்- Bahrain), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் மணிமாறன் (சந்திரன்), நந்தாகரன்(நந்தன் - டோகா), மோகன்றாஜ் ஆகி யோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான இராசையா, கனகரத்தினம் மற்றும் பாலசிங்கம் காலஞ்சென்ற பொன்மணி ஆகியோரின் அருமைச் சகோதரனும் சாகித்தியன், பகீனா, அக்ஷிகன், சாதுஜி, நசோதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.05.2015) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி,
மாவிட்டபுரம். (59907)(3.7.9)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி அன்னம்மா துரைச்சாமி



புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா துரைச்சாமி 14.05.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - சீரங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - இராசம்மா தம்பதிகளின் மருமகளும் நித்தியலட்சுமியின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற சீவரட்ணத்தின் மைத்துனியும், வசந்தராணி, ஜான்சிராணி, இந்திராணி, பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன், ஆனந்தகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் குணபாலசிங்கம், சிவநாதன், நிரோஜினி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவப்பிரியா, சுதாகர், சந்திரகாஸ், பிறேமரூபன், குமாலினி, துவாரகன், துசான், சிந்து, சரண்யா, சாரங்கன், சாஜீரன், அபிநயா, சர்வின், சம்மியா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், பிரணவன்,நர்மதா , கல்கி, சோழன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.05.2015) திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

6ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (59917)(9.3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
சு. வசந்தராணி (மகள்)

# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை பாலசுப்பிரமணியம்



ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை பாலசுப்பிரமணியம் கடந்த (14.05.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்துரை - செல்லம்மாவின் அன்பு மருமகனும், சந்திரவதனாவின் (தேவி) அன்புக் கணவரும், ரஞ்சினி, இராசகுமார், இராசேந்திரம், இரவீந்திரன், நவநீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரன், யோகசக்தினி ஆகியோரின் அன்பு மாமனும், பிரியங்கன், சாகித்தியன், நந்திகா ஆகியோரின் அன்புப் பேரனும், துரைசிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கணேசலிங்கம், கமலாதேவி, முத்துலிங்கம், மனோன்மணி, மகாதேவன், விமலாதேவி ஆகி யோரின் சகோதரரும், புஷ்பராணி, நாகேஸ்வரி, வீரசிங்கம், சிவசோதி, சிவ மலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (சி/17768) (4.3.7)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## தம்பிஜயா விக்னேஸ்வரா
## திருமதி ரட்னேஸ்வரி விக்னேஸ்வரா



கொக்குவில் சம்பியன்லேனைப் பிறப்பிடமாகவும் லண்டனைப் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா விக்னேஸ்வராவும் கொக்குவில் பூநாறிமரத்தடியைப் பிறப்பிடமாவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட மனைவியான ரட்னேஸ்வரி விக்னேஸ்வரா ஆகிய இருவரும் லண்டனில் காலமாகிவிட்டார்கள்.

அன்னார் **காலஞ்சென்ற விக்னேஸ்வரா** காலஞ்சென்றவர்களான தம்பிஜயா - நாகரத்தினம் தம்பதியரின் மூன்றாவது புதல்வரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரா (வவுனியா), மகாதேவா (ஆஸ்திரேலியா) மற்றும் ராஜேஸ்வரன் (லண்டன்), சகாதேவன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், **காலஞ்சென்ற ரட்னேஸ்வரி**, காலஞ்சென்றவர்களான Dr. பாக்கியநாதன் - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான லோகநாதன், ஜெகநாதன் (கொட்டாஞ்சேனை) மற்றும் திருமதி விக்னேஸ்வரி கோபாலரட்ணம் (கொக்குவில்), திருமதி லோகேஸ்வரி (கண்டி), செல்வி யோகவதி (கண்டி), சிவநாதன் (வெள்ளவத்தை), கணநாதன் (யாழ்ப்பாணம்), சத்தியநாதன் (நியூசிலாந்து) தருமநாதன் (ஆஸ்திரேலியா), திருமதி Dr. ஈஸ்வரி மகேந்திரா (கண்டி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னார்களது இறுதிக்கிரியைகள் (20.05.2015) புதன்கிழமை South west Middlesex Crematorium லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 51, பொன்னப்பா லேன்,
[illegible]
யாழ்ப்பாணம். (59898) (45.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## வாழும் கலைப்பயிற்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 17

வாழும் கலைப் பயிற்சி பாகம் I நாளை திங்கட்கிழமை ஆரம்பமாவதாக வாழும் கலை அமைப்பினர் தெரிவித் துள் ளனர்.

சட்டநாதர் கோவில் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை முதல் 24ஆம் திகதிவரை மாலை 5.30 மணிமுதல் 7.30 மணிவரை இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன. பயிற்சி ஆசிரியராக பெங்களூர் வாழும் கலை ஆச்சிர மத்தைச் சேர்ந்த டி.சாயிராம்ஜி கலந்துகொள்ள வுள்ளார்.

இந்தப் பயிற்சிகளில் 18 வயதுக்குமேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ–10)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி நாளை திங்கட்கிழமை மு.ப 9 மணி தொடக்கம் மு.ப 11 மணிவரை பிறவுண் வீதி 2ஆம் ஒழுங்கையிலும் மு.ப 11 மணிமுதல் பி.ப 1 மணிவரை பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையிலும்–

செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணிமுதல் மு.ப 11 மணிவரை நாவலர் வீதி அன்னசத்திர ஒழுங்கையிலும் மு.ப 11 மணிமுதல் பி.ப 1 மணிவரை மணிக்கூட்டு ஒழுங்கையிலும்–

20ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9 மணிமுதல் மு.ப 11 மணிவரை சபாபதி ஒழுங்கையிலும் மு.ப 11 மணி முதல் பி.ப 1 மணிவரை பூநாறி ஒழுங்கையிலும்–

வியாழக்கிழமை மு.ப 9 மணிமுதல் மு.ப 11 மணிவரை பலாலி வீதி 4ஆம் ஒழுங்கையிலும் மு.ப 11 மணிமுதல் பி.ப 1 மணிவரை ஐயனார் கோவிலடியிலும் வழங்கப்படவுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (ஒ–10)

## யாழ். வாசி ஜேர்மனியில் சாவு

யாழ்ப்பாணம், மே 17

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் ஜேர்மனியில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 47 வயதான செல்லத்துரை கிருபாகரன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார். வீட்டிலிருந்து 12கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ரயில் கடவையொன்றிலேயே மேற்படி சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் நடைபெற்ற கடவைக்கு அருகில் குறித்த நபரின் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெண்கள் மீதான வன்முறை; வேரறுக்க முனைவது மிக அவசியம்

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த மாணவி ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம், வடக்கு எந்தளவுக்கு சீர்கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தி உள்ளது.

நினைத்துப் பார்க்க உடல் நடுங்கி, உளம் பதறிச் சுக்குநூறாகும், மிருகத்தனத்தையும் விஞ்சும் இத்தகைய சமூகச் சீரழிவுகள் திட்டமிட்டுச் செய்யப்படுவது மலிந்து மேலெழுந்து வருகிறது.

தமிழ்ச் சமுதாயத்தின், அதுவும் யாழ்ப்பாணத்து மக்களின் ஒழுக்க நெறிகள் கீழ்த்தரமான, படுபாதக நிலையை நோக்கி நகர்த்திச் செல்லப்படுவதை, மக்கள், அவர்களின் அமைப்புகள் இன்னமும் எத்தனை நாள்களுக்கு, கைகட்டி, வாய்பொத்தி, வெறும் பார்வையாளராக இருக்கப்போகிறார்கள் என்ற வினா வானளவுக்கு உயர்கிறது.

பெண்கள், வீதிகளூடாகப் பயணிக்க முடியாத அச்ச நிலையைத் தோற்றுவிக்கும் இத்தகைய படுபாதகப் போக்குத் தொடர்வதை, தமிழர் சமுதாயம் வெறும் பார்வையாளராக இருந்து பெருமூச்சு விடுவதுடன் தரித்துக் கொள்ளப் போகிறதா?

இத்தகைய செயல்களுக்கு, உடனுக்குடன், வெறும் சில்லறைத் தண்டனைகளைத் தவிர்த்து மரணதண்டனை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் வகை செய்யலாகாதா?

புங்குடுதீவில் மாணவி மீது கொடூரமாக, வன்புணர்வுப் படுபாதகத்தில் ஈடுபட்டவர்களுக்கு அதி உச்சத் தண்டனை வழங்க வேண்டும் என்றுகோரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதைச் சம்பந்தப்பட்ட தரப்புகள் கவனத்தில் கொண்டு செயலாற்ற வேண்டியது கட்டாயமாகிறது.

தமிழ்ப் பெண்களும், மாணவிகளும், காலம் காலமாகக் கற்பழிக்கப்பட்டுக் கோரமாகக் கொல்லப்படும் அதியுச்ச வன்செயல்களில் ஈடுபடுவோர், சட்டத்தின் முன்னால் கொண்டு வரப்பட்டாலும், குற்றவாளிகள் மறைமுகச் செல்வாக்கினால் தப்பித்துவிடும் போக்கு வடக்கில் வழமையாகிவிட்டது; ஏன், மேலோங்கி விட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் மாணவர்கள் இப்போது நடத்திவரும் போராட்டங்கள் அரச மட்டத்தின் கண்களை இனியாவது திறக்கச் செய்யுமா?

தமிழர் பிராந்தியங்களில், பிரதேசங்களில் மாணவிகள், சிறுமிகள் வன்புணர்வு மற்றும் கொலைகளுக்கு ஆளாக்கப்படுவதைத் தடுப்பதற்கு --

தமிழர் வாழும் அத்தனை பிரதேசங்களிலும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொந்தளித்துப் போராடும் அளவுக்கு உணர்வுபூர்வமாக, எழுச்சிநிலை உயர வேண்டும்.

மனிதநேயம் கொண்ட ஒவ்வொருவரும், தத்தமது சக்திகளை ஒன்று திரட்டி இவற்றுக்கு எதிராகச் செயற்படுவது இன்றைய தவிர்க்க முடியாத, தட்டிக்கழிக்கக்கூடாத பணியாகும்.

பல கைகள் சேராது, சமூக மட்டத்தில் மக்கள் நலன் நாடிய செயல் ஊக்கங்கள் மேலுயர வாய்ப்பில்லை. வெறுமனே சட்டங்கள் மக்களைப் பாதுகாக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. பெண்களுக்கான பாதுகாப்பைப் பேணுவதற்கு ஒட்டுமொத்தச் சமூகமும் ஒன்று திரண்டு, ஒன்று சேர்ந்து போராட வேண்டும்.

# ஐ.நா.அல்ல எந்தச் சபையும் எமக்கு உதவப் போவதில்லை

## முன்னாள் முதலமைச்சர் வரதர் கூறுகிறார்

அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன் னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் உதயனின் சகோதர பத்திரிகையான 'சுடர் ஒளி'க்கு வழங்கிய நேர்காணலின் தொகுப்பு தரப்படுகிறது.

**கேள்வி :** உங்களது இலங்கைக்கான திடீர்ப் பயணத்தின் நோக்கம் என்ன?

**பதில் :** நான் அரசியல் நோக்கத்துக்காக பயணம் மேற்கொள்ளவில்லை. 25 வருடங்களுக்குப் பின்னர் நான் இங்கு வந்துள்ளேன் என்பது, பொய்யான விடயம். நான் இதற்கு முன்னர் இரண்டு மூன்று தடவைகள் இங்கு வந்துள்ளேன். 1998 ஆம் ஆண்டு சந்திரிகா உடன்படிக்கை தயாராகும் வேளையில் நான் அதற்கு அழுத்தம் கொடுத்திருந்தேன். பின்னர் இங்கு அசாதாரண சூழல் காணப்பட்டதால் என்னால் வர முடியாமல் போனது. போர் முடிவடைந்த பின்னர் பல தடவைகள் நான் இங்கு வந்து சென்றேன். எனவே, கடந்த காலங்களில் நான் இங்கு பல பயணங்களை மேற்கொண்டுள்ளேன்.தற்பொழுது நான்என்னுடைய தனிப்பட்ட தேவைக்காக வந்துள்ளேன். எனது இந்தப் பயணம் அரசியல்நோக்கம் கொண்டதல்ல.

**கே :** மீண்டும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் ஏதும் தங்களுக்கு இல்லையா?

**ப :** இல்லை! இல்லை! அவ்வாறான எண்ணமேதும் தற்பொழுது இல்லை. அத்துடன் எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவாகவோ, எதிராகவோ ஈடுபடும் எண்ணமும் இல்லை. ஆனால், நான் ஓர் அரசியல் ஆர்வலர் என்ற நிலையில் என்னுடைய கருத்து களைப் பகிர்கின்றேன்.

**கே :** முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதல்வராக இருந்துள்ளீர்கள் தற்பொழுது இந்த மாகா ணங்களின் செயற்பாடுகள் எவ் வாறு அமைந்துள்ளன?

**ப :** வடக்கு மாகாணத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்து தற்பொழுது ஒன்றரை வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் மாகாணத்தின் அதிகாரங்களைப் பெறுவதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? என்பது கேள்விக்குறியே. மாகாண சபைக்கான அதிகாரப்பகிர்வு, 13 ஆவது திருத்தச்சட்டம் என்பவை தொடர்பான விடயங்கள் குறிப்பிடத்தக்களவு வெளிவரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மாகாண சபை அதிகாரங்களை உருவாக்குதல், மக்களுக்கு ஒரு பிரச்சினை ஏற்படும் போது உடனடியாகத் தீர்க்க வேண்டுமென்று கூறுதல், சட்டங்களை உருவாக்குதல், மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிதல் போன்ற விடயங்களை வடமாகாணசபை ஏற்படுத்தவில்லை. இந்த விடயம் சம்பந்தமாகத் தமிழர்கள் மத்தியில் ஓர் ஆதங்கம் காணப்படுகின்றது.

**கே :** வடமாகாண சபையின் செயற்பாடு நூற்றுக்கு நூறு வீதம் இல்லையெனக் கூறுகின்றீர்களா?

**ப :** இல்லை! நான் புள்ளிபோட விரும்பவில்லை. வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மக்கள் மத்தியில் பிரபல்யமாக இருக்கின்றார்களே தவிர வடமாகாணசபை பிரபல்யமாக உள்ளதா என்பதுபற்றிக்



கூறமுடியாதுள்ளது.

**கே :** இருதரப்புப் பேச்சுகள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளலாமென கூறுகின்றீர்களே. சர்வதேச அழுத்தமில்லாமல் இனப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளலாமென நினைக்கின்றீர்களா?

**ப :** சர்வதேசத் தலையீட்டில் பிரச்சினையைத்தீர்ப்பதல்ல, சர்வதேசம் ஒருபோதும் தமிழர்களின் பிரச்சினையைத்தீர்க்கப் போவதில்லை. அதைப்புரிந்து கொள்ளவேண்டும்

**கே :** அப்படியென்றால் சர்வதேசத்தை நம்பி பிரயோசனமில்லை என்கின்றீர்களா?

**ப :** அப்படிஇல்லை. கடவுளை நம்புபவர்களும் இருகின்றார்கள், நம்பாதவர்களும் இருகின்றார்கள். அதாவது, கடந்தகால அனுபவங்களைப் பார்க்கும்போது சர்வதேசத்தை நம்பியிருப்பது சாத்தியமான விடயமல்ல. இனிவருங்காலத்திற்கு இந் நாட்டில்தான் தீர்வு தங்கியுள்ளது.

**கே :** 1978 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார முறைமையை புதிய மைத்திரி அரசு மாற்றியமைத்துள்ளது. இந்நிலையில் மைத்திரி அரசின் மூலம் தமிழர்களின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமென நினைக்கின்றீர்களா?

**ப :** தீர்க்க முடியுமென்று என்னால் கூற முடியாது. ஆனால், அவர்கள் எடுத்துவரும் அதிகாரப்பகிர்வு பிரச்சினை விடயம் காரணமாகத் தமிழர்களின் பிரச்சினைக்கும் வழி காட்டுவார்கள் என நினைக்கின் றேன்.

**கே :** இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் பற்றிய ஐ.நா. அறிக்கை செப்ரெம்பர் மாதம் வெளிவர உள்ளது. இந்த அறிக்கை சம்பந்தமாக உங்களது நிலைப்பாடு என்ன?

**ப :** அந்த அறிக்கையில் என்ன அடங்கியிருக்கும் என்று எனக்குத் தெரியாது. ஆனால், என்னைப் பொறுத்தமட்டில் அவ் வாறான ஒரு விசாரணை நடைபெறப்போவதில்லை. நடக்கவும் நடக்காது. அது வெறும் அடுக்கு அறிக்கையாகவே காணப்படும்.

**கே :** ஒரு தமிழர் என்ற அடிப்படையில் இறுதிப் போரில் ஏற்பட்ட உணர்வுகள் உங்களுக்கு எவ்வாறு அமைந்தன?

**ப :** ஆயுதப்போராட்டம் காரணமாக 30 ஆண்டுகளாக கொலைகள் நடந்தன. 2 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர், பல்லாயிரக் கணக்கான போராளிகள், எழுத்தாளர்கள், அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வேறுப்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். எனவே, இறுதிப் போர் உணர்வுகள் என்று ஏதுமில்லை. எல்லாம் கடந்த 30 வருடங்களாக நடைபெற்றவை தான். இவற்றை மறந்து விட்டு புதிய வழியைத் தேடுவது தான்சாலச்சிறந்தது. இதை மீண்டும் பேசுவதனால் ஏதும் பயன் வருமென்றால் அதை நான் எதிர்க்கப் போவதில்லை. அந்தப் பயன் கிடைத்தாலும் நல்லது தான். ஆனால், அதை நினைத்து நினைத்து எதிர்காலத்தை வீணடிக்கக் கூடாது.

**கே :** உலக சமாதானத்தை வலியுறுத்தும் அமைப்பு என்ற அடிப்படையில் ஐ. நா. சபையின் மூலம் இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது எனக் கருதுகிறீர்களா?

**ப :** ஒரு சபையும் இங்கு வந்து பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை. அவை அனைத்தும் தங்களுடைய வியாபாரம் முடிந்து விட்டதென்றால் அவர்களின் வழியைப் பார்த்துச் சென்றுவிடுவார்கள். ஐ. நா. சபை என்பது நாடுகளுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. அதனை எங்களது. தேவைக்கு நாங்கள் பயன்படுத்த முடியாது. அங்கு தெரிவிக்கப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை என்பது நாடுகளுக்கிடையிலான சுயநிர்ணயமாகும். அதை முதலில் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். ஐ. நா. சபையை தமிழர்களுக்கான சபையாகக் கற்பனை பண்ணுவதை முதலில் நிறுத்த வேண்டும்.

**கே :** சர்வதேசத்தை நம்பியும் பயனில்லை, ஐ.நாவை நம்பியும் பயனில்லை என்கிறீர்கள். இந்த நிலையில் தமிழ்த் தலைமைகள் எவ்வாறான அரசியல் போக்கைக் கையாள வேண்டுமென்று எண்ணுகின்றீர்கள்?

**ப :** இந்த நாட்டிலுள்ள மக்களை நம்புங்கள். பெரியவர்கள் போராடுங்கள், தீர்வு நிச்சயம்.

**கே :** தேசியக் கொடியிலேயே வேற்றுமை காட்டும் சூழல் இன்று காணப்படுகின்றது. இந்த நிலையில் உள்நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவது சாத்தியமாகுமா?

**ப :** நான் பிரச்சினை இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், [illegible]னைப் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். சர்வதேசம் ஒருபோதும் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப்போவதில்லை. உள்நாட்டில் தான் தீர்வுவரும்.

**கே :** இன்று இவ்வாறு பேசும் நீங்கள் ஏன் அன்று தமிழீழக் கோரிக்கையை வைத்துப் போராடினீர்கள்?

**ப :** அதுதான் அன்று இருந்தநிலை. இரண்டுஆயுதங்களைவைத்துக்கொண்டு போராடி தமிழீழத்தை அடையலாமென்று கனவுகண்டோம். அன்று நான் தமிழீழத் தீர்மானத்தை நிறைவேற்றியது தவறு. அதை நான் இன்று ஒத்துக்கொள்கின்றேன்.

**கே :** 19 ஆவது திருத்தச்சட்டத்தையே நிறைவேற்றுவதில் பெரும் இழுபறிகளைச் சந்தித்த புதிய அரசு, தமிழர்களது இனப்பிரச்சினை எவ்வாறுதீர்க்குமெனநினைக்கின்றீர்கள்?

**ப :** நான் இங்கு பிரச்சினை இல்லையென்று சொல்லவில்லை. இந்த நாட்டில் பிரச்சினைகள் உள்ளன. ஆனால், அதற்கானத் தீர்வும் இங்குதான் உள்ளது. அதைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். வெளியில் இருந்து எவரும் வந்து தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க முற்படப் போவதில்லை. இதுதான் யதார்த்தம். மாறாக இந்தநாட்டுதலைமைத்துவங்களுடன் இணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமே ஒரு நிலையான அரசியல் தீர்வை எட்ட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனை
யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதியில் (Old Park) கடற்கரைப் பக்கமாகவுள்ள சிறுவர் நீதி மன்றத்திற்கும் வைரவர் கோயிலுக்கும் பின்பக்கமாகவுள்ள 12 பரப்பு 15 குழி காணி சேதமடைந்த வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 814 8150, 077 621 4497
(59885) (4.3.7)

### காணி விற்பனைக்கு
இல.552, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் (ஓட்டுமடம் சந்தியில் இருந்து மூன்றாவது காணி பஸ்கள் திருத்துமிடம்) 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 221 7797 (59866) (4.3.6)

### வீடு விற்பனைக்கு
கே.கே.எஸ். றோட்டுக்கு அருகில் கோண்டாவில் மேற்கு முத்தட்டிமட ஒழுங்கையில் 4 பரப்புக் காணியுடன் உள்ள புது வீடு விற்பனைக்குண்டு. (சுற்று மதிலுடன்)
தொடர்பு: 078 515 8482/078 671 4522
(சி/16748) (4.3.7)

### காணி விற்பனைக்கு
மானிப்பாய் மெமோறியல் ஒழுங்கையில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இக்காணி மெமோறியல் லேன் பாடசாலைக்கும் எலிம் ஹவுஸ்க்கும் இடையில் 12 அடி பாதையுடன் உள்ளது.
(சி/16747) (4.3.7) தொடர்பு: 077 622 0028

### கார் விற்பனைக்கு
Hyundai Matrix 2002 (Auto) முதலாவது உரிமையாளர் Light brown Colour 133000 km, 1599cc கார் விற்பனைக்குண்டு.
விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 024 222 0141
(58574) (4.3.7)

### காணி விற்பனைக்கு
கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், கீரிமலை வீதியில் யா/225 பிரிவில் கிணறுடன் கூடிய 13½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 382 1176
(59908) (4.3.7)

### விற்பனைக்கு
Sony செற் (1100w 3DVD போடக் கூடியது Dolly DTS Karake) Scooty pep விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 868 0213
(59629) (4.3.7)

### வாகனம் விற்பனைக்கு
ISUZU ELF LORRY 28 Sri xxxx (பொடி) நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 654 0056
(59707) (4.3.7)

### ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு
சிறந்த ரக ஒரு நாள், ஒரு கிழமை, ஒரு மாத ஊர்க் கோழிக் குஞ்சுகளும் கழுத்துவெட்டிக் குஞ்சுகளும் திருநெல்வேலியில் விற்பனைக்குண்டு. ஒரு நாள் குஞ்சு ரூபா 70/=
தொடர்பு: 077 755 6244, 077 349 7277
(59915)(4.3.7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## தேவை

### மணமகள் தேவை
லண்டன் வாசியான மணமாகாத (Computer Technician) 59 வயதான இந்து ஆண் மீள வந்து மணம்முடித்து யாழில் வசிப்பதற்கு 48 வயதுக்குட்பட்ட விதவை அல்லது மணமாகாத பெண்ணைத் தேடுகிறார்.
தொடர்பு: விளம்பர இல. 5062,
பே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(59901) (4.3.7)

### வீட்டு உதவியாளர் தேவை
கொக்குவில், பிரம்படி வீதியில் நான்கு பேர் உள்ள சிறிய குடும்பத்துக்கு வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 315 5100 (59689) (4.3.7)

### தேவை
கிளுவங் கதியால் தேவை.
தொடர்பு: 077 651 0696, 071902 5745
(59916) (4.3.7)

### வான் தேவை
நல்ல நிலையிலுள்ள TOWN Ace வான் ஒன்று தேவை.
(சி/16740) (4.3.7) தொடர்பு: 075 741 3782

### மணமகள் தேவை
1983 இல் பிறந்த செவ்வாய்க் குற்றமற்ற 44 பாவமுடைய கொழும்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் (ADB) திட்ட பகுப்பாளராகப் (Project Analyst) பணிபுரியும் சிவில் எஞ்சினியர் மணமகனுக்கு B.Sc. தராதரமுள்ள மெல்லிய மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
தரகர் இன்றி நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
(59568) (9.3.6) தொடர்பு: 077 036 6059

### Needed
A Canadian looking For lady who wish to marry and live eventually in jaffna. English Speaking lady between 30-40 AGE Preferable
(59912) (4.3.7) **Contact: 076 660 6255**

### தேவை
சித்தங்கேணியில் இருந்து மானிப்பாய் வரையுள்ள பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய கடை வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 506 9301 (58575) (4.3.7)

### தேவை
கொக்குவில், மல்லாகம், பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலுள்ள சட்டத்தரணி அலுவலகத்தில் பணிபுரிவதற்கு கணினி ரைப்பிங் தெரிந்த இருபாலாரும் தேவை.
(59910) (4.3.7) தொடர்பு: 077 885 1989

### தேவை
வெள்ளவத்தையில் தங்குமிட வசதியுடன் தொழில் வாய்ப்பு, சாறி Blouse தைப்பதில் பயிற்சியுள்ள பெண்கள் தொடர்பு கொள்ளவும்.
(சி/16749) (4.3.7) தொடர்பு: 071 520 1751

### வேலையாள் தேவை
பாண் வாகனத்தில் பாண் விற்பனை செய்வதற்கு ஆள் தேவை.
தொடர்பு: 077 509 2544
(59911) (4.3.7)

### வேலையாள் தேவை
போட்டோ கொப்பி வேலை தெரிந்த அல்லது பழகவிரும்பும் வேலையாள் தேவை.
தொடர்பு: 077 20 96310 (58679) (4.3.7)

## ஏனையவை

### வாடகைக்குண்டு
யாழ்.நகரை அண்மித்த பிரதேசத்தில் வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வகுப்புக்கள் நடத்தக்கூடிய கட்டடம் வாடகைக்குண்டு.
(59680) (4.3.7) தொடர்பு: 077 649 3351

### வாடகைக்கு
பருத்தித்துறை வீதி, நல்லூரை அண்மித்த வீட்டின் பகுதி ஒன்று வாடகைக்குண்டு. 2 அல்லது 3 பேர் மட்டும் உள்ள குடும்பம் விரும்பத்தக்கது. அரச உத்தியோகத்தர் அல்லது ஓய்வுபெற்றவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். முற்பணமாக 2 இலட்சம் எதிர்பார்க்கப்படும்.
(59872) (4.3.7) தொடர்பு: 071 096 2082


**Majestic**
Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30




சில்வர் 10.15 / 2.15 / 6.15




பிறொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
021-2227712





* பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் டென்ரல் கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (சுதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
151, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (நந்தினி)


## வேலைவாய்ப்பு

### Vacancy
யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனத்துக்கு சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ள (Marketing Advertising) 18-35 வயதுக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.
* 6 மாத கால இலவச பயிற்சியுடன் கொடுப்பனவு வழங்கப்படும்.
பின்னர் அடிப்படை சம்பளத்துடன் (Basicsalary with ETF/EPF) 63600/= பெறலாம்.
தொடர்பு: 077 445 8134, 076 728 0492
முகவரி: இல.225, 3rd Cross Street Jaffna. (59871)(4.3.7)

### உடனடி வேலைவாய்ப்பு
(FULL TIME/PART TIME VACANCIES)
யாழ்ப்பாணத்தில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள எமது நிறுவனத்திற்கு வியாபார விரிவுபடுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் துறைகளுக்கு பொருத்த மானவர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் கீழ்க் காணப்படும் முகவரிக்கு உங்கள் (CV)விண்ணப்பங்களை உடனே E-mailலில் அல்லது தபாலில் அனுப்பவும் (முன் அனுபவம் தேவையில்லை)
E-mail ID: swanmkt@gmail.com
Contact us for further information:
077 949 4200
SWAN MARKETING
No.136,Palaly Road,Jaffna

### பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத தாதியர்கள் தேவை
வெள்ளவத்தையில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு வீடுகளுக்குச் சென்று நோயாளர்களைப் பராமரிப்பதற்கு இரக்க சிந்தையுடைய பெண் தாதியர்கள் தேவை.
உணவு, தங்குமிடம் இலவசம்.
மாத சம்பளம் 25,000/= இற்கு மேல்
EPF, ETF செலுத்தப்படும்.
தொடர்பு: 071 440 5303, 077 556 1234
(59964) (4.3.7)

### உடனடி வேலை வாய்ப்பு
Computer Graphics Designing நன்கு தெரிந்த (Album Designing) செய்யக்கூடிய ஒருவரும் Video Editingசெய்யக்கூடிய ஒருவரும் உடன் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும். தங்கியிருந்து வேலை செய்பவர் விரும்பத்தக்கது. தங்குமிடவசதி இலவசம், சாப்பாடு ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்பு:
...629, 077 248 3301

### Vacancy
சுஜித் என்ரபிறைஸஸ்
வவுனியா, பரந்தன், யாழ்ப்பாணம் கிளைகளுக்கு கீழ்காணும் வெற்றிடங்களுக்காக புதிய வேலையாள்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.
* விற்பனைப் பிரதிநிதி
* காசு அறவீட்டாளர்
* அலுவலக உதவியாளர்
* வட்டா வாகனங்களுக்குமான வெற்றிடம்
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தொடர்பு: 077 012 1116, 021 227 0586, 077 556 8601
(41133) (4.3.7)

### பணிப்பெண் தேவை
பண்டத்தரிப்பில் வீட்டில் தங்கியிருந்து வீட்டைப் பராமரித்து நான்கு வயது பிள்ளையுடன் 80 வயது பெண்ணுக்கு உதவியாக இருப்பதற்கு 30-40 வயதுக்குட்பட்ட திருமணமாகாத பணிப் பெண் தேவை. சம்பளம் 10,000 இற்கு மேல்.
(59909) (4.3.7) தொடர்பு: 078 968 8086

### வேலைவாய்ப்பு
**கணிய அளவையியலாளர் (Quantity Surveyor)**
HND/NDT தகைமைச் சான்றிதழ் மற்றும் இரண்டு வருட முன்னனுபவம்.
தகைமையுடையோர் முழு விவரங்களும் அடங்கிய விண்ணப்பத்தை 25.05.2015 ஆம் திகதிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.
மனிதவள முகாமையாளர்
இல.45,
காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
hreuroville@gmail.com
(சி/17786) (4.3.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 ஆவது பிறந்த நாளும் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



மண்மகிழ
17.05.1950

கண்நெகிழ
03 .02. 2012

## அமரர் கந்தப்பு செல்வராசா

(முன்னாள் காசாளர் - கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம்)

அகலை அறுபத்தைந்தில் மூன்றாண்டுகள் கழிந்தனவோ — ஐயனே!
நாம் வளர்வதைக் கண்டுகொண்டு காணாமல் சென்றதேனோ
உன் புன்னகையினால் நம் சோகங்கள் எல்லாம்
மறந்து இன்பமாய் வாழ்ந்தோமே
உங்களது உழைப்பால் உயர்ந்த நாங்கள்
உங்களது பிரிவால் தத்தளிக்கின்றோமே
எம் உள்ளத்திலிருக்கும் உங்களது உருவம்
எம் இல்லத்தில் வலம் வரவேண்டுமையா!
எம் தந்தையைக் காண அருள் தருவாயோ — இறைவா...?

இடைக்குறிச்சி,
வரணி.

(59870)(45.7.3)

குடும்பத்தினர்.

# பதினொரு ஆண்டுகளும் ஆயிற்றே... ஒளிமுகம் மறைந்து !!! 2015



தாயின் மடியில்
04★08★1981

புகையிரதத்தின் பிடியில்
17★05★2004

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் பேராதனைப் பல்கலைக்கழக 2 ஆம் வருட பொறியியல் பீட மாணவனுமாகிய இலட்சிய வேந்தன்

## செல்வன் மரியரட்ணம்குணரட்ணம் (குணம்)

காலங்கள் கடந்து செல்லச் செல்ல
உன் இருப்பின் தேவை உணர்ந்து
உள்ளுர உடைகின்றோமடா
சந்தோசம் மட்டுமல்ல
தவிக்கும் துயரத்தில் கூட
அவன் இருந்திருந்தால்
என்று மட்டும் தான்
எம்மால் நினைக்க முடிகிறது
கனவுகள் நிஜமாகின்றன
காண்பதற்கு நீயில்லை.

நிரந்தரமுகவரி: 6ஆம் வட்டாரம், மயிலிட்டி.
நிரந்தரமுகவரி: சாரையடி, பருத்தித்துறை.

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

(சி/17753)(45.3.6)

# 60 ஆவது அகவையில் ஆறாத சோகத்தில் முதலாம் ஆண்டு நினைவு



## அமரர் நவமலர் இராஜகுலேந்திரன்

பிறப்பு
10.05.1955

இறப்பு
28.05.2014

நவமலராக இத்தரணியில் பூத்து
நறுமணம் மிக்க
குணவதியாய் வாழ்ந்து
நாம் அனைவரும் தவிக்க
நல் உலகம் அடைந்து விட்டாய்
"சாந்தி" "சாந்தி" "சாந்தி"

கணவர் மற்றும்
குடும்பத்தினர்.
ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர்
(யாழ் மாநகரசபை)
கோப்பாய் வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LORD OF THE RELOAD

சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக

# Dialog சுப்பர் அதிஷ்டம்

## இலட்சக் கணக்கில் பரிசுகளை வெல்லும் புதிய முறை

### இலகுவான 3 படிமுறைகளில் சீட்டிழுப்பில் பங்குபற்றுங்கள்

1 போட்டி இலக்கங்களை சேகரியுங்கள்




ரீலோட் அல்லது பில் கட்டணம் செலுத்தி போட்டி இலக்கங்களை SMS மூலம் பெற்று சேகரித்திடுங்கள்

2 தொலைக்காட்சியில் சீட்டிழுப்பு நிகழ்ச்சியைப் பார்வையிடுங்கள்




ஒவ்வொரு சனிக்கிழமையும் இரவு 9.55க்கு வசந்தம் TV ஊடாக வெற்றி இலக்கங்கள் 5 சீட்டிழுக்கப்படும்

3 வாரத்தின் உங்கள் இலக்கங்களைப் பொருத்துங்கள்




| | |
|---|---|
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ.100.00 |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ.1000.00 |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | ஒரு இலட்சம் |
| 5 இலக்கங்கள் பொருந்தினால் | பத்து இலட்சம் |

உங்கள் போட்டி இலக்கங்களை வெற்றி இலக்கங்களுடன் பொருத்தி இலட்சக் கணக்கில் பணப் பரிசுகளை வெல்லுங்கள்

### ரீலோட் அல்லது பில் கட்டணம் செலுத்தி போட்டி இலக்கங்களைப் பெற்றிட முடியும்

- அனைத்து ரூ.50.00க்கும் போட்டி இலக்கங்கள் 2, வாரத்திற்கு 5 இலக்கங்கள் வரை சேகரிக்கலாம்
- ரூ.600 அல்லது அதற்கு மேல் ரீலோட் அல்லது பில் கட்டணம் செலுத்தி 4 வாரங்களுக்குரிய 5 இலக்கங்களையும் பெற்றிடலாம்
- போட்டி இலக்கங்கள் 2க்கு வெற்றி வாய்ப்பு உண்டு, சுப்பர் பரிசினை வெல்ல 5 இலக்கங்களை சேகரியுங்கள்.

### உங்களுக்குரிய பரிசுத் தொகையினை பெற்றுக்கொள்ளும் முறை

- பரிசினைப் பெற 121 அல்லது #121#ஐ டயல் செய்து குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள்.
- ரூ.100.00 மற்றும் ரூ.1000.00 பணப் பரிசுகளை eZ Cash ஊடாகவும் அல்லது ரீலோட், பில் கட்டணம் செலுத்துவதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.
- ரூ.100,000.00 மற்றும் மில்லியன் பரிசுகளை காசோலை வடிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

உங்கள் போட்டி இலக்கங்கள், வெற்றி இலக்கங்கள் மற்றும் பணப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ள

**121 மற்றும் #121#ஐ டயல் செய்யுங்கள்.**

அதிக அதிகமாக ரீலோட் செய்து இலங்கையின் பிரம்மாண்டமான பரிசுத் தொகையினை வெல்லுங்கள்.

உங்களுக்கு கொண்டு வருவது
இலங்கையின் பிரபலமான
தொலைத் தொடர்பு சேவை வழங்குனர்
ஸ்லிம் நீல்சன் மக்கள் விருது 2015

axiata

Dialog
எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அனலைதீவு இலவச கணினிப் பயிற்சி மையத்தினர் முதன் முறையாக அந்தப்பகுதி மாணவர்களுக்கு இடையிலான திருக் குறள் மனனப் போட்டிகளை நடத்தினர். போட்டிகள் அதிகாரம் ரீதியாக இரு பிரிவுகளாக நடத்தப்பட்ட போது பெருமளவு மாணவர் கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு அமரர் திருமதி லட்சுமி சோமசேகரம் நினைவாக பரிசில்கள் வழங்கப்பட்டன.(வ-9)





புலம்பெயர் மக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வசதி குறைந்த மாணவர்களுக்கான மேலதிக வகுப்பை நடத்துவதற்கு கனகராயன்குளம் வடக்கு ஆரம்ப பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வின் போது வட மாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசா கலந்து கொண்டு நிகழ்வில் உரையாற்றுவதையும் பாடசாலையின் அதிபர் செ.பாலகிருஷ்ணன், அயல் பாடசாலைகளில் அதிபர்களான ஐ.தவநாதன் ஜெ.ஸ்ரீரங்கநாதன் ஆசிரியர்கள், பெற் றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(வ-402)



பிரதேச ரீதியான அபிவிருத்தி தொடர்பான கூட்டம் சித்தன்கேணி வட்டு.கிழக்கு அறிவொளி சன சமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது. வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசாம்பவன், சனசமூக நிலைய உத்தியோகத்தர், கிராம சேவகர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வலி மேற்கு பிரதேச சபை தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (வ)





வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் குருதிக் கொடை நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அருட் சகோதரி திரேசம்மா சில்வா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.(வ)





கைவிடப்பட்டோரின் பாது காவலர் என்று அழைக்கப்படும் புனித யூதா தேயுவின் திருவிழா அண்மையில் அரியாலை புனித யூதா தேயுவின் ஆலயத்தில் நினைவுகூரப்பட்டு திருவிழா திருப்பலியும் நடைபெற்றது. (வ-10)





வட மாகாணத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்கப் பாடசாலையான பளை றோமன் கத்தோலிக்க் தமிழ்க் கலவன் பாடசாலையின் 388 ஆவது ஆண்டு விழாவும் விழாவையொட்டிய நானிலம் நூல் வெளியீடும் பாடசாலையின் பரிசில் நாள் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன. நானிலம் நூலை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வெளியிட்டு முதற்பிரதியை கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் பெற்றுக்கொண்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குஞ்சுக்குளம் தொங்குபாலம் சேதம் ஆபத்தின் மத்தியில் மக்கள் பயணம்







மன்னார், மே 17

மன்னார் குஞ்சுக்குளம் தொங்கு பாலம் சேதமடைந்துள்ள நிலையில், அதனூடாக ஆபத்தான பயணத்தை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை மேற்கொண்டு வருகின்றனர்.

குஞ்சுக்குளம் கிராமத்துக்கான ஒரேயொரு பிரதான தரை வழிப்பாதையை 10 அடிக்கும் மேலாக வெள்ளம் நிரம்பிப் பாய்வதால், கிராம மக்கள் வேறுவழியின்றி சேதமடைந்துள்ள தொங்குபாலத்தை தமது போக்குவரத்துக்காகப் பயன் படுத்தி வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை குஞ்சுக்குளம் கிராமத்துக்குச் சென்றிருந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அங்குள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து தெரிவித்ததாவது:

'மல்வத்து ஓயா ஆற்றுநீர் பெருக்கெடுத்துப் பாய்வதால், நடைபெற்றுக்கொண்டிருந்த புதிய கொங்கிறீட் பாலத்தை அமைக்கும் கட்டுமானப் பணிகளும் தாமதமடைந்துள்ளன.

ஆற்றுநீர் பெருக்கெடுத்து பாயாத காலங்களில் குறைந்தளவான தொழிலாளர்களைக் கொண்டு மந்தகதியில் கட்டுமானப்பணிகள் இடம்பெறுவதாலேயே பாலம் அமைக்கும் பணிகள் நீண்டகாலமாக முடிவுறுத்தப்படாமல் இருப்பதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பாலத்தை அமைக்கும் பணியை பொறுப்பேற்றுள்ள ஒப்பந்த காரர் ஆற்றுநீர் வற்றியிருக்கும் காலத்தில் ஆளணியினரை அதிகப்படுத்தி துரிதகதியில் கட்டுமானப்பணிகளை முடிவுறுத்த வேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

குஞ்சுக்குளம் கிராமமானது பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. வருடந் தோறும் மல்வத்து ஓயா பெருக்கெடுப்பதால் அந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டு உணவு, மருத்துவ வசதிகளின்றி அந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு இறுதியிலும் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஹெலிகள் மூலமாக அந்தக் கிராம மக்களுக்கு உணவுகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கட்டுமானப் பணியை பொறுப்பேற்றுள்ளவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நீர் வற்றியிருக்கும் காலத்தில் விரைவாக வேலைகளை முடிவு றுத்தி பொதுமக்களின் இலகு வான போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்திக்கொடுக்க வேண் டும். அதற்கு முன்னர் மிகச் சேதமடைந்துள்ள தொங்குபாலத்தை அவசரமாக திருத்தம் செய்து பொதுமக்களின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு வழிவகை செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

(வ-402-56)

# பெருக்கமாய் வரந்தரும் அளவை குருக்கள் "கிணற்றடியான்"

கே.எஸ்.சிவஞானராஜா

கோயில் இல்லாத எந்த ஊரும் பாலை வனங்களேயாகும். கோயில்கள் இருப்பது அந்தஊருக்குப்பெருமை.கோயில்கள் வாழ்ந்தால் ஊர்களும் வாழும். கோயில்களில் இறைமாட்சி சித்தி பெறின், நாட்டிலும் நல்லாட்சியைக் காணமுடியும். கோயிலில் குடியிருக்கும் தெய்வம் குளிர்ந்தால் ஊருக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. அதற்காகவேதான் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. கும்பாபிஷேக தரிசனம் கோடி புண்ணியம். கும்பாபிஷேகம் அந்த ஊர் மக்களை ஒன்றாக்கி அங்கு அனைவரும் சமன் என்ற மனோபாவத்தை அள்ளித் தருகிறது. இந்த நிலைவந்து ஆலயத்தில் பிரவாகிக்கும்போது சைவம் தழைக்கின்றது. ஆண்கள் வேட்டி சால்வையும், பெண்கள் கலாசார உடையும் திருநீறு, சந்தனம், குங்குமமும் மாலையுமாக சிவசின்னங்களுடன் வணங்கும்போது பக்திமயமே பளிச்சிடும், வேறொன்றுமே வெளிப்படாது. கும்பாபிஷேகம் இவ்வாறு ஜொலிக்கும் போது மந்திரங்களின் பெறுமதி வர்ணனாவ ஒலிக்கும். அந்த ஊர் எல்லோராலும் வாழ்த்தப்படுகிறது. இயற்கை இடர் தவிர்க்கப்படுகிறது. எந்த மதமாகினும் நல்லது எது செய்தாலும் ஊர் வாழ்த்தவும் வாழ வழியும் பிறக்கும்.

...ப புராதன ஆலயமாக சமநிலையில் ...வத்துப் போற்றப்படும் அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளயார் ஆலயம் இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மகிமை பெற்றதெனக் கர்ண பரம்பரைக் கதைகள் கூறும். இயற்கையை வணங்கி படிப்படியாக உருவவழிபாட்டுடன் பேரானந்தம் அடைகின்ற எமது மண்ணில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வருகையின் காரணமாக, சைவசமயம் புறந்தள்ளி ஓரங்கட்டப்பெற்றது. அவ்வாறு புறந்தள்ளப்பட்ட பல ஆலயங்களுள் அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் ஆலயமும் ஒன்றாகும். அவ்வாறானதொரு சூழ்நிலையில் மூல விக்கிரகத்தைப் பாதுகாப்பாகக் கோயில் கிணற்றுக்குள் போட்டு மறைத்துவிட்டனர். காலமும் ஓடியது, சந்ததிகளும் மாறின. கிணறுகளும் தூர்ந்து போயின.

மீண்டும் பல வருடங்களுக்குப் பின்னதாக ஆலயத்துக்குக் கிணறு தோண்டவேண்டிய அவசியம் ஏற்பட்டவேளை முன்பு தூர்ந்து இருந்த கிணற்றுமேட்டிலேயே நிலையமும் அமைந்திருந்தது. எமது இளம் பாராயத்தில் கிணற்றுக்கு நிலையம் எடுப்பதற் கென்று விற்பன்னர்கள் சிலர் அளவெட்டியில் வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்களுள் 'லோப்பையா' உபாத்தியாயர் சிறப்புக்குரியவர். அந்தக் கிணறு தூர்ந்திருந்த இடத்துக்கு அண்மையில் பூஜை செய்யும் குருக்களும் வசித்து வந்துள்ளார். அவ்வாறான மந்திரங்கள் ஒலிக்கும் மண்ணிலே தண்ணீர் [illegible] அங்கு கிணற்று[illegible] கொண்டு போகும்போது, தொன்மை வாய்ந்த முன்னைய பிள்ளையார் விக்கிரகம் எவ்வித நோதலுமில்லாமலும் உடைதலில்லாமலும், வெளிப்பட்டது. கண்டதும் குருக்கள் அற்புதம் நடந்து விட்டதெனப் பேரானந்தம் அடைந்து கண்ணீர் மல்க, நா தளதளக்க வேதபாராயணம் செய்து ஊராரும் சேர்ந்து பிள்ளையார் விக்கிரகத்தை வெளியில் எடுத்தனர். அபிஷேகம் செய்தனர். மூல விக்கிரகமாக ஸ்தாபித்தனர். வழிபட்டனர், பேறுபெற்றனர். குருக்கள் வீட்டுக் கிணற்றிலிருந்து பிள்ளையார் எடுக்கப்பட்டு பூஜிக்கப்பட்டதனால் குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார் எனக் காரணப்பெயர் ஏற்படலாயிற்று.

இதேவேளை 'சம்பந்த ஞானி' என்ற தவசிரேஷ்டர் நிஷ்டையிலிருந்து பல வரம் பெற்று அற்புதங்கள் செய்து வரலானார். மக்களுக்கு எந்த நோய் வந்தாலும், எவ்வகைத்துன்பம் குறுக்கிட்டாலும் சம்பந்த ஞானியர் யாவற்றையும் நீக்கி சுகப்படுத்தி வந்தார். அவரைப் பார்த்தாலே சிவனைப் பார்த்தது போலக்காட்சிதருவார். தலையிலே சடாமுடி, வெண்ணிறத்தாடி, கழுத்திலே உருத்திராக்க மாலை, ஒரு சின்னத் துண்டு வேட்டி, திருநீற்று உடம்பு. அகன்ற ஒளி வீசும் கண்கள், வாயில் சிவமணம், உடம்பில் அருள்மயம், மொத்தத்தில் ஞானியாகவே விளங்கிய சம்பந்தஞான தவசிரேஷ்டர் காலப் போக்கில் மௌன நிலையில் ஆலயத்துக்கு முன்பாக சமாதியடைந்தார் என்பது வழிவழியாக வந்த கர்ணபரம்பரைக் கதைகளாகும். அந்தஞானியார் சமாதியடைந்த இடத்திலேதான் தற்போது ஆல், அரசு, வேம்பு மூன்றும் ஒன்றாகப் பெருவிருட்சங்களாகக் காட்சி தருகின்றன. குருக்கள் கிணற்றடிப் பிள்ளையாரின் மாட்சி நித்திய நைமித்திய, மஹோற்சவ, கும்பாபிஷேக நிகழ்வுகளினால் அற்புதமாகிறது.

பொதுவாகவே தல விருட்சங்களை வணங்குவது நீடித்த ஆயுளைத் தரவல்லது. ஆல், அரசு, வேம்பு, புளி, வில்வம், மருதம் ஆகிய மரங்களை வணங்குவதால் சந்ததி சிறக்கும் என்பது மட்டுமல்ல சௌபாக்கியமும் கிடைக்கும். குருக்கள் கிணற்றடியில் மூன்று வான் மரங்கள் ஒன்றாக விருட்சமாக இருப்பதன் காரணமாக அந்த மூன்று விருட்சங்களையும் மூன்று முறை சுற்றி விழுந்து கும்பிடுவீர்களாயின் எண்ணியது பலிக்கும். பண்ணிய பாவங்கள் தொலையும். நண்ணிய நோய்கள் விலகும். சலனமில்லாத தூய மனதோடு இதனை ஆற்றினாலே இவை பலிக்கும்.

அடியார்கள் அனைவரும் அளவெட்டியிலுள்ள கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடிப்பிள்ளையாரை வணங்கிப் பேறு அடைவீர்களாக. கடந்த ஆம்திகதியன்று நடைபெற்றமகாகும்பாபிஷேகத்தின் மூலம் பெருக்கமாய் வரந்தரக் காத்திருக்கின்றான்.

விநாயகப் பெருமான் உங்களுக்கு என்ன வேண்டும்? கேளுங்கள்; விழுந்து வணங்குங்கள் யாவும் பெறலாமே!

### கவினுறு "ஆலயப் பேறிது"

பல்லவி

காத்தருள்வான் குருக்கள் கிணற்றடிப்பிள்ளையார்
கவினுறு ஆலயத்தில் பேறாகும் வள்ளலார்
பூத்திருக்கவே மகா கும்பாபிஷேகம் பார்த்திட
புண்ணியம் கிடைக்கும் நீங்கள் எண்ணியது பலித்திட

அனுபல்லவி

பார்த்து விட்டால் போதும் பயமில்லை அவனைப்
பணிந்துவிட்டால் போதும் துயரில்லை
ஷேத்திர மகிமைதனை ஆல் அரசு வேம்பு சொல்லும்
சித்தராம் சம்பந்த முனிவர் முத்திபெற்ற வரமதனால்

சரணம்(மத்திம காலம்)

மூத்த பெருங்குடி அளவையம்பதியில்
முறைப்படியே வாழ்ந்த காலமதில்,
மோகமான பிற நாட்டவர் வந்து
முற்றாகவே சைவம் வாழத் தடுத்தனர்,
பாத்திரமான பிள்ளையோ பாதுகாப்பாய்
கிணற்றில் மீண்டதனால்,
பத்திரமாய் இன்றும் கோயிலில் திருவருள்
பாலித்திடும் சித்தி தந்திடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி சந்தைகளில் மலேரியா தடுப்பு விழிப்புணர்வு தெரு நாடகம்

யாழ்ப்பாணம், மே 17
யாழ்.மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவினர் தென்மராட்சி பிரதேச சந்தைகளில் மலேரி யாவை இல்லா தொழிப்போம் என்றும் தெரு நாடகத்தை நடத்தினர்.

உலக மலேரியா தினத்தை யொட்டி யாழ்.மாவட்டத்தில் வளமான எதிர்காலத்துக்கான முதலீடு மலேரியாவை தோற்கடிப்பதே என்னும் தலைப்பில் இந்த தெரு நாடகம் நடத்தப் பட்டு வருகின்றது.

அந்தவகையில் கடந்த 29 ஆம் திகதி சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய சந்தைப் பகுதிகளில் தெரு நாடகம் இடம் பெற்றது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தலைமை யிலான குழுவினரும் யாழ்.மாவட்ட மலேரியா தடுப்புப் பிரிவினரும் இணைந்து நடமாடும் குருதிப் பரிசோதனைகளையும் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் றோட்டறிக் கழக அனுசரணையுடனான துண்டுப் பிரசுரமும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (வ-9)







உலகளாவிய "Great Place to Work" குறியீட்டினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையின் மிகப் பெரிய நிறுவனமாகிய சிங்கர், தொழில் தேடுவோரினால் விரும்பி நாடப்படும் இடமாகும். நம்பிக்கையான தரச்சிறப்பை 160 ஆண்டுகளாகத் தொடர்ந்து வழங்கும் பாரம்பரியத்தைக் கொண்ட சிங்கர் தனது தொழில் ஸ்தலத்தில் நம்பிக்கைக் கலாசாரத்தை விதைத்துள்ளது. சிங்கர், சீசில், சோனி, சம்சுங், ஹுவாவி, ஹித்தாச்சி, பிலிப்ஸ், வேர்ல்பூல், கென்வூட் போன்ற புகழ்பெற்ற வர்த்தகப் பெயர்களிலான சாதனங்களை விநியோகிப்பதில் எமது ஊழியர்கள் பெருமையடைகின்றனர். தொழிற்றுறையின் அதிசிறந்த தகவல் தொடர்பு அமைப்பு முதல் சூழல் நலமான உற்பத்தி வசதிகள் வரை சகலவற்றிலும் புத்தாக்கமும் நிலைபெறு தன்மையும் எமக்கு உந்துதலாக அமைகின்றன. நாட்டிலேயே மிகப் பெரிய எமது விற்பனை மற்றும் சேவை வலையமைப்பினால் இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்கள் நன்மையடைகின்றனர். எமது வலையமைப்பில் 410 விற்பனை நிலையங்கள், 12 சேவை நிலையங்கள் மற்றும் 20 சிங்கர் ஃபினான்ஸ் கிளைகள் இடம்பெறுகின்றன. அவற்றில் சமூகத்தின் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இலங்கையின் பத்து தலைசிறந்த நிறுவனப் பிரஜைகளுள் ஒன்றாகவும் இலங்கையின் மிகச் சிறந்த வர்த்தகப் பெயராகவும் சிங்கர் விளங்குகின்றது.

**பயில்நிலை தொழில்நுட்பவியலாளர்கள் - இலத்திரனியல் சாதனங்கள்**

சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. யாழ்ப்பாணம் பிராந்திய சேவை நிலையத்தில் வெற்றிடங்கள் உள்ளன. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் LED தொலைக்காட்சி, ஓடியோ/வீடியோ சாதனங்கள் மற்றும் தொடர்புடைய இலத்திரனியல் சாதனங்களின் இலத்திரனியல் பாகங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு வேலைகளை மேற்கொள்வதுடன், வேலைத்தலத்தில் அல்லது வாடிக்கையாளரின் தேவைக்கேற்ப அவரது இல்லத்தில் உரிய தீர்வுகளை விரைவாக வழங்க வேண்டும்.

**தனிப்பட்ட தகுதிகள்**
- க.பொ.த. (சாதாரண தர) தகைமை.
- சிற்றி அன்ட் கில்ட்ஸ் இலெக்ட்ரோனிக் டிப்ளோமா, NVQ 03ஆம் மட்டத்திலான இலத்திரனியல் தொழில்நுட்ப தேசிய சான்றிதழ் அல்லது NAITA, ATI, CGTTI அல்லது தொழில்நுட்பக் கல்லூரி வழங்கிய தொழில்நுட்பத் தேர்ச்சிச் சான்றிதழ் வைத்திருப்பது மிகவும் அனுகூலமானது.
- LED தொலைக்காட்சி, ஓடியோ/வீடியோ சாதனங்கள் மற்றும் தொடர்புடைய இலத்திரனியல் சாதனங்களின் பழுதுபார்ப்பில் குறைந்தபட்சம் 01 வருடகால அனுபவம்.
- இலத்திரனியல் சாதனங்களின் விபரத்தொகுப்பு மற்றும் விபரக் குறிப்புக்களை வாசித்து விளங்கிக்கொள்ளும் திறமை.
- வயது – 22க்கும் 25க்கும் இடையே.

சரியான விண்ணப்பதாரர்களுக்குக் கவர்ச்சியான ஊதியத் திட்டம் காத்திருக்கிறது.

உங்களுக்கு மேற்குறிப்பிட்ட பதவிக்கான தகுதிகள் இருந்தால், உங்கள் உறவினரல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களையும் உள்ளடக்கிய உங்கள் விண்ணப்பத்தை அடுத்த 7 தினங்களுக்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது chamindamu@singersl.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயக் கட்டத்தில் குறிப்பிடவும். www.singersl.com என்ற இணையத்தளத்தின் ஊடாகவும் நீங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

**உதவி முகாமையாளர் - ஆட்சேர்ப்பு மற்றும் அமைப்புகள்**
**சிங்கர் (ஸ்ரீலங்கா) பி.எல்.சி. | 80, நவம் மாவத்தை, கொழும்பு 2.**

Best Companies to work for 2014 Sri Lanka

SINGER
Trusted Excellence


# கடும் மழை மத்தியிலும் விழா நடத்தும் மக்கள்

தென்மராட்சி,மே 17
தென்மராட்சி பிரதேசத்தில் அண்மைக் காலமாக நடத்தப்படும் நிகழ்வுகளைக் குழப் புகிறது மழை. அடாது மழை பெய்தாலும் விழாவை நடத்துவதில் குறியாக உள்ளனர் பிரதேச மக்கள்.

கடந்த மாதம் சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு ஸ்ரீமுரு கன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் ஆரம்பித்த நேரம் தொடங்கிய மழை போட்டிகள் இடை நிறுத்தப்பட்டதாக அறிவிக்கப் படும் வரை சோனாவாரியாகப் பெய்தது. போட்டிகள் வேறொரு தினத்தில் நடத்தப்பட்டு பரிசளிப்பு இடம் பெற்றது.

அதன்பின்னர் தென்மராட்சி கல்வி வலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஏழிசை மாலை நிகழ்வு தொடங்கியதும் ஆரம் பித்த இடி மின்னலுடன் கூடிய மழை, சுமார் ஒரு மணி நேரம் பெய்தது. மண்டபமொன்றினுள் விழா இடம்பெற்றதால் பாதிப்பு ஏற் படாமல் நடத்தி முடிக்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு இரு நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டன.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் 'இந்துக்களின் குரல்" நூல் அறிமுக விழாவும், மீசாலை வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலய முன்றிலில் மிருசுவில் தமிழ்த் தாசன் எழுதிய "மனிதர்கள்" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடும் இடம்பெறவிருந்தன.

பி.ப. 3 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாக மழையும் கொட்டத் தொடங்கியது. அரை மணி நேரமாக மழை பெய்த போதிலும் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றன. (வ-9)

# கங்குவேலி படுகாட்டுக் காணி பிரச்சினைக்கு கிடைக்குமா தீர்வு?

திருகோணமலை, மே 17
மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கங்குவேலி படுகாட்டுப் பகுதியிலுள்ள வயற் காணிப் பிரச்சினை தொடர்பில் காணிக்கச்சேரி இடம்பெறும் என்று மூதூர் பிரதேச செயலகத்தால் அறிவித்தல் வெளியிடப்பட்ட போதும், இதுவரை காணிக் கச்சேரி நடத்தப் படாமல், இழுத்தடிக்கப்பட்டு வருவதாக வயற்காணி உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பல வருட காலமாகத் தமிழ் விவசாயிகளுக்கு உரித்துடைய காணியில், அத்துமீறி விவசாய நடவடிக்கையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஈடுபட்டு வந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் பல தடவைகள் பொலிஸ் நிலையத்தில் தமிழ் விவசாயிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் முறைப்பாடுகளைத் தட்டிக் கழிக்கும் நிலைமையே காணப்பட்டு வருவதாகவும், பாதிக் கப் பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் கடந்த மாதம் அத்துமீறும் சிங்கள விவசாயிகளின் செயற்பாட்டை நிறுத்தக் கோரி மூதூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பாதிக்கப் பட்ட தமிழ் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மூதூர் பிரதேச செயலாளரால் குறித்த காணி தொடர்பில் தமிழ், சிங்கள விவசாயிகளிடம் உறுதிகள் காணப்படுவதால் கடந்த 3 ஆம் திகதி காணிக் கச்சேரி நடத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் உறுதி மொழி வழங்கப்பட்டது.

ஆனால் குறித்த திகதியில் எவ்வித காணிக்கச்சேரியும் அங்கு இடம்பெறவில்லை. இந்த நிலையில் விவசாயிகளின் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபடாமல், உரிய காலத்தில் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு தமிழ் விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எதிர்கால தகவல் தொழில்நுட்பத்துறையின் வியத்தகு மாற்றத்துக்கான உறுதிமொழியளித்தவாறு,
150 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் தகவல் தொழில்நுட்ப முன்னோடியாகத் திகழும்
ஸ்ரீ லங்கா டெலிகொம், 150 ஆவது சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக
தினத்தையொட்டி தனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது.

Sri Lanka Telecom

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் விண்ணேற்பு விழா

# உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என அழைப்பு விடுக்கும் விழா

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக விரிவுரையாளர் – யாழ்.பல்கலைக்கழகம்

உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்கள் ஆண்டவரின் விண்ணேற்பு விழாவை வெகு சிறப்பாக இன்று கொண்டாடுகிறார்கள். ஆண்டவர் இயேசுவின் பாடுகள் – மரணம் – உயிர்ப்பு – விண்ணேற்பு ஆகிய நிகழ்வுகள் கத்தோலிக்க திருச்சபையில் மிக முக்கியம் பெறும் நிகழ்வுகள் ஆகும். ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவும், ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழாவும் இங்கு ஒப்பு நோக்கப்பட வேண்டியதாகிறது. இரண்டு நிகழ்வுகளிலும் இயேசு மாட்சிமைப்படுத்தப்படுகிறார். குறிப்பாக இந்த இரண்டு விழாக்களின் பின்னரும் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நடைபெறுவதைக் காண்கிறோம். உயிர்ப்பு விழாவின் பின்னர் சீடர்கள் புத்துயிரும் புது உணர்வும் பெற்றவர்களாகப் போதிக்கத் தொடங்குகிறார்கள். விண்ணேற்பு விழாவின் பின்னர் 'உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்' என்ற இயேசுவின் வார்த்தைகள் நிஜம் பெறத் தொடங்குகின்றன.

இங்குதான் ஆண்டவரின் விண்ணேற்பு விழா உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியைப்பறைசாற்றுங்கள்எனஅழைப்பு விடுக்கும் விழாவாக மாறுகிறது.

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா கிறிஸ்தவ மதத்தை ஒரு உயிர் வாழும் மதமாக உலகுக்கு இனம் காட்டியது. இயேசு பாடுகள் மரணம் வழியாக உயிர்த்தார் – உயிர்த்து இன்றும் உலகில் உயிர் வாழ்கிறார். இதனால் கிறிஸ்தவ மதம் உயிர் வாழும் மதமானது.

ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழா கிறிஸ்தவ மதத்தை உலகெங்கும் பரவிய ஒரு மதமாக மாற்றியுள்ளது. கிறிஸ்தவ மதம் உலகெங்கும் பரவி இருக்கின்றமையே அதன் பலமாகும். இந்தப் பலத்துக்கான அடிப்படையை ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழாவின்போது இயேசு கூறிய வார்த்தைகளில் காண்கிறோம்.

இந்த இரண்டு நிகழ்வுகளுக்குமான ஆதாரங்களை உயிர்ப்பு விழாவின் பின்னர் பயம் தெளிந்து துணிவு பெற்று எதையும் ஏற்கத்துணிந்தவர்களாக சீடர்கள் பேசிய வார்த்தைகளிலும், ஆற்றிய செயல்களிலும் காண்கிறோம். அடுத்து, உயிர்த்த இயேசு விண்ணேற்படைய முன்னர் தம்முடைய 11 சீடர்களுக்கும் தோன்றிக் கூறிய தமது இறுதியான அறிவுரையில் காண்கிறோம்.

முதலில் உயிர்ப்பு விழாவின் பின்னர் பயம் தெளிந்து துணிவு பெற்று எதையும் ஏற்கத் துணிந்தவர்களாக சீடாகள் பேசிய வார்த்தைகளைப் பார்ப்போம்.

யூதத் தலைமைச் சங்கத்தார் பேதுருவிடமும் யோவானிடமும் இயேசுவைப்பற்றி எதுவும் பேசவோ கற்பிக்கவோ கூடாது என்று கண்டிப்பான கட்டளை இட்டபோது யூதத் தலைமைச் சங்கத்தின் முன் பேதுருவும் யோவானும் இவ்வாறு கூறுகிறார்கள. – "உங்களுக்குச் செவி சாய்ப்பதா? கடவுளுக்குச் செவி சாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது." (திருத்தூதர்பணி 4:20)

அடுத்து உயிர்த்த இயேசு விண்ணேற்படைய முன்னர் தம்முடைய 11 சீடர்களுக்கும் கூறிய தமது இறுதியான வார்த்தைகளைப் பார்ப்போம். உயிர்த்த இயேசு தம்முடைய 11 சீடர்களுக்கும் தோன்றி தமது இறுதியான அறிவுரையை இவ்வாறு

> இயேசுவின் உயிர்ப்பு ஓர் இறை அரசின் அறிவிப்பு. ஆனால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாத ஓர் அறிவிப்பு. ஆனால் அதுதான் இயேசுவின் வாழ்வின் உறுதியான முடிவு. இயேசு இறை அரசை அறிவிக்கவே அன்றாடம் உழைத்தார். அதற்காகவே அனைத்தையும் – தம் உயிரையுமே – அர்ப்பணித்தார்.



"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் – நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் – நம்பிக்கை அற்றவரோ தண்டனைத் தீர்ப்புப் பெறுவர் – நம்பிக்கை கொண்டோர் பின்வரும் அருள் அடையாளங்களைச் செய்வர் – அவர்கள் என் பெயரால் பேய்களை ஓட்டுவர் – புதிய மொழிகளைப்பேசுவர் – பாம்புகளைத்தமது கையால் பிடிப்பர் – கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் அது அவர்களுக்கு தீங்கு இழைக்காது – அவர்கள் உடல்நலமற்றோர் மீது கைகளை வைக்க அவர்கள் குணமடைவர்"

வும் ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழாவும் முக்கியமான விழாக்களாகின்றன. உண்மையில் இயேசுவின் உயிர்ப்பு விழாவிலே தான் இயேசுவின் விண்ணேற்பு விழா அடித்தளமிடப்பட்டுள்ளது. எவ்வாறு இயேசு இறக்கவில்லை என்றால் உயிர்த்திருக்க முடியாதோ, அவ்வாறே இயேசு உயிர்க்கவில்லை என்றால் விண்ணேற்பு அடைந்திருக்க முடியாது. இந்த வகையில் இயேசுவின் உயிர்ப்பிலேயே அனைத்தும் அடித்தளமிடப்பட்டுள்ளன.

இயேசுவின் உயிர்ப்பு நீண்ட காலத்தின் முன் நடந்து முடிந்த ஒரு வெறும்

நிகழ்கால நிகழ்வு – மனித சாத்திரத்தில் திரும்பவும் திரும்பவும் மாறுபட்ட மனிதர்களில் – அவர்களது வாழ்வில், பணியில், பங்களிப்பில் நடைபெறும் நிகழ்வு. இது ஒரு முடிவே அற்ற நிகழ்கால நிகழ்வு.

உயிர்த்த இயேசு இன்றும் மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில் – மனித வாழ்வின் அடிப்படை வரலாற்றில் நிஜமாக வாழ்கிறார் – அவர் இன்றும் என்றும் சரித்திரத்தில் வாழும் ஒருவர். உலக மனித

கொண்டிருக்கும் ஒருவர்.

இயேசுவின் உயிர்ப்பு ஓர் இறை அரசின் அறிவிப்பு. ஆனால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாத ஓர் அறிவிப்பு. ஆனால் அதுதான் இயேசுவின் வாழ்வின் உறுதியான முடிவு. இயேசு இறை அரசை அறிவிக்கவே அன்றாடம் உழைத்தார். அதற்காகவே அனைத்தையும் – தம் உயிரையுமே – அர்ப்பணித்தார். இது ஒரு வரலாறு – என்றுமே அசைக்கப் முடியாத, அழிக்கப்பட முடியாத வரலாறு.




என்று கூறினார்.

இவ்வாறு அவர்களோடு பேசிய பின் ஆண்டவர் இயேசு விண்ணேற்றம் அடைந்து கடவுளின் வலப்புறம் அமர்ந்தார். அவர்கள் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயற்பட்டு நிறைந்த அருள் அடையாளங்களா[illegible] டைய வார்த்தையை உ[illegible] தினார்.(மாற்கு 16:15–20)

இவ்வாறு பார்க்கின்றபோது ஆண்

சாத்திர நிகழ்வு மட்டும் அல்ல அது ஒரு புதிய யுகத்தின் புதிய வானத்தினதும் புதிய பூமியினதும் – ஒரு ஆரம்பத்தின் பதிவு.

இயேசுவின் உயிர்ப்பு மனித வாழ்வின் ஒவ்வொரு வெற்றிக்கும் வரைவிலக்கணம் தருகிறது. அது மனித இறப்பினால் வரையறை [illegible] பெயராக, புகழாக, பணியாகப் பங்களிப்பாகத் தொடரும் ஒன்று.

வரலாற்றோடு உயிர்த்த இயேசு இன்றும் என்றும் வாழ்வார்.

உயிர்த்த இயேசு ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும் – அவர்களது அன்றாட அசைவுகள், அனுபவங்கள் அனைத்திலும் – ஒவ்வொரு சமூக மாற்றத்திலும் – அவற்றின் அடிப்படை நிகழ்வுகள் அனைத்திலும் – உயிர்வாழ்ந்துகொண்டே இருக்கிறார். உயிர்த்த இயேசு என்றும் உயிர் வாழும் ஒருவர். வரலாற்றில் வரலாறாகி என்றுமே உலக மனி

இந்த இயேசுவின் வரலாற்றில் உலகமும் உலக மனிதர்களும் அடையத் துடிக்கும் வெற்றியை முன்னோக்கிப் பார்க்கவேண்டும். மனிதர்களைப் பயமுறுத்தும் – அவர்களைப் பிரித்துக் கூறுபோடும் இன மத மொழி நிறகலாசார வேறுபாடுகளை வெற்றி கொள்ள வேண்டும்.

இந்த வகையில் தான் ஆண்ட[illegible]ன் விண்ணேற்பு விழா உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி-அக்கராயன் வீதியால் மகிழ்வான பயணம் எப்போது?

கிளிநொச்சி, மே 17

கிளிநொச்சி–அக்கராயன் பிர தான வீதியைப் புனரமைத்து தருமாறு அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி அக்கராயன் குளம் பிரதேசத்துக்குச் செல்லும் பிரதான வீதி போக்குவரத்துச் செய்யமுடி யாத அளவு மிகவும் மோசமான காணப்படுவதாகவும், இதனால் அக்கராயன், வன்னேரிக்குளம், ஜெயபுரம் கிராமங்களை சேர்ந்த மக்கள் குறித்த நேரத்திற்கு தங்க ளுடய தேவைகளை நிறைவேற்ற முடியாமல் பாதிப்படைவ தாகவும் மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 30 வருட காலமாக பாதிக்கப் பட்ட நாங்கள் தற்போது மீண்டும் மீண்டும் அல்லற்படுகின்றோம். மழை காலங்களில் அந்த வீதியில் உள்ள பெரிய கிடங்கு களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மாணவர்கள், ஏனை யவர்கள் சைக் கிளிலோ, அல்லது நடந்தோ பாடாலை களுக்கும், வேறு தேவைகளுக்கும் செல்ல முடியாது. காரணம் வெள்ளம் அவர்களதுஉடையை அழுக் காக்கிவிடும். அதுமட்டுமல் லாது எமது கிராமங்களில் ஏதாவது ஒரு அசம் பாவிதம் நிகழுமா னால். உடனடியாக பொலிஸாரால் வர முடியாது, அத்தோடு



விபத்துக்களில் காயம் அடைந்தவர் கள், நோயாளிகள் என அனை வரையும் குறித்த நேரத்திற்கு வைத்திய சாலைகளில் அனு மதிக்க முடியாது. இதானா லேயே பலர் உயிர் இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, இனிமேலும் அவ் வாறு தான் ஏற்படப் போகின்றது.

எனவே குறித்த வீதி திருத்தப் படு மானால் எங்களது பல தேவைகள் உடனடியாக நிறை வேற்றப்படும். அக்கராயனில் இருந்து மன்னா ருக்கு செல்வதற்கு மிகவும் சுலப மான பாதை இதுவே எனவே எங் களது பொருளாதாரத்தை கருத்திற் கொண்டு சம்மந்தப் பட்டவர்கள் உடனடியாக எமக்கு நல்லதொரு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தருக என்று அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ–21)









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

micromax
nothing like anything

எவரையும், எந்நேரத்திலும்
உங்கள் நினைவுகளில் புகைப்படமாய் பதித்திடும்




ரூ. 4,290/=




ரூ. 4,490/=

https://www.facebook.com/micromax.srilanka

metropolitan
HSBC HNB

M-Centres
Arpico Super Centers



EDUCATION LOAN FAIR FOR
WORKING PROFESSIONALS

CIMA-MBA | BBA TOP-UP

Monthly installment starts from Rs 6,700/- during grace period

CIMA Managerial Level
BBA TOP-UP Northwood University USA (Final year)

ENTRANCE FREE

CIMA Exam Complete
MBA University of West London (1 Year)

23rd May 2015 From 8.00am to 3:00pm
Ramakrishna Hall, Colombo 06.

HSBC NSB NDB Bank SEYLAN PAN ASIA BANK

# நாவிதன்வெளி பிரதேச சபைக்கு புதிய கட்டடம் திறந்து வைப்பு



அம்பாறை,மே 17

அம்பாறை, நாவிதன்வெளி பிரதேச சபைக் குச் சொந்தமான புதிய கட்டடத் திறப்பு விழா பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.குணரெத் தினம் தலைமையில் நாவிதன்வெளி பிரதேச சபையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை முதல மைச்சர் கபீர் நசீர் அகமட், மற்றும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.கலையரசன், கிருஷ்ணபிள்ளை (வெள்ளி மலை) மு.இராஜேஸ்வரன், முதலமைச்சரின் செயலாளர் யூ.ஐ.ஏ.அசீஸ்,கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை.சலீம், மற்றும் நாவிதன்வெளி பிரதேச சபையின் உறுப்பினர்கள், கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ)




மனங்கவரும் வட்டி
உளமுணரும் நம்பிக்கை

நல்ல நம்பிக்கையுடன் நட்புத்தன்மையை அதிகம் கொண்டுள்ள எமது நிலையான வைப்பின் மூலம் உங்களுக்கு கவர்ச்சிகரமான வட்டியையும் பெற்றுத் தருகிறோம். அதனாலேயே Softlogic Finance நிலையான வைப்பில் உங்கள் பெறுமதி மிக்க பணத்தை நீங்கள் வைப்புச் செய்ய வேண்டும்.

கொழும்பு தலைமை அலுவலகம் - 0112 359 700 | கொழும்பு நகர அலுவலகம் - 0112 303 373
நாவலை - 0112 807 080-1 | பதுளை - 0552 224 206 | சிலாபம் - 0322 221 415 | தம்புள்ளை - 0662 284 737
எம்பிலிப்பிட்டி - 0472 230 590-1 | கடவத்தை - 0112 923 011-2 | கண்டி - 0812 224 913 | மாத்தறை - 041 2 220 195
நுவரெலியா - 0522 223 382 | நீர்கொழும்பு - 0312 224 714 | இரத்தினபுரி - 0452 230 677
பொலன்னறுவை - 0272 226 727 | காலி - 0912 226 501 | யாழ்ப்பாணம் - 0212 219 444 | அநுராதபுரம் - 0252 226 279
குருநாகல் - 0372 232 875 | செங்கடகல - 0812 232 602 | பாமன்கடை - 0112 367 901

| காலம் | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | |
|---|---|---|---|---|
| | வீதம் | வ.தே.வ. | வீதம் | வ.தே.வ. |
| 12 மாதங்கள் | 9.00% | 9.00% | 8.50% | 8.84% |
| 18 மாதங்கள் | 9.50% | 9.29% | 9.00% | 9.38% |
| 24 மாதங்கள் | 10.00% | 9.54% | 9.00% | 9.38% |
| 36 மாதங்கள் | 10.50% | 9.56% | 9.50% | 9.92% |
| 48 மாதங்கள் | 11.00% | 9.54% | 9.50% | 9.92% |
| 60 மாதங்கள் | 12.00% | 9.86% | 10.50% | 11.02% |

www.softlogicfinance.lk
அழையுங்கள்: 0112 577 455

softlogic Finance

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 217

## நல்ல கொலஸ்ரோலை கூட்டுவது எப்படி?




கொலஸ்ரோல் என்பது வேதிக் கூட்டுப் பொருள். இது இயற்கையாக எமது உடலில் உருவாக்கப்படுகிறது. எமது உடலுக்குத் தேவையான கொலஸ்ரோலில் 80 வீதமானதை எமது கல்லீரல் உற்பத்தி செய்து விடுகிறது. மீதம் நாம் உண்ணும் உணவில் இருந்து எடுக்கப்படுகின்றது. கொலஸ்ரோல் நாம் உயிர் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதது. ஆயினும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதிகரிக்கும்போது அது தீங்கை ஏற்படுத்துகின்றது.

எமது உடலில் கடத்தும் சாதனமாகத் தொழிற்படும் குருதியின் கொழுப்பானது புரதங்களுடன் இணைந்த நிலையில் பின்வருமாறு காணப்படுகின்றது.

1. L.D.L குறை அடர்த்திக் கொழுப்புப் புரத கொலஸ்ரோல் (Law Density Lipo Proteins)
2. V.L.D.L மிகக் குறை அடர்த்திக் கொழுப்பு புரதக் கொலஸ்ரோல் (Very Low Density Lipo Proteins)




3. Triglycarides (முக்கிளிசரைட்டுகள்)
4. H.D.L மிக அடர்த்திக் கொழுப்புப் புரதக் கொலஸ்ரோல் (High Density Lipo Proteins) இந்தக் கொழுப்புச் சத்துக்கள் எமது குருதியில் மிருதுவாகவும் மெழுகுத் தன்மையுடனும் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

எனினும் L.D.L, V.L.D.L மற்றும் Triglycarides, குருதியில் இவற்றின் செறிவு அதிகரிக்கும்போது இருதய மற்றும் குருதிக் குழாய்களில் அடைப்பு, குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்பட ஏதுவாகிறது.

L.D.L, V.L.D.L இரண்டினதும் அடர்த்தி குறைவடையும்போது குருதிக் குழாய்களின் சுவர்களில் ஒதுங்கி உட்புறச் சுவர்களிலே மெல்லிய பாளங்களாகப் படிகின்றன. நாளடைவில் இந்தக் குருதிக் குழாய்களில் உட்சுவர் சுருக்கம் அடைந்து குறுகலாகும் வாய்ப்பு அதிகரிக்கின்றது. அத்துடன் இரத்த ஓட்டமும் தடைப்படுகின்றது. இதனால் மாரடைப்பு உட்படப் பல இருதய நோய்கள் ஏற்படுகின்றன. அத்துடன் மாரடைப்பு வந்தவர்களின் குருதியைப் பரிசோதிக்கும் போது அனேகருக்கு Triglycarides (முக்கிளிசரைட்டுகள்) மட்டம் உயர்வாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. எனினும் H.D.L (மிக அடர்த்திப் புரதக் கொலஸ்ரோல்) இது குருதியில் நல்ல கொலஸ்ரோல் என்று அழைக்கப்படுகின்றது. இதன் செறிவு குருதியில் அதிகரிக்கும்போது இரத்தக் குழாய்களில் படிந்துள்ள தீங் கிழைக்கும் கொலஸ்ரோல் படிவுகள் அகற்றப்பட்டு இரத்தக் குழாய்களின் அடைப்பு நீங்குகிறது. அத்துடன் இருதய நோய்கள், மாரடைப்பு வராமல் தடுக்கின்றது. H.D.L அளவு குருதியில் கூடுவது மிகவும் நன்மை பயக்கும் என்பது ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே இதனை உற்பத்திசெய்யும் கல்லீரலை தூண்டக்கூடிய உணவு, மருந்து பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் குருதியில் H.D.L இன் செறிவை அதிகரிக்கலாம். இதற்கு நாம்

1. சீரான உடற்பயிற்சி செய்தல்.
2. உடற்பருமனைக் குறைத்து சீரான எடையைப் பேணுவது.
3. உணவில் காய்கறி, பழவகை, நார்ச்சத்து உணவுகளை அதிகளவு எடுத்தல்.
4. வறுத்த பொரித்த மாமிசப்பண்டங்களைத் தவிர்த்தல்.
5. எமது கல்லீரலினால் உற்பத்தி செய்துவிட முடியாத கொழுப்பு வகைகளை ஓமோகா – 3 மீன் உணவுகளில் இருந்தும், ஓமோகா– 6 சோளம் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் சோயா பீன்ஸ் மற்றும் விதைகள், பருப்புகளில் இருந்தும் பெறலாம். இவற்றை உணவில் அளவுடன் சேர்த்தல்.
6. உங்கள் உடலில் உற்பத்தியாகும் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தத்தக்க மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி உட்கொள்ளல்.
7. புகைப்பிடிப்பது, மது அருந்துதல் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. தொடர்ச்சியாக மது பானம் அருந்துபவராயின் முற்றாகத் தவிர்த்தல்.
8. புரதக் கொழுப்புக்களைத் தவிர்த்தல் (உதாரணமாக விலங்கின் இறைச்சிகள், நெய், வெண்ணெய், தேங்காய் எண்ணெய், கேக், ஐஸ்கிறீம் போன்றன.)
9. மாமிச உணவு உண்பவராயின் கூடுதல் மரக்கறி வகைகளையும் கீரை போன்ற உணவு வகைகளையும் எடுத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் குருதியில் H.D.L செறிவை அதிகரிக்கச் செய்யலாம். ஒருவரது மொத்தக் கொலஸ்ரோல் (Total Cholostol) அளவிடுவதை விட அதன் பிரிவுகளை அளவிட்டுச் சிகிச்சைப் பெறுவது சாலச்சிறந்தது.

ச.சுதாகரன்,
தாதிய உத்தியோகத்தர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

## மூச்சிழுக்கும் குழந்தை (A wheezing child)

மூச்சிழுப்பு என்பது, உயிர் சுருதியுடனான விசில் ஊதுவது போன்ற சுவாசச் சத்தமாகும். சுவாசத் தொகுதியின் சிறு சுவாசக் குழாய்களின் சுருக்கத்தால் மூச்சிழுப்பு ஏற்படுகின்றது. இது ஒரு பொதுவான சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட அறிகுறியாகும். இருபத்தைந்து தொடக்கம் முப்பது சதவீதமான ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் எப்போதாவது ஒரு முறை மூச்சிழுப்பால் அவதிப்பட்டிருக்கலாம். அதேபோல் ஆறு வயதுக்கு உட்பட்ட சிறார்களில் அரைவாசி பேருக்கு ஒரு தடவையாவது மூச்சிழுப்பு ஏற்படலாம்.

**மூச்சிழுப்புக்கான காரணங்கள் எவை?**

1. மூச்சிழுப்புக்கான மிகப் பொதுவான காரணியாக சுவாசத் தொகுதியில் ஏற்படும் கிருமித் தொற்றுக்களே அமைகின்றன. அவற்றிலும் வைரசு கிருமித்தொற்றுக்களேபொதுவானவை. குழந்தையொன்றுக்கு மெல்லிய காய்ச்சலுடன், இருமல், மூச்சிழுப்பு என்பன ஏற்பட பொதுவாக வைரசுக்களே காரணமாகும். சில சமயங்களில், காய்ச்சல் மாறிய பின்னரும் இருமல் மூச்சிழுப்பு சில நாள்களுக்கு நீடிக்கலாம். இதை வைரசினால் தூண்டப்படும் (Viral Induced Wheezing) என அழைப்பர். இதை விட, சில சமயங்களில் கடுங்காய்ச்சலுடன் கூடிய நியூமோனியா போன்ற பக்ரீரியா தொற்றுக்களின் போதும் மூச்சிழுப்பு ஏற்படலாம்.
2. மூச்சிழுப்பு ஏற்படுவதற்கான அடுத்த பிரதான காரணியாக ஆஸ்துமா (Asthma) எனப்படும் முட்டு வருத்தம் அமைகின்றது. ஒரு பிள்ளைக்கு அடிக்கடி இருமலும், மூச்சிழுப்பும் ஏற்படும் போது அந்தக் குழந்தைக்கு அஸ்துமா உள்ளதா என தீர்மானிக்க வேண்டும்.
3. சில வேளைகளில், சிலவகையான உணவுகளுக்கு, மருந்துகளுக்கு அல்லது இரசாயனப் பதார்த்தங்களுக்கு ஒவ்வாமை (Allergy) ஏற்படும்போது மூச்சிழுப்பு ஏற்படலாம்.
4. வீட்டினுள்ளே காணப்படும் சமையலறைப் புகை, சிகரட் புகை, தூசி போன்றவற்றால் காற்று மாசடைவதால் சிறுவர்களுக்கு மூச்சிழுப்பு, இருமல் என்பன ஏற்படலாம்.
5. சிறுபிள்ளைகள் பிறபொருள்களை வாயில் வைத்துக் கடிக்கும்போதோ அல்லது உட்கொள்ளும்போதோ புரையேறி பிறபொருள்கள் (Foreign body) சுவாசப் பாதையை அடைப்பினும் மூச்சிழுப்பும் மூச்சுத் திணறலும் ஏற்படலாம்.
6. அரிதாக சுவாசக் குழாய்களில் ஏற்படும் பிறவிக் குறைபாடுகளினால், குழந்தைக்கு பிறந்ததிலிருந்தே மூச்சிழுப்பு ஏற்படலாம்.

**மூச்சிழுப்பு உள்ளபோது நாம் அவதானிக்க வேண்டியவை எவை?**

பொதுவாக அவதானிக்க வேண்டியது எதுவெனில் குழந்தையொன்றின் ஆரோக்கிய நிலையாகும். ஒரு குழந்தையானது பாலருந்தாது, உணவு உட்கொள்ளாது சோர்வடைந்து மூச்சுவிடுவதில் சிரமப்படின் அது ஆபத்தானது. அந்தச் சந்தர்ப்பத்தில் உடனடி வைத்திய சிகிச்சை தேவையாகும்.

மேலும், மூச்சிழுப்பு ஏற்படும்போது அது ஏன் ஏற்பட்டுள்ளது எனவும், அவதானிக்க வேண்டும். உதாரணமாக:– திடீரென ஒரு குழந்தைக்கு இருமலும், மூச்சுத்திணறலும், மூச்சிழுப்பும் ஏற்படுமாயின் அது எதையோ விழுங்கியதால் புரையேறியுள்ளதா எனப் பார்க்க வேண்டும். அவ்வாறே தோலில் கடியுடனான தடிப்புக்கள் ஏற்பட்டு மூச்சிழுப்பு ஏற்படுமாயின் ஏதோவொன்றுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதா என பார்க்க வேண்டும். காய்ச்சலுடன் இருமல், மூச்சிழுப்பு, மூச்சுவிட சிரமப்படல் ஏற்படும்போது கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது என அனுமானிக்கலாம்.

**மூச்சிழுப்பு உள்ளபோது என்ன செய்ய வேண்டும்?**

மேலே குறிப்பிட்ட [illegible] அறிகுறிகள் காணப்படுகையில் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். சில சமயங்களில் பிறபொருள்களை விழுங்கி புரையேறியதால் மூச்சிழுப்பு ஏற்பட்டிருக்குமாயின், அதற்கான முதலுதவியைச் செய்யலாம்.

ஆஸ்துமாவினால் மூச்சிழுப்பு ஏற்படுமாயின் வைத்திய ஆலோசனைப்படி அதற்கான மருந்துகளைப் பாவிக்கலாம். உதாரணமாக:– அடிக்கடி முட்டு வருபவர்களுக்கு ஏற்கனவே தரப்பட்ட உள்ளிழுக்கும் மருந்து பம்பிகளை (Inhalers) சரிவரப் பாவிக்க வேண்டும்.

ஒவ்வாமையினால் மூச்சிழுப்பு ஏற்பட்டிருப்பின் ஒவ்வாமைக்கான காரணியை கண்டறிந்து தவிர்ப்பதுடன், (உதாரணமாக சில மருந்துவகைகள்) உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெறவேண்டும். சுவாசக்கிருமித் தொற்றுக்களினால் மூச்சிழுப்பு ஏற்பட்டிருக்கையில் குழந்தையின் அரோக்கிய நிலையை அவதானிப்பதுடன். தகுந்த சிகிச்சை பெறவேண்டும்.

**மூச்சிழுப்பு ஏற்படாமல் எவ்வாறு தவிர்க்கலாம்?**

முதலில் மூச்சிழுப்புக்கான காரணியைக் கண்டறிந்து, அதனைத் தவிர்க்க வேண்டும். கிருமித் தொற்றுக்களால் மூச்சிழுப்பு ஏற்படுமாயின். சுவாசத் தொற்றுக்கள் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு பரவாமலிருப்பதற்கான நியம பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும். முக்கியமாக தும்மும் போதும், இருமும் போதும் கைக்குட்டையை அல்லது திசுத்தாளை பயன்படுத்துவதுடன், நன்றாக கைகளை கழுவுதலும் வேண்டும். அதேபோல் ஒவ்வாமைக்கான காரணிகளை எதிர்காலங்களில் தவிர்த்தல் வேண்டும். சிறுபிள்ளைகள் பிறபொருள்களை உட்கொண்டு புரையேறி விடாமல் பெற்றோர் அவதானத்துடன் பார்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக:– சின்னஞ்சிறு பாகங்களைக் கொண்ட விளையாட்டுப் பொருள்களை சிறுபிள்ளைகளுக்கு விளையாட கொடுக்கக்கூடாது. [illegible] நோயுள்ள பிள்ளைகளுக்கு அது ஏற்படுவதற்கான காரணிகளைக் கண்டறிந்து,



இயன்றவரை அவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும். உதாரணமாக:– சிகரட்புகை, சமயலறை புகை, தூசி என்பவை. அதேபோல் குழந்தை உறங்கும் அறையில் தூசி இன்றி படுக்கை விரிப்புக்கள், மெத்தை, ஆடைகள் தூய்மையாக இருத்தல் வேண்டும். வீட்டினுள்ளே செல்லப் பிராணிகளை விடக்கூடாது. ஒவ்வாமை உண்டுபண்ணக் கூடிய பதார்த்தங்களைத் தவிர்த்தல் வேண்டும். மூச்சிழுப்பு மீண்டும், மீண்டும் வராமலிருக்க பாவிக்கும் உள்ளிழுக்கும் மருந்துப் பம்பிகளைச் சரிவரப் பாவித்தல் வேண்டும். வைத்திய அலோசனைகளை முறைப்படி பின்பற்ற வேண்டும்.

இறுதியாக மூச்சிழுப்பு என்பது சுவா[illegible]ம் சம்பந்தப்பட்ட ஒரு அறிகுறியாக அ[illegible] துடன் அதற்கான பல காரணங்கள் உண்டு எ[illegible] அறியலாம். அந்தக் காரணிகளைத் தவிர்[illegible]பதன் மூலம் மூச்சிழுப்பு பிள்ளைகளுக்கு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மேலும் மூச்சிழுப்பு உள்ளபோது ஆபத்துக்கு உரிய மற்றைய அறிகுறிகளை அவதானித்து உடனடிச் சிகிச்சையை பெறவும் வேண்டும்.

Dr.ந.ஸ்ரீசரவணபவானந்தன்
குழந்தை நல வைத்திய நிபுணர்.
யாழ்.போதனா வைத்தியசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் நிறுவுநர் க.சந்திரகுலசிங்கத்தின் (மோகன்) ஒழுங்கமைப்பில் தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் கனடா கிளையினரால் வழங்கப்பட்ட சிறுவர்களின் விளையாட்டு நிகழ்வுக்கான சீருடைகளை தயார் செய்வதற்கான ஒருதொகை நிதி கற்குளம்–1, மலரும் மொட்டுக்கள் முன்பள்ளி நிர்வாகத்திடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்டது. நிகழ்வில்தமிழ் தேசிய இளைஞர் கழகத்தின் தலைவர் சு.காண்டீபன், பொருளாளர் த.நிகேதன், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (வ–402)



வவுனியா வெளி வட்டவீதி அருள்மிகு ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. எம் பெருமான் வீதி உலாவரும் காட்சியை அடியார்கள் தரிசித்து விநாயகப் பெருமானின் அருளைப் பெற்றுக் கொண்டனர். (வ)





நயினாதீவு ஞானவைரவர் கோயிலில் நடைபெற்ற பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள், நிர்வாகசேவை தரம் ஒன்றுக்கான பதவி உயர்வுகள் குறித்த பாராட்டு விழாவில் வேலணைபிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசனைப் பாராட்டி ஞான வைரவர் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் எஸ்.தர்மராசா பாராட்டுப்பத்திரம் வழங்குவதைக் காணலாம். (வ–7)



















[illegible]கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் அதிபர் நோபேட் உதயகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபைத்தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் கலந்துகொண்டார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







வவுனியா பொது வைத்தியசாலையின் சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் அண்மையில் வைத்தியசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வை வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப. சத்தியலிங்கம், வவுனியா வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகர் கே. அகிலேந்திரன் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். வைத்திய சாலை ஊழியர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களும் இடம்பெற்றன. (வ)



வவுனியா மாவட்ட அரச அதிபர் பணிமனையில் அண்மையில் இடம்பெற்ற வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரச அதிபர் பந்துல ஹரிசந்திரா மற்றும் பிரதேச செயலாளர் க. உதயராசா, வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பிரதேச செயலக உத்தி யோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (வ)



வடமராட்சி துன்னாலை அல்லையம்பதி ஸ்ரீசுப்பிரமணியர் ஆலய மகா கும்பாபிசேகக் கிரியைகள் அண்மையில் நடைபெற்றன. (வ-9)







அண்மையில் இடம்பெற்ற உக்குளாங்குளம் கனறா சிறுவர் முன்பள்ளி கண்காட்சி திறப்புவிழாவில் கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர்களான இ.இந்திரராஜா ம.தியாகராசா மற்றும் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், மயில்வாகனம் தியாகராசா மங்கல விளக்கு ஏற்றுவதையும் கண்காட்சியில் பொருள்களைப் பார்வை யிடுவதையும் காணலாம். (வ-402)

















மடு பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட கிராமங்களுக்கான சித்திரைப் புத்தாண்டு பாரம்பரிய கிராமிய விளையாட்டு விழா நிகழ்வுகள் அண்மையில் மடு பிரதேச செயலக விளையாட்டு மைதானத்தில் விமரிசையாக இடம்பெற்றன.

மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.[illegible], சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்[illegible] எஸ். ராசசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் பாபு சாஸ்த்திரி ஸ்ரீமுருகன் ஜோதிடம்

வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரிக ஜோதிடர். இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கைரேகை பார்த்து பலன் சொல்லுவார், கணவன் மனைவி சண்டை, வேலை தொழில் உத்தியோகம் இப்படிப் பலவாறான தொழில் பாதிப்பு, வீட்டில் பேய் பிசாசு நடமாட்டம், கண்திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இன்மை, குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு வேண்டிய வழிகளைக் காட்டுதல் ஆகியவற்றிற்கு பலன் சொல்வதோடு பிரச்சினைகளைத் தீர்த்தும் வைப்பார். மேலும் உங்கள் வீட்டை காவல்படுத்தல் போன்றவற்றையும் செய்வார். தமிழ் மொழிகளில் சொல்லப்படும். ஆகவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இல. 175, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்விருந்தினர் விடுதி, G.G.Hotel, யாழ்ப்பாணம். தொடர்பு: 077 595 0463

## பணிப்பெண் தேவை

மன்னாரில் அமைந்துள்ள பிரபலம் வாய்ந்த சுற்றுலா விடுதிக்கு (கோல்டன் றெஸ்ற்) பணிப்பெண் தேவை. சமையல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிடவசதி உண்டு. மூன்று நேர உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித்தீர்க்கலாம்.

தொடர்பு:
071 140 7779,
023 222 3496

GOLDEN REST
கோல்டன் றெஸ்ற்
எழுத்தூர், மன்னார்.

## வீடு காணி விற்பனைக்கு

கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையில் பெரிய வீடும் 30 பரப்பு தோட்டக்காணியும் விற்பனைக்குண்டு. தற்போது தோட்டம் செய்யப்படுகின்றது. தோட்டம் செய்ய, பண்ணைகள் அமைக்க, ஆச்சிரமங்கள் அமைக்க ஏற்ற அமைதியான இடம். தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை மற்றும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் 1½ k.m தூரம். 150m தூரத்தில் மல்லாகம் கட்டுவன் முனியப்பர் கோயில் உள்ளது. கட்டுவன் யாழ்ப்பாணம் பஸ்சேவை உண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.
(பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்)

தொடர்பு: 077 844 6568, 077 793 4445 (68673) (45.3.7)

## நீங்கள் முடிஉதிர்வு, பொடுகு, அரிப்பு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா???

இப் பிரச்சினைகளிற்கு தீர்வாக இன்றே பாவியுங்கள் சிறந்த மூலிகைகள் அடங்கிய
**"றோயல் அகஸ்தியா கூந்தல் எண்ணெய்"**

தலைக்கு குளிர்ச்சியினை அளித்து தலைச் சருமத்துக்கு ஊட்டமளித்து, முடி உதிர்வைத் தடுத்து, கூந்தலைக் கருமையாகவும், நீளமாகவும், அடர்த்தியாகவும் வளரச் செய்து முகத்திற்கு பொலிவை அளிக்கவல்லது.

சந்தைப்படுத்துவோர்: சிவா நறுமணப்பூங்கா,
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்) தொ.பே: 021 222 2567
Manufactured by: Royal Industries Colombo -13

Quality Royal A Kasthiya Hair Oil Guaranteed

யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்துக் கடைகளிலும், மருந்தகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி/16706) (4.3.6)

## உங்கள் முடிகொட்டுதல், பொடுகு, இளநரை பிரச்சினைகளுக்கு இதோ தீர்வு

21 இயற்கை மூலிகைகள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட Hair Oil 15 நாள்களில் வித்தியாசத்தை உணர முடியும்.

கோடை காலத்தில் உங்கள் முகத்தில் கருமை, களைப்பு, பருக்கள் பற்றிய கவலையா? கவலையை விட்டு விடுங்கள். இயற்கை மூலிகைகளால் கோடை கால பேசியல் மிகவும் குறைந்த செலவில் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள அழையுங்கள்.

T.P: 077 524 2852, 021 568 8645

மையூரா ப(f)ஷன் மந்திர்,
71, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (சி/17750) (4.3.6)

20% கழிவு

## AIR UNIVERSAL TRAVELS & HOLIDAYS

எமது சேவைகள்....

* மிகக் குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்.
* இந்தியா, மலேசியா, தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்.
* சகல நாடுகளுக்குமான பயணக் காப்புறுதிகள்.
* உள்ளூர், வெளியூர் பிரயாணிகளுக்கான சுற்றுலா வசதிகள்.
* குழு பிரயாண வசதிகள்.
* வெளியூர் பிரயாணிகளுக்கு விசா புதுப்பித்தல்.
* சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்பப்படிவம் பூரணப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

இவை அனைத்தையும், ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

Mr.G.Sharon
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொலைபேசி இலக்கம்:
021 226 1383, 076 839 7889 (சி/17752) (4.3.7)
Email: sharonairuniversal@gmail.com

## வேலையாள்கள் தேவை

சகல வசதியுடன் உணவகம் ஒன்றுக்கு நிரந்தரமாக நின்று வேலை செய்யக்கூடிய வேலையாள்கள் தேவை மூன்று நேர உணவு, தங்குமிடவசதி, மாதாந்த சம்பளம் என்பவற்றுடன்.

இடம் பெயர்ந்தவர்களுக்கு முன் உரிமை.

1. சப்ளையர்(உணவு பரிமாறுபவர்கள்)
2. சமையலறை வேலையாள்கள்
3. காசாளர்
4. வீட்டுப் பணிப்பெண்கள்

தொடர்பு: 077 791 7753, 076 689 8043 (59856) (9.3.6)

## சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம் கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை கல்லடி, மட்டக்களப்பு

கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பித்தல்
இரண்டாம் ஆண்டு முதலாம் அரையாண்டு (2013/2014)

இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு கல்வி நடவடிக்கைகள் 01.06.2015 (திங்கட்கிழமை) ஆரம்பமாகும்.
இரண்டாம் வருட மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்பட மாட்டா என்பதை கவனத்தில் கொள்ளவும்.

பதில் பணிப்பாளர்,
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை
கல்லடி, மட்டக்களப்பு.

தொ.பே: 065 222 2663/065 205 0695/
065 205 0702 (சி/17744) (4.3.6)

## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

தேசமானி திருமதி **வரதலக்ஷ்மி சோமசூரியசிங்கம்**
(விவாக - பிறப்பு- இறப்பு பதிவாளர்)
குடும்பத்தின் ஒளிவிளக்காக
சமூகத்தின் சேவகியாக
தன்னலமற்ற சேவையை வழங்கும்
சிங்கம் அன்றியே - நீங்கள்
அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால்
"சாமஸ்ரீ தேசகீர்த்தி" விருதுகள்
பெற்றமையை அறிந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துபவர்கள்:
திரு. திருமதி நாகரத்தினம் - குடும்பத்தினர்.
திரு.திருமதி கணேசானந்தன் - குடும்பத்தினர்,
கதிர்காமகோயிலடி, நீர்வேலி வடக்கு. (59897)(45.3.7)

## நடேஷ்வராலயா
### நுண்கலைக் கல்லூரி - மானிப்பாய்
இல. 248, யாழ் வீதி, மானிப்பாய்.



## கலை விழா 2015

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திகதி : 17-05-2015 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : மாலை 3.00 மணி
இடம் : பிரதேச சபை மண்டபம் மானிப்பாய்



வகுப்புக்கள் அனைத்தும் அனுபவம் மிக்க ஆசிரியர் குழாமினால் கற்பிக்கப்படுகின்றது

- பரதநாட்டியம்
- கீபோட்
- கிற்றார்
- மிருதங்கம்
- கர்நாடக சங்கீதம்
- வயலின்
- யோகா
- கராத்தே

T.P: 021 222 0555 | 077 290 8584


**மேடம்:** மறைமுக விமர்சனங்களும், தாழ்வுமனப்பான்மையும் வந்து செல்லும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**இடபம்:** மற்றவர்களுக்காக சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வியாபாரத்தில் புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**மிதுனம்:** எதையும் தாங்கும் மனவலிமை கிட்டும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். வேற்றுமதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கடகம்:** புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். தள்ளிப் போன விடயங்கள் உடனே முடியும். உறவினர்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிங்கம்:** உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**கன்னி:** மனைவிவழியில் நல்ல செய்தி உண்டு. வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் மதிப்பார்கள்.

**துலாம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். உத்தியோகத்தில் செல்வாக்கு உயரும்.

**விருச்சிகம்:** உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் அமைதி நிலவும்.

**தனுசு:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். திடீர் பயணங்கள் உண்டு. உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

**மகரம்:** குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் மரியாதை கூடும்.

**கும்பம்:** விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து பேசுவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

**மீனம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உங்கள் மீது சிலர் பழி சுமத்துவார்கள். அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

## நாளை

வைகாசி—04
திங்கட்கிழமை 18.05.2015
திதி: அமவாசை மு.ப.10.13 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ.10.45 வரை
சுபநேரம்: 11.53—01.23 வரை
இராகுகாலம்: 07.23—08.53 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✚ வைத்தியசேவை மீள் ஆரம்பம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு குடாநாடு திரும்பி வைத்திய சேவையை மீள ஆரம்பித்துள்ளேன் என்பதை அறியத்தர விரும்புகின்றேன்.

**வைத்திய கலாநிதி**

**லயன் சிற்றம்பலம் இராஜலிங்கம்**

M.R.C.G.P (Associate) (LONDON) A.M.H.H. (MADRAS)
R.M.P (SRILANKA). J.P WHOLE ISLAND

இளைப்பாறிய வைத்திய பொறுப்பதிகாரி
இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலி.

தொடர்பு: 077 711 0088 (59850) (45.3.7)

## தேவை

யாழ்.மாவட்டத்திற்குள் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்வதற்கு பின்வரும் ஆளணியினர் வேண்டப்படுகின்றனர்.

**01.விற்பனைப் பிரதிநிதி:**
தகைமைகள்: 01.விற்பனைத் துறையில் முன் அனுபவம்
02.ஆங்கில அறிவு அவசியம்
03.வயதெல்லை (25-35)

**02.உதவியாளர்கள்:**

தொடர்பு: SMART Importers & Distributors (Pvt) Ltd, Jaffna.
தொலைபேசி: 021 222 7904 (18.05.2015) திங்கட்கிழமை காலை 9.00 மணியிலிருந்து தொடர்பு கொள்ளவும்)
(59913)(4.3.7)



புகழ் FM / FME Institution இணைந்து அறிமுகப்படுத்தும்

## அறிவிப்பாளர் பயிற்சி நெறி

**நீங்களும் ஒரு வானொலி நட்சத்திரமாகி தொழில், புகழ், சந்தோசமான வாழ்க்கைக் கனவை நனவாக்கிட...**

- வானொலித்துறையில் நிபுணத்துவமுள்ள விரிவுரையாளர்கள்.
- ஒலிபெருக்கி, ஒலிவாங்கி, கணனி சாதனங்களுடன் நேரடிப் பயிற்சி.
- அறிவிப்பு தொடர்பான நுணுக்கங்களுடன் முழுமையான பயிற்சி.
- தலைமைத்துவ பயிற்சியும் ஆளுமை விருத்தி பயிற்சியும் அளிக்கப்படும்.
- வார இறுதி நாட்களில் இரு தினமும் 03 மணி நேர 03 மாத வகுப்புக்கள்.
- ஒலிபரப்பு, ஒலிப்பதிவு மென்பொருள் பயிற்சி இலவசமாக கற்பிக்கப்படும்.
- பயிற்சி நெறி முடிவில் சான்றிதழும் கையேடும் வழங்கப்படும்.
- தேர்ச்சி அடிப்படையில் தனியார் வானொலி, இணைய வானொலி, உள்ளூர் விளம்பர சேவைகளிலும் தொழில்வாய்ப்பு பெறமுடியும்.

**எதிர்வரும் 23.05.2015 சனிக்கிழமை ஆரம்பம்**

**பதிவுக்கட்டணம் அடங்கலாக ரூபா 15,000 மாத்திரமே**

இடம்: **Quality Water Solution, K.K.S Road, Inuvil.**
(இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில்)
T.P: 0767550082, E-mail: fmeinst@gmail.com

## வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ள வீட்டின் மேல்மாடி, அலுவலகப் பாவனைக்கு மட்டும் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 077 233 6238

## மாடி வீடு வாடகைக்கு (3200 Sq)

நல்லூர் - 6அறை, சமையல் அறை, 3குளியலறை (Tiles,Comode), 2A/C, 2 இற்கு மேற்பட்ட கார்த் தரிப்பிட வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்றது.

தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 350 5985

**வீடு வாடகைக்குண்டு** கண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் அல்லது வேலை பார்க்கும் பெண் பிள்ளைகளுக்கு மாத்திரம் கொடுக்கப்படும்.
(59864) (4.3.7) தொடர்பு: 077 777 7384, 021 222 7599

## வீடு வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றுக்கு யாழ். நகர் அல்லது அதற்கு அண்மையான பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
(59903) (4.3.7) தொடர்பு: 071 211 7561

## கோயில்மணி, திருவாசிகள் விற்பனைக்கு



கோயில் மணி 100kg, 150 kg, திருவாசி, செப்புக்கலசம், ஐம்பொன் சிலைகள் (இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்டவை) போன்ற அனைத்து விதமான கோயிலுக்கு தேவையான பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் உள்ள நாதன் லொஜ் இல் அனைத்து பொருள்களையும் பார்வையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:
3 நாள்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் பெற அரிய சந்தர்ப்பம்.

தொடர்பு:
076 66 93 634, 077 67 65 504

**பிள்ளையார் மெடல் வேர்க்ஸ்**
43/4/A, புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.

## அமெரிக்க கிரீன்காட் லொத்தர் 2016

அமெரிக்க கிரீன்காட் லொத்தர் 2016ஆம் ஆண்டுக்கு தெரிவானோரின் விபரங்கள் 2015 மே 5ஆம் திகதி வெளிவரவுள்ளன. இதில் தெரிவாகும் அதிர்ஷ்டசாலிகள் நிரப்பவேண்டிய படிவங்களை 2003ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்க கிரீன்காட் லொத்தர் விண்ணப்பிப்பதில் அனுபவம் வாய்ந்த எமக்கூடாக பூர்த்தி செய்துகொள்வதுடன் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவும்.

முறைப்படி படிவங்கள் பூர்த்திசெய்யாமை அல்லது தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களால் அமெரிக்க தூதரகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் உங்கள் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

**BRISTOL CYBER CAFÉ**
No. 8/3/4, Bristol Street, Colombo 01.
Tel: 0112 393919 / 0774 276579 www.bristolcc.biz

## ஆசிரியர் தேவை

பிரபல ஆங்கில மொழிமூல தனியார் பாடசாலையில் பின் வரும் வெற்றிடங்கள் உள்ளன.

* ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை ஆசிரியைகள்
* ஆங்கில உயர்நிலை கல்விக்கான ஆசிரியர்கள் (ஆண்/பெண்)
* பராமரிப்பாளர்கள்

விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளவும். (சி.17762) (45.3.7)

தொ.பே. 077 362 7055, 021 222 4060

## VACANCIES
## வேலைவாய்ப்பு



**COOK AND ROOM BOYS CUM STEWARD**

தங்குமிட விடுதி சார்ந்த துறையில் ஆகக்குறைந்த ஒரு வருட அனுபவம் வரவேற்கத்தக்கது.

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**

FITS MARGOSA

DIRECTOR - Sales & Marketing
FITS AVIATION (PVT) LTD.
Station Road, Urelu North,
Chunnakam, Jaffna.
Website: www.jaffna.travel

# நாராயணா

## கட்டடப் பொருட்கள் வர்த்தக நிறுவனத்தின் மற்றுமோர் ஸ்தாபனமாக

# EVERSHINE AMANA ROOFING

எனும் தொழிற்சாலையினை யாழ். மாவட்டத்தில் முதன் முறையாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் ஆரம்பித்துள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்கள், வியாபார ஸ்தாபனத்தினர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



வாடிக்கையாளர்களுக்குத் தேவையான அனைத்து வகையான *Amana Sheet* மற்றும் அதனோடு இணைந்த கூரை தொடர்பான உற்பத்திப் பொருட்களையும் (Purling, Gutters & Accessories) உங்களுக்கு வேண்டிய அளவிலும், நிறங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**வியாபார ஸ்தாபனங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்**

FACTORY: 11&12, INDUSTRIEL ESTATE, ACHCHVELLY, JAFFNA, SRI LANAKA
T.P/Fax 021 205 8485 Mobile : Singla / English 0777787435-(Upul)
Tamil: 077 725 1270 (Thayalan)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

மன்னார் மேற்பார்வை குடும்ப சுகாதார உத்தியோகத்தர் **லக்சுமி** அவர்களின் அன்புக்கணவர் **அந்தோனிப்பிள்ளை வேலாயுதம்** (முகாமைத்துவ உதவியாளர்- பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் பணிமனை மன்னார்) அவர்களின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடக்கு மாகாண குடும்ப சுகாதார உத்தியோகத்தர்சங்கம்

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் செல்லத்துரை (தம்பு)

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச., பருத்தித்துறை)



பெருந்தெரு புலோலி தெற்கைப்பிறப்பிடமாகக் கொண்ட இ.செல்லத்துரை நேற்றுமுன்தினம் (15.05.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும், செல்வேந்திரன்(முகாரி, இ.போ.ச. பருத்தித்துறை), செல்வராணி, செல்வநாதன், செல்வரஜனி(கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சுமதி, குணலிங்கம், சுதா (கனடா), செல்வராணி ஆகியோரின் மாமனும், சிந்துஜா(லண்டன்), சுஜித்தா(லண்டன்), அர்ச்சுன், ஹரிணி (ஆட்பதிவுதிணைக்களம் கொழும்பு), யசிந்தன், செல்வவிநோத், துஷ்யந்தன், துஷ்யந்தினி, புவிந்திரன், பகிரதன், கேதீபன், டெனிஸ்(கனடா), ஹரிஸ்(கனடா) ஆகியோரின் பேரனும் சாயிஸ், அனுஸ், அனுஷ்கா ஆகியோரின் அன்புப் பூட்ட னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் ஆனைவிழுந்தான் மயானத்தில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(கி. 17774) (45.3.8)

பெருந்தெரு,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:
செல்வேந்திரன் -மகன்

## கண்ணீர் அஞ்சலி



தீவுப்பகுதி விவாகப் பதிவாளரும்,
வேலணைப் பிரிவு பிறப்பு, இறப்பு
பதிவாளருமாகிய
திருமதி ஞானசௌந்தரி சிவநாதன்
அவர்களின் அன்புக் கணவர்

### இராசரத்தினம் சிவநாதன்

(முன்னாள் தலைவர் - வேலணை ப.நோ.கூ.சங்கம்)

அவர்களின் மறைவு குறித்து இரங்கல் அடைவதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தனை செய்கின்றோம். (59887) (45.3.7)

விவாக, பிறப்பு, இறப்பு, பதிவாளர் சங்கம், யாழ். மாவட்டம்

## முதலாம் ஆண்டு நினைவுகள்

மலர்வு
31.10.1917

உதிர்வு
28.05.2014



### அமரர் இராசையா செல்லம்மா

திதி: அமாவாசை (17.05.2015)

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை வளர்த்த கோயிலே
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு எங்களுடன் இருக்கும்.

லீலகிரி,
காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி.

சகோதரி: த. குணமணி
பெறாமக்கள்: த.தியாகலிங்கம்
இ.லீலாவதி.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 6 | | | 8 | 5 | | 4 |
| | | | | 3 | 5 | | 1 | |
| | | 1 | | | | | 3 | 2 |
| 2 | 1 | 4 | | 8 | 9 | 7 | | |
| | 8 | | | | | | 2 | |
| | | 9 | 6 | 2 | | 1 | 4 | 8 |
| 4 | 6 | | | | | 2 | | |
| | 7 | | 8 | 6 | | | | |
| 1 | | 5 | 7 | | | 4 | 8 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 2 | 4 | 6 | 9 | 7 | 3 | 5 |
| 9 | 4 | 7 | 5 | 8 | 3 | 2 | 1 | 6 |
| 5 | 3 | 6 | 2 | 7 | 1 | 8 | 9 | 4 |
| 4 | 6 | 5 | 3 | 2 | 8 | 9 | 7 | 1 |
| 3 | 7 | 9 | 1 | 5 | 4 | 6 | 2 | 8 |
| 8 | 2 | 1 | 6 | 9 | 7 | 4 | 5 | 3 |
| 2 | 1 | 3 | 9 | 4 | 6 | 5 | 8 | 7 |
| 7 | 5 | 4 | 8 | 3 | 2 | 1 | 6 | 9 |
| 6 | 9 | 8 | 7 | 1 | 5 | 3 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13.10.1948



மறைவு
11.06.2013

### திருமதி ஸ்ரீ ரஞ்ஜினி செல்வராஜா

மல்லாகம்
(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)
திதி: 20.05.2015

அம்மா எங்கள் உயிர் அம்மா
ஒருமுறை அழைத்தாலும் ஓடோடி வருவீர்கள் வேலையில் இருந்து
எத்தனை முறை அழைத்தும் ஏன் வரவில்லை இன்னும்
நிரந்தரமற்ற மனித வாழ்க்கையில் எது வேண்டுமானாலும்
நிகழலாம் என்பதை புரிந்து கொண்டோம் நாம் அன்று
ஆனால் நம் மேல் நீங்கள் கொண்ட அளவு கடந்த பாசத்தை
அளவிடவில்லை ஓர் அளவு கோல்
எங்களில் ஒருவராய் எப்போதும் எங்களுடனேயே
வாழ்ந்திருப்பாய் எங்கள் அன்புத் தாயே.........

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் சகோதரர்கள்.

(கி.14409) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Room நாள் வாடகைக்கு**

600/=, 800/=, 1200/=, 2500/=,3950/=, A/C,TV
இணைந்த குளியலறையுடன் Hotel Villa,
422, Galle Road, Wellawatte. 072 255 2222
(இராமகிருஷ்ணா வீதிக்கு அருகில்)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட பிரதேசங்களில் வளவுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
(59920) (4.3.7) தொடர்பு: 077 807 2312

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி, ஆடிபாதம் வீதி அரசடி ஒழுங்கையில் திருத்தியமைக்கப்பட்ட 03 அறைகள் கொண்ட வீடு (பெரிய குடும்பத்திற்கு பொருத்தமானது) உடன் வாடகைக்கு உண்டு.
குருபரன் : 0777 760 663
max adz

**போன் திருத்துநர் தேவை**

போன் திருத்துவதில் அனுபவம் உள்ள (Software, Hardware) தெரிந்தவர் தேவை. மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50,000 இற்கு மேல் வருமானத்தைப் பெறும் வாய்ப்பு உள்ளது.
தொடர்பு:
யாழ். போன் சொப்
இல.09, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
T.P: 077 3611282, 021 222 3817

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
(சி/16746) (4.3.7) தொடர்பு: 077 458 7746

**2016 Chemistry personal classes**

Basic, Inorganic, Organic, Physical, கடந்தகால வினாக்கள் ஆசிரியரால் B.Sc (cey) M.Sc (cey) Chemistry கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 603 8913 (59008) (9.3)

## ரயில்வே தொழில்நுட்ப பயிற்சிக்கு விண்ணப்பம்

கொழும்பு, மே 17

இரத்மலானை இலங்கை – ஜேர்மன் ரயில்வே தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்துக்கான பயிலுநர் களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

ஜி.சி.ஈ (சா.த) தேர்வில் மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இவற்றுள் ஏதேனும் 2 பாடங்களில் திறமைச்சித்தியடைந்த 16 – 25 வயதுக்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டாலும் பயிற்சி நெறிகள் சிங்கள மொழி மூலமே நடத்தப்படவுள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. டீசல் என்ஜின் இயந்திர தொழில்நுட்பவியலாளர் பயிற்சி 2 1/2 வருட காலப் பகுதியைக் கொண்டது. ஒட்டும் நுட்பவியலாளர் 3 வருடம் கொண்டது. இதன்போது என். வி. கியூ (N V Q) மட்டம் 4 சான்றிதழ் வழங்கப்படும். மின் தொழில்நுட்பவியலாளர் (சக்தி) இயந்திர தொழில் நுட்பவியலாளர் (பொது) ஆகியன ஒவ்வொன்றும் 3 1/2 வருட கால எல்லை என். வி. கியூ மட்டம் 4 கொண்டது ஆகும். இவைபற்றி மேலதிக விவரத்தை 2015.05.15 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம்.

அத்துடன் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III க்கு தொழிற் தகைமைக்கமைய திறமை அடிப்படையில் நேரடியாக ஆள்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பட்டயக் கணக்காளர் தொழிற்தகைமை பெற்ற 22 – 25 வயதுக்கு உட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். மேலதிக விவரங்களை 2015.05.15 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்வையிடலாம். (ஒ)

**மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு**

| | தொழில் | தொகை | சம்பளம் (Qr) | சம்பளம் (Rs) |
|---|---|---|---|---|
| | வேலையாள்கள் | 15 | 900 | 34,500/= |

1. தங்குமிடம். மருத்துவம் மற்றும் போக்குவரத்து மற்றும் உடைகள் இலவசம்.
2. வேலை நேரம் நாள் ஒன்றுக்கு 8 மணித்தியாலம் கிழமைகளில் 6 நாள்.
3. மேலதிக வேலை நேர கொடுப்பனவு. 4 மணித்தியாலம் வழங்கப்படும். (Over Time)
4. மூன்று வருட ஒப்பந்த முடிவில் விமான டிக்கட் இலவசம்.
5. சகல நிபந்தனைகளும் மலேசியா நாட்டின் சட்டத்திற்குட்பட்டவை

பாஸ்போட், சான்றிதழ் மற்றும் 6 கலர் படங்களுடன் கீழ் உள்ள முகவரிக்கு நேரில் வரவும்.

GOODWIN

**WESTERN AGENCY**
இல.33-1/1, மெனிங் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு - 06
Tel: 011 3443244 / 071 6292292
E-mail: westernagy@sltnet.lk

தரங்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழிற் பயிற்சி அமைச்சு
தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

ஜேர்மனிய அனுசரணையுடன் இலங்கையின் வடமாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் அங்கத்தவர் ஆகுவோம்.



**NAITA**

இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவகம் (SLGTI)
கிளிநொச்சி

இப்பொழுதே விண்ணப்பிக்கவும்

பின்வரும் பதவிக்கு தகைமையுள்ள பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**விரிவுரையாளர்ப் பதவி தரம் II பதவி**

தகைமைகளும் அனுபவங்களும்

பல்.மானி.ஆணையத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பொறியியல் /விஞ்ஞானம் / விவசாயத்தில் விசேட பட்டம்

அல்லது

எந்திரவியல் மன்றம் (CEI) பழைய பாடத்திட்டம் 11ம் பாகம், புதிய பாடத்திட்டம் 111ம் பாகம் / இலங்கை எந்திரவியல் நிறுவகம், பழைய பாடத்திட்டம் 11ம் பாகம், புதிய பாடத்திட்டம் 111ம் பாகம் எந்திரவியல்

உரிய துறைகள்:

| | |
|---|---|
| மின் எந்திரவியல் | - மின் (வலு) எந் / இலத்திரன் எந்/ தொலைத் தொடர்பு எந். |
| பொறிமுறை எந்திரவியல் | - பொறிமுறை எந்தி / தன்னசைவு எந் / உற்பத்தி எந் |
| குடிசார் எந்திவியல் | - கட்டட மற்றும் கட்டமைப்பு எந் /நெடுஞ்சாலை மற்.கட்டடம்/ நீரும் சூழல் எந். |
| விவசாயம் | - உணவு தொழிற்நுட்பம் |
| தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | |

சம்பளம் : ரூ. 24725 – 5 X 550 – 5 x 645 – 15 x 770 - 42250 (AR - 1)
(மேலதிகமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்கை செலவு கொடுப்பனவுகளும் மற்றைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வருடங்களுக்கு கூடாமலும் இருத்தல வேண்டும்.
(உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை உபயோகிக்கப்படுவதில்லை)



தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருக்கு பின்வரும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்

- வெளிநாட்டு பயிற்சி
- செயல்திறன் கொடுப்பனவு
- இருப்பிட வசதி

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறை அமைப்புகள், அரசாங்கத் திணைக்களங்கள் ஆகியவற்றின் பணியாளர்கள் தங்களது விண்ணப்பங்களை உரிய நிறுவனத்தின் தலைமையூடாக முன்வைத்தல் வேண்டும். இருப்பினும், விண்ணப்பத்தின் முன் கூட்டிய பிரதியை நேரடியாக அனுப்பலாம்.

பெயர், வயது, முகவரி கல்வித்தகைமைகள், உயர்தொழில் தகைமை, திகதியுடனான அனுபவம் ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பமானது, பணிப்பாளர் நாயகம். தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, இல. 971 , ஸ்ரீ ஜயவர்தனபுரமாவத்தை, வெலிக்கடை, இராஜகிரியா. என்னும் முகவரிக்கு 29.05.2015ம் திகதியில் அல்லது அதற்கு முன் அடையக்கூடியதாய் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்

கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

www.naita.gov.lk



**சிங்கப்பூரில் உயர்கல்வியுடன் பகுதி நேர தொழில்வாய்ப்புக்கான வாய்ப்பு**

4 YEAR EDUTRUST COLLEGES களில்.....
4 வருட அனுமதிபெற்ற கல்லூரிகளில்

Course: Hotel Management, Tourism, Business Management , IT

வங்கிக் கடன் வசதி

கற்கை நெறிக்கான கட்டணம் - RS.300,000/- முதல்

ஆகக்குறைந்த தகைமை - க.பொ.த. (சா.த)

கற்கை நெறி முடிவில் UK, USA பல்கலைக்கழகங்களுக்கு மேற்படிப்பிற்காக செல்லும் வாய்ப்பு!

14 நாட்களில் விசா

மாதத்திற்கு ஆகக்குறைந்தது Rs.100,000/- உழைப்பதோடு மாதத்திற்கு Rs.250,000/- வருமானம் பெறும் நிரந்தர தொழில்வாய்ப்புக்கான வசதி...

அரச அங்கீகாரம் பெற்ற எமது நிறுவனம் மூலம்.....

FREE - AIR PORT PICKUP, AIR TICKET, SIM CARD

For the Free Registration, Please bring passport, Passport size Photo, Birth certificate, O/L Certificate and other certificate

பதிவுகளுக்காக அழையுங்கள்: 0767 665 447
தமிழில் பேச அழையுங்கள்: 0776266309

**Orient Lanka** Employment Agency
தலை நகரில் தமிழர் நம்பிக்கை வென்ற தரமான நிறுவனம்
No: 2/1/1A, High Level Road, Kirulapone, Colombo - 06.
Tel: 011318 6396, 0112515146

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**

மத்திய கிழக்கு நாடுகளில் பிரபல்யமான நிறுவனங்களுக்கு கீழ்கண்ட வேலைகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை. விருப்பம் உள்ளோர் எமது காரியாலயத்திற்கு பாஸ்போட் சான்றிதழ் ஆகியவற்றுடன் உடனடியாக வரவும்

நேர்முகத்தேர்வு– மே 18/ 19/ 20/ 21 திகதிகளில்

**ஓமான்**

கப்பல் துறைமுகம் கட்டுமான வேலை

- சேன்ட் பிளாஸ்ட்டர் 300$ - 40,000
- பெயின்டர்ஸ் 300$ - 40,000
- மிக் வெல்டர் 300$ - 40,000
- பிட்டர் 300$ - 40,000

8 மணித்தியாலத்தின் பின் ஓவர்டைம். மாதம் நிறைய பணம் உழைக்கலாம், சாப்பாடு தங்கும் வசதி, மருத்துவம் இலவசம். மற்றும் இருவழி விமான டிக்கட் வழங்கப்படும் 1 வருடம் ஒப்பந்தம் புதுப்பிக்கலாம்.

**சவுதி அரேபியா**

- போக் லிப்ட் ஒப்பரேட்டர் 1000 SR 36000
- ஸ்டோர் கீப்பர் 1200-1500 SR 43000-54000
- டிங்கர் 1500 SR 54000
- சிறிய ரக வாகன சாரதி 1200 SR 43000
- மெஷின் ஒப்பரேட்டர் 1000 SR 36000

(உணவு, பிளாஸ்டிக், ஜூஸ், சொசேஜஸ் - தொழில்சாலைகளில் மெஷின் ஒப்பரேட்டராக பணிப்புரிந்தவர்கள்)
8 மணித்தியாலத்தின் பின் ஓவர்டைம், சாப்பாடு தங்கும் வசதி, மருத்துவம் மற்றும் ஒரு வழி பயணம் இலவசம்.

**துபாய்**

கேட்டரிங் கம்பனி

- கிளினர்ஸ் 800 டிராம் - 29000
- வெயிட்டர்ஸ் 1000 டிராம் - 36000

சாப்பாடு தங்கும் வசதி, மருத்துவம் மற்றும் ஒருவழி பயணம் இலவசம்.
இரண்டு வருட ஒப்பந்தக் காலம்.

**கட்டார்**

- பெரிய ரக வாகன சாரதி (கல்ப் லைசன்ஸ் வைத்திருப்போர்) 2500 - 90000
- டிங்கர் 1500-2000 - 54000-72000
- A/C மெக்கேனிக் 2500-2900 - 90000-99000

சாப்பாடு தங்கும் வசதி, மருத்துவம் மற்றும் ஒருவழி பயணம் இலவசம்.
இரண்டு வருட ஒப்பந்தக் காலம்.

உடனே எமது காரியாலயத்திற்கு வந்து பதிவுசெய்யவும்

**தனாமேன்பவர் (பி) லிமிட்டட்**
104, செட்டியார் தெரு, கொழும்பு 11.
Tel – 0115 333346 / 47/ 48 / 49, Mob: 0722 460046 / 077 3406686
E-Mail: danamanpower@yahoo.com Web: www.danamanpower.com

AL/701/Advt/13,15,16,24,22

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்

காலப் பகுதியில் மக்களின் அவலச்சாவு உச்சத்தில் இருந்தது. அத்துடன் இறுதிப்போர் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்தது.

இந்த நிலையில், மே 12 ஆம் திகதியிலிருந்து 18ஆம் திகதி வரையான வாரத்தைத் தமிழின அழிப்பு வாரமாக – முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரமாக உலகத் தமிழர்கள் பிரகடனப்படுத்தி அதனை அனுஷ்டித்து வருகின்றனர். இறுதி நாளான மே 18ஆம் திகதி நினைவேந்தல் நிகழ்வுகளையும் பெருமெடுப்பில் நடத்தி வருகின்றனர்.

அதற்கமைய இம்முறையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நாளை திங்கட்கிழமை தரணியெங்கும் உணர்வெழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

கடந்த வருடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை தமிழர் தாயகத்தில் நடத்துவதற்கு அப்போது ஆட்சியிலிருந்த மஹிந்த அரசு தடை விதித்திருந்தது. எனினும், மஹிந்த அரச படைகளின் கெடுபிடிகளுக்கும் மத்தியிலும் இறுதிப்போரில் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை தமிழ் மக்கள் நினைவுகூர்ந்தனர்.

இந்நிலையில், இவ்வருடம் ஆரம்பத்தில் தமிழ் மக்களின் ஆதர வுடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு மே 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்குத் தடை எதனையும் விதிக்கவில்லை.

மே 18ஆம் திகதி போரின்போது உயிரிழந்ததமதுஉறவுகளைநினைவுகூர்வதற்குதமிழ்மக்களுக்கு உரிமையுண்டு. அப்பாவித் தமிழ் மக்கள் தமது உறவுகளை நினைவுகூருவதை அரசு தடுத்து நிறுத்தாது. தமிழ் மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். எனினும், மே 18 ஆம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகளை நினைவுகூர முடியாது என்றும், அதற்கு அனுமதியளிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

கூட்டமைப்பு அறைகூவல்

இந்நிலையில், மே 18 ஆம் திகதி, போரில் உயிர்நீத்தோர் தமிழ் உறவுகள் நினைவாக– அவர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக, விளக்கேற்றி தமிழ் மக்களைப் பிரார்த்தனைகளில் ஈடுபடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது.

பல்கலை மாணவர்
சமூகம் அழைப்பு

அழுவதற்குக்கூட உரிமை மறுக்கப்பட்டு அடக்கி அழிக்கப்பட்டனர் எம் சொந்தங்கள். அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி நினைவேந்தி சுடரேற்றுவோம். அதற்காகப் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரும் ஒன்றிணையுங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம்.

கொத்துக் கொத்தாக இறுதிப் போரில் எமது உறவுகள் கொன்று குவிக்கப்பட்டனர். அந்த ஆறாத ரணங்களைச் சுமந்ததாக எம் முன்னே விரிந்துள்ளது இந்த வலி சுமந்த வாரம். தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநியாயம் இன்றளவும் நியாயப்படுத்தப்படுகின்றது. வலி சுமந்த வாரத்தின் இறுதி நாளில் சுடரேற்றி எம் உறவுகளை நினைவேந்துவோம் என்றும் மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை மாபெரும் ஒருங்கிணைப்பாக யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.அந்த நினைவேந்தலில் உதிர்க்கப்பட்ட எம் உதிரத்து உறவுகளுக்கு உணர்வுகளால் அஞ்சலிக்க அனைவரையும் உரிமையுடன் அழைக்கின்றோம் என்றும் யாழ். பல்கலைக் கழக அனைத்துப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலை் ஆசிரியர்
சங்கத்தின் கோரிக்கை

அதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தில் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு அனைத்துப்பீட மாணவர்களின் ஏற்பாட்டில் பெருமெடுப்பில் நடைபெறவுள்ளது. இந்த நினைவுகூரலானது ஈழத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உணர்வுபூர்வமாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அனைவரும் ஒன்றுகூடி எமக்காக உயிர்துறந்த, எமது போராட்டத்தின் காரணமாக தமது உயிர்களை ஈந்த அனைத்துத் தரப்பினருக்கும் பிரார்த்திக்க வேண்டும். அதற்காக மே 18 ஆம் திகதி அனைத்துத் தரப்பினரும் நினைவேந்த வேண்டும் என்றும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த–சி)

## தமிழ் பௌத்த

மேம்படுத்தும் வகையில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த மாதம் 20 ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெறும் என்றும், இதில் மீள்குடியேற்ற இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் பௌத்தசாசன அமைச்சர் கரு ஜயசூரிய ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய ஒருமைப்பாடு மற்றும் இந்து – பௌத்த தொடர்புகளை வளர்க்கும் நோக்கில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாகப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுவாமிநாதன், இந்து மற்றும் பௌத்த மத மக்களிடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கு இந்த மாநாடு சிறந்த அடித்தளமாக அமையும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, இந்திய காஞ்சி மடாதிபதி காஞ்சிப் பெரியார் ஜெயேந்ர சரஸ்வதி சுவாமிகளையும் இலங்கைக்கு அழைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் அவர் இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–5)

## வடக்கு

தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில், சிறுபான்மை மற்றும் சிறு கட்சிகள் முன்வைத்துள்ள யோசனை குறித்து ஆராய்வதற்கு அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டது. இந்தக் குழு கடந்த வியாழக்கிழமை இரவு கூடி ஆராய்ந்தது. இதன் போதே மேற்படி இணக்கம் எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய தேர்தல் முறையில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 இல் இருந்து 255 ஆக அதிகரிக்கப்படவுள்ளது. அத்துடன், தொகுதி மூலம் நேரடியாகவும், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை மூலம் மாவட்ட அடிப்படையிலும், தேசியப் பட்டியல் மூலமும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் புதிய முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

உத்தேச திருத்தச் சட்டத்தின் மூலம், தொகுதிகள் மீள்நிர்ணயம் செய்யப்படும் போது, வடக்கு – கிழக்கில், தொகுதிகள் மற்றும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. போரினால் இலட்சக்கணக்கான வாக்காளர்கள் இடம்பெயர்ந்துள்ளதால், ஏற்கனவே இருக்கும் பல தொகுதிகள் இல்லாமல் போகும்.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டி, வடக்கு கிழக்கில் தேர்தல் தொகுதிகளை மீள நிர்ணயம் செய்வதை 10 ஆண்டுகளுக்கு பிற்போட வேண்டும் என்று கோரியிருந்தன. இந்தக் கோரிக்கையை, பிரதான கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தக் குழுவின் தலைவர் அமைச்சர் சரத் அமுனுகம கருத்துத் தெரிவிக்கையில், தேர்தல் முறை மாற்றம் தொடர்பில் சிறு கட்சிகள் அடங்கலான நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

சிறு கட்சிகள் மற்றும் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாத, சகல தரப்பும் இணங்கக் கூடிய புதிய கலப்பு தேர்தல் முறையொன்றை உருவாக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. நாளை திங்கட்கிழமை நடைபெறும் முக்கிய கூட்டத்தில் இறுதி முடிவு எட்ட எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த–5)

## மரதன்

வைக்கப்பட்டது. நாளைய தேசத்திற்காக எரி பொருள் மற்றும் மின் சாரத்தை சேமிப் போம்' எனும் தொனிப்பொருளில் ஜவன சக்தி யாத்ரா மரதன் ஓட்டப் போட்டியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணைந்து கொண்டார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட 4 கிலோ மீற்றர் வரையிலான இந்த ஓட்டப் போட்டி சுதந்திர சதுக்கத்திலேயே நிறைவு பெற்றது. மின்சாரத்தையும், எரிபொருளையும் சிக்கனமாகப் பயன்படுத்துவது தொடர்பாக உறுதிமொழியும் இதன்போது எடுக்கப்பட்டது. (த–10)

## எகிப்தின்

2013 ஜூலை 3 ஆம் திகதி இராணுவச் சதிப் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்டார்.

இதனையடுத்து எகிப்தின் இராணுவத் தளபதியாகவிருந்த அப்துல் பத்தாஹ் அல் ஸிஸி அந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதுடன் முர்ஸி உட்பட முஸ்லிம் சகோதரத்துவக் கட்சியின் நூற்றுக்கணக்கான முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அத்துடன் முர்ஸியின் ஆட்சிக்கு எதிராக மேற் கொள்ளப்பட்ட வன்முறை கலந்த நடவடிக்கைகளின்போது 1400 பேர் கொல்லப்பட்டதுடன் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

முர்ஸி மீது மூன்று பிரதான குற்றச்சாட்டுக்களாக வெளிநாடுகளுக்காக உளவு பார்த்தமை மற்றும் 2011 இல் முபாரக்கிற்கு எதிரான கலவரத்தின் போது சிறையிலிருந்து தப்பிச் சென்றமை, ஆர்ப்பாட்டக்காரர்களை கொலை செய்த குற்றச்சாட்டு போன்றவை உள்ளன. இவை தொடர்பிலேயே நேற்றுச் சாவுத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டதாக தெரியவருகிறது. (த–10)

## செம்மணி

வீட்டுக்குப் புறப்பட்டு வந்துள்ளார். ஏ –9 வீதியிலிருந்து செம்மணி வீதியூடாக நல்லூருக்கு வரும் வழியில் நல்லூர்ப் பகுதியில் இருந்து சென்ற ஹலோ ட்ரஸ்ட் நிறுவன வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியுள்ளது. இதனால் அவர் தூக்கி வீசப்பட்ட போது தலைக்கவசம் கழன்றதால் தலையில் பலமாக அடிபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குடும்பத்தினருக்குக் காலை 7.00 மணியளவிலேயே தகவல் தெரிந்த நிலையில் சம்பவ இடத்துக்கு அவர்கள் சென்றபோது அங்கு அடிபட்ட வாகனங்கள் மட்டுமே காணப்பட்டுள்ளன. பின்னர் வைத்தியசாலைக்குச் சென்ற சமயமே இளைஞர் உயிரிழந்தமை தெரியவந்ததாக உறவினர் கள் தெரிவித்தனர். (த–10)

## சம்பூர்

அதன் பின் னர், குறித்த காணியைக் கடற்படை யினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். 2012 ஆம் ஆண்டு குறித்த காணிகள், முதலீட்டு வலயமாக மஹிந்த அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மைத்திரி தலைமையிலான புதிய, அரசு குறித்த காணியைப் பொதுமக்களிடம் மீளவும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கமைய, முதலீட்டு வலயத்துக்கு வழங்கிய வர்த்தமானிப் பத்திரத்தை ரத்துச் செய்யும் வர்த்தமானிப் பத்திரத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையெழுத்திட்டிருந்தார்.

இதனையடுத்து 818 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்படும் என்று பொதுமக்கள் எதிர்பார்த்திருந்தனர். இந்த நிலையில், ஜனாதிபதி வர்த்தமானிப் பத்திரத்தை ரத்துச் செய்ததற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில், இலங்கை கேற்வே தொழிற்துறை நிறுவனம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

4 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பல்வேறு முதலீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருந்ததாக உயர் நீதிமன்றத்துக்கு சுட்டிக்காட்டிய கேற்வே தொழிற்றுறை நிறுவனம், வர்த்தமானியை ரத்துச் செய்து மக்களிடம் குறித்த காணியை வழங்குவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கக் கோரியது.

மனுவை ஆராய்ந்த நீதியரசர்களான, ரோகினி மாரசிங்க, புவனேகா அலுவிகார, உபாலி அபேவர்த்தன ஆகியோர் வழக்கின் தீர்ப்பு வெளியாகும் வரையில், காணிகளை விடுவிக்கும் நடவடிக்கையை இடைநிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளனர். (த–5)

## 4 பரல்

அங்கு சென்ற பொலிஸார் நிலைமைகளை அவதானித்தனர். பிளாஸ்ரிக் பரல்களில் ரெஜிபோம் வைக்கப்பட்டு அதனுள் பாதுகாப்பாக ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மேலாக கடிதம் ஒன்றும் காணப்படுகின்றது. அதில் 40 முட்டைகள், 40 பியூஸ்கள், 40 பிஸ்கட்கள் என்று எழுதப்பட்டுள்ளதோடு 13.9.1986 என்ற திகதியும் கடதாசி ஒன்றில் எழுதப்பட்டுக் காணப்படுகிறது.

அந்த வீட்டில் தற்பொழுது இருப்பவர் 2006 ஆம் ஆண்டு அங்கு குடியேறியதாகக் கூறியுள்ளார். திகதியின் அடிப்படையில் 1986 ஆம் ஆண்டு அந்தக் குண்டுகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஒரு பரலில் மாத்திரம் இந்தத் தகவல்களும் ஆயுதங்களும் காணப்படுகின்றன. அது தொடர்பாக யாழ்.நீதிமன்ற நீதிவானுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நீதிவான் முன்னிலையில் ஏனைய பரல்கள் பிரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராணுவத்தினரும் அதனைச் சென்று பார்வையிட்டுள்ளனர். அந்தப் பகு தியை அண்மித்து முன்னர் ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகள் நிலைகொண்டிருந்தன என்று அங்குள்ளவர்களால் கூறப்படுகிறது. (த–4–86)

## அஞ்சலியைத்

அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:–

புதிய அரசு மே 19 ஆம் திகதியை போர் வெற்றி தினமாகக் கொண்டாடாமல், இராணுவத்தினருக்கு அஞ்சலி செலுத்தும் தினமாக அனுஷ்டிக்க நினைத்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேவேளை வடக்கில் போரில் உயிரிழந்த பொதுமக்களையும் நாம் நினைவு கூர வேண்டும். கடந்த அரசு போரை வெற்றி கொண்ட போதிலும் வடக்கு மக்கள் பல துன்பங்களை அனுபவித்தனர். ஒவ்வொரு முறையும் போரில் உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூர்ந்தால் இராணுவத்தினால் அச்சுறுத்தப்படுவதும் கைது செய்யப்படுவதுமே இடம்பெறும். இது அந்த மக்களின் உரிமைகளை பறிக்கும் செயலாகும். அவர்களின் உறவுகளுக்காக விளக்கேற்றி அனுதாபம் தெரிவிப்பது அவர்களின் உரிமை. அதை அரசினால் தடுக்க முடியாது. ஆனால் விடுதலைப் புலிகளை நினைவு கூர்ந்து வடக்கில் எந்த செயற்பாடும் நடைபெறுவது நாட்டில் மீண்டும் பிரச்சினைகள் உருவாக சந்தர்ப்பமாக அமைந்துவிடும். அதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். ஒரு சில அமைப்புக்களை சேர்ந்தவர்கள் மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த இவ்வாறாக முயற்சிப்பார் கள். ஆனால் மக்கள் அதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் இடம்கொடுக்கக் கூடாது – என்றார். (த–5)

## போரில் உயிர்

ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது மனிதாபிமானச் செயல். அத்துடன் அது உறவு களின் உரிமையாகும். வடக் கில் தமிழர்கள் தமது உறவு களை நினைவு கூரும்போது அதற்கு யாரும் தடை விதிக்க முடியாது. நாமும் தடை விதிக்கவில்லை. வடக்கு மட்டுமன்றி நாட்டில் எந்த பிரதேசத்திலும் இறந்த ஒருவருக்காக உறவினர்கள் அஞ்சலி செலுத்தலாம்.

அதேவேளை, தடை செய்யப்பட்ட அமைப்பு என்ற ரீதியில் விடுதலைப் புலிகளை நினைவு கூருவது சட்ட விரோதமானது. தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூருவதை நாம் தடை செய்துள்ளோம். புலிகள் அமைப்பை நினைவு கூரும் விதமாகப் பொது இடங்களில் கூட்டங்களை நடத்துவது, சுடர் ஏற்றுவது உள்ளிட்ட நிகழ்வுகளை நாம் தடை செய்கிறோம்.அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை நாம் கைது செய்வோம் – என்றார். (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் நடுவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன



யாழ்ப்பாணம், மே 17

இலங்கை கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினால் வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் நடத்திய கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வவுனியா மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் விருந்தினர்களாக வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி மோகனந்தன், இலங்கை துடுப்பாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவர் சிரேசிகுலதிலக, உப தலைவர் கூரே, முன்னாள் ஐ.சி.சி மத்தியஸ்தர் ரி.எஸ்.விஜவர்த்தன, கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சைக் கணிப்பாளர் சேனந்தவீர, வவுனியா மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க தலைவர் பிரசாந், வவுனியா மாவட்ட கிரிக்கெட் சங்கத் தலைவர் ரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ரி–23)

# போராடி வென்றது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம் மே 17

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 64:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ரி–23)

# உலகமெங்கும் கிரிக்கெட்




கிரிக்கெட்டின் கடவுள் என்று அழைக்கப்படும் சச்சினும் ஆஸியின்சுழல்என்று அழைக்கப்படும் ஷேன் வோர்னும் மூத்த வீரர்களை இணைத்து ரி–20 ஆட்டமொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். இரண்டு அணிகள் தான்இடம்பெறும் என்றும், இது காட்சி ஆட்டமாக இருக்கும் என்றும் தெரியவந்துள்ளது.

ஆனால் இந்த திட்டம் இன்னமும் முழுமை பெறாத நிலையில் உள்ளது. இருப்பினும் 30 பேர் கொண்ட வீரர்களின் பட்டியல் தயராகியுள்ளது. இதில் பிரையன் லாரா, ராகுல் ராவிட், கலிஸ், ரிக்கி பொண்டிங், அனில் கும்ளே, பிரெட் லீ, அடம் கில்கிறிஸ்ட், முத்தையா முரளிதரன், பிளின்ரொப், மெக்ராத், வி.வி.எஸ். லகஸ்மன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த திட்டத்தின் நோக்கம் கிரிக்கெட்டை அறியாத நாடுகளிலும் கிரிக்கெட்டை கொண்டுசென்று சேர்க்க வேண்டும் என்பதே. இதனால் தொடர் அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், ஹாங்காங், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் மட்டுமே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

## சாவ்லாவின் திறனில் சந்தேகமில்லை



நடப்பு ஐ.பி.எல். தொடரில் மும்பைக்கு எதிராக கொல்கத்தா மோதிய ஆட்டத்தில் கடைசி 3 பந்துகளில் 6 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் கொல்கத்தா இருந்த வேளையில் அந்த 3 பந்துகளையும் வீணடித்த சகவீரர் பியூஷ் சாவ்லாவுக்கு ஆதரவாக பேசியுள்ளார் கொல்கத்தா சகலதுறை வீரர் ஷகிப் அல் ஹசன்.

சாவ்லாவுக்கு ஆதரவாக ஹசன் தெரிவித்ததாவது எப்பொழுதும் இறுதிப்பந்துப்பரிமாற்றங்களில் ஓட்டங்களைக் குவிப்பது மிகவும் கடினம். இந்த நிலையில் ஆட்டத்தில் தோல்வியடைந்ததற்கு சாவ்லாவைக் குறைகூறி எந்தப்பயனும் இல்லை. ஒரு ஆட்டத்தில் தோற்றதன் மூலம் அவரின் திறனில் சந்தேகம் ஏற்படக் கூடாது. இந்தியாவின் சிறந்த சகலதுறை வீரர்களில் சாவ்லாவும் ஒருவர் என்றார். (ரி)

# பலம்பெறுகிறது மும்பை




இங்கிலாந்தின் உள்ளூர் ரி–20 தொடரில் இங்கிலாந்து வீரர் அலெக்ஸ் ஹேல்ஸ் தொடர்ந்து 6 சிக்சர் விளாசி சாதனை படைத்துள்ளார்.

இங்கிலாந்தில் கழகங்களுக்கிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றிலேயே ஹேல்ஸ் இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். இதன் மூலம் கிரிக்கெட் அரங்கில் தொடர்ந்து 6 சிக்சர் விளாசிய 5வது வீரரானார் ஹேல்ஸ். முதல் நான்கு இடங்களில் தீவுகளின் கார்பீல்டு, இந்தியாவின் ரவி சாஸ்திரி, தென்னாபிரிக்காவின் கிப்ஸ், இந்தியாவின் யுவராஜ் சிங் உள்ளனர். ஆனால் ஹேல்ஸின் சாதனை உள்ளூர் ஆட்டமொன்றில் பதியப்பட்டதால் இது சர்வதேச அரங்கில் பெறப்பட்ட சாதனைகளுடன் ஒப்பிடப்பட மாட்டாது.

ஐ.பி.எல். தொடரில் மும்பை அணியில் விளையாடிய நியூஸிலாந்து வீரர் கோரி அண்டர்சன் காயம் காரணமாக விலகினார். இதனால் தற்பொழுது இவருக் குப்பதிலாக அலெக்ஸ் ஹேல்ஸ் மும்பை அணியில் இடம்பிடித்துள்ளார். ஹைதராபாத் அணிக்கு எதிரான இன்றைய ஆட்டத்தில் இவர் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)

**தேவை**

பத்துசில்லு வாகனம் (Ten Wheeler) கென்ரைனர் Body மாதாந்த வாடகைக்கு அல்லது விற்பனை செய்வதாயின் அதனை வாங்குவதற்கும் முடியும்.
தொடர்பு:- 077 4408520

**நாய் விற்பனைக்கு**

லயன் செப்பேட் அல்சேசன் 2½ வயது நிரம்பிய ஆண் நாய் விற்பனைக் குண் டு.
தொடர்பு:-
077 5177575

**தேவை**

யாழ். நகரில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு முன் அனுபவம் உள்ள ஆண் ஊழியர்கள் தேவை. 01. சிட்டை எழுதுநர்
02. விற்பனையாளர்.
தொடர்பு:- 077 5444014

**கடை வாடகைக்கு**

கஸ்தூரியார் வீதியில் ''இரத்தினம் கட்டடம்'' நான்கு கடைகள் வாடகைக்கு உண்டு. (இணைந்த குளியலறையும், வாகனத்தரிப்பிடமும் உண்டு.)
தொடர்பு: 075 558 6275

**வாடகைக்கு**

யாழ். நகரில் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
நீளம்-60', அகலம்-12'
தொடர்பு: 075 20 40 446

**பணிப்பெண் தேவை**

வயோதிப பெண் நோயாளியை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்கக் கூடிய பெண் தேவை. தொடர்பு: 077 8378597

**வீடு வாடகைக்கு உண்டு**

சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளுடன் ஒருபகுதி வீடு (ANNEXE) வாடகைக்கு.
(59875) (9.3) தொடர்பு: 077 242 5509

**சீரடி சாய்பாபா ஜோதிடம்**

இந்தியாவிலிருந்து வந்துள்ள
பிரசித்தி பெற்ற ஜோதிடர்
சாய்ராம் சாஸ்திரிகள்
ஜாதகம், கைரேகை, நாமநட்சத்திரம் பார்த்து பலன் சொல்லப்படும். வெளிநாட்டு பிரச்சினை, குழந்தைப்பாக்கியம், திருமண யோகம் என்பனவும் மற்றும் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
காலை 9.00 மணி - மாலை 6.00 மணி வரை.
076 809 7406
[illegible]
[illegible] மைதானத்துக்கு முன்பாக), [illegible], யாழ்ப்பாணம்.
(59429)(4.3.7)

**வீடு வாடகைக்குத் தேவை**

சங்கானை, பிரதானவீதி, மற்றும் நீர்வேலி, பருத்தித்துறை வீதியில் முற்றத்துடன் கூடிய வீடுகள் வாடகைக்குத் தேவை. தொடர்பு:
077 362 7055, 021 222 4060

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பத்துக்கு சாவகச்சேரி, பருத்தித்துறை நகரை அண்டிய சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை.(தகுந்த வாடகை கொடுக்கப்படும்.)
(41137) (4.3.7) தொடர்பு: 078 596 4609

**உடனடி வேலை வாய்ப்பு**

சிட்டை எழுதுநர் - 01
(ஆண், பெண்)
தகைமை:- G.C.E. O/L, A/L சித்தி
விற்பனை உதவியாளர் - 02
(ஆண், பெண்)
தகைமை:- G.C.E.O/L சித்தி போதுமானது.
முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் சமுகம் தரவும்.
"ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
இல. 212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 5542, 021 567 1527



UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

**வங்கியில் பணவைப்பு**

Saving book, Fixed Deposit, Statement
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)
Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).
SKYWALK Visa Solutions
ஸ்கைவோர்க் வீசா சொலூஷன்
No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)
077-7711905

**9ஆவது பிறந்தநாள் வாழ்த்து**




திரு. திருமதி
சிறிதரன் தயாவதி தம்பதியரின்
ஏகபுதல்வன்
செல்வன்
சிறிதரன் சீராளன்
இன்று தனது
9ஆவது பிறந்த நாளை
தனது இல்லத்தில்
கொண்டாடுகின்றார்.
இவர் பல்கலையும் கற்று
பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துபவர்
வே.கந்தையா (தாத்தா)
இருட்டுமடு பாடசாலை அருகில்,
உடையார்கட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# அசைக்க முடியாத இடத்தில் சென்னை

ரெய்னா, பிளாஸிஸ்ஸின் இணைப்பாட்டமும் அஸ்வின், ஜடேயா, நெக்ரா, நெகி ஆகியோரின் கட்டுக்கோப்பான பந்துவீச்சும் கைகொடுக்க பஞ்சாப்பை 6 இலக்குகளால் பஞ்சாப்பின் சொந்த மண்ணிலேயே வீழ்த்தியது சென்னை.

சென்னை எதிர் பஞ்சாப் அணிகளுக் கிடையிலான ஆட்டம். நடப்பு ஐ.பி.எல். தொடரில் நடைபெற்ற ஒட்டுமொத்த ஆட்டங்களில் பயனற்ற விதத்தில் சம்பிரதாயமான முறையில் நடைபெற்ற முதலாவது ஆட்டம் இது. ஏனென்றால் சென்னை ஏற்கனவே அடுத்த சுற்றுக்கு முன்னேறி விட்டது. பஞ்சாப் வெளியேறி விட்டது. மொத்தத்தில் சென்னைஉள்ளேபஞ்சாப்வெளியே.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து தனது அழிவுக்கு தானே காரணமாகியது. களத்தில் வோகாராவுடன் சகா. சேவாக்கை புறக்கணித்து உள்வாங்கப்பட்ட சகா சேவாக்கைவிட மோசமாக வெளியேறினார். நான்கே ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். டோனியிடம் பிடிகொடுத்தால் தப்ப முடியுமா ஆட்டமிழந்தார் பெய்லி. டெஸ்ட் பாணியில் விளையாடிவிட்டு ஜடேயாவிடம் போல்ட்டானார் மக்ஸ்வெல். குர்கிரட் சிங்கை ஸ்டம்ஸ் செய்தார் டோனி. பத்துப்பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பஞ்சாப் 55–5. கடந்த ஆட்டத்தில் தனி மனிதனாக நின்று பஞ்சாப்புக்காக போராடிய மில்லரால் இந்த சென்னை யுடன் பதின்மத்தைத் தாண்ட முடிய வில்லை. 100 ஓட்டங்களை பஞ்சாப் எட்டுவதே எட்டாக்கனியாக இருந்தது. வழக்கம்போல ஆட்டத்தை அப்படியே மாற்ற முயற்சித்தார் இந்தியாவின் இளம் சகல துறைவீரர் அக்ஷர் பட்டேல். ஆர். தவானும் சுமா ரான பங்களிப்பு. இன்னும் சொல்லப் போனால் பஞ்சாப் சார்பாக சிறந்த இன்னிங்ஸ் இந்த இரு வரும் தான். முடிவில் பஞ்சாப் 130–7. அதிகபட்சமாக அக்ஷர் பட்டேல் 32 ஓட்டங்களையும் தவான் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஸ்வின் 4 பந்துப் பரிமாற்றங்கள் முழுமையாக வீசி வெறுமனே 14 ஓட்டங்களை மட்டுமே கொடுத்திருந்தார்.

131 ஓட்டங்களைப் பெற்றால் சென்னை வெற்றி. வெற்றி என்பதை விட தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கலாம் என்பதே பொருத்தமானதாக இருக்கும். களத்தில் மைக் ஹசியுடன் மக்கலம். எதிர்பார்க்கப்பட்ட ஹசியின் ஆட்டம் நேற்று எடுபடாமல் போனது. மக்கலம் ஆறு ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ஆனால் அதற்குள்ளும் பவுண்டரி ஒன்று இருக்கத் தவறவில்லை. சென்னை 10–2. பஞ்சாப்பின் ஆதிக்கம் ஆட்டத்தில் மேலோங்க ஆரம்பித்தது. விடவில்லை ரெய்னா. பிளாஸிஸ்ஸுடன் இணைந்து சிறப்பாகப் போராடினார். ஆரம்பத்தில் நிதானித்த பிளாஸிஸ் ரெய்னா போர்முக்கு (திறன்) திரும்பியதும் அடித்தாட முற்பட்டார். ஒரு கட்டத்தில் ரெய்னாவைவிட பின் தங்கியிருந்து ரெய்னாவுக்கு முன் னர் அரைச்சதம் கடந்தார். தருணத்துக்கு ஏற்ப சிறப்பான இணைப்பாட்டம். ரெய்னாவின் அரைச்சதத்தை எதிர்பார்த் திருந்த வேளையில் ஏமாற்றினார் ரெய்னா. ஆனால் சென்னையின் வெற்றி உறுதியாகியிருந்தது. டோனி இறுதியில் இரண்டு வானவேடிக்கைகளைக் காட்ட முடிவில் சென்னை 6 இலக்குகளால் வெற்றி பெற்றது. (ரி)



## நடுவரையும் விட்டு வைக்காத ஹோக்லி

நடப்பு ஐ.பி.எல். தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஹைதராபாத்தை திரில்லாக வீழ்த்தி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை அதிகப்படுத்திக் கொண்டது பெங்களூர். இந்த ஆட்டத்தில் நடுவராகச் செயற்பட்ட தர்மசேனாவுக்கும் பெங்களூர் அணித்தலைவர் ஹோக்லிக்கும் இடையே இரண்டு தடவைகள் வாக்குவாதம் ஏற்பட்டது. அதேநேரம் பெங்களூர் இலக்குக்காப்பாளரான தமிழக வீரர் டினேஸ் கார்த்திக் மற்றும் தர்மசேனாவுக்கும் இடையேயும்; வாக்குவாதம் ஏற்பட்டதுடன் இந்த வாக்குவாதம் கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் நீடித்தது.

ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே மழை ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. இதனால் 11 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டு துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது ஹைதராபாத். வோர்ணரும் ஹென்றிக்ஸிம் இணைந்து தாண்டவமாடினார்கள். 11 பந்துப்பரிமாற்றங்களுக்குள்ளேயே ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்தனர். முதல் இன்னிங்ஸின் எட்டாவது பந்துப்பரிமாற்றத்தில் மிண்டும் மழை பொழியத் தொடங்கியது. ஆட்டத்தை நிறுத்துமாறு ஹோக்லி நடுவரிடம் முறையிட்ட போதிலும் ஆட்டம் இடைநிறுத்தப்படவில்லை. பதினோராவது பந்துப் பரிமாற்றத்தில் மீண்டும் நடுவரிடம் முறையிட்டார் ஆட்டம் நிறுத்தப்பட்ட பாடில்லை. முடிவில் ஹைதராபாத் 135 ஓட்டங்களை விளாசித்தள்ளியது. இன்னிங்ஸ் முடிந்ததும் மழை பொழியத் தொடங்க ஹோக்லியும் டினேஸ் கார்த்திக்கும் தர்மசோனாவிடம் சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக டினேஸ் கார்த்திக் கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் வரை வாக்குவாதம் செய்தார். மழை குறுக்கிட்டதால் பெங்களூருக்கு நிர்ணயிக்கப்படும் இலக்கு இன்னமும் கடினமாக இருக்கும் என்பதே இந்த வாக்குவாதங்களுக்கெல்லாம் காரணம்.

ஹோக்லியும் டினேஸ் கார்த்திக்கும் வாக்குவாதம் செய்ததற்கு ஏற்றால்போல் பெங்களூருக்கு 6 பந்துப்பரிமாற்றங்களில் 81 என்ற மிகக்கடினமான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே 18 ஓட்டங்களை விளாசி நம்பிக்கை தந்தார் கெயில். ஆனால் எவரும் நிலைக்கவில்லை. வில்லியர்ஸ் வந்தவேகத்தில் விடைபெற்று சுமையை அதிகரித்தார். தனிமனிதராக ஆட்டத்தைக் கொண்டு சென்று இறுதிப்பந்துப்பரிமாற்றத்தில் 15 ஓட்டங்களை விளாசி ஆட்டத்தை சிக்சருடன் அற்புதமாக முடித்தார் ஹோக்லி. ஆட்டம் முடிந்த பின்னரும் நடுவரை விட்டுவிடவில்லை ஹோக்லி. வெற்றியின் கதறல்களை எல்லாம் நடுவரை நோக்கியே வெளிப்படுத்தினார் ஹோக்லி.



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம் மே 17

**கே.ஸி.ஸி.ஸி. தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடந்தும் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்திற்கான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெற்று வருகின்றது. அதில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆண்களுக்கான ஆட்டத்தில், யாழ்.பல்கலைக்கழக பழைய மாணவர் அணியை எதிர்த்து கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

**ஸ்ரார் ஈகிள்ஸ்**

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொதுவிளையாட்டுமைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. குறித்த தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் றோயல் அணியை எதிர்த்து முல்லை கிங்ஸ் அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா சலஞ்சர்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் லயன்ஸ் அணி மோதவுள்ளது. (ரி–23)

## வில்லியர்ஸ் போல் கனவிலும் விளையாட முடியாது



தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸின் நூதனமான அதிரடி ஆட்டம் தொடர்பாக இந்திய அணியின் முன்னாள் நட்சத்திரம் ராகுல் ராவிட் புகழ்ந்து பேசியுள்ளார்.

வில்லியர்ஸ் தொடர்பாக ராவிட் தெரிவித்ததாவது வில்லியர்ஸ் விளையாடும் சில நூதன முறைகளைப் பார்க்கும் போது, என்னால் அவர் விளையாடுவது போன்ற முறைமையில் எனது கனவி லும் நான் ஆட முடியாது. அப்படிப்பட்ட முறைமையில் ஆடுவது போல கனவு காணக்கூடாது என்று எனக்கு நானே சொல்லிக் கொள்வேன், அப்படிப்பட்ட முறைமையில் ஆடும் தைரியம் என்னிடம் இல்லை. இளம் வீரர்கள், வில்லியர்ஸ், பிரெண்டன் மக்கல்லம் ஆகியோர் துடுப் பெடுத்தாடும்முறைமையில் பார்த்துப் பழகுவது சரியாக இருக்கும். ஆனால் வில்லியர்ஸாக, மக்கலமாக வரவேண்டும் என்ற நோக் கத்தில் விளையாட முற்பட்டு காயமடைந்துவிடக்கூடாது [illegible] வில்லியர்ஸாக மக்கலமாக வரவேண்டும் என்றால், அவர்களின் முறைமைகளை அவர்களே பயிற்றுவிக்க வேண்டும். அவர்கள் பயிற்சியாளர்களாகும் வரை இளம் வீரர்கள் பொறுமைபேண வேண் டும்–என்றார். (ரி)

## ஹோக்லியின் பொறுப்பற்ற கோரிக்கை

ஐ.பி.எல்.தொடர் முடிந்த பின்னர் இந்தியா எதிர் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான தொடர் நடைபெறவுள்ளது. இதனால் பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கான வீரர்கள் தெரிவும் ஏனைய ஏற்பாடுகளும் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடரில் தன்னை இணைக்காமல் சிறிது ஓய்வினைத் தருமாறு விராட் ஹோக்லி இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் கோரிக்கை வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து டோனி ஓய்வினை அறிவித்ததையடுத்து டெஸ்ட் அணித் தலைவராக ஹோக்லி நியமிக்கப்பட்டார். இதனால் பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் ஹோக்லியின் தலைமைத்துவத்தை உலகமே பெரிதும் எதிர்பார்த்த நிலையில் ஹோக்லியின் இந்தக் கோரிக்கை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. ஒருவேளை ஹோக்லிக்கு ஓய்வுகொடுக்கப்பட்டால் பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் தலைவராக அஸ்வின் நியமிக்கப்படவும் வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் பங்களாதேஷுன் சிறப்பான திறனை கருத்தில் கொண்டு ஹோக்லி விளையாட வேண்டும் என்று கவாஸ்கர் வலியுறுத்தியுள்ளார். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனல் பறக்கும் அரையிறுதியில் ஷரபோவா எதிர் கௌவ்ரிலோவா

ரஷ்யாவின் ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, இத்தாலி ரென்னிஸ் தொடரின் அரையிறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளார்.
விக்டோரியா அசாரென்காவுடன் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில், ஷரபோவா, 6–3, 6–2 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். ஏற்கனவே நடைபெற்ற மற்றுமொரு காலிறுதியில் அமெரிக்காவின் கிறிஸ்டினா மக்கேலுடன் இடம்பெற்ற ஆட்டத்தில் கௌவ்ரிலோவா வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்தார். இந்த நிலையில் ஷரபோவாவும், கௌவ்ரிலோவாவும் அரையிறுதி ஆட்டத்தில் மோதவுள்ளனர். (ரி)





# ராவிட்டே

## இந்திய அணியின் தடுப்புச் சுவர்

இந்திய அணியின் தடுப்புச் சுவர் என்று அழைக்கப்படும் ராகுல் ராவிட் ரஹானேயை இந்தியாவின் எதிர்காலத் தடுப்புச்சுவர் என்று பாராட்டியுள்ளார். பதிலுக்கு ரஹானேயும் ராவிட்தான் எப்பொழுதும் இந்தியாவின் தடுப்புச்சுவர் என்று தெரிவித்துள்ளார்.

ராவிட் தொடர்பாக ரஹானே தெரிவித்ததாவது மிகப்பெரியபாராட்டு ராகுல் ராவிட்டிடம் இருந்து வந்திருக்கிறது. இது மேலும் நான் நன்றாக விளையாடவும், கடின பயிற்சி எடுக்கவும் உறுதுணையாக இருக்கும். இதற்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுகிறேன். எனது செயற்பாடுகளில் எந்தளவுக்கு முன்னேற்றம் இருந்தாலும் இந்தியாவின் தடுப்புச்சுவர் ராவிட்தான். இது மாற்றமடையாது. ஐ.பி.எல். தொடரில் நான் விளையாடும் ராஜஸ்தான் அணிக்கு ராவிட் ஆலோசகராக இருப்பதையிட்டு மிகவும் பெருமையடைகிறேன். ராவிட்டிடம் இருந்து பெருமளவு கற்றுக்கொண்டுள்ளேன் என்றார். (ரி)



# அணித் தலைமையா? இலக்குக் காப்பா ? ரஹீமின் முடிவு எது

பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் தலைவர் ரஹீம் தொடர்வதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. இருப்பினும் இந்திய அணியுடன் நடைபெறவுள்ள டெஸ்ட் தொடருக்கு அவரே அணியின் தலைவராக இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலக்குக்காப்பாளராக செயற்பட்டு சிறப்பாகத் துடுப்பெடுத்தாடுவது அவருக்கு சிரமம். அத்துடன் அணித்தலைவராக கடமையாற்றும் போது மேலதிக அழுத்தம் ஏற்படுகிறது. எனவே அவர் இலக்குக்காப்பை கைவிட வேண்டும். அல்லது அணித்தலைவர் பொறுப்பை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று தற்பொழுது பல்வேறு அழுத்தங்கள் அவர்மீது திணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அவர் அணித் தலைவராக இருப்பதையே விரும்புகிறது. இதனால் இந்தியாவுக்கு எதிரான தொடரின் பின்னர் ரஹீம் எந்தப் பக்கம் செல்லப்போகிறார் என்பது பங்களாதேஷ் கிரிக்கெட்டில் எழுந்துள்ள புதிய சிக்கல். (ரி)

# அரையிறுதியில் பெடரர்

இத்தாலி ரென்னிஸ் தொடரில் சுவிற்சர்லாந்தின் நட்சத்திரவீரர் ரோஜர் பெடரர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இதன்மூலம் களிமண் ஆடுகளத்தில் சம்பியன் வெல்வதற்கான வாய்ப்பை அதிகப்படுத்தியுள்ளார்.
ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் தரவரிசையில் ஆறாவது இடத்தில் உள்ள வீரரான தோமஸ் பெர்டிச்சை எதிர்



கொண்ட பெடரர், சிறப்பாக விளையாடி 6–3, 6–3 என்ற நேர்செற்களில் வென்றார். அரையிறுதியில் இவர் நடால் அல்லது வாவ்ரிங்காவுடன் மோதுவார். தொடர் நடைபெறுவது களிமண் ஆடுகளத்தில் என்ற காரணத்தினாலும் நடால் களிமண் ஆடுகளங்களில் ஜாம்பவானாக திகழ்கின்ற காரணத்தினாலும் அரையிறுதியில் பெடரர் எதிர் நடால் மோதினால் ஆட்டம் மேலும் விறுவிறுப்படையும் என்று பரவலான எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடால் தொடர்பாக "தொடர்ந்து தடுமாறி வந்தாலும் நடாலை துணிவாக எதிர்கொள்ளும் அளவுக்கு எந்த வீரர்களும் தற்போதைக்கு இல்லை. மிக விரைவில் களிமண் ஆடுகளத்தில் நடால் கிண்ணம் வெல்வார்" என்று பெடரர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தற்பொழுது நடாலுக்கும் நடால் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பெடரருக்கும் மோதல் நிலைமை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

German Language Academy
கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள், ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு Video, Audio மூலம் எங்கும் இல்லாதவாறு மிகச்சிறந்த முறையில் கற்பிக்கப்படுகின்றது.
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
077 970 7322
(59844)(9.3.6)

கணிதம்
A.K.பரிந்தன்
O/L PAPER CLASS
பிரிவு III
ஆரம்பம்:- 23.05.2015
இடம்:- கொட்டடி, கண்டுபிடி
T.P:- 077 1882518

மருந்தாளர் தேவை
பிரபல்யமாக இயங்கிவரும் மருந்தகத்துக்கு SRILANKAN MEDICAL COUNCIL இல் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவை.
T.P:- 077 7787545, 077 1728141

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af
வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
INTERNATIONAL DIPLOMAS.
ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)
வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

விரைவான வேலை நிறைவான இலாபம்
ஜூஸ் பக்கெட் மெசின்




• 1 வருட உத்தரவாதம்
• இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
• விற்பனைக்கு பின் சேவையுண்டு
• இலவச விநியோகம்
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

வேலைவாய்ப்பு
கணினி பக்க வடிவமைப்பாளர்,
* Photoshop
* Pagemaker தெரிந்த
ஆண், பெண் இருபாலாருக்கும் உடனடி வேலைவாய்ப்பு.



குறிப்பு : ஆண்கள் பகுதி நேரமாகவும் வேலைசெய்யலாம்.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
சுயவிவரக் கோவையுடன் நாளை (18.05.2015) திங்கட்கிழமையும் நாளைமறுதினம் (19.05.2015) செவ்வாய்க்கிழமையும் நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியர்ர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு சிறப்பிதழ் உதயன்
17.05.2015

# சூரியகாந்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிவயிறு வலிக்க கத்தி அழவேணும் போலக் கிடக்குது!

தட்சா. ஜோ

"நினைத்திருக்கவில்லை முள்ளிவாய்க் காலோடு எங்கட ஆட்சி விழும் என்டு..." முள்ளிவாய்க்கால் படுகொலை இடம்பெற்று ஆறு ஆண்கள் கடந்தவிட்ட பின்னரும் தமிழ் மக்கள் பலரின் நெஞ்சங்களில் இருந்து வலியோடு கண்ணீர் ததும்ப – உதிரும் வார்த்தைகள் இவை.

1983 ஆண்டு ஜுலையில் தீவிரம் பெற்ற ஈழ ஆயுதப் போர் முள்ளிவாய்க்காலில் 2009 மே மாதம் 18ஆம் திகதி முடிவுக்கு வந்தது. நிலங்கள் குருதியில் குளித்த நாள்கள் அவை. அடையாக் குறியீடாக மே 18 மாறிப்போனாலும் மே மாதம் முழுவதுமே மனிதப் பேரவலத்துக்குக் குறைவிருக்க வில்லை.

முள்ளிவாய்க்கால் வாழ்வா சாவா போராட்டம் அல்ல எப்படிச் சாவது என்கிற போராட்டம். அதற்குள்ளும் இறுதிவரை உயிரைக் கையில் பிடித்து தப்பிவந்தவர்கள் கண்ணில் ஆறு வருடங்களின் பின்னரும் கனத்து நிற்கின்றன இறுதித் தருணங்கள்.

"ஆறு வருசம் என்ன, சாகும் மட்டும் மறக்கமாட்டன். மறக்கக் கூடிய நாள்களா அவை. கூடப் பிறந்த சகோதரங்கள், கணவன், சொந்தக்காரர் எல்லாரும் புதையுண்டு, எரியுண்டு, கதறக் கதறப் படுகொலை செய்யப்பட்ட நாள்கள் இல்லையா அவை! இப்ப நினைக்கிறன் நானும் செத்திருக்கலாம் என்று."

இரண்டு பெண் பிள்ளைகளுடன் முள்ளிவாய்க்காலில் இருந்து குற்றுயிராய் மீண்டு வந்த செல்வியின் நினைவுத் தட்டுக்களில் இருந்து பீறிடும் வார்த்தைகள் அவை. நடந்தவைகள் எவற்றையும் செல்வியால் மறக்க முடியவில்லை. நினைத்ததும் கண்கள் முட்டிக்கொண்டு வருகின்றன. அவரது மனக் காயங்களை ஆற்றுவதற்கு, வழிப்படுத்துவதற்கு இதுவரைக்கும் எதுவுமே நடந்ததில்லை. இலகுவான ஆற்றுப்படுத்தலுக்கான நினைவேந்தலுக்கும் இதுவரையில் இருந்த தடை அவரது நெஞ்சைப் பாரமாய் இன்னும் அடைத்துக் கொண்டே இருக்கின்றது.

"இவ்வளவு காலமும் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக்கூட முடியாத நிலையில் இருந்தம். இப்ப அதுக்கு அனுமதி தந்திருக்கினம். அதுக்காக நடத்தெல்லாம் இல்லை என்டாகிப்போகுமா?" என்கிற செல்வி தற்போது அச்சுவேலியில் வசித்து வருகின்றார்.

"மே மாதம் 17ஆம் திகதி இரவு முதல் 18ஆம் திகதி விடிய 3.30 மணிக்குள்ள முழுதாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ள வந்திட்டுது முள்ளிவாய்க்கால். அதுதான் நாங்கள் நம்பிக்கை இழந்த முதல் நிமிசம். அதுவரையும் கொஞ்சமும் நினைக்கேல்ல நாங்கள் தோற்றுப்போவம். சிங்கள இராணுவத்துக்கு முன்னுக்கு கையாலாகாம நிப்பம் என்று. அழுகை ஓலம் மட்டும்தான் கேட்டுக்கொண்டிருந்தது." முகங் கறுத்து தலை குத்தி கண்கள் வெறிக்கப் பேசும் இதயநாதன் ஒரு முன்னாள் போராளி.

கணவரை முள்ளிவாய்க்கால் இறுதிப்போரில் பறிகொடுத்துவிட்டு உடலைக் கூட அடக்கம் செய்யாத துயரத்தில் இருந்து ராணியால் இன்னும் மீள முடியவில்லை.

"குண்டடிபட்டு விழுறவர்களை தூக்குறதா? எங்கள காப்பாத்திக்கொள்ள ஓடுறதா? ஒண்டும் தெரியேல்ல. புலிகளின் குரலில யார் யார் செத்தவ, எங்க செத்தவீடு நடக்குது என்டு சொல்லுவாங்கள். அதக்கேட்டு தெரிஞ்சவர்கள், உரித்துக்காரர் செத்தவீட்டுக்கு போய்வந்தம். பிறகு தேவையற்ற நடமாட்டத்தை குறையுங்கோ என்று அறிவிப்பு வந்தது. அதுக்குப் பிறகு செத்த வீட்டுக்குப் போறதையும் விட்டம். குடும்பத்தில யார் செத்தாலும் உடலைக்கூட அப்பிடி அப்பிடியே விட்டுட்டு வந்த துயரம் உலகத்தில எங்களுக்கு மட்டும்தான் நடந்திருக்கும். சில விசயங்கள இப்ப நினைச்சாலும் அடிவயிறு வலிக்க கத்தி அழவேணும்போலக் கிடக்கு." ராணியின் வார்த்தைகளை முந்திக்கொண்டு பொலபொலக்கிறது கண்ணீர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மருத்துவப் பிரிவில் பணியாற்றிய பரணீதரனுக்கு நடந்தவைகளை இன்னும் நம்ப முடியவில்லை. "முள்ளிவாய்க்கால் படுகொலைகளுடன் ஈழக்கனவும் புதையுண்டு போகும் என்டு நான் மட்டுமில்ல யாரும் நினைக்கவில்லை. மருத்துவப் பிரிவு கடுகதியில இயங்கிக் கொண்டிருந்தது. மருந்துகள் இல்லாம போச்சு ஒரு கட்டத்தில. ரொக்சைட் என்ட ஏற்பு மருந்துக்கு அதிகமான தட்டுப்பாடு. வேற இடங்களில மருந்து இருக்குதாம் என்ட செய்தியக் கேள்விப்பட்டால் ஒருத்தரை அனுப்புவம். எங்கட கஸ்ரகாலத்துக்கு மருந்து எடுக்கப்போனவர் குண்டு விழுந்து செத்துப்போவார் அல்லது அவயவங்களை இழந்து அவருக்குச் சிகிச்சை அளிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விடும். எவ்வளவு மினக்கட்டாலும் பிழைக்கமாட்டார்கள் எனத் தெரிந்தவர்களுக்கு க்டைசி நேரத்தில் சிகிச்சைகளைக் குறைத்துக்கொண்டம்." என்றார்.

> "ஆறு வருசம் என்ன, சாகும் மட்டும் மறக்க மாட்டன். மறக்கக் கூடிய நாள்களா அவை. கூடப் பிறந்த சகோதரங்கள், கணவன், சொந்தக்காரர் எல்லாரும் புதை யுண்டு, எரியுண்டு, கதறக் கதறப் படு கொலை செய்யப்பட்ட நாள்கள் இல்லையா அவை! இப்ப நினைக்கிறன் நானும் செத்திருக்கலாம்.

மே மாதம் 16ஆம் திகதி புலிகளின் குரலில் பி.ப. 3.30 செய்தி ஒலிபரப்பாகிக்கொண்டிருந்து. அது பாதியிலேயே துண்டிக்கப் பட்டது. அதுதான் புலிகளின் குரலின் இறுதி சேவை.

[illegible], மே 21ஆம் திகதி எங்கள [illegible] இறம்பைக் குளம் முகாமுக்குள்ள விட்டிச்சினம். அன்டைக்கு வவுனியா பொலிஸ் மா அதிபர் எங்கள பார்க்க வந்தார். அவரை வரவேற்றக பலமாக் கைதட்டு என்று அறிவுறுத்தல்வேறு இருந்தது. ஆனால் யாரும் கைதட்டவில்லை. அதுபோக நிகழ்சிகள் செய்யுங்கள் என்றார்கள். பாடகர் சாந்தன் எம்முடன் இருந்தார். அவர் கையில் மைக் கொடுக்கப்பட்டது. அவர், "நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் ரெண்டு ஒன்று மனசாட்சி.. ஒன்று தெய்வத்தின் சாட்சியம்மா..." என்று பாடினார். "நதி வெள்ளம் காய்ந்துவிட்டால் நதி செய்த குற்றம் இல்லை..விதி செய்த குற்றம் அன்றி வேறு யாரம்மா... " என்று அவர் பாடிக் கொண்டிருக்க நாங்கள் அழுதுகொண்டிருந்தம்." பெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் போராளி.

"இறம்பைக்குளம் முகாமுக்க இருக்கேக்க எங்களப் பற்றின தகவல்களை எப்பிடி எங்கட உறவுகளுக்குத் தெரிவிக்கிறது எண்டு தெரியாம இருந்தம். குடும்பத்தில ஆர் இருக்கினம் ஆர் இல்ல எண்டு கூட தெரியாத நிலை. முகாமுக்குள்ள இருந்து ஒரு பேப்பரில எங்கட பேரையும் அடையாள அட்டை இலக்கத்தையும் எழுதி பக்கத்தில இருந்த பள்ளிக்கூடத்துக்குள்ள போடுவம். அந்தப் பள்ளிக்கூடத்தில படிக்கிற பிள்ளையள் அதை எடுத்துக்கொண்டு போய் தங்கட அப்பா அம்மாட்டக் கொடுத்து அவையள் எங்கட குடும்பத்தினரிட்ட அதைக் குடுத்திச்சினம்" என்று முன்னாள் போராளியாகத் தடுப்பு முகாமில் இருந்த ஈழவேந்தன் தனது முகாம் வாழ்வைப் பதிவு செய்தார்.

எல்லோருக்கும் எல்லாமும் ஞாபகமிருக்கிறது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணிநேரமும் அவர்களுக்கு ஞாபகத்தில் இருக்கிறது. யாரும் எதையும் மறக்கவில்லை. குருதி தெறிக்க,உடல்எரியபட்ட துன்பங்களும் நடந்த கொடூரங்களும் பசுமரத்து ஆணி போல உள்ளே புதைந்துகிடக்கின்றது.

6 வருடங்களாக அவை கனன்றுகொண்டே இருக்கின்றன. 2009 மே18 இறுதி யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அறிவித்தது மஹிந்த அரசு. மஹிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இது வெற்றிக்கொண்டாடத்துக்குரிய நாளாகியது. அன்றைய தினம் ஜனாதிபதி மஹிந்த நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். பல கோடி செலவில் மாபெரும் எடுப்பில் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடந்தன. மே 18ஆம் திகதி சிங்களவர்கள் தங்களது வீடுகளில் சிங்களக் கொடிகளை பறக்க விடவேண்டும் என்று அழைப்பு விடுத்தார் மஹிந்த. அதேவேளை தமிழர்களுக்கு நினைவுகூரும் உரிமையும் மறுக்கப்பட்டது. தற்போது மைத்திரி அரசு நினைவேந்தலுக்கு தடை ஏதும் விதிக்காது என்கிற நிலையே காணப்படுகின்றது. நாளை பல நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு சில நிகழ்வுகள் தடுக்கப்பட்டதாகவும் தகவல்கள் வருகின்றன. இருந்தாலும் கடந்த காலங்களைப் போன்று இல்லாமல் பதற்றம் குறைந்த நாளாக இது இருக்கும் என்றே தோன்றுகின்றது. 6 வருடங்களாக மனங்களுக்குள்ளேயே தங்கள் துயரங்களை அழுத்தி அழுத்திப் புழுங்கிக் கிடந்த மக்களுக்கு ஆறுதல்வெளி ஒன்று இப்போது அவசியப்படுகின்றது.

இப்போது அதற்கான காலம் கனிந்திருக்கிறது. இந்த வெளி மனங்களை ஆற்றுப்படுத்துவதுடன் எதிர்காலம் நோக்கிய பயனத்துக்கு ஆன்ம பலத்தையும் கொடுக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
ஞாயிறு சிறப்பிதழ்

# சமூகத்தின் கூட்டுப் பொறுப்பு




கு.நிரோஜன்

"நான் டிசெம்பருக்கு எக்ஸாம் எடுக்கும்வரை நீ வேற இடத்துக்கு வேலைக்குப் போகாதேயடா. இஞ்சயிருந்து வேலைசெய். நான் எக்ஸாம் எடுத்த பிறகு நீ எங்கையெண்டாலும் வேலைக்குப்போ." சந்தியா தன் தமையனோடு அடிக்கடிபோடும் செல்லச் சண்டை இது. "பள்ளிக்கூடத்துக்குப் போகேக்க சைக்கிளுக்குக் காத்தடிச்சு விடடா என்று உரிமையோட 'டா' போட்டுக் கதைப்பாள். அப்பபடிப்பட்ட என்ர பிள்ளைய இப்படிச் செய்துபோட்டாங்களே" என்று தலையில் அடித்தவாறு தேம்பித் தேம்பி அழுகிறார் சந்தியாவின் அம்மா.

தனது மகளின் இழப்பைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவரிடம் இல்லை. சில நிமிடங்கள் கதைத்ததுமே மகளின் நினைவுகளுக்கு மூழ்கிப் போகிறார். அவர் எண்ணங்களை அவளது ஞாபகங்களே ஆக்கிரமித்து நிற்கின்றன. தலையில் அடித்துக்கொண்டு ஆண்டவனை வைது கொண்டு கதறி அழுகிறார்.

சந்தியா சில நாள்களுக்கு முன்னர் மனித விரோதிகளால் அழிக்கப்பட்ட மலர். உயர் தரத்தில் கல்வி கற்கும் சுட்டிகையான பெண். 'ஆங்கிலம் அவளுக்கு விருப்பமான பாடம்.' பல ஆங்கிலப் போட்டிகளில் அவர் வெற்றியும் பெற்றிருக்கிறார். வியாழக்கிழமை நடக்கவிருந்த ஆங்கிலப் போட்டி ஒன்றில் பங்குபற்றுவதற்காகவே புதன்கிழமை நேரத்துடன் பாடசாலைக்குப் புறப்பட்டிருந்தாள்.

பாடசாலைக்கு போகாமல் விடுவதில் அவளுக்கு விரும்பம் இருந்ததில்லை. அவளோடு பாடசாலைக்குச் செல்லும் ஏனைய மாணவிகள் அன்று வேறு காரணங்களால் பாடசாலைக்குச் செல்லாததை அறிந்த தாயார் அவளையும் நின்றுவிடுமாறு கூறியபோதும், போகாவிட்டால் மறுநாள் பெற்றாரைக் கூட்டி வரச்சொல்வார்கள் என்று சொல்லிவிட்டு புறப்பட்டுச் சென்றாள். அவளது இறுதிக் கணங்களை மீண்டும் மீண்டும் நினைக்கையில் அந்தத் தாய் வெம்பி வெடிக்கிறார்.

திரும்பி அவளைச் சடலமாகத்தான் பார்த்தார்கள், 20 மணிநேரத் தேடுதலின் பின்னர். காலையில் புறப்பட்ட பிள்ளை 3 மணியாகியும் வீடு திரும்பவில்லை என்றதும்தான் பதற்றம் ஆரம்பமானது. பாடசாலைக்குச் சென்றனர். அங்கு, பிள்ளை பாடசாலைக்கு வரவில்லை என்ற பதில் அவர்களைத் தூக்கி வாரிப் போட்டது. அதனால் அக்கம் பக்கத்தில் விசாரித்தும் தேடியும் பார்த்தனர். சந்தியாவைக் காண முடியவில்லை. நேரம் செல்லச் செல்ல அவர்களது மனதில் பயம், பதற்றம் தொற்றியது. பொழுது சாயும் நேரம் அவர்கள் பயம் உச்சமடைந்தது. மகளைக் காணவில்லையென்று புங்குடுதீவுப் பொலிஸாருக்கு அறிவிக்கச் சென்றபோது அது பற்றிய முறைப்பாடுகளை ஊர்காவற்துறைப் பொலிஸில்தான் முறையிட வேண்டும் என்று கூறவே ஊர்காவற்துறைக்கு விரைந்தனர்: அங்கு பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்தனர்.

மகளைக் காணாது தவித்துச் சென்ற அவர்களைப் பார்த்து "மகள் யாருடனாவது ஓடிப் போய் இருப்பாள் தேடிவிட்டு வாருங்கள்" என்று மனிதாபிமானமற்ற வகையில் பொலிஸார் எனக் கொதிக்கின்றனர் உறவினர்கள். "வீட்டிலிருந்து புறப்பட்டால் யாருடனும் கதைக்க மாட்டாள். யாருடனும் நெருங்கிப் பழகவும் மாட்டாள். தான் வீட்டுக் கேற்றைப் பூட்டுவதற்குச் சென்றால் கூட வீட்டில் தனியே இருக்க மாட்டாள். என்னுடன் வந்துவிடுவாள். மின்சாரம் நின்றுவிட்டால்கூட பயந்து என்னிடம் ஓடி வந்துவிடுவாள். அப்படிப்பட்ட மகளைப் பற்றி பொலிஸார் இப்படிச் சொல்லிவிட்டார்களே!" கதறுகிறார் தாயார்.

குற்றங்களைப் பார்த்துப் பார்த்து மனக் கல்லாகிப் போன பொலிஸார் எல்லோரையும் ஒரே விதத்தில் அணுகுவதன் வலி அந்தத் தாயை மேலும் மேலும் குற்றுயிராக்குகிறது.

இரவும் தேடியும் கிடைக்காததனால் இரவு 11 மணி வரை சந்தியாவைத் தேடியவர்கள் அதற்குப் பின்னரும் தேட முடியாமல் வீடுகளுக்குத் திரும்பினர். மறுநாள் வியாழக்கிழமை விடிந்ததும் விடியாததுமாக மீண்டும் தேடுதல் வேட்டை ஆரம்பமானது. ஒவ்வொருவராக விசாரித்துக் கொண்டு சென்றதில் ஆலடிச் சந்தியைத் தாண்டி சந்தியாவை புதன்கிழமை யாரும் பார்த்திருக்கவில்லை என்ற தகவல் வெளிச்சமானது.

அதனால் வீட்டுக்கும் ஆலடிச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் இருக்கும் கைவிடப்பட்ட வீடுகள் வளவுகளில் எல்லாம் தேடத் தொடங்கினர். சந்தியாவின் ஒரு கால் சப்பாத்துத்தான் முதலில் கண்ணில்பட்டது. அவரது அண்ணன் அதனைக் கண்டுபிடித்தார். நெஞ்செல்லாம் பதறியபடி கதறிக்கொண்டு ஓடியவருக்கு அலரிச் செடிகளின் நடுவே கிடந்த தங்கையின் சடலத்தைக் கண்டதும் அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுவிட்டது. "அம்மா! இஞ்ச சந்தியாம்மா!" என்று கதறியவர் அப்படியே மயங்கிச் சரிந்தார்.

"மகள் கிடந்த கோலத்தைப் பார்க்க எனக்குத் துணிவு இல்லை" என்றுகூறி தாயார் நெஞ்சில் அடித்தவாறு கதறுகிறார். சடலம் கண்டுபிடிக்கப்பட்டதும் வழக்கமான விசாரணைகள் ஆரம்பமாகின.

சந்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டிருக்கிறாள் என்பதை உடற்கூற்றுப் பரிசோதனை உறுதிப்படுத்தியது. அவள் வாயில் ஆழமாகத் துணி அடைக்கப்பட்டிருந்தது. குரல் எழுப்பாமல் தடுப்பதற்காக கொலையாளிகள் அப்படிச் செய்திருக்கலாம். ஆனால், அதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறலும் தலையில் அடிபட்டதனால் ஏற்பட்ட குருதிக் கசிவும் இறப்புக்குக் காரணமாக இருக்கலாம் என்று சட்டவைத்திய நிபுணர் மயூரன் தெரிவிக்கிறார். சந்தியாவின் ஆடைகளில் காணப்பட்ட சான்றுகள் நீதிமன்ற அனுமதியுடன் மரபணுப் பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

> “ அவளவு இழப்பு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் உலுக்கிக் போட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் வீதிகளுக்கு இறங்கியிருக்கிறார்கள். தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என்று சிறுமிகள் அவலக்குரல் எழுப்பியிருக்கிறார்கள். சந்தியா, இதுபோன்ற சம்பவங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளியாக இருக்க வேண்டும். அது இந்தச் சமூகத்தின் கையில்தான் இருக்கிறது. ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கு இந்த விடயத்தில் ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்கின்றது. இது போரின் எதிர்விளைவு, புலிகள் இல்லாததன் விளைவு என்றெல்லாம் மட்டும் கூறிவிட்டு சமூகம் ஒதுங்கிவிடக்கூடாது.

இந்தப் படுபாதகச் செயலைப் புரிந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் என்றே பொலிஸ் சந்தேகிக்கின்றது. அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரிடமிருந்து கொலையை அவர்கள்தான் செய்தார்கள் என்று நிரூபிப்பதற்குத் தேவையான சான்றாதாரங்களை எடுத்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். குருதிக் கறை படிந்த ஆடை உள்ளிட்ட சான்றாதாரங்கள் உயர் தொழில்நுட்ப பரிசோதனைகள் மூலம் கொலையை நிரூபிக்கப் போதுமானவை என்று பொலிஸ் கருதுகின்றது.

கைது செய்யப்பட்ட மூவரும் 30, 40 வயதுக் கிடைப்பட்டவர்கள். ஏற்கனவே இடம்பெற்ற வயோதிபர் ஒருவரது கொலை தொடர்பான விசாரணை வளையத்துக்குள்ளும் இருப்பவர்கள் இந்த சந்தேக நபர்கள் என்று ஊரவர்கள் கூறுகின்றனர்.

ஒரு காலத்தில் செல்வச் செழிப்போடு இருந்த கிராமம் புங்குடுதீவு. இராணுவ ஆக்கிரமிப்பின் பின்னர் இடம்பெயர்வு கிராமத்தை முற்றாக அழித் தொழித்தது. இன்று காடு வற்றி வரண்டு கிடக்கிறது. மனிதர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வாழ்கிறார்கள். இடையில் பல வீடுகள் பாழடைந்துள்ளன. கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

இது எல்லாமேதான் இந்தக் கொலைக்கான வாய்ப்புகளையும் துணிவையும் கொலையாளிகளுக்கு சாத்தியமாக்கிக் கொடுத்திருக்கிறது.

1990ஆம் ஆண்டளவில் இடம்பெயர்ந்த சந்தியாவின் குடும்பம் மல்லாவியில் இருந்து பின்னர் வவுனியாவுக்குச் சென்று தடுப்பு முகாமில் இருந்து 5 வருடங்களுக்கு முன்னரே புங்குடுதீவுக்குத் திரும்பியிருக்கின்றனர்.

தந்தையார் முன்னர் கொழும்பில் வர்த்தக நிறுவனம் ஒன்றில் தொழில் புரிந்தவர். வாதம் வந்ததனால் 2 வருடங்களாக அவர் சரியாகக் கூட நடமாட முடியாது. மகளின் இழப்பால் ஏற்பட்ட கோபத்தையும் வெஞ்சினத்தையும் அழுகையாகவே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

எத்தனை வறுமை இருந்தபோதும் சந்தியா செல்லப் பிள்ளையாகவே வளர்ந்தாள். அவ்வளவு மென்மையான அந்த சிறு பிள்ளையை இப்படிக் கொடூரமாகச் சிதைக்க அந்தக் கயவர்களுக்கு எப்படி மனசு வந்தது?

அவளது இழப்பு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் உலுக்கிக் போட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் வீதிகளுக்கு இறங்கியிருக்கிறார்கள். தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என்று சிறுமிகள் அவலக்குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

சந்தியா, இதுபோன்ற சம்பவங்களுக்கு ஒரு முற்றுப் புள்ளியாக இருக்க வேண்டும். அது இந்தச் சமூகத்தின் கையில்தான் இருக்கிறது. ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கு இந்த விடயத்தில் ஒரு கூட்டுப் பொறுப்பு இருக்கின்றது. இது போரின் எதிர்விளைவு, புலிகள் இல்லாததன் விளைவு என்றெல்லாம் மட்டும் கூறிவிட்டு சமூகம் ஒதுங்கிவிடக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் இனிமேல் நடக்காமல் இருப்பதற்கு வேண்டிய சமூகப் பாதுகாப்புக் குறித்து அக்கறை கொள்ளவேண்டும். அதற்காக அரசியல் மற்றும் பொதுத் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அக்கறை எடுக்க வேண்டும்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பொறுப்புக்கூறலை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வலியுறுத்தும்

## ஆனால் நிரந்தர அமைதிக்காகத்தான் அதைச் செய்யும் என்கிறார் சொல்ஹெய்ம்

அருண் ஆரோக்கியநாதன்

"எதிர்காலச் சந்ததியினருக்காக அமைதியான இலங்கையை உருவாக்கும் நோக்குடன், போர்க்காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை சர்வதேச சமூகம் தொடர்ந்தும் வலியுறுத்தும்" என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

"வரலாறு முக்கியமானது என்றபோதிலும் எதிர்காலம் மிகவும் அத்தியாவசியமானது" எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

'உதயன்' பத்திரிகைக்கு மின்னஞ்சல் மூலமாக வழங்கிய நேர்காணலில் இது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் அவர் பேசினார். தமிழர் வாழ்வில் மிகவும் துயர் நிறைந்த 2009ஆம் ஆண்டு மே மாத காலப் பகுதியைப் பற்றி தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொண்ட சொல்ஹெய்ம், "மிகவும் கொடூரமான - பெருந் துயரத்தைத் தருவதான பெரும் உயிரிழப்புகள் இடம்பெற்ற காலப்பகுதி" என அதனை நினைவு கூர்ந்தார். தாம் போருக்கு ஓர் ஒழுங்கு முறையான முடிவைக் கொண்டுவருவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி கண்டிருந்தால் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்க முடியும் என்றார்.

கே: போர்க் காலத்தில் அமைதித் தூதுவராக செயற்பட்ட அனுபவம் உங்களுக்குண்டு. போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட இக்காலப் பகுதியில் கௌரவமான நின்று நிலைக்கக் கூடிய அமைதியை ஏற்படுத்த என்ன செய்ய வேண்டும்?

ப: சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு யாரேனும் உதவ விரும்பினால் அவர்கள் மூன்று விடயங்கள் தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவ வேண்டும். தமிழ்த் தேசிய பிரச்சினைக்கு நின்றுநிலைக்கக்கூடிய தீர்வொன்றை சமஷ்டி அன்றேல் அதிகாரப் பகிர்வினூடாக கண்டடைதல். எஞ்சியுள்ள சிறைக் கைதிகளை விடுவித்தல். போரின் போது இறந்தவர்களுக்கு என்ன நடைபெற்றதென்ற தகவலை வழங்குதல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குதல். இவற்றின் ஊடாகப் போரின் பின்னரான நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல். இறுதியாகப் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த உதவுதல் என்கிற மூன்று விடயங்களையும் செய்யவேண்டும்.

கே: சமாதான முயற்சிகள் முனைப்புப் பெற்றிருந்த காலப்பகுதியில் சர்வதேச சமூகம் தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வைப் பரிசீலிக்க ஆதரவளித்தது. தற்போதைய அரசியல் நிலைமைகளின் கீழ் எவ்வாறான தீர்வை நீங்கள் முன்மொழிவீர்கள்?

ப: விடுதலைப் புலிகளும் இலங்கை அரசுமே தமக்கிடையிலான பேச்சில் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்ட தீர்வை ஆராய இணங்கினர். இதற்கு சர்வதேச சமூகம் முழுமையான ஆதரவை வழங்கியிருந்தது. பிரதமர் மோடி அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோதுகூட சமஷ்டியின் மூலமாக இந்தியா ஈட்டியுள்ள சாதனைகளைப் பாராட்டிப் பேசியிருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இலங்கை அரசிற்கும் இடையிலான பேச்சுக்கள்கூட சமஷ்டி மற்றும் அதிகாரப்பகிர்வு என்பவற்றை உள்ளடக்கியதாக, தீர்வைக் காண்பதாக அமையவேண்டும்.

கே: புதிய அரசு மேற்குலகம் உள்ள போதிலும் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் சர்வதேசத் தலையீட்டை அது விரும்பவில்லை என்பது தெளிவு. அப்படிப்பட்ட நிலையில் இந்த அரசினால் உள்ளகத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியுமா? அதனைச் சாத்தியமாக்க சர்வதேச சமூகத்தால் எத்தகைய பங்களிப்பை வழங்க முடியும்?

ப: இலங்கையின் பிரச்சினைகளுக்கான எந்தவொருத் தீர்வும் உள்நாட்டிலிருந்து கட்டியெழுப்பப்பட்டதாகவே, அமையவேண்டும். சர்வதேச சமூகம் அதற்கு அதிகமான ஆதரவை வழங்கமுடியும். இராஜதந்திர மற்றும் நிதி உதவிகளை எம்மால் வழங்கமுடியும். இலங்கையர்களால் செய்துமுடிக்கப்படும் உடன்படிக்கை தொடர்பிலான நம்பிக்கையை நாம் ஊக்குவிக்கமுடியும்.

கே: ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் ராட் ஹுஸைனை அண்மையில் நீங்கள் சந்தித்திருந்தீர்கள். அவருடன் என்ன பேசினீர்கள்?

ப: நாம் அனைத்து கண்டங்களிலும் மனித உரிமைகளை ஊக்குவிக்கின்ற அவரது பணி தொடர்பாக ஆராய்ந்தோம். இலங்கையின் போர் தொர்பான அறிக்கை ஏற்கனவே, உறுதியளித்தவாறு செப்டெம்பரில் பகிரங்கமாக வெளியிடப்படும் என அவர் தெளிவாகக் கூறினார். அறிக்கையில் ஆச்சரியங்கள் உள்ளடங்கியிருக்கும் என அவர் தெரிவித்தார். அத்தோடு அறிக்கை இன்னுமொரு தடவை பிற்போடப் படமாட்டாது என்பதையும் தெளிவுபடுத்தினார்.

கே: எதிர்காலத்தில் இலங்கைக்கு எத்தகைய ஆதரவை வழங்குவதற்கு எண்ணியுள்ளீர்கள்? விரைவில் இலங்கை வரும் எண்ணமுண்டா?

ப: இந்த வருடப் பிற்பகுதியில் இலங்கைக்கு வருவேன் என்று நம்புகின்றேன். நாடுமுழுவதிலும் துரிதமான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை அடைவதற்கு ஆதரவை வழங்குவதற்காக இலங்கை அரசுடனும் புலம்பெயர் தமிழர்களுடனும் சர்வதேச சமூகத்துடனும் இணைந்து கடுமையாகப் பணியாற்றுவேன். போரால் சின்னாபின்னமடைந்த வடக்கு மற்றும் கிழக்கிற்கு விசேடமான செயற்றிட்டங்கள் தேவைப்படுகின்றன. நிரந்தர சமாதானம் ஏற்படுமிடத்து இலங்கை மிக மிகத் துரிதமாக அபிவிருத்தி காணமுடியும்.

கே: ராஜபக்ஷக்களின் தோல்விக்குப் பின்னர் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏதும் உள்ளதா?

ப: சர்வதேச சமூகமானது பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும். எதிர்காலச் சந்ததியினருக்கான அமைதியும் சுபீட்சமும் நிறைந்த இலங்கையை உருவாக்கும் நோக்குடனேயே இதனை முன்னெடுக்கும். வரலாறு முக்கியமானது என்ற போதிலும் எதிர்காலம் அதைவிடவும் அவசியமானது.

கே: போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக சாட்சியமளிப்பதற்கு தயாராகவுள்ளதாக நீங்கள் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருந்தீர்கள்? இலங்கை அரசு உள்ளக விசாரணைப் பொறிமுறையை உருவாக்கினால் நீங்கள் சாட்சியமளிப்பீர்களா?

ப: என்னிடம் இருக்கக்கூடிய அனைத்துத் தகவல்களையும் நம்பகரமான உள்நாட்டு அன்றேல் சர்வதேச [illegible] வழங்குவதற்கு நான் தயாராகவுள்ளேன்.

கே: மிலேச்சத்தனமான இறுதிப் போரில் இறந்தவர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் இந்த மே மாதத்தில் நாம் நினைவுகூருகின்றோம். விடுதலைப் புலிகளுடனும் இலங்கை அரசுடனும் 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் உங்களுக்கிருந்த இறுதித் தொடர்புகள் என்ன?

ப: அது மிகவும் கொடூரமான காலப் பகுதி. அளவு கடந்த பெருந்துயரங்கள் நிறைந்த காலப்பகுதி. அதிக சாவுகளைக் கண்ட காலப்பகுதி. போருக்கு ஓர் ஒழுங்குமுறையான முடிவினைக் கொண்டு வருவதற்காக விடுதலைப்புலிகள் மற்றும் இலங்கை அரசு இடையே இணக்கத்தை ஏற்படுத்துவதற்காக கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தோம். அவை வெற்றிகண்டிருந்தால் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களைத் தவிர்த்திருக்க முடியும். இலங்கையில் நோர்வேயின் சமாதானப் பங்களிப்பு தொடர்பாக புத்தகமொன்றை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் வெளியிடவுள்ளோம். இதிலே பிரபாகரனுடனும் ராஜபக்ஷக்களுடனுமான எமது தொடர்புகள் குறித்து விவரித்துக் கூறவுள்ளோம்.

கே: புத்தகத்தின் உள்ளடக்கம் பற்றி எமக்குச் சற்றே விவரமாகக் கூறமுடியுமா?

ப: சுவீடனில் வசிக்கும் அனுபவமிக்க பிரித்தானிய ஊடகவியலாளர் மார்க் சால்டர் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். எமது நேர்காணல்கள் மற்றும் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் நோர்வேயின் சமாதான முயற்சிகளை அவர் விவரித்தும் ஆராய்ந்தும் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். என்ன நடைபெற்றது? அனைத்து தரப்பினரும் எம்மிடம் கூறியவை என்ன? மீண்டும் போருக்குச் செல்லாதிருக்க நோர்வே மற்றும் சர்வதேச சமூகத்தினரால் மேலும் அதிகமாக ஏதேனும் செய்திருக்க முடியுமா? போன்ற விடயங்களை இந்தப் புத்தகம் உள்ளடக்கியிருக்கும்.

கே: தற்போதைய அரசு தொடர்பான உங்களது அபிப்பிராயம் என்ன?

ப: ஜனநாயக அரசொன்றை மீளவும் உருவாக்க முடிந்தமையானது இலங்கைக்கு பெரும் ஆறுதலாக அமைந்தது. மைத்திரிபாலவையும் ரணிலையும் கொண்டுவருகின்ற மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தமிழர்களும் முஸ்லிம்களும் பேராதரவை வழங்கி வாக்களித்திருந்தனர். தற்போதைய அரசு ஜனநாயக அரசியல் சூழ்நிலையை இலங்கையில் மீள நிலைநாட்டியுள்ளது. அச்சத்தைக் குறைத்துள்ளது. பல நல்ல முன்னெடுப்புக்களை அது ஆரம்பித்துள்ளது. ஆனால், வரவுள்ள ஆண்டுகளில் இன்னமும் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ளது. நல்லம்சங்கள் கொண்ட சிங்கள அரசுடன் விட்டுக்கொடுப்புக்களுடன் கூடிய பேச்சில் ஈடுபட்டு தமக்குரியதை அடைந்துகொள்ளும் சந்தர்ப்பத்தைத் தமிழர் தரப்பு நன்கு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

கே: புலம்பெயர்ந்த தமிழர்களைச் சந்தித்ததாக சமீபத்தில் நீங்கள் டுவிட்டரில் பதிவிட்டிருந்தீர்கள். இலங்கையை குறிப்பாக வடக்கு, கிழக்கை கட்டியெழுப்புவதற்கு அவர்கள் எவ்வாறு பங்களிக்க முடியும்? புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கையை எவ்வாறு இலங்கை அரசு வெற்றிகொள்ளமுடியும்?

ப: இலங்கை அரசும் புலம்பெயர் மக்களும் கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும். வடக்கு, கிழக்கு மக்களுக்காக இணைந்து பணியாற்றுவதற்கான கட்டமைப்புக்களை அவர்கள் உருவாக்கவேண்டும். புலம்பெயர்ந்தவர்கள் இடையே அளவுக்கதிகமான திறமைகளும் பெரும் வளங்களும் உள்ளன. அவை இந்தத் தீவில் எஞ்சியுள்ளவர்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டும். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கியாளர்கள் என பன்முகப்பட்டவர்களையும் மீண்டும் வருமாறு அழைத்து அவர்களது அறிவைப் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்கவேண்டும்.

கே: போரில் உயிரிழந்தவர்களையும் பாதிப்பிற்குள்ளானவர்களையும் நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்களுக்கு நீங்கள் கூறவிரும்பும் செய்தியென்ன?

ப:அவர்களது (தமிழ் மக்களது) அனைத்து இழப்புக்களுக்காகவும் நான் வேதனைப் படுகின்றேன். அதிகளவான தாய்மார் தமது கணவன்மார்களையும் பிள்ளைகளையும் இழந்துள்ளனர். தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களும் இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். இலங்கை இனி ஒருபோதுமே போருக்கோ வன்முறைக்கோ திரும்பக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரி.பி.அன்ரன்

# தமிழ் எந்தன்... எதற்கு நேர்?

அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப் பட்ட ஒரு உந்துருளித் திருத்தகத்தின் பெயர்ப் பலகையைப் பார்த்தபோது ஆச்சர்யம் தாளவில்லை. 'தனுஷ் தமன்னா' திருத்தகம் என்ற சாரப்பட அதில் போடப்பட்டிருந்தது. தனஷுக்கும் தமன்னாவுக்கும் மோட்டார் சைக்கிள் திருத்துவதற்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை.

அப்படிப் பெயர் வைப்பது உரிமையாளரின் தனி உரிமை. அதில் நாம் தலையிட்டுவிட முடியாதுதான். ஆனால், மொழி மீதான ஆர்வம் மற்றும் தமிழின் நிலைமை பற்றிய சிந்தனையை அது தூண்டி விடுவதையும் யாராலும் தடுத்துவிட முடியாதுதானே!



தமிழர்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்த மாற்றங்கள் உண்மையில் வியப்பூட்டுகின்றன. அந்தக் காலத்தில் கடைகளின் பெயர்ப் பலகைகளும் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளும் தமிழில் எழுதப்பட்டிருந்தன. சுத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதற்கும் ஊக்குவிக்கப்பட்டார் கடை உரிமையாளர்கள். அப்படி முன்னர் தமிழில் எழுதியிருந்த பெயர்ப் பலகைகள் கூட இப்போது ஆங்கிலப் பெயர்களைத் தமிழில் எழுதியவையாக மாறிவிட்டிருக்கின்றமை, தமிழை நாம் எவ்வளவு தூரத்துக்கு ஏற்றுக்கொண்டோம் அல்லது அங்கீகரித்தோம் என்ற கேள்வியை எழுப்பி விட்டுள்ளது. ஆனாலும் தமிழ்த் தேசியத்தின் பேரால் நாம் எல்லோருமே ஏதோ பேசிக் கொண்டிருக்கின்றோம், அரசியல் செய்துகொண்டிருக்கின்றோம். குறைந்தபட்சம் தேர்தல்களின் போது தமிழ்த் தேசியத்தை விரல்களில் நாவல் மையாக இட்டுக்கொள்கிறோம். ஆனால் தமிழை எங்கு வைத்திருக்கிறோம்?

**பொருளாதார முன்னேற்றத்துக்கான மொழி**

உலகம் முழுவதிலும் சிலர் தங்களின் தாய்மொழியைக் கைவிட்டுவிட்டு வாழ்க்கையில் முன்னேற்றம் அடையப் பயன்படும் என்று கருதும் மொழியைப் படிக்கிறார்கள். தமிழர்களிடம் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இது கடந்த இரண்டு நூற்றாண்டு காலமாக அதிகரித்துக் கொண்டே வருகிறது.




தாய்மொழி ஓர் அடையாளம் என்றும், அவசியமில்லாதது என்றும் கருதுவோர் எண்ணிக்கை உயர்கின்றது. நுகர்வுப் பண்பாட்டில் மொழியும் நுகர்வை இலகுபடுத்தும் ஒரு பண்டாமாக இருப்பதையே விரும்புகிறார்கள். அது ஏழ்மையான நாடுகளிலும், வளர்ச்சி அடையும் நாடுகளிலும் பொதுப் பண்பாக வேறு இருந்து வருகிறது.

ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பிய நாட்டினர், புதிய நிலப் பகுதிகளையும், தங்கம், வெள்ளி, நறுமணப் பொருள்களையும் தேடிக் கடல் வழியாக மாலுமிகளையும், ஆள்களையும் அனுப்பினார்கள். அட்லாண்டிக், பசிபிக் சமுத்திரங்களிலும், இந்து மகா சமுத்திரத்திலும் பயணித்துப் புதிய நாடுகளைக் கண்டறிந்த அவர்கள் அவற்றைத் தன் நாட்டோடு சேர்த்துக் கொண்டார்கள். தங்கள் மொழியை புதிய நாடுகளின் தேசிய மொழியாக்கி விட்டார்கள். அதனால், பல நாடுகளில் ஆதிமக்களின் மொழிகள் அழிந்து ஒழிந்துவிட்டன.

இலங்கையிலும் அந்த நிலைதான் நீடித்தது. ஆங்கில மொழி வழியில் படித்த சிலர் நல்ல வேலைகள் பெறவும், அதிகமான சம்பளம் பெறவும், சமூகத்தில் மதிப்பைப் பெறவும் முடிந்தது. அதனைக் கண்டு பலரும் ஆங்கிலம் கற்க ஆரம்பித்தார்கள். தங்களின் அறிவாற்றலை நிலைநாட்ட அது தகுந்த மொழியென நம்பினார்கள். சர்வதேச அரங்குகளில் பேசியும், எழுதியும், விருதுகள் பெற்றும் தங்கள் மேதமையை நிலைநாட்டினார்கள். தமிழர்கள் அதில் முதலிடத்திலிருந்தார்கள். சிங்களவர்களை ஓரம் கட்டினார்கள். *(இனப்பிரச்சினையின் தோற்றுவாய்க்கு இதும் ஒரு காரணம் என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள்)*

1956இல் சொலமன் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க தனிச் சிங்கள சட்டத்தைக் கொண்டு வந்தார். சிங்கள – தமிழ் மக்கள் மத்தியில் இந்தச் சட்டம் நிரப்ப முடியாத பிளவை ஏற்படுத்தினாலும், சிங்கள மற்றும் தமிழ் மொழிகளின் மீள் எழுச்சிக்கும் வழிவகுத்தது. ஆங்கிலம் இரண்டாம் மொழியாகியது. அது கட்டாயம் படிக்கப்பட வேண்டிய ஒன்றாக இல்லாமல்போனது.

பின்னர் வந்த ஆயுதப் போராட்டம் இந்த நிலைமைக்கு வலுச் சேர்த்தது. மொழி வழியாகவே இலங்கையின் இரு முதன்மை இனங்களும் அடையாளப்படுத்தப்பட்டன. எனவே மொழியைப் பாதுகாப்பதும் வளர்ப்பதும் முக்கியமானதாகிவிட்டது. மொழியின் வழியிலேயே இனத்தின் அடையாளம் ஆழ ஊன்றப்பட்டது. அதன் விளைவுதான், தூய தமிழ் பயன்பாட்டுக்கான விடுதலைப் புலிகளின் அதிகார ஆதரவு. மறுபுறத்தில் கொழும்பு ஆட்சி தமிழைப் புறம்ஒதுக்கியமை அவர்களின் போராட்டத்துக்கான அடி உரமாகியது.

**தமிழை ஆதரிக்கவும் வளர்க்கவும், ஒரு வலுவோடு அதனை முன்னோக்கி உந்தவும் இருந்த அதிகார ஆதர வைத் தமிழ் 2009இல் இழந்து போனது. அதன் விளைவுதான் தனுஷ் தமன்னாவில் வந்து நிற் கின்றது. சுத்தமான தமிழில் வைக்கப்பட்ட பெயர் களைக் கொண்ட பலகைகளின் எண்ணிக்கையை வடக்கில் விரல்விட்டு எண்ணி விடலாம்.**

**தூய தமிழ்ப் போராட்டம்**

பிறக்கும் பிள்ளைகளுக்கு தூய தமிழில் பெயர் வைப்பதை ஊக்கப்படுத்துவதற்கான திட்டங்களைக் கூடப் புலிகள் அறிவித்தார்கள். தமிழ்ப் பெயர் கொண்ட பிள்ளைகளுக்கு வங்கிகளில் சிறுதொகைப் பணம் வைப்பிலிடப்பட்டன. குழந்தைகளுக்கு வைக்கக்கூடிய தமிழ்ப் பெயர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது. பிறந்ததில் இருந்து நாம் பயன்படுத்தி வந்த பல சொற்கள் தமிழ் அல்லாதவை என்று சொல்லிக் கொடுத்ததுடன் அவற்றுக்கு புதிய தமிழ்ச் சொற்களையும் அறிமுகப்படுத்தினார்கள். பாணுக்கு வெதுப்பியும் ஐஸ்கிறீமுக்கு குளிர்களியும் அப்படித்தான் அறிமுகமாகின. தமிழா நீ பேசுவது தமிழா என்று பாட்டுக்கூட இயற்றினார்கள்.

அவை எல்லாமும் போரோடு கரைந்து போய்விட்டன. தமிழை ஆதரிக்கவும் வளர்க்கவும், ஒரு வலுவோடு அதனை முன்னோக்கி உந்தவும் இருந்த அதிகார ஆதரவைத் தமிழ் 2009இல் இழந்து போனது. அதன் விளைவுதான் தனுஷ் தமன்னாவில் வந்து நிற்கின்றது. சுத்தமான தமிழில் வைக்கப்பட்ட பெயர்களைக் கொண்ட பலகைகளின் எண்ணிக்கையை வடக்கில் விரல்விட்டு எண்ணி விடலாம். எல்லாமே இங்கிலீஷ் மயமாக அல்லது தங்கிலீஷ் மயமாகவே இருக்கின்றன. புதிதாக முளைக்கும் எந்தவொரு பெயர்ப் பலகையிலும் மருந்துக்கும் தமிழ் இல்லை; மருந்தகத்திலும் தமிழ் இல்லை.

இதில் வியப்புக்குரியது ஒன்றுமில்லை. இன்றைய நுகர்வுப் பண்பாட்டில் தொழில், படிப்பு, வணிகம் என்பது பல நாடுகளோடும் சம்பந்தப்பட்டது என்பதாகி விட்டது. அதனால், ஆங்கிலம் படிப்பது கூடுதலாகியது. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில வழிக் கல்விதான் சிறந்தது என்னும் சிந்தனைப் போக்கு விரிவாகி வருகிறது. தமிழ் மருத்துவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டத்தை மட்டும் முடித்துவிட்டாலும்கூட சமூகத்தில் தாம் உயர்ந்தவர்கள், மதிப்புமிக்கவர்கள், அறிவாளிகள் என்ற மனோபாவத்தை பல்கலைக்கழகத்தில் அவர்கள் கற்கும் ஆங்கில வழிக் கல்வியே அவர்களுக்கு ஊட்டுகிறது. அதே மனோபாவத்தை தமிழ்ப் பட்டதாரி கொண்டிருக்க வில்லை. படித்து முடித்தாலும் வேலையே கிடைக்கப்போவ தில்லை என்ற ஏக்கமே அவரை கூனிக்குறுகி ஒடுங்க வைத்து சமூகத்தின் மூலைக்குத் தள்ளிவிடுகிறது. தொழில், படிப்பு, வணிகம் என்பவற்றில் தமிழ் பின் தங்கியிருப்பதே இதற்குக் காரணம்.

**அரசுகளின் செயலின்மை**

வடக்கில் மாகாண சபை அமைந்த பின்னரும்கூட தமிழ் மொழி வளர்ச்சிக்கான ஒரு துறை உருவாக்கப்படவில்லை. தமிழ் மொழி வளர்ச்சி மற்றும் பண்பாடு என்பது அது கல்வி அமைச்சுடன் இணைந்ததான ஒன்று என்ற நிலைப்பாடே தொடர்கின்றது. பாடசாலைகளில் தமிழ்த் தின விழாக்கள் நடத்தப்படுவதற்கு மேல் அதிகார உந்தல் எதுவும் கிடையாது. தமிழ் மொழி வளர்ச்சிக்கு அறிவு பூர்வமான செயல்கள் எவையும் இதுவரையில் ஆற்றப்படவில்லை. ஆனால், நாட்டின் ஆட்சிமொழியாக தமிழ் இருக்க வேண்டும் என்றும் அது சிங்களத்துக்கு நிகராக மதிக்கப்படவேண்டும் என்றும் பேராசை கொண்டிருக்கிறார்கள்.

தாய் மொழிக் கல்விச் சட்டம் வந்து கிட்டத்தட்ட 60 வருடங்களாகிவிட்ட போதும், 30 வருடங்கள் இன விடுதலைக்காகத் தனி அரச கட்டமைப்புடன் (நிழல் அரசு) போராடிவிட்டபோதும், ஒரு மாகாண சபையின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட போதும் தமிழ் தொழில் வழியாக, வணிக வழியாக வளர்வதற்கான திட்டங்கள் எவையும் இல்லை. அதற்கான ஊக்குவிப்பும் இல்லை. பதிலாக மும்மொழிக் கொள்கை மற்றும் ஆங்கில ஈர்ப்பு வளர்கின்றது.

மொழி என்பது மனிதர்களின் அரிய கண்டுபிடிப்பு. அதில் எந்த மொழி சுய முன்னேற்றம், நாட்டின் வளர்ச்சி, சர்வதேசப் பயன்பாடு என்பவற்றுக்கு ஆதாரமாக இருக்கிறதோ அந்த மொழியே மாணவர்கள் விரும்பிப் படிக்கும் மொழியாக வணிகம் செய்யும் மொழியாக இருக்கிறது. அதனைத் தாய்மொழி, தேச மொழி, செம்மொழி என்று சொல்லித் தடுத்துவிட முடியாது.

தாராள மயம், உலக மயம் என்பதில் தொழில், வணிகம், கல்வி என்பன தேச எல்லைகளைத் தகர்த்து விட்டன. அதில் மொழிகளும் சேர்ந்து போகின்றன. இது தமிழுக்கு மட்டுமான பிரச்சினை இல்லை. சர்வதேச மொழிகளின் பிரச்சினை. ஆனால் அவற்றில் பலவற்றைக் காப்பதற்கு, பேணுவதற்கு அதிகாரம் பெற்ற அரசுகள் இருக்கின்றன. தமிழுக்கு அதுவும் இல்லாததால் தமன்னா பெயர் பலகையை ஆக்கிரமித்துக் கொண்டார்.

மொழியே அறிவு இல்லை. அறிவுதான் மொழி வழியாகச் சொல்லப்படுகிறது. எனவே, மொழிகள் பற்றி திறந்த மனத்துடன் சிந்தித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவும் விரைந்து எடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரம்யன்

# பிரதமர் பதவியில் ராஜபக்ஷ அமர்ந்தால்



> ராஜபக்ஷவும் அவரது சகபாடிகளும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவைக்கண்டு அஞ்சுவதற்கு காரணமிருக்கிறது. இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆளணி பற்றாக்குறை இருப்பதுடன் ஆணையாளர்களிலும் ராஜபக்ஷவால் தெரிவுசெய்யப்பட்டவர்களே காணப்படுகின்றனர்.

ஆசைபோட ஒருவிடயம்



ஊழல் விசாரணைகள் பற்றி ராஜபக்ஷ தரப்பினர் பயப்படும். அதேநேரம் அவர் பிரதமராக வந்தால் என்ன நடக்குமோ என்று மறுதரப்பினரும் அஞ்சுகின்றார்கள். ரங்கல சூரிய ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையில் இருந்து சில குறிப்புகள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வென்றுவிடுவார் என்பதால் அவரை வரும் பொதுத் தேர்தலில் பிரதம மந்திரி பதவிக்குப் போட்டியிடாமல் அவரின் எதிரிகள் தடுத்து வருகிறார்கள் என்கிறார்கள் அவரது அடிவருடிகள். ராஜபக்ஷவும் இதே மாதிரிக் கருத்தை ரத்தகமவில் நடந்த கூட்டமொன்றில் கூறியிருந்தார். தாம் மீண்டும் ஜனாதிபதியாக வந்துவிடுவார் என்ற பயத்தில்தான் 19ஆவது அரசமைப்புத்திருத்தம் கொண்டு வரப்பட்டது என்று அவர் கூறியிருந்தார். லட்சக்கணக்கான மக்கள் அவருக்கு எதிராக வாக்களித்து வீட்டுக்கு அனுப்பினார்கள். அவர் அதே பதவியில் தொடர்ந்து இருப்பதையோ மீண்டும் அந்தப் பதவிக்காக போட்டியிடுவ தையோ அவர்கள் விரும்பவில்லை என்பதே உண்மை. அவர் வென்றுவிடு வார் என்று அவர்கள் அஞ்சவில்லை. அவ்வாறு பதவிக்கு வந்தால் என்ன செய்வாரோ என்றுதான் பயந்தார்கள். பதவியில் இருக்கும்போது அதிகாரங்களைதுஷ்பிரயோகம்செய்வார் என் பதை அவர் நிரூபித்திருக்கிறார். ஆசியஆபிரிக்கநாடுகளில்பலபேர்களைப் போலவே பதவிக்குவரும் வரை ஜனநாயகம் பற்றிப் பேசிவிட்டு பதவிக்கு வந்ததும் ஜனநாயக அமைப்புக்களை சீர்குலைத்துவிட்டார்.

ராஜபக்ஷ மீண்டும் ஓர் அதிகாரப் பதவிக்கு வருவாரானால் 19ஆவது திருத்தத்தின் மூலம் கிடைத்துள்ள அனைத்தையும் அழித்துவிடுவார்.

### கெட்ட செய்தி

சாதாரணமாகச் சொல்வதானால் நாட்டின் ஜனநாயகத்துக்கு ராஜபக்ஷ ஒரு கெட்ட செய்தியாவார். அவர் பதவியிலிருந்த இரண்டாவது முறை இதனை நன்றாக உணர்த்துவதாய் இருந்தது. அது மட்டுமல்ல இப்போது மைத்திரிபால சிறிசேன ஒருங்கிணைக் கப் பாடுபட்டு வரும் கட்சிக்கும் அவர் வருகை கெட்ட செய்தியே. நாட்டைத் தனது சொந்த தளமாகஆக்கிக்கொண்ட அவர்,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அவருடைய குடும்ப உறுப்பினர்களின் எதேச்சதிகாரத்தின் றப்பர் ஸ்டாம்பாக மாற்றிவிட்டிருந்தார். உள்ளக எதிர்ப்பு களை நசுக்கினார். கட்சி மூத்த உறுப்பி னர்களை ஓரம்கட்டினார். நாட்டை தீவிர தேசியவாதத்துக்கு இட்டுச் சென்றார். விமல் வீரவன்ச போன்ற குழப்பங்காச்சிகளுக்கு இடம் ஒதுக்கிக் கொடுத்தார்.

சிறுபான்மை வாக்காளர்களை தூரத்துக்குப்போகச் செய்தார். தெற்கில் இனவாதம் தலைதூக்க உதவினார். மைத்திரிபால சிறிசேனவை புலம்பெயர் மக்களின் முகவராக வர்ணித்தார். இப்பொழுது அதே சிறிசேனவின் தலைமையிலான அரசில் பிரதமராக வரவிருப்பது பெரிய முரண்பாடான விடயம் என்று புதிய அரசின் வெற்றிக்கு உழைத்த சங் சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷவின் கொள்கைகள் இனரீதியில் மக்களை வெவ்வேறு திசைகளில் ஒதுக்கிவிட்டது. அதுதான் ஜனவரி 8ஆம் திகதி தேர்தலில் பிரதிபலிப் பதாய் இருந்தது. தாம் முழுக்கவும் சிங்கள மக்களின் வாக்குகளை நம்பியிருந்ததுடன் வடக்கில் குறைவான வாக்களிப்பே இடம்பெறும் என்று எதிர்பார்த்திருந்ததாக அவரே ஒப்புக் கொண்டி ருக்கிறார். போர் முடிவுற்ற கையுடன் தாம் இந்த முழு நாட்டுக்கும் ஜனாதிபதியாவார் என்பதை உணர்ந்து செயற்பட்டிருந்திருப்பாரானால் ஒரு பகுதி மக்கள் இனரீதியில் ஒரு பக்கமாக சார்ந்துவிட்டதை தவிர்த்திருக்க முடியும்.

பிரதம மந்திரி பதவிக்கு அவர் போட்டியிடுவாரானால் சிறுபான்மையோரின் வாக்குப் பலத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இழந்துவிடும்.

### தன்னல நோக்கம்

அடுத்த பொதுத் தேர்தலின்போது வேட்பாளர் தெரிவு குழுவின் தலைவராக தாமே இருக்கவேண்டும் என்று ராஜபக்ஷ கேட்டிருக்கிறார். அவர் இரண்டாம் முறையும் ஜனாதிபதியாக இருந்தபோது இளம் இரத்தத்தை அரசியலுக்குள் பாய்ச்சுவதாகக் கூறிக் கொண்டு சில கேள்விக்குரிய இளைஞர்களை அறிமுகப்படுத்தினார். ஜனாதிபதி பதவிக்கு தமது வம்ச பாரம்பரிய வாரிசாக இருக்கும் வகையில் நாமல் கொண்டுவந்தார். அதேபோல் துமிந்த சில்வா போன்றவர்களும் இளம் – இரத்தம் என்ற வகையில் அரசியலுக்குள் அறிமுகப் படுத்தப்பட்டார்கள்.

தன்னல நோக்கமான இந்தச் செயற்பாடுகள் தேசிய அளவில் காலப்போக்கில் பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதாய் இருக்கும். போதைப்பொருள் கடத்தல் வெலேசுதாவுடன் தொடர்புடையவர் என்ற வகையில் விசாரணைக்குள்ளாகியுள்ளவர் துமிந்த சில்வா. இப்படியானவர்கள் எதிர்கால அமைச்சர்களாகவும் வந்துவிடுவார்கள்.

பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவை கலைக்க வேண்டும், இது தொடர்பாக பிரதமர் தலைமையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைச்சரவை குழுவை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் ராஜபக்ஷ கேட்டுள்ளார்.

இந்தப் பிரிவு சூனியக்காரிபோல தங்கள் ஆள்களை தேடித்திரிவதாக ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். அதே வகையில் விமல் வீரவன்ஸ இது மேற்கத்திய சதி முயற்சி என்று வழமைபோல விமர்சித்துள்ளார். ஆள்களை வேட்டையாடுவது என்பதை நாட்டு மக்கள் தேவைக்கு அதிகமாகவே முன்பு கண்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டும் இருக்கிறார்கள். நிலைமைகள் இப்போது எவ்வளவோ மாறியுள்ளன. அரசு ஊடகங்கள் இப்போது நடுநிலை மாகச் செயற்படுகின்றன. பொலிஸ், இராணுவ மீறல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றன.

ராஜபக்ஷவும் அவரது சகபாடிகளும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவைக்கண்டு அஞ்சுவதற்கு காரணமிருக்கிறது. இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் ஆளணி பற்றாக்குறை இருப்பதுடன் ஆணையாளர்களிலும் ராஜபக்ஷவால் தெரிவுசெய்யப்பட்டவர்களே காணப்படுகின்றனர். அவ்வாறு இன்றி பொலிஸ் விசாரணைக் குழுவானது கடமையை செய்வதில் இறங்கியுள்ளது. நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு ராஜபக்ஷவின் அடிவருடிகளின் பெரும்பாலானவர்களை விசாரணைக்குட்படுத்தியுள்ளது.

இவர்களில் பெரிய ஊழல்களிலும் மோசடிகளிலும் சம்பந்தப்பட்டவர்களாகக் கருதப்படுபவர் இருக்கிறார்கள். ராஜபக்ஷ ஆட்சியின் பின்னணியிலேயே இவைகள் நடைபெற்றுள்ளன. அவர்கள் அநீதியான முறையில் குறிவைக்கப்படுகிறார்கள் என்கிறார் ராஜபக்ஷ. முன்னாள் அமைச்சர்கள்சிலர் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதைத் தாமே தடுத்து நிறுத்தினார் என்று ராஜபக்ஷ கூறியிருப்பது பதியப்பட்டிருக்கிறது.

### ஜனாதிபதியின் உறுதியான நிலைப்பாடு

இருந்தபோதிலும் நிதிக்குற்ற விசாரணை பிரிவானது செயற்படும் முறையை பக்கசார்பற்ற முறையில் ஒருவர் அவதானிப்பாரானால் அதில் குறைகள் இருப்பதைக் காணக்கூடும். இந்தப் பிரிவானது இதுவரை பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை குழுவினால் தாக்கல் செய்யப்படும் முறைப்பாடுகளையே விசாரணைக்குட்படுத்தி வந்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கம் நல்லதாக இருக்கலாம். ஆனால் விளைவு எதிர்மறையாகவே தென்படுகின்றன. இந்தப் பிரிவை ஓர் அரசியல் கருவியாகவே பொதுமக்கள் பார்ப்பதாகத் தென்படுகின்றது.

ஜனாதிபதியின் ராஜபக்ஷவுடனான சந்திப்பின் பின்னர் பொதுமக்கள் நேரடியாக ஊழல் ஒழிப்புப் பிரிவிடமும் நிதிக்குற்ற விசாரணை பிரிவிடமும் முறைப்பாடுகளை முன்வைக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டிருப்பது அவ்வித சட்டகுறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக இருக்கும். என்றாலும் இது ராஜபக்ஷவையும் அவருக்கு நெருக்கமானவர்களையும் திருப்திப்படுத்துமா என்பது தெளிவாக இல்லை.

அவர்கள் இந்தப் பிரிவைக் குறித்து கவலைப்படுவதில் நியாயம் இருக்கிறது. பொதுப்பணத்தில் 18 கோடி அமெரிக்க டொலர் அளவில் ராஜபக்ஷ தட்டிச்சுத்தி விட்டதாக அண்மையில் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருந்தார். இந்தத் தொகை நம்பக்கூடிய அளவுக்குத் தென்படுவதால் அவர்கள் அஞ்சுவதற்கு காரணம் இருக்கிறது. விசாரணைப் பிரிவு முற்றாக ஒழிக்கப்படும்வரை அவர்கள் திருப்திகொள்ள மாட்டார்கள். அவ்வாறு செய்ய ஜனாதிபதி திட்டவட்டமாக மறுத்துவிட்டமை அவர்களை ஆத்திரம் கொள்ளவும் கவலை யில் தள்ளவும் செய்துள்ளது.

ராஜபக்ஷ பிரதமர் பதவியில் அமருவதாய் இருந்தால் இப்போது அவருடைய சகபாடிகள் மீது நடைபெறும் விசார்ணைகள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிடும். சகபாடிகளின் புதுவகையான முதலாளித்துவம் தலைதூக்கிவிடும். அத்துடன் ஜனவரி 8ஆம் திகதி நிகழ்த்தப்பட்ட ஜனநாயகப் புரட்சியானது முடிவுக்கு வந்துவிடும். நாம் உருவாக்கிய அரசியல் முன்னேற்றம் மற்றும் சர்வதேச நல்லுறவு முதலியவை சீர்குலைந்து குட்டிச்சுவராகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நித்தியா சந்திரமோகன்

# எல்லைமீறும் பாலியல் கொடுமைகளை தடுக்க வழி என்ன?

தற்போது நாளேடுகள் உட்பட எந்த ஊடகங்களை எடுத்தாலும், அதில் நாள்தோறும் தவறாமல் இடம்பெறும் செய்தி யாகி விட்டது பாலியல் வன்கொடுமை.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்து வந்த பாலியல் வன்கொடுமைகள், இன்று ஜாதி, மத பேதமோ, மேல்தட்டு, அடித்தட்டு மக்கள் என்ற பாகுபாடோ, படித்தவர், பாமரர் என்ற வேறுபாடோ இன்றி அனைத்துத் தரப்பினரையும் ஆட்டி வைக்கிறது. இது எந்தத் துறையையும் மிச்சமாக விட்டு வைக்கவில்லை.

பாலியல் என்றால் என்னவென்றே அறியாத சிறுமிகளைக்கூட வன்கொடுமை செய்யும் அளவுக்கு மனிதன் மிருகமாக மாறி விட்டது கடும் வேதனைக்குரியது.

இப்போது புங்குடுதீவில் ஒரு பள்ளிச் சிறுமி வன்கொடுமையின் பின்னர் கொல்லப்பட்டுள்ளாள். இதற்கு முன்னர் கிளிநொச்சியிலும் ஒரு சிறுமியின் சாவுக்கு பாலியல் வன் கொடுமை தான் காரணம் என்று அஞ்சப்படுகிறது. அதன் மீதான விசாரணைகள் போதிய அக்கறையோடு மேற்கொள்ளப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் நீள்கிறது. இதற்கு முன்னரும் தீவகத்தில் ஒரு பச்சிளம்குழந்தை இப்படிக் குதறப்பட்டுக் கொல்லப்பட்டாள்.

நெடுந்தீவிலே 8 வயதுச் சிறுமி ஒருத்தி இதுபோன்றே ஒரு மனித மிருகத்தால் சிதைக்கப்பட்டாள்.

இவை ஊடகங்கள் மூலம் வெளிவந்த சில பாலியல் வன்முறைகள். வெளிவராமல் நிகழ்ந்து கொண்டே இருக்கும் வன்கொடுமைகளையும் அடுக்கிக் கொண்டே போகலாம். எனினும், அவற்றில் பெரும்பாலானவை கௌரவத்துக்காகவோ, பணத்துக்காகவோ மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன.

அண்மையில் இந்தியத் தலைநகரில் அரசு பஸ்ஸில் வைத்து கல்லூரி மாணவி ஒருத்தி கொடுமையாகச் சிதைக்கப்பட்டுக் கொல்லப்பட்டாள். நிர்பயா என்கிற அந்த மாணவியின் சம்பவம் மொத்த இந்தியாவையும் உலுக்கிப் போட்டது. தமிழ்நாடு வரைக்கும் ஆட்பாட்டங்களும் போராட்டங்கள் பொங்கியெழுந்தன. ஆனால், இங்கு அத்தகைய அதிர்வுகள் எவற்றையும் காணமுடியவில்லை.

ஒப்பீட்டளவில் ஏனைய சம்பவங்களைவிட நித்தியாவின் கொலையில் பாடசாலைகள் மற்றும் கல்விச் சமூகத்தினர் தமது எதிர்ப்பைச் சிறிதளவில் பதிவு செய்தனர். எனினும் அது தொடர் போராட்டமாக எடுத்துச் செல்லப்படவில்லை. அது பற்றிய சமூகக் கதையாடல்களும் பெரியவ்ளவில் வளர்த்துச் செல்லப்படவில்லை. சில வலைத்தள உலாவிகள் ஊடகங்கள் செய்தி வெளியிட்ட போக்கை விமர்சித்தார்களே தவிர, இது போன்ற சம்பவங்கள் குறித்த ஆரோக்கியமான கதையாடல்களை வளர்க்கத் தவறியிருந்தார்கள்; அல்லது வெறும் உணர்ச்சிப் பதவிடல்களோடு தமது கடமையை முடித்துக்கொண்டார்கள்.

நிர்பயாவின் சம்பவத்திற்குப் பின்னர் இந்திய அரசு இதுவிடயத்தில் சில ஆரோக்கியமான நடவடிக்கைகளை எடுத்தது. ஆனால், வடக்கு மாகாண சபையோ அல்லது கொழும்பு அரசோ இதனைக் கண்டுகொண்டதாக இதுவரை எந்தவொரு பதிவும் இல்லை. குறிப்பாக இந்தச் சம்பவம் தமிழ் ஊடகங்களைத் தாண்டி, கொழும்பைத் தளமாகக் கொண்ட ஆங்கில, சிங்கள ஊடகங்களில் கூட எந்த அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை என்பது மிகக் கவலைக்குரியது.

இந்த அலட்சியமும் கவனயீனமும்தான் மீண்டும் மீண்டும் இத்தகைய சம்பவங்கள் நிகழ்வதற்கும் பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரிப்பதற்கும் காரணமாகின்றன.

இதுபோன்ற சம்பவங்களுக்கு கல்வியறிவின்மை, கலாசாரச் சீரழிவு, செல்லிடப்பேசி, மது என்று பல்வேறு விதமான காரணங்களைக் கூறிவரும் நிலையில், உண்மையிலேயே இதுபோன்ற பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்ன? சற்றே சிந்தித்துப் பார்த்தோமேயானால் ஓர் உண்மை நமக்குப் புலப்படும்.

அதாவது, நமது நாட்டில் சட்டமோ, தண்டனைகளோ கடுமையாக இல்லை என்பதுதான் அது. இதுபோன்ற பாலியல் வன்கொடுமையில் சிக்கும் நபர்கள் நமது நாட்டின் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி எவ்வித தண்டனையும் இன்றி வெளியில் வந்து விடுகின்றனர் அல்லது நீண்ட காலத்தின் பின்பே தண்டனையைப் பெறுகிறார்கள். இத்தகைய ஒரு வழக்கை விசாரித்து முடிப்பதற்கே குறைந்தது 7 முதல் 10 ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. அதன் பின்னரும் மேன்முறையீடு அதற்கு மேன்முறையீடு என்று குற்றவாளி பிணையிலேயே தனது இளமைக் காலம் முழுவதையும் முழு வரப்பிரசாதத்துடன் கழித்துவிடுகிறான். எல்லாமும் போய் தண்டனை உறுதிப்படுத்தப்படும்போது அவனுக்கு சிறையில் இருந்தால் என்ன வெளியில் இருந்தால் என்ன என்கிற நிலைமை வந்து விடுகிறது. பிறகு எப்படி ஏனையவர்கள் குற்றம் செய்வதற்கு அஞ்சும் நிலைமை ஏற்படும்?

அரபு நாடுகளில் [illegible] தண்டனையாக கையை [illegible] தவறுகளுக்குத் தலையை வெட்டுகிறார்கள். அதனைக் காட்டுமிராண்டித்தனம் என்று நாம் சொன்னாலும் ஒப்பீட்டளவில் எமது நாடுகளைவிட அரபு நாடுகளில் இது போன்ற சம்பவங்கள் குறைவுதான். தண்டனையின் மீது இருக்கும் பயம்தான் அதற்குக் காரணம். ஏன் அவ்வளவு தூரம்! தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தவரைக்கும் அவர்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் எல்லாம் இதுபோன்ற சம்பவங்கள் மிகமிகக் குறைவாகவே இருந்தன. குற்றவாளிகள் தப்பிக்க முடியாது என்பதும் தண்டனை கடுமையாக இருக்கும் என்பதும் ஏற்படுத்திய பயம்தான் அதற்குக் காரணம். ஆனால் இன்று அந்தப் பயம் இல்லாமல் போய்விட்டதனால் எல்லோரும் குற்றங்களும் பெருகிவிட்டன. காசைக் கொடுத்தால் பொலிஸாரைச் சரிக்கட்டி விடலாம், நல்ல சட்டத்தரணியாக வைத்துக் கொண்டால் எந்த வழக்கையும் உடைத்தெறிந்துவிடலாம் என்ற எண்ணம் குற்றவாளிகளை கொண்டாட்டம்போட வைத்துள்ளது.

> இந்தியாவின் வட மாநிலம் ஒன்றில் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த நபர்களை, அந்தக் கிராம மக்களே பிடித்து கட்டிவைத்து நையப்புடைத்ததுபோல், சட்டத்தை மக்களே தங்களது கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில், ஏதேனும் ஒன்று நிகழ்ந்தால் மட்டுமே பெண்கள் நின்மதியாக தனித்து நடமாடக்கூடிய காலம் வரும்.

கழுத்து முழுவதும் நகைகளுடன், நடுநிசி வேளையில் தனியாக, தைரியமாக எப்போது ஒரு பெண் நடந்து செல்கிறாளோ அப்போதுதான் இந்தியாவுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்ததாக பொருள் என்றார் மகாத்மா காந்தி. அது இலங்கைக்கும் ஈழத்துக்கும்கூடப் பொருந்தும். அப்படி ஒரு காலம் இருந்ததாக நாம் மார்தட்டித் திரிந்ததுண்டு. ஆனால், இன்றோ நிலைமை தலைகீழாகி விட்டது. நகையே அணியாமல் கணவர் துணையுடன் செல்லும்போதுகூட பெண்களால் தைரியமாக நடமாட முடியாது என்ற நிலையே வந்திருக்கிறது.

வீதியில் ஒரு பெண் பிள்ளையால் நிம்மதியாகப் போய் வர முடியவில்லை. ஆள்நடமாட்டம் குறைந்த வீதியையோ பாதையையோ பயன்படுத்துவதை நினைத்தும் பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு பெண்ணும் தன்மானத்தையும் உடலையும் காக்க மிகப் பெரும் போராட்டத்தை நாளாந்தம் நடத்த வேண்டியிருக்கிறது.

இவற்றை எல்லாம் கட்டுக்குள் கொண்டு வந்து நமது நாட்டில் நிகழ்ந்து வரும் பாலியல் வன்கொடுமைகளைத் தடுக்க இரண்டே வழிகள்தான் உள்ளன. ஒன்று, பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபடுவோர் மீதான நடவடிக்கைகள், அரபு நாடுகளில் எடுக்கப்படுவதைப்போல் கடுமையாக்கப்படவேண்டும். அல்லது இந்தியாவின் வட மாநிலம் ஒன்றில் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த நபர்களை, அந்தக் கிராம மக்களே பிடித்து கட்டிவைத்து நையப்புடைத்ததுபோல், சட்டத்தை மக்களே தங்களது கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதில், ஏதேனும் ஒன்று நிகழ்ந்தால் மட்டுமே பெண்கள் நின்மதியாக தனித்து நடமாடக்கூடிய காலம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேபாளத்தில் நடந்த மற்றொரு துயரம்!

றெ.பி. மரிய டினேசன்



அருகில் நீங்கள் காணும் புகைப்படம், மிகச்சாதாரணமான ஒன்று அல்ல. உலகப் பிரபல்யம் வாய்ந்த இந்த புகைப்பட்டத்திற்கு பின்னால் உள்ள சோகம் அதைவிட மோசமானது.

குற்றுயிராக இருக்கும் சிறுமி இறந்தபின் அவளை உண்பதற்காக கழுகு ஒன்று காத்திருப்பதை சித்தரிப்பது போன்ற இப்புகைப்படம், 1993இல் தென் சூடானில் எடுக்கப்பட்டு பின்னர் அவ்வாண்டு பங்குனி 26இல் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் வெளியானது.

1994இல் உலகின் மிக உயர்ந்த புலிட்சர் விருதை பெற்றுக் கொடுத்த இந்தப் புகைப்படத்தை படம்பிடித்த பத்திரிகையாளர் கெவின் கார்ட்டர், மூன்று மாதங்களின் பின்னர் தற்கொலை செய்து கொண்டு உயிர் துறந்தார். அவருடைய தற்கொலைக்குப் பின்னால் இருந்த காரணம், அவருக்கு புகழீட்டிக்கொடுத்த புகைப்படத்தின் மீது எழுந்த விமர்சனங்களால் ஏற்பட்ட மன அழுத்தமே.

தென்சூடானில் தன் பெற்றோர்கள் ஏற்கெனவே உணவு வழங்கும் நிலையத்திற்குச் சென்றுவிட்ட நிலையில் அவ்விடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சிறுமியை வேட்டையாட காத்திருந்த கழுகினை தமது புகைப்படக் கருவியில் படம்பிடிக்க நேரம் செலவழித்த கார்ட்டர். அந்தச் சிறுமியைக் கழுகிடமிருந்து காப்பாற்றினாரா என்பதே அந்த விமர்சனமாக இருந்தது. கார்ட்டர் மனிதாபிமானம் அற்றவர் எனவும் அந்தக் கழுகைப்போலவே இவரும் நடந்து கொண்டார் எனவும் விமர்சிக்கப்பட்டது.

கிட்டத்தட்ட இந்த சந்தர்ப்பத்தை ஒத்த நிலவரத்தை அண்மையில் பூகம்பத்தை எதிர்கொண்ட நேபாளத்தில் இந்திய ஊடகங்களும் எதிர்கொண்டன. கடந்த சித்திரை 25 அன்று இடம்பெற்ற புவி அதிர்வைத் தொடர்ந்து நேபாளம் பேரிழப்பைச் சந்தித்தது. உலகின் பல பகுதிகளிலும் இருந்தும் உடனடியாக நேபாளத்தை நோக்கி உதவிகள் வந்து குவிந்தன. உதவிகள் மாத்திரமல்லாமல் சுடச்சுடச் செய்திகளை சேகரிக்கவென ஊடக நிறுவனங்களும் ஊடகவியலாளர்களும் கூட நேபாளத்தில் ஒன்று கூடினர்.

ஆனால் இந்திய ஊடகங்கள் நேபாளத்தில் நடந்து கொண்ட விதம் நேபாளிகளை நோகடிப்பதாக – பனையிலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்த கதையை ஒத்ததாக – இருந்தது. இடரை எதிர்கொண்ட நேபாளம் மீட்புப் பணிகளிலும் இடரிலிருந்து காப்பாற்றப்பட்டோரை முதலுதவி அளித்து ஆற்றுப்படுத்துவதிலும் கவனம் செலுத்த, வந்து குவிந்த இந்திய ஊடகங்கள், ஊடக தர்மங்களை மீறி, செய்தி திரட்டுவதை மட்டுமே நோக்காக கொண்டு செயற்பட்டமுறை நேபாளிகளை முகம் சுழிக்க வைத்திருந்தது.

டுவிற்றர் சமூக வலைத்தளத்தில் "திரும்பிப்போ இந்திய ஊடகமே!" (#GoHomeIndianMedia) என்னும் ஹாஷ்ரெக்குடன் பதிவிடப்பட்ட பரப்புரை வலுப்பெற்றிருந்தது. இந்திய ஊடகங்களை நேபாளத்தை விட்டு வெளியேறக்கோரும் வகையில் இந்த பரப்புரை முன்னெடுக்கப்பட்டது. சுமார் 128,000 ருவிற்றர்கள் இது தொடர்பில் 3ஆம் திகதியில் மாத்திரம் வெளியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்தில் நிகழ்ந்த பேரழிவின் உடனடி மீட்புப் பணிகளில் இந்தியா முன்னணிப் பாத்திரம் வகித்திருந்தது. சுமார் 700 பேர் வரையிலான பாதுகாப்புத் தரப்பினர் இந்த நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும் இந்திய ஊடகங்கள் காண்பித்த அணுகுமுறை நேபாள உள்ளூர் மக்களை அதிருப்தி அடையச் செய்திருந்தது. தொலைக்காட்சி தொடருக்காக படப்பிடிப்பு நிகழ்த்துவது போல மக்களின் அவலங்கள் பதியப்பட்டதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

"உங்கள் ஊடகவியலாளர்கள் நிவாரணம் சென்றடையாத பிரதேசங்களுக்குள்கூட முந்திக்கொண்டு நுழைபவர்கள் எனில், அவ்வாறு வரும்போது ஒரு முதலுதவிப் பையையோ உணவுப்பொதியையோ தம்முடன் எடுத்து வந்திருக்க முடியாதா?" என்கிறார் சுனீற்றா ஷாக்கியா என்கிற நேபாளி தமது சமூக வலைத் தளத்தில்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் நடந்து கொள்ளாமல் அவர்களிடம் "இப்போது எப்படி உணர்கிறீரகள்? உங்களுக்கு அரசு என்ன செய்யப்போகிறது" என்றும், முதலுதவிப் பணியாளர்களிடம் "என்ன தொழில் நுட்பத்தை பயன்படுத்துகிறீர்கள்" போன்ற புதினம் பிடுங்கும் நோக்கிலான கேள்விகள் தொடுக்கப்பட்டதாகவும் முறையிடுகின்றனர்.

இந்தியா வழங்கிய உதவிகளைப் பெரிதுபடுத்தும் வகையில் தான் இந்திய ஊடகங்களின் கண்காணிப்பு இருந்ததாகவும் நேபாளத்தில் வாழ்ந்த இந்தியர்களின் நிலையே முக்கியத்துவப்படுத்தப்பட்டதாகவும்கூடக் குற்றம்சாட்டப்படுகிறது.

சுதந்திர ஊடகத்திற்கான கோரிக்கை உலகளாவிய ரீதியில் வலுப்பெற்று வரும் நிலையில் இந்திய ஊடகங்கள் எதிர்கொண்ட இந்த விவகாரம் உலகம் முழுவதும் உள்ள ஊடகங்களின் கவனத்திற்குமுரியது.

## கொஞ்சம் நேரமிருக்கா...?

நான் வாழும் போதே
அநாதையானேன்....
இரவுபகல் வருகின்றது
ஆனால் – நீ
வரவேயில்லை.....
உன்னால்
எத்தனை கோடைகளில்
வெந்தேன்....
எத்தனை துன்பங்களில்
துவண்டேன்...?
வலிகள்
கண்ட போதும்
ஈரம் வற்றாத என்னிதயம்
இருநூறு விழிகளால்
ஏங்குகின்றது
உன் வரவு பார்த்து!
இதழ்களால்
புன்னகைக்கின்றேன்
இதயப் புண்களை
மறைத்து....
அன்பே.....
உறவு சொல்லிப் பேச
எனக்கு – நெஞ்சில்
ஆசையிருக்கு...
அருகே வந்து கேட்க
கொஞ்சம்
நேரமிருக்கா....?

*எஸ்.தர்சி, சுண்டுக்குளி*



PRESS-ING HARD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான சமவுரிமை



ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோஷமிடுகின்றனர். தங்களின் இயல்பை மறந்து தாங்களும் ஆண்களைப்போல் அனைத்து விவகாரங்களிலும் ஈடுபட வேண்டும், அது தமது உரிமை என வாதிடுகின்றனர். அந்தஉரிமையைப் பெற்றுக் கொள்வதற்காக அமைப்புகளையும் உருவாக்குகிறார்கள். பெண்கள் சமூகத்தில் சம அந்தஸ்து உள்ளவர்கள் சரி பாதி. அவள் வீட்டில் முடங்கிக் கிடப்பது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும்.

குடும்ப நலனானது பெண் தொழில் செய்வதை வேண்டி நிற்கின்றது. பெண்கள் தொழில் செய்யாதபோது குடும்ப நலன் பாதிக்கப்படுகிறது. குடும்பத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதனால் பல விபரீதங்கள் ஏற்படுகின்றன. குடும்பத்தின் வாழ்வாதாரம், கல்வி நிலை, போஷாக்கு மட்டுமன்றி குடும்பத்தின் இன்னும் பல விடயங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே குடும்ப நலனானது பெண் தொழில் செய்வதை வலியுறுத்துகின்றது.

பெண் வீட்டிலே முடங்கிக் கிடக்கின்ற போது அவளுடைய ஆளுமைவிருத்தி முழுமை பெறுவதில்லை. அவள் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றால் தான் அனுபவம் பெறுவாள் திறன்கள் வளரும். இவற்றிற்கூடாக ஆளுமை பெற்றவளாக அவள் மாறுவாள். எனவே, பெண்கள் தொழில் புரிவதன் மூலம் அவர்களது நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவர்களின் ஆளுமை விருத்தியடைகின்றன.

தொழில் பெண்ணுக்கு ஓர் ஆயுதத்தைப் போன்றது அவளது கையிலிருக்கும் பாதுகாப்புக் கவசம். ஒரு பெண் வளர்ந்து வருகின்றபோது தந்தையை இழக்கலாம் திருமண பந்தத்தில் இணைந்ததன் பின்னர் திடீரென்று கணவன் விவாகரத்துப் பெறலாம் அல்லது கணவனை இழக்கலாம். இப்படியான நிலையில் அவளுக்கு மிகப் பெரும் பாதுகாப்பு அரணாக, ஆயுதமாக அவளது தொழில், உழைப்பு விளங்குகின்றது. எனவே, பெண் தொழில் செய்வது அவசியமாகும். அது அவளது உரிமையும் கூட. அதனை யாரும் மீறக் கூடாது. சமத்துவம், சம வாய்ப்பு, சம அந்தஸ்து, ஆண்–பெண் வேறு பாடில்லாமல் இருசாராரும் சம வாய்ப்புகளைப் பெற வேண்டும் என்ற கருத்து அங்கு பல தசாப்தங்களாக வலியுறுத்தப்பட்டதன் விளைவாக ஆண்–பெண் என்ற பாகுபாடு மறக்கப்பட்டு அல்லது மறக்கடிக்கப்பட்டு மற்றொரு பால் அதாவது ஆணுமில்லாத பெண்ணுமில்லாத ஓர் இனம் மேற்குலகில் உருவாக்கப்பட்டுள்ளது. எந்தளவுக்கு எனில், தோற்றத்தில்கூட ஆண், பெண் என்று தெரியாத நிலை! இத்தகைய சம வாய்ப்பை அல்லது சம அந்தஸ்தை எதிர்பார்த்த பெண்கள் ஆண்களுக்கு சமமாக இன்று விரும்பியோ விரும்பாமலோ தொழிலுக்குப் போயாக வேண்டும். அவர்கள் உழைத்தேயாக வேண்டிய கட்டாய நிலை தோன்றியுள்ளது. மிகவும் இயல்பாக மேற்கில் இந்நிலை இன்று உருவாகியிருக்கிறது.

பெண்கள் நாட்டின் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுக்குப் பங்களிக்கச் சென்றதன் மோசமான விளைவுகளை இன்று உலகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறது. பொதுவாக, பெண்கள் தொழில் புரிவதில் சமூக நலன் இருப்பதாக சொல்லப்படுகின்றது. உண்மை என்னவென்றால், பெண்கள் தங்களது வீட்டிலே தங்களுடைய பணியை செவ்வனே நிறைவேற்றுவதில்தான் ஆரோக்கியமான ஒரு சமூகம் உருவாகுவது தங்கியிருக்கிறது. ஆண்கள் ஆண்களுக்குரிய பணிகளை நிறைவேற்றுவது போல பெண்கள் பெண்களுக்குரிய பணிகளை குறிப்பாகத், தங்களது ராஜ்ஜியமான வீட்டுப் பணிகளை செவ்வனே நிறைவேற்றுகின்ற போதுதான் எல்லோரும் எதிர்பார்க்கும் நிறைவான வாழ்க்கை, சந்தோஷமான, ஆரோக்கியமான குடும்ப வாழ்வு, அமைதியான சமூக வாழ்க்கை உருவாகும் என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

தாய்மை, குழந்தை வளர்ப்பு, வீட்டு நிர்வாகம் என்ற இந்த அம்சங்கள்தான் பெண்ணுக்குரிய, இறைவன் கொடுத்துள்ள இயல்பான சிறப்புத் திறமைகள். விதிகள் இருப்பது போலவே விதிவிலக்கு இருப்பதும் ஒரு விதி. ஆனால், பெரும்பாலானோரை மையமாகக் கொண்டே தீர்ப்புக்கள் அமையும். இதேபோல் ஒருசில ஆண்கள் சமையலறையில் வேலை செய்வதையே விரும்புகின்றனர். இதனை வைத்து அவருக்கு சமையலறையில் வேலை செய்ய இயலுமென்றால் ஏன் இவருக்கு அவ்வாறு செயற்பட முடியாது என்று ஏனைய ஆண்களிடம் கேட்க முடியாது. ஆண்மைக் குணமுடைய சில பெண்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்களைப் போன்று செயற்படுவார்கள். அதேபோல் சில ஆண்களிடம் பெண்மைக் குணம் ஏற்படுவதை அவதானிக்கிறோம். இதனை விதியாக மாற்றி பெண்களாலும் ஆண்களுக்குச் சமமாக தொழில் செய்ய முடியும் எனக் கருதுவது தவறு.

பெண்ணைப் பராமரிக்கும் முழுப் பொறுப்பும் சமூகத்தைச் சார்ந்தது. குறிப்பாக, சமூகத்திலுள்ள ஆண்களைச் சார்ந்தது. பெண்ணைக் கவனிக்கச் சட்ட ரீதியாக கடப்பாடுள்ளவர்கள் ஆண்கள். அதில் முதலாமவர் தந்தை. குழந்தையாக இருக்கும்போது ஒரு பெண்ணை கவனிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தந்தையையே சாரும். திருமணத்திற்குப் பிறகு பெண்ணை கணவன் கவனிக்க வேண்டும். ஏனெனில் பெண்ணின் முழு வேலையுமே வீட்டை நிர்வகிப்பதுதான். அவளைக் கவனிப்பது கணவனின் கடமை. அடுத்தது தாய் என்ற ரீதியில் அவளது பிள்ளைகள் கவனிக்க வேண்டும். பிறகு சகோதரர்கள், உறவினர்கள் அவளைக் கவனிக்க வேண்டும். ஒரு பெண்ணை நிர்க்கதியாக சமூகத்தில் விட முடியாது. அவள் எப்போதும் கடைசி வரைக்கும் அதிதி ஆகத்தான் இருப்பாள்.

தாய்மை, குழந்தை வளர்ப்பு, வீட்டு நிர்வாகம் என்ற இந்த அம்சங்கள்தான் பெண்ணுக் குரிய, இறைவன் கொடுத்துள்ள இயல்பான சிறப்புத் திறமைகள். விதிகள் இருப்பது போலவே விதிவிலக்கு இருப்பதும் ஒரு விதி. ஆனால், பெரும்பாலானோரை மையமாகக் கொண்டே தீர்ப்புக்கள் அமையும். இதேபோல் ஒருசில ஆண்கள் சமையலறையில் வேலை செய்வதையே விரும்புகின்றனர்.

# துணிவுள்ள பெண்கள் வேண்டும்

பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் பெண்கள் தற்போது அதிகரித்து வருகின்றனர். பெண்கள் நவநாகரீக மங்கைகளாக உலா வருகின்றனரே தவிர பெரும்பாலான பெண்களுக்கு தைரியம் இல்லாத காரணத்தால் ஆண்களால் துன்புறுத்தப்படுகின்றனர். இப்போது சிறு குழந்தைகளைக்கூட பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படும் அவலங்கள் அதிகம் நடந்தேறி வருகிறது. பெருகிவிட்ட இணைய வளர்ச்சி அதில் வரும் ஆபாச படங்கள், ஆபாசப்படங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது போன்ற காரணங்களால் மனிதன் வக்கிர மனதுடன் பெண்களுக்கெதிராகவும் பெண் குழந்தைகளுக்கெதிராகவும் பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுகின்றனர்.

இது போன்ற செயல்களில் இருந்து தன்னை தற்காத்து கொள்ள பெண்கள் தைரியத்தோடும், வீரத்தோடும் இருக்க வேண்டியது அவசியம். பெற்றோர்கள் பெண் குழந்தைகளை சிறுவயதில் இருந்தே தைரியம் ஊட்டி வளர்க்க வேண்டும்.

தற்போது உள்ள பெண்கள் பாலியல் ரீதியிலான பிரச்சினைகள் உட்பட பெண்களுக்கெதிரான பிரச்சினைகள் அனைத்திலும் துணிவுடன் இறங்கி போராட வேண்டும். துணிவுள்ள பெண்களை உதாரணமாகக் கொண்டு வீரத்துடனும் தீரத்துடனும் மன உறுதியுடனும் போராட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூங்கும் முன் மகளின் கேள்விகளோடு.....

ஏன் அப்பா கொசு ராத்திரில
மட்டும் நிறைய கடிக்கவருது.
அது எப்ப அப்பா தூங்கும்?
அது தூக்கம் வரும்போது
தூங்கும்...

எப்ப தூக்கம் வரும்பா?
அது சாப்பிட்டவுடன்
தூங்கும்...

கொசுக்கு வீடு எங்கப்பா?
அதுக்கு வீடே இல்லை...

ஏம்பா வீடே இல்லை?
அது ரொம்ப சின்னதா
இருக்கே... அதான் வீடு
இல்ல...

நான் ரொம்ப சின்ன
பிள்ளைதானே ...
எனக்கு வீடு
இருக்கே.....
இது அப்பா உனக்கு
கட்டி தந்தது...

அப்போ கொசுவுக்கு
அப்பா அம்மா
இல்லையா அப்பா.
அந்த அப்பா அம்மா
கொசுவும் ரொம்ப
சின்னதா இருக்குமா
அதான் அதுக்கு வீடு
இல்ல...

கொசுவுக்கு கொசுன்னு
யாருப்பா பேர்
வைச்சது?
கடவுள்...

கடவுளைக் கொசு
கடிக்குமா அப்பா ?
கடிக்காது...

ஏம்பா கடிக்காது?
கடிச்சா கடவுள்
தண்டிச்சிடுவார்...

அப்போ கடவுளுக்கு கோவம்
வருமா அப்பா ?
வரும். தப்பு செய்தா கடவுள்
அடிப்பாரு...

கடவுள் நல்லவராப்பா?
ரொம்ப நல்லவர்....

அப்புறம் ஏம்பா கொசுவை
அடிக்கிறாரு?
அது அப்படித்தான் நீ தூங்கு...

கொசு ஏம்பா நம்மளைக்
கடிக்குது?
அதுக்கு பசிக்குது...

கொசு இட்லி சாப்பிடுமா?
அதெல்லாம் பிடிக்காது...

கொசு கூல்ட்ரிங்க்ஸ்
குடிக்குமா?
வாயை மூடிட்டு தூங்குடா
செல்லம்...

ஒரே ஒரு கேள்வி அப்பா ?
கேட்டுத் தொலை

கொசுவுக்கு எத்தனை பல்
இருக்கும்?
அதுக்கு பல்லே இல்லை...

பிறகு எப்படி கடிக்கும்?
அய்யோ ஏண்டா உசுர வாங்குற?
இப்ப நீ வாய மூடாட்டி பேய்கிட்ட
புடிச்சுக் கொடுத்திடுவேன்...

பேயைக் கொசு கடிக்குமா
அப்பா?
இப்ப நீ வாயை மூடிட்டு தூங்க
போறியா இல்லையா??

நாம தூங்கும் போது வாயும்
தூங்குமா அப்பா..?



MUMMY



அம்மா

# தத்துவம்

## மச்சி தத்துவம்



என்னதான் புயலுக்கு பெயர்
வச்சாலும், அதுக்குக்
காதுகுத்தி
மொட்டையெல்லாம்
போட முயாது!

மொட்டைத் தலைக்கும்
முழங்காலுக்கும் முடிச்சு
போடுவோர் சங்கம்

---

என்னதான் ஒருத்தர் அதிகமா
டீ குடிச்சாலும், அவரை
'டீவிரவாதி'ன்னு சொல்ல
முடியாது.

லைட்டாக யோசிக்காமல்
ஸ்டிராங்காக யோசிப்போர்
சங்கம்

---

# வலைப் பக்கம்

யார்டா இங்க பன்னீர் செல்வத்துக்கு
விடுதலைன்னு கத்துனது



யாரிடம் பொய் சொல்ல தயங்குகி றோமோ..அவரது உண்மையில் வசீக ரிக்கப்பட்டிருக்கிறோம் என்றறிக.

Hasina

பெரும் தண்டனையிலிருந்து தப்பி வந்த வர்களின் மனநிலை பெரும்பாலும் பழி வாங்கும் எண்ணத்தையே அதிகமாக பிரதி பலிக்கும்..

உன் தவறுகளிலிருந்து நீ எதையும் கற் றுக்கொள்ளாவிட்டால் நீ தவறு செய் ததற்கு அர்த்தமே இல்லாமல் போகிறது

வேறென்ன கேட்டுவிடப் போகிறேன் இந்த வாழ்க்கையிடம் சாகும்போது நினைத்து புன்முறுவல் பூக்க ஒரு காதல் இருந்தால் போதும்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது தானே திருமண நாளுக்கு வாழ்த்து சொல்வது!

சொன்னால்.. என்ன நினைப்பார்களோ? என்ற கேள்வி கொன்றுவிட்ட கருத்துக்கள் உண்டு எல்லாரிடமும்.

காசு உள்ளவன் ஊர் ஊரா சுத்துறான் காசு இல்லாதவன் தெருத் தெருவா சுத்துறான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுத்தில் வரும் சுருக்கத்தை நீக்க எளிய வழிகள்



பெண்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரை உள்ள அனைத்து உறுப்புகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை கழுத்துக்கு மட்டும் கொடுப்பதில்லை. சில பெண்களுக்கு முகம் 20 வயது போல் தோற்றமளித்தால், கழுத்து 35 வயது போல் காட்சியளிக்கும். நிறைய ஆபரணங்களைப் போட்டு கழுத்து கறுத்து போயிருக்கும். இல்லாவிட்டால் வியர்வையால் சுருங்கி காட்சியளிக்கும். முகத்தின் பளபளப்புக்காக பிளிச்சிங், பேஷியல் என்று செய்துகொள்பவர்கள் கழுத்தை மட்டும் கண்டுகொள்ளாமலே விட்டு விடக்கூடாது. கழுத்து பகுதியில் எண்ணெய் சுரப்பிகள் மிகவும் குறைவாக இருப்பதால், இப்பகுதி சட்டென்று தளர்ந்து போய்விடும். இதனால் தான் முகம் இளவயது போல் தோற்றமளித்தாலும், கழுத்து முதுமையைக் காட்டுகிறது. கழுத்துக்கு என்றே வகைவகையான ஸ்பெஷல் பிளீச்ங் இருக்கிறது. சிலரின் கழுத்து வறண்டு போயிருக்கும். அதற்கு முதலில் தயிரை கழுத்தில் தடவி, மென்மையாக மசாஜ் செய்யவேண்டும். பின்னர், மிதமான சுடுதண்ணீரால் சற்று அழுத்தித் தேய்த்துக் கழுவினால், கழுத்தில் இருக்கும் இறந்த செல்கள் நீங்கிவிடும். வெயில் தொடர்ந்து கழுத்தில் விழுந்தால் கழுத்துப்பகுதி கறுத்துவிடும்.

தலைமுடியில் இருக்கும் எண்ணெய்பசைகூட கழுத்தில்பட்டு கறுத்து விடும். இதற்கு வெள்ளரிச்சாறு சிறந்த நிவாரணம். வெள்ளரிச்சாறை கழுத்தில் அடிக்கடி தேய்த்து வந்தால் வறண்டு போன கழுத்து ஈரப்பதத்துடன் ஜொலிக்கும். கழுத்தில் சுருக்கம் ஏற்பட்டு வயதானவர்போல் காட்சியளிப்பவர்கள் குளிப்பதற்கு முன்னால், எலுமிச்சை சாறில் கஸ்தூரி மஞ்சளை அரைத்துக் குழைத்துக் கழுத்தில் நன்றாக பூசி, பத்து நிமிடம் ஊற விட வேண்டும்.

பின்பு மிதமான சுடுநீரில் கழுத்தைக்கழுவி சுத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் கழுத்துச் சுருக்கம் காணாமல் போகும். கழுத்து மென்மையாகவும், ஈரப்பதத்துடனும் பளபளப்பாகத் தோன்றும். சில பெண்களுக்கு கழுத்தில் வரிவரியாக காணப்படும். இவர்கள், முட்டையின் வெள்ளைக் கருவுடன், இரண்டு சொட்டு கிளிசரின், ஒரு சொட்டு பன்னீர் சேர்த்து கழுத்தில் பூச வேண்டும். இருபது நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இப்படித் தொடர்ந்து செய்து வந்தால் கழுத்திலுள்ள வரிகள் மறைந்து, சங்கு கழுத்து போல் காட்சிதரும். சிலர் நல்ல நிறமாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் கழுத்து மட்டும் நிறம் கம்மியாகி கருத்துப்போயிருக்கும். கழுத்து நிறைய செயின் போடுவதால் கழுத்தில் முடிச்சு முடிச்சாக காணப்படும். இவர்கள் அரிசி மாவில் ஒரு டீஸ் பூன் தேன், 2 தேக்கரண்டி தயிர் சேர்த்து தொடர்ந்து கழுத்தில் தேய்த்து வரவேண்டும்.

# பீட்ரூட் புலாவ்



குழந்தைகளுக்கு பீட்ரூட் கொடுப்பது மிகவும் நல்லது. ஆனால் உங்கள் குழந்தை பீட்ரூட் சாப்பிட மறுத்தால், அவர்களுக்கு பீட்ரூட் புலாவ் செய்து கொடுங்கள். எப்படி செய்வதென்று பார்ப்போமா!

**தேவையான பொருள்கள்**

பாசுமதி அரிசி - ஒரு கப் பீட்ரூட் - 3/4 கப் (பொடியாக நறுக்கியது) பச்சை பட்டாணி - 1/4 கப் இஞ்சி, பூண்டு பேஸ்ட் - ஒரு தேக்கரண்டி பெரிய வெங்காயம் - ஒன்று (பொடியாக நறுக்கியது) கரம் மசாலா - 1/2 தேக்கரண்டி, மஞ்சள் தூள் - 1 சிட்டிகை, தண்ணீர் - 1 1/2 கப் கொத்தமல்லி - சிறிது, உப்பு - தேவையான அளவு, தாளிப்பதற்கு... எண்ணெய் - 2 தேக்கரண்டி, நெய்- 1/2 மேசைக் கரண்டி, பட்டை - 1/2 இன்ச், கிராம்பு - 2, ஏலக்காய் - 1 அரைப்பதற்கு... சின்ன வெங்காயம் - 3 ,பச்சை மிளகாய் - 1

**செய்முறை**

முதலில் மிக்ஸியில் வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயைப் போட்டு அரைத்து பேஸ்ட் செய்து கொள்ள வேண்டும். அரிசியை கழுவி, நீரில் 30 நிமிடம் ஊற வைத்து, நீரை வடிகட்டி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும். பின்னர் சட்டியை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் மற்றும் நெய் ஊற்றி காய்ந்ததும், தாளிப்பதற்கு கொடுத்துள்ள பொருள்களைச் சேர்த்து தாளித்து, இஞ்சி பூண்டு பேஸ்ட் மற்றும் வெங்காய பேஸ்ட் சேர்த்து தீயை குறைத்து பச்சை வாசனை போக 3 நிமிடம் வதக்க வேண்டும்.

பின்பு அதில் நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தைப் போட்டு, பொன்னிறமாக வதக்கி, கரம் மசாலா, மஞ்சள் தூள் சேர்த்து 5 நிமிடம் கிளறி விட வேண்டும். பிறகு அதில் பீட்ரூட் மற்றும் பட்டாணி சேர்த்து குறைவான தீயிலேயே 2 நிமிடம் கிளறி, தேவையான அளவு உப்பு தூவி பிரட்டி வேக வைக்க வேண்டும்.

அடுத்து அதில் அரிசியைப் போட்டு நன்கு பிரட்டி, பின் தண்ணீரை ஊற்றி, குக்கரை மூடி 3-4 விசில் விட்டு இறக்கி, கொத்தமல்லியைத் தூவினால், பீட்ரூட் புலாவ் தயார்.

# கருப்பான சருமம் கொண்ட பெண்களுக்கான டிப்ஸ்

கறுத்த சருமம் கொண்ட எல்லா பெண்களுக்கும் உள்ளூர ஒருவித தாழ்வு மனப்பான்மை கட்டாயம் இருக்கும். அவர்கள் பேரழகியாகவே இருந்தால் கூட அது இரண்டாம் பட்சம்தான். கறுப்பான பெண்கள் நிறமாக மாற, அப்படிக் காட்டிக் கொள்ள என்னவெல்லாம் அழகு சிகிச்சைகள் உள்ளன....? பியூட்டி பாலர் போகாமல் வீட்டிலேயே இவர்கள் செய்து கொள்ளக்கூடிய சிகிச்சைகள் என்னென்ன?

**பழ பேஷியல்**

முகத்தை முதலில் காய்ச்சாத பாலால் துடைக்கவும். சிறிதளவு வெள்ளரிச்சாறு அல்லது ஸ்ட்ரோபெர்ரி சாறு எடுத்து சில நிமிடங்கள்குளிர்சாதனப்பெட்டியில் வைத்து, அதில் பஞ்சை நனைத்து முகத்தில் ஒற்றியெடுக்கவும்.

நன்கு கனிந்த பப்பாளியை மசித்து எடுத்துக் கொள்ளவும். அதை வைத்து முகத்துக்கு மென்மையாக மசாஜ் கொடுக்கவும். மசாஜ் செய்கிறபோது கைகளை ஒரேஞ்சு சாற்றில் நனைத்துக் கொள்ளவும்.

சிறிதளவு பப்பாளிக் கூழ், இரண்டு துளிகள் தேன், சிறிதளவு பால் எல்லாம் சேர்த்து கடைசியாக முகத்துக்குப் பேக் போடவும்.

**காய்கறி பேஷியல்**

முதலில் கூறிய மாதிரி பச்சைப் பாலால் முகத்தைத் துடைக்கவும். முட்டைக் கோஸை பச்சையாக மசித்து வைத்துக் கொள்ளவும். இது தவிர அதில் சிறிதளவு சாறும் எடுத்து வைத்துக் கொள்ளவும். முட்டைக் கோஸ் மசித்ததைக் கொண்டு முகத்துக்கு மசாஜ் கொடுக்கவும். இடையிடையே முட்டைக்கோஸ் சாறை விரல்களில் தொட்டுக் கொள்ளவும். பதினைந்து நிமிடங்கள் கழித்து ஈரமான பஞ்சால் முகத்தைத் துடைத்து விட்டு, முட்டைக் கோஸ் விழுது, பால் மற்றும் தேன் கலந்த பேக் போடவும்.

மேற்சொன்ன இரண்டு பேஷியல்களையும் பதினைந்து நாள்கள் இடைவெளியில் செய்து கொள்ளலாம். பருக்கள் இல்லாதவர்கள் என்றால் பத்து நாள்களுக்கொரு முறையும் செய்து கொள்ளலாம்.

சிறிதளவு தேன், சிறிதளவு பாலேடு, சிறிது வெள்ளரிச்சாறு, சிறிதளவு கடலை மாவு எல்லாவற்றையும் நன்றாகக் குழைத்து முகத்தில் தடவி பதினைந்து நிமிடங்கள் அப்படியே விட்டு பிறகு கழுவலாம்.

குங்குமப் பூ சாப்பிட்டால் நிறம் கூடுமா என்பது பலரது சந்தேகம். அதை அப்படியே பாலில் கலந்து குடிப்பது பலன் தராது. சூடான பாலில் குங்குமப் பூவைப் போட்டு கால் மணி நேரம் அப்படியே ஊறவிட வேண்டும்.

அது வெதுவெதுப்பாக மாறி, மஞ்சள் நிறத்துக்கு வரும் போது குடிப்பது தான் பலன் தரும். ஆயுர்வேதக் கடைகளில் சுத்தமான குங்குமாதி தைலம் கிடைக்கும். அதை வாங்கி கொஞ்சம் பாலுடன் கலந்து வாரம் ஒரு முறை முகத்துக்கு மசாஜ் செய்து வந்தால் நிறம் நிச்சயம் கூடும்.

மசாஜுக்கு பிறகு அரைத்த சந்தனத்தில் பால் கலந்து பேக் போட வேண்டியது முக்கியம். வெயிலில் செல்கிறபோது எஸ்.பி.எஃப் 20 முதல் 30 வரை உள்ள சன் ஸ்கிரீன் உபயோகிப்பது, டூ வீலரில் செல்கிற போது கைகளுக்கு கிளவுஸ் அணிவது, நிறைய பச்சைக் காய்கறிகள், பழங்கள், இளநீர், பால், தயிர் சாப்பிடுவது போன்ற வையும் நிறத்தை மேம்படுத்த நினைப்பவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாகும்.



# கர்ப்பப்பை தசைகளை இறுக்குவதற்கான பயிற்சி



ஆண், பெண் என அனைவரும் எந்த வயதினரும் எளிதில் செய்யக்கூடிய ஒரு பயிற்சிதான் இந்த கெகல் பயிற்சி. நமது ஆசனவாய் மற்றும் மூத்திரதஸ்சை ஆகிய இரண்டையும் ஒருசேர சுருக்கி பின் தளர்த்துவதே இந்தப்பயிற்சி ஆகும். [illegible] மூத்திரதசை ஆகிய இரண்டையும் சுருக்கி 5 வினாடிக்கு பிறகு மூச்சை வெளிவிடும் போது தளர்த்திக் கொள்ளவும்.

**செய்முறை**

தரையில் தளர்வாக படுத்துக்கொண்டு கால்களை விரித்து வைத்துகொண்டு செய்யலாம். அமர்ந்த நிலையில் கால்களை நீட்டி கைகளை இடுப்பின் பக்கவாட்டில் ஊன்றிக்கொண்டு கால் பதங்களை எதிரெதிர் பக்கம் திருப்பி செய்யலாம். பத்மாசனம் நிலையில் அமர்ந்து செய்யலாம். தரையில் தளர்வாக் படுத்துக்கொண்டு கால்களை மடக்கி பாதம் தரையில் பட்டிருக்கும்படி வைத்துக்கொண்டு மூச்சை [illegible] கொண்டும் [illegible] இறக்கி பழைய நிலையிலும் வைத்து செய்யலாம். தரையில் கைகளை ஊன்றி கால் முட்டியும் தரையில் ஊன்றி இருப்பது போல் செய்யலாம். சுவர் அல்லது மேசை பிடித்துக்கொண்டு நின்ற நிலையில் கால்விரல்களை மட்டும் ஊன்றி மேலே எழும்பி [illegible] இவை அனைத்தும் எவ்வாறு என்று படத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். மேலும் சிறுநீர் கழிக்கும்போது அதனை நிறுத்தி பின் விட்டும் பின் நிறுத்தியும் பின் விட்டும் செய்யலாம்.

**பலன்கள்**

சிறுநீர் கசிதல் மற்றும் தொற்றுநோய்கள் தடுக்கப்படும். இது கர்ப்பப்பை தசைகளை இறுக்குவதற்கான பயிற்சி. இடுப் பெலும்பு–சுற்றுப்புற அங்கங்களுக்கு, பலம் தரும் அருமையான பயிற்சி இது! கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் ஆக மிகவும் உதவும். தினமும் இந்த பயிற்சியை செய்து வருபவருக்கு வயகரா போன்ற மருந்து தேவைப்படாது. அந்த அளவுக்கு உடல் வலிமை பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு வைகாசி



கறைபடிந்த கறுப்பு வைகாசி மாதம்
முள்ளிவாய்க்காலில் முடிந்த அவலம்
நந்திக்கடலோரம் நடந்த மனிதப் படுகொலை
வல்வளைப்பால் எரிந்த வன்னி மண்

சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் நடந்த
சங்காரம்
மனிதாபிமானப் போர் என்ற போர்வையில்
மஹிந்த அரசு செய்த மனிதப் படுகொலை
இரத்த வாடை வீசிய புத்த தர்மம்

எறிகணை வீச்சுகளால் எரிந்து
சாம்பலானவர்கள்
கொத்துக் குண்டுகளால் கொலை
செய்யப்பட்டவர்கள்
வான் குண்டு வீச்சுகளால் வகைதொகையின்றி
மாண்டோர்
பொஸ்பரஸ் குண்டுகளால் புகைந்து
மடிந்தவர்கள்

கை கால் இழந்தவர்கள், கருகி மாண்டவர்கள்
எடுத்துப் புதைப் பாரின்றி ஏதிலியாய்ச்
செத்தவர்கள்
பதுங்குகுழியில் புதையுண்டு பரலோகம்
போனவர்கள்
பாதுகாப்பு வலயத்துள்ளும் படுகொலை
செய்தார்கள்
மார்பில் குடித்த பால் மரணப் பாலாகவே
மாதாவுடன் சேர்ந்து மரணித்த குழந்தைகள்
தண்ணீர் கிடைக்காத உப்புக் கடலோரம்
தாகத்தால் நாவரண்டு செத்தவர்கள் எத்தனையோ?
சரணடையப் போனோரையும் சங்காரம் செய்தார்கள்
இறந்த எம் பெண்களையும் நிர்வாணமாக்கி இன்பம்
அனுபவித்த இனவாதப் பேய்கள்
லட்சத்துக்கு மேல் தமிழரைக் கொன்று
குவித்தார்கள்
கொத்துக் கொத்தாய் கொன்று குவித்த
கொலை வெறி வைகாசி

*காவலூர்க் கவிஞன்,*
*கந்த பேரின்பம்.*

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**17.05.2015 முதல்**
**23.05.2015 வரை**



## மேடம்

தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். பார்வைக் கோளாறு, பேச்சால் பிரச்னைகள் வரக்கூடும். திருமணம் கூடி வரும். சிலர் உங்களை ஏமாற்றுவதாக நினைத்துக் கொள்வீர்கள். சின்னச் சின்னப் பிரச்சினைகள் குடும்பத்தில் தலைத்தூக்கும். சிலர் உதவுவதைப் போல் உபத்திரவத்தில் சிக்க வைப்பார்கள். வேலையாள்கள், பங்கு தாரர்களுடன் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆலோசனையின்றி புது முயற்சிகளில் ஈடுபடாதீர்கள்.



## இடபம்

தள்ளிப் போன விடயங்கள் உடனே முடியும். பூர்வீக சொத்தை விற்று சில பிரச்சினைகளிலிருந்து வெளி வருவீர்கள். உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். அநாவசியச் செலவுகளை தவிர்க்கப் பாருங்கள். மற்றவர்களை நம்பி பெரிய முடிவு களோ, முதலீடுகளோ வேண்டாம். பெற்றோரிடம் எதையும் மறைக்க வேண்டாம். காதல் விவகாரத்தில் தள்ளி இருங்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.



## மிதுனம்

உங்களை பரபரப்பாகச் செயற்பட வைத்து பல விடயங்களையும் விரைந்து முடிக்க வைப்பார். தொலைநோக்குச் சிந்தனை அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் வீட்டு விசேஷங்களில் கலந்துக் கொள்வீர்கள். சர்ப்ப கிரகங்கள் சாதகமாக இல்லாததால் வீண் விரையம், இனந்தெரியாத கவலைகள் வந்துப் போகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரித்தாலும் அதிகாரிகளின் பாராட்டால் உற்சாகமடைவீர்கள்.



## கடகம்

நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். உற வினர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். குடும்பத்தில் அமைதி திரும்பும். உங்களைச் சரி யாகப் புரிந்துக் கொள்ளவில்லையென்று ஆதங்கப்படுவீர்கள். உங்களுடைய கடின உழைப்பை கட்சி மேல்மட்டம் பாராட்டும். உங்களுடைய புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் தொந்தர வுகள் வந்துப் போகும்.



## சிம்மம்

எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நீண்ட நாள்களாகச் சந்திக்க வேண்டுமென்று நினைத்த உறவினர், தோழியைச் சந்திப்பீர்கள். அடுக்கடுக் கான வேலைகளால் மனஇறுக்கம் அதிகரிக்கும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.

வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் சுட்டிக் காட்டினால் அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.



## கன்னி

எதிர்காலத்துக்கு உதவக் கூடிய ஒருவரைச் சந்திப்பீர்கள். பெரிய பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் விலகும். அந்தஸ்து கூடும். விலகிச் சென்ற உறவினர், நண்பர்கள் வலிய வந்து பேசு வார்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்து கொள்வீர்கள். உத்தி யோகத்தில் எதிர்த்த அதிகாரி இடம் மாறுவார்.



## துலாம்

இழுபறியான வேலைகள் உடனே முடியும். சகோதரிக்கு இருந்த பிரச்சனைகள் நீங்கும். யாருக்கும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலையை அவ்வப்போது சமாளிக்க வேண்டி வரும். வீண் அலைக்கழிப்புகள் அதிகரிக்கும். பெற்றோரின் ஆலோசனையின்றி எந்த முடிவுகளும் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் வேலைகளையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும்.



## விருச்சிகம்

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். மன உளைச்சல்களிலிருந்து மீள்வீர்கள். வாயுத் தொந்தரவால் நெஞ்சு எரிச்சல், அல்சர் வந்துப் போகும். உணவு விடயத்தில் கட்டுப்பாடு அவசியம். வேலைக்கு விண்ணப்பித்துக் காத்திருந்தவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். உத்தியோகத்தில் பிரச்சினை தந்த அதிகாரி வேறு இடத்துக்கு மாற்றப்படுவார்.



## தனுசு

உறவினர், நண்பர்களால் பிரச்சினைகள் வெடிக்கும். சிறுசிறு விபத்துகள், சளித் தொந்தரவு, தொண்டை புகைச்சல் வந்துப் போகும். மன உளைச்சல், வீண் பதற்றம் வந்து நீங்கும். எதிர்ப்புகள் அடங்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வேலைச்சுமை, ஒருவித படபடப்பு, தடுமாற்றம், வீண் பழி வந்துச் செல்லும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் மோதல்கள் வந்தாலும் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



## மகரம்

தன்னம்பிக்கை பிறக்கும். முன்கோபம் விலகும். உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நட்பு வட்டம் விரிவடையும். உத்தியோகத்தில் தேங்கிக் கிடந்த பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மேலதிகாரி மதிப்பார்.



## கும்பம்

மாறுபட்ட அணுகுமுறையால் சாதிப்பீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சந்தேகத்தால் நல்லவர்களை இழந்துவிடாதீர்கள்.
பூர்வீக சொத்தை அதிகம் செலவு செய்து சீர்த்திருத்தம் செய்வீர்கள்.
வேலைச்சுமை, திடீர்ப் பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரி களின் அந்தரங்க விடயங்களை வெளியில் சொல்ல வேண்டாம்.



## மீனம்

கம்பீரமாகப் பேசுவீர்கள். உறவினர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் புது அனுபவம் உண்டாகும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உங்களின் நீண்ட [illegible] காதல் இனிக்கும். அயல்நாடு தொடர்புடைய நிறுவனங்களுடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் ஆச்சரியப்படும்படி சவாலான காரியங் களைக் கூட சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

# அடகு வைக்கப்பட்டுள்ள அடையாளம்!

அடுத்த வீட்டில்
அல்லோல கல்லோலம்...?
தகர டப்பாக்கள்
தலையில் தெறித்து...
மரிக்கின்றன!

தாயும் மகளும்....
தாராளமாய்...
வசை பாடுகிறார்கள்.....
வந்த மோசம் ஏதென?
எட்டிப் பார்த்த போதோ!

குருதியாய் வழிகிறது....
கியூட்டெக்ஸ்!
குற்றுயிராய் குமுறுகிறது...
டப்பாவினுள்...
பெயார் அன் லவ்லி!
ரோசத்தால் தலை புதைக்கிறது
ரோஸ் பவுடர்!

நாகரிக சூழலில்
அன்னையும்
அகப்பட்டு விட்டாள்!
பாவம் எம் தேசம்!
அர்த்தமுள்ள அன்னையின்
அடையாளம் !வெறும்
அழகு சாதனங்களுக்குள்
அடகு வைக்கப்பட்டுள்ளது!?

*மடத்துக்கடவை த.மோகன்ராஜ்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துனுக்காய் சுஜன்

# கூடு

> "அம்மா! இனி நீங்கள் எனக்குச் சப்பாத்து வாங்கித் தரமாட்டியளென்ன? என்ர சப்பாத்தைப் பார்த்து பிள்ளையளெல்லாம் நக்கலடிக்குதுகள். முதலையாம். நாக்கை நீட்டு தாம். தங்களை விழங்கிப் போடு மாம். மரமும் முறிஞ்சிட்டுது. இனி எனக்குச் சப்பாத்து....?"

கறுத்த கனத்த மேகங்கள், குலை நடுங்கும் வாடைக்காற்று, அங்குமிங்குமாய் முறிந்து விழும் மரங்கள். இருளின் மாயைக்குள் மண்டியிட்டுக் கொண்டது ஊர். இத்தனைக்குமிடையில் வானைக் கீறிக் கிழித்து பளிச்சிடும் மின்னல். அந்தக் கீற்றுக்கு பின்னால் அணுகுண்டாய்ச் சிதறும் இடி முழக்கம். கிராமமே சூனியப் பகுதியாயிருந் தது.

இவை யாவற்றையும் ஒன்று திரட்டிப் பொழி யும் கன மழை. இருளைக் கிழித்தவாறு எங் கோவொரு மெல்லிய மஞ்சள் வெளிச்சம் சிணுங்கியது. கொலைக் காற்றுப் போல வாடைக்காற்று சுழன்றாடியது.

பற்கள் கிடுகிடுத்தன. உடல் குளிரால் உறைந்து போயிருந்தது. ஆனாலும் அந்த உருவம் குப்பி விளக்கின் முன்னால் குந்தியிருந்தது. கை யிலேயிருந்த புத்தகமும் சோர்ந்து போனது. தூக்கம் தூக்கி வாரிப்போட்டாலும், தூங்க மனமில்லை அந்த சிறுவனுக்கு.

விடிந்தால் பரீட்சை. காலின் கீழே சிறியதொரு பாத்திரத்தில் நீர். தூக்கம் வரும்போதெல்லாம் அதனுள் கால்கள் சென்றுவரும்.

தாய் செல்லம்மாவுக்கு சரியான காய்ச்சல். குச்சியால் செய்ததைப் போன்ற உடல். வெளித்தள்ளும் என்புகள். நொய்ந்துபோன தேகத்தில் இப்பொழுது காய்ச்சலும்... வியர் வையால் உடல் நனைந்திருந்தது. நேற்று ஒரு பனடோல் போட்டிருந்தாள். வேறு பனடோ லும் இருக்கவில்லை. குளிர் ஒரு புறம் காய்ச் சல் மறுபுறம். அவளது நிலை பார்க்கப் பரி தாபமாயிருந்தது.

"அம்மா...., அம்மா.... என்னம்மா செய் யுது....?" தாயருகில் சென்று பரிவோடு வினவு வான் சிறுவன். "எனக்கொண்டும் இல்லை மோனை...! நீ போய் படியடா ராசா...!" எல் லாவற்றையும் தனக்குள்ளே புதைத்து புன்ன கைப்பாள்.

குப்பி விளக்கைக் காற்று எங்கே விட்டு வைக் கப்போகிறது? தீப்பெட்டியிலும் குச்சுகள் தீர்ந்து போய்விட்டன. இறுதிக்குச்சை உரசிப் பற்றவைக்க முயல்கிறான். அதனையும் காற்று அணைத்து விடுகிறது.

★★★

பொழுது புலர்ந்தது. மழை ஓய்ந்து விட்டது. எழில் கொஞ்சும் அந்தக் கிராமம் காலையில் சுடுகாடாய் போயிருக்கும் என யாரும் எண்ணியிருக்கவில்லை. வடலிப்பனையின் மட்டையால் கட்டப்பட்ட படலையைத் திறந்து வெளியே வந்த அருணுக்கு... முற்றத்தில் கண்ட காட்சி அதிர்ச்சியளித்தது. "அம்மா.... அம்மா...! இஞ்ச வந்து பாருங்கோ!" கூச்சலிட் டபடியே தாயிடம் ஓடினான். குறுக்கே விழுந்த தங்கை "என்னடா அண்ணா...?" என்று வழிமறித்தாள்.

"மா... மா... மர....ம்...." வார்த்தைகள் தொண் டையில் முள்ளாய் உறுதி வெளியே வர மறுத்தன. மௌனித்துப் போய் நின்றான் அருண்.

அப்பா சொன்னவர், அப்பப்பா வைத்த மாமரம், எத்தனை சந்ததிகள் கடந்தாலும் இந்த மரம் நிக்கவேணும்... பரம்பரை பரம் பரையாய் எல்லா சந்ததிக்கும் அது பயன் கொடுக்க வேணுமென்று. ஆனால் இன்று... தந்தை சிவம் அடிக்கடி கூறும் வார்த்தைகள் அவன் அடி மனதிலிருந்து மேலெழுந்து வர லாயிற்று.

"எவ்வளவு மாங்காய்... எல்லாம் அநியாயம்..." தங்கை கஸ்தூரியின் மனப்புலக்கச்சல் கனன் றது. அவளது கவலை மரம் பற்றியதல்ல. நிலமெங்கும் சிதறிக் கிடக்கும் மாங்காய் களை விற்றுத்தான் அவளுக்கு சப்பாத்து வாங்கித் தருவதாக அம்மா வாக்களித்திருந் தால். இனி அது நடக்காது.

"அம்மா! இனி நீங்கள் எனக்குச் சப்பாத்து வாங்கித் தரமாட்டியளென்ன? என்ர சப்பாத் தைப் பார்த்து பிள்ளையளெல்லாம் நக்க லடிக்குதுகள். முதலையாம். நாக்கை நீட்டு தாம். தங்களை விழங்கிப் போடு மாம். மரமும் முறிஞ்சிட்டுது. இனி எனக்குச் சப்பாத்து....?"

தள்ளாடியபடியே முற்றத்துக்கு வந்து சேர்ந் தாள் செல்லம்மா. வீட்டு வாசலால் இறங் கியதும் றோட்டை மறைத்தபடி முற்றத்தில் நின்ற கறுத்தக் கொழும்பான் மாமரம் அது. பருவத் துக்கு சும்மா குலை கட்டிக் காய்க்கும். பெரிய உயரம் என்றுமில்லை. சில நேரத்தில் காய்கள் தலையிலகூட முட்டும். பழமென் றால் தேன்தான். பெரியதும்கூட. போரில் மார்பு பிளந்த சூரனாக மரம் அவர் காலடியில் மல் லாந்து கிடந்தது. கோபம் தீராத சூரனாக சாகும்போதும் நிலமெங்கும் பற்களைப் பரப்பி நரநரத்தவன் போல மாங் காய்கள் சிதறிக் கிடந்தன. இனி....?

அவளுக்குத் தெரிந்து அந்த மரத்துக்கு அவளிலும் பார்க்க வயது கூட. பல போர்களைக் கடந்து வந்த மரம் அது. "எல்லாம் நாசம்" செல்லம்மா தலையில் கை வைத்தபடி குந்தியிருந்தாள்.

"அம்மா... அம்மா... அண்ணா.... அண்ணா...!" தங்கையின் ஓலம் இடியாய் இறங்கியது. ஓடிப்போனான். பாறிக்கிடந்த மரக்கொப்புகளுக்கு நடுவே பிய்ந்துபோன குருவிக்கூடு. தூக்கிக் காட்டினாள் கஸ்தூரி. கொப் புகளுக்குள் சிக்குண்ட நிலையில் குருவிகள். மூன்று குஞ்சுகள் இறந்து போய்... தாய்க்குருவி காயப்பட்டிருந் தது. பறக்க முற்பட்டது. முடியவில்லை. சிறகு ஒடிந்திருந்தது.

கஸ்தூரியும் அருணும் சேர்ந்து குருவி களை மீட்டனர். அவற்றைத் தாயிடம் கொண்டு சென்று காட்டினார்கள்.

"ஏன் மோனை இதுகளைப் பிடிக்கிறி யள். ஐந்தறிவு படைத்த ஜீவனுகளை கொடுமைப் படுத்தக் கூடாது. அதுகளை பேசமாம விட்டிடுங்கோ.."

"இல்லையம்மா அதுகள் பாவம். நான் அது களை வளர்க்கப் போறன்." என்றாள் கஸ்தூரி.

கையில் கிடந்த பிய்ந்துபோன குருவிக் கூட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டி ருந்தாள் செல்லம்மா. காலம் ஈவு இரக்கமே இல்லாமல் எவ்வளவு எளிதாக எல்லா வற்றையும் சிதைத்துப் போடுகிறது என்று நினைத்தபோது இயலாமை அவளை வாட்டி யது.

★★★

அருணின் தந்தை ஒரு விவசாயி. ஒரு போகத்துக்கு எப்படியும் ஏழெட்டு ஏக்கர்

(16 ஆம் பக்கம் பார்க்க..)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோடாரிக் கஞ்சி எப்படியிருக்கும்?

இராணுவத்தில் பணிபுரிந்த படை வீரன் ஒருவன் இருபத்தைந்து வருடங்கள் கழித்து அவனுடைய சொந்தக் கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். நீண்ட தூரப் பயணத்தில் அவன் சாப்பிடுவதற்காக வைத்திருந்த ரொட்டியும், கையிலிருந்த பணமும் காலியாகி விட்டது. ஒருநாள் அவன் ஒரு கிராமத்தை வந்தடைந்தான். இரவாகி விட்டது. எங்கே தங்கலாம்? என அங்கிருந்த பெரியவர் ஒருவரிடம் கேட்டான்.

இன்று வழிப்போக்கர்களைத் தங்க வைப்பது அந்த ஊரிலுள்ள ஒரு பணக்காரியின் முறையாகும் என்றார் அந்தப் பெரியவர். ஆனால்? என்று தயங்கிய அந்தப் பெரியவர், அவள் ஒரு கருமி. எச்சில் கையால் காக்கையைக் கூட விரட்ட மாட்டாள் என்றார். அதனால் என்ன பரவாயில்லை என்றபடை வீரன் அந்தப் பணக்காரியின் வீட்டுக்குச் சென்றான். அந்தப் பணக்காரியிடம், சாப்பிட ஏதாவது உணவு இருந்தால் கொடுங்களேன் என்று கேட்டான். ஆனால் அவள் ஒரு செவிடு போல் பாசாங்கு செய்து நல்லது, நீங்கள் உட்காரலாமே– என்றாள். படை வீரன் எனக்குப் பசிக்கிறது என்று சொன்னேன் என்றான். நீங்கள் கவலைப்பட வேண்டாம். உட்காரும் நாற்காலி உடைந்து போகாது என்றாள் அவள்.

தயவு செய்து சிறிது உணவு தாருங்கள் என்று கெஞ்சினான். ஆனால், என்னிடம் ஒன்றுமில்லை என்றாள் கருமி. அப்படியானால், கஞ்சியாவது காய்ச்சிக் கொடுங்கள் என்றான்.கஞ்சிகாய்ச்சுவதற்குஎன்னிடம்என்னஇருக்கிறது? என்றாள் அவள். படைவீரன் தனது மீசையை முறுக்கியபடி, பரவாயில்லை, எனக்கு ஒரு கோடாரி இருந்தால் கொடுங்கள். நான் கோடாரியில் கஞ்சி காய்ச்சுவேன் என்றான். கோடாரிக் கஞ்சியா? அதை எப்படிக் காய்ச்சுவது? என்று ஆச்சரியப்பட்ட அவள். ஒரு கோடாரியைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவன் பானையை எடுத்து நீரூற்றி அதற்குள் கோடாரியைப் போட்டு அடுப்பில் எடுத்து வைத்தான். நீண்ட நேரத்துக்குப் பின்னர், கஞ்சியைச் சுவை பார்த்தான். கஞ்சி நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இதில் உப்பில்லையே என்றான். அவள் உப்பைக் கொண்டு வந்து கொடுத்தாள். இன்னும் சிறிது நேரம் கழிந்தது. இது மிகவும் நன்றாக இருக்கிறது. ஆனால் கெட்டியாக இல்லையே. இதில் சிறிது பார்லியைப் போட்டால் சரியாகிவிடும் என்றான். அவள் பார்லியைக் கொண்டு வந்து கொடுத்தாள். படைவீரன் தனது சமையலில் தீவிரமாக இருந்தான். கஞ்சி தயார். மீண்டும் சிறிது வெண்ணெய் கிடைத்தால் போதும் என்றான். வெண்ணெய்யும் கொடுத்தாள் அந்த கருமி. அதிசயமான கோடாரிக் கஞ்சி குடிக்கும் ஆவலுடன் சாப்பாட்டு மேசையில் ரொட்டியையும் பாலையும் கொண்டு வந்து வைத்தாள். இருவரும் சாப்பிடத் துவங்கினர். மிகவும் ரசித்து ருசித்து கஞ்சியை உறிஞ்சிக் குடித்தாள் கருமி. மிக அருமையான கஞ்சி. அது சரி இந்தக் கோடாரியை எப்போது சாப்பிடுவது எனக் கேட்டாள். படைவீரனும் தன்னிடமிருந்த கரண்டியால் அந்தக் கோடாரியைக் குத்திப்பார்த்து, இது இன்னும் வேகாமல் இருக்கிறது. அதனாலென்ன, நான் பிறகு இதை வேக வைத்துக் கொள்கிறேன். என்றபடி கோடாரியை எடுத்துத் தனது பைக்குள் வைத்துக் கொண்டான். ஆக, அந்தக் கருமியிடமிருந்து உணவைப் பெற்றதோடல்லாமல் அவளுடைய கோடாரியையும் சாமார்த்தியமாகக் கவர்ந்து கொண்டான், அந்தப் படைவீரன்.





# பொது அறிவு

- ♣உலகின் மிகப் பெரிய பாலைவனம் சகாரா பாலைவனம். (90 லட்சம் சதுர பரப்பளவு கொண்டது இந்தப் பாலைவனம்).
- ♣சாதாரணமாக ஒரு பல்ப்பின் ஆயுள்காலம் 3,000 மணி நேரம் ஆகும்.
- ♣பன்னீர்ப் பூ இரவில் மலரும்.
- ♣ரோஜா மலரின் வாசனை இதயத்துக்கு பலம் சேர்க்கும்
- ♣கார்த்திகைப் பூ என்றழைக்கப்படுவது காந்தள் மலர்.
- ♣உலகின் மிகப் பழைய மரம் தாய்வான் நாட்டில் உள்ள மூன்யூச் மரம். இதன் வயது 4,130 ஆண்டுகள்.
- ♣டென்னிஸ் மட்டைகள் மகாகனி, சிக்மோர், பீச் ஆகிய மூன்றுவித மரங்களில் இருந்து தயாரிக்கப்படுகிறது.
- ♣ஆஸ்ட்ரிச் என்னும் பறவை கல்லை தின்னும் தன்மை உடையது.
- ♣உராங் உடான் என்ற குரங்கினத்தை 'கானகத்தில் கிழவன்' என்று மலேசிய மக்கள் அழைக்கின்றனர்.
- ♣பாம்பு, பல்லி, ஆமை, முதலை போன்ற ஊர்வனவற்றில் ஏறத்தாழ ஐந்தாயிரம் வகைகள் உள்ளன.
- ♣உலகில் ஏறத்தாழ 500 எரிமலைகள் உள்ளன.
- ♣ஒட்டகம் ஒரே நேரத்தில் 90 லீற்றர் தண்ணீர் குடிக்கும்.
- ♣ஒட்டகத்துக்கு மூன்று இரைப்பைகள் உள்ளன.
- ♣ஏப்ரல் என்ற பெயர் ஏப்பிரிரே என்ற இலத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது. எல்லாம் இனிதே நிகழும் என்பது இதன் அர்த்தம்.
- ♣பல்லிகளில் 2,500 வகைகள் உண்டு.
- ♣பாம்பு போல பல்லியும் தனது மேல் தோலை உரிக்கும்.
- ♣பல்லிகள் மாதக் கணக்கில் உணவின்றி உயிர் வாழும் இயல்பு கொண்டது.
- ♣வாழும் இடத்துக்கு ஏற்ப நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை பல்லிகளுக்கு உண்டு.
- ♣வீட்டுப் பல்லிகள் இரண்டு ஆண்டுகளே உயிர் வாழும்.
- ♣வெட்டுக் கிளிக்கு கால்களில் தான் காதுகள் உள்ளன.
- ♣நியூஸிலாந்தில் காகமே கிடையாது.
- ♣காகத்துக்கு காதுகள் கிடையாது. கண்ணின் பின்புறமுள்ள துளையின் வழியே அது கேட்கிறது.
- ♣சவூதி அரேபியா நாட்டில் நதிகளே கிடையாது.
- ♣சீனாவின் புனித விலங்காக வணங்கப்படும் விலங்கு பன்றி.
- ♣உலகிலேயே அதிகமாக முட்டையிடும் உயிரினம் கரையான் தான்.
- ♣எலி, கங்காரு ஆகியவை மிக குறைந்த அளவே தண்ணீர் அருந்துகின்றன.
- ♣ஆஸ்திரேலியாவில் இருக்கும் கங்காருவின் உயரம் 6 அடி. உடலில் பையை உடைய ஒரே விலங்கினம் கங்காரு. கங்காருவின் வால் 4 அடிக்கு மேல் நீளமானது. ஒரே தாவலில் இது 25 முதல் 30 அடிவரை தாண்டி விடும். இதன் குட்டிகள் பிறக்கும் போது இளஞ்சிவப்பு நிறத்திலிருக்கும். கங்காருகள் பொதுவாக பயந்த சுபாவம் கொண்டவை. கங்காருகளின் நாடு ஆஸ்திரேலியா ஆகும்.

# சாக்குக் கணவாய் (ஒக்டோபஸ்)

சாக்குக்கணவாய் (தமிழில் பேய்க்கடம்பான், சாக்குச்சுருளி, சிலந்திமீன், நீராளி என்றோ அல்லது ஆங்கிலப் பெயரை ஒலிப்பெயர்த்து ஒக்டோபஸ்;) என்னும் கடல்வாழ் விலங்கு எட்டுக்கைகள் கொண்ட எலும்புகள் ஏதும் அற்ற ஒரு விலங்கு. சாக்குக்கணவாய் என்னும் இந்த விலங்கு மெல்லுடலிகள் என்னும் தொகுப்பில் இதலைக்காலிகள் என்னும் வகுப்பில் எட்டுக் காலிகள் அல்லது எண்காலிகள் என்னும் உயிரின வரிசையில் உள்ள ஒரு விலங்கு. தலைக்காலிகள் என்னும் வகுப்பில் 300 வகையான சாக்குக்கணவாய் உள்ளன என்று கண்டிருக்கின்றார்கள். இவை மொத்தத் தலைக்காலிகளில் மூன்றில் ஒரு பங்கு ஆகும். சாக்குக்கணவாய் உடலில் எலும்பு இல்லாததால் மிகச் சிறிய இடுக்குகளிலும் நுழைந்து வெளிவர இயலும். இவை பொதுவாக 5 செ.மீ முதல் 5 மீ வரையான அளவுகளில் உண்டு. கணவாய்க்கு மூன்று இதயங்கள்உண்டு. கணவாயின் இரத்தம் நீல நிறத்தில் இருக்கும். கணவாய் இரத்தத்தில் செப்பு உள்ள ஈமோசயனின் என்னும் புரதப்பொருள் உள்ளதால் உயிர்வளி (ஒட்சிசன்) ஏற்றவுடன் அது நீல நிறமாக மாறுகின்றது (ஒட்சிசன் ஏற்காத நிலையில் நிறமற்றதாக இருக்கும்). சாக்குக் கணவாயின் இந்த மூன்று இதயங்களில் இரண்டு இதயங்கள் கணவாயின் செதில் அல்லது பூ (அல்லது இணாட்டு) எனப்படும் மூச்சுவிடும் பகுதிக்கு நீல இரத்தத்தை இரைக்கப் பயன்படுகின்றது. மூன்றாவது இதயம் உடலுக்குத் தேவையான இரத்தத்தைச் செலுத்தப் பயன்படுகின்றது. முதுகெலும்புகளில் உள்ள இரத்தத்தில் சிவப்பணுவில் உள்ள ஈமோகுளோபின் என்னும் இரும்புச்சத்து உள்ள இரத்தம் உயிர்வளியை எடுத்துச் செல்ல சிறந்தது. என்றாலும் குளிரான கடற்பகுதிகளில் ஒட்சிசன் குறைவாக உள்ள பகுதிகளில் ஒட்சிசனை எடுத்துச்செல்ல இந்தச் செப்பு உள்ள ஈமோசயனின் சிறந்ததாக உள்ளது. சாக்குக்கணவாய்கள் அதிக காலம் வாழ்வதில்லை. பெரும்பாலும் சில மாதங்களே வாழ்கின்றன. வட பசுபிக் பெருங்கடல்களில் வாழும் சில மிகப்பெரிய சாக்குக் கணவாய்கள் 4–5 ஆண்டுகள் வாழலாம். இனப்பெருக்கத்துக்கான புணர்ந்தபின் ஆண் சாக்குக்கணவாய்கள் சில மாதங்களில் இறந்து விடுகின்றன. பெண் சாக்குக் கணவாய்கள் முட்டையிட்டவுடன் இறந்து விடுகின்றன.





சொ. மைக்சன்
சென்ஜோன்ஸ் கல்லூரி



அ. ரெமிங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயே! உன்னை மன்னிக்கிறேன்!

லீ ஆன் ஹெனியான்

“அவள் இப்போது டால் பினாகிவிட்டாள்” என்றான் ஆர்ச்சர். என்னுடைய மூன்று வயது மகன் ஆர்ச்சர் ஒரு துப்பாக்கியை வாங்க வேண்டும் என்று கேட்கிறான், அதுவும் இப்போதே, உடனே!

எங்கள் வீட்டில் துப்பாக்கி கிடையாது. துப்பாக்கியை இவன் எங்கே பார்த்தான் என்றும்தெரியவில்லை.அவன் பார்க்கும் கார்ட்டூன் படங்களில் இருந்திருக்குமோ? அவன் பொம்மைத் துப்பாக்கியைக் கேட்கவில்லை, யாரையாவது சுட்டுக்கொல்லும் உண்மைத் துப்பாக்கியை. அவனுடைய செல்ல வளர்ப்பான எஸ் மெரல்டா என்ற கோழியை இன்னொரு பிராணி கொன் றதை நேரில் பார்த்த அடுத்த நிமிடமே துப்பாக்கியைக் கேட்க ஆரம்பித்துவிட்டான்.

என்னுடைய பெற்றோரும் அவனும் வீட்டின் முன் அறையில் இருந்தபோது அந்தச் சம்பவம் நடந்தது. எங்கள் வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் இடையிலான இடத்தில் ஆடுகள், கோவேறு கழுதைகள், மான், நாய் போன்றவை வளர்கின்றன. திடீரென என்னுடைய அம்மாவின் அலறலைக் கேட்டதும் வாயிலறைக்கு ஓடினேன். கோழியைக் கவ்விக் கொண்டிருந்த நாயைப் பார்த்தேன். அதை விரட்ட வீட்டைவிட்டு வெளியே ஓடினேன். எஸ்மெரல்டா அப்போது உயிருடன்தான் இருந்தாள். ஆனால், உடலின் உள்ளுறுப்புகள் அனைத்தும் தெரியும் அளவுக்குச் சிறகுகள், தோல் அனைத்தும் உரிந்துவிட்டிருந்தன.

எஸ்மெரல்டாவை எடுத்துவர என்னுடன் அப்பாவும் வந்தார். அதைக் கையில் எடுத்தார். நான் அதன் மார்பைத் தொட்டுப் பார்த்தேன். சூடாக இருந்தது. காயமடைந்த பறவைகளைக் கையில் எடுத்ததும் அதன் தலையை மென் மையாகத் தி நகுவதைப் போல, எஸ்மெ!ால்டாவையும் தடவிக்கொடுத்தார். என்னுடைய தாத்தாவுடன் வேட் டைக்குச் செல்லு பபோது பறவைகளைக் கையாள அவர் பழகியி நந்தார். ஆனாலும் பயனில்லை. எஸ்மரெல்டாவின் உயிர் துடித்து அடங்கும்வரை அதன் உடலிலிருந்து சிறகுகள் பிய்ந்து உதிர்ந்துகொண்டிருந்தன.

ஆர்ச்சர் அந்த நாய், எஸ்மெரல்டாவைக் கவ்வியதை மட்டும்தான் பார்த்தான். மேற்கொண்டு பார்க்க விடாமல் என்னுடைய அம்மா அவனைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டு விட்டார். எஸ்மெரல்டாவைப் பார்க்க வேண்டும் என்று அவன் என்னைக் கேட்ட போது, அவன் உடலே பந்து போலச் சுருண்டு குன்றிப் போயிருந்தது. வேண்டாம் என்றார் எனது அம்மா. பார்க்கட்டும் என்றேன் நான். நாயால் கோழி கவ்வப்பட்டதைப் பார்த்த எனது மகன், அதற்குப் பின்னர் என்ன ஆனது என்று தெரியாமல் இருக்கக் கூடாது என்று நினைத்தேன்.

பனியில் நனைந்து ஊறிய மண் தரையில் நடந்தபோது, எஸ்மெரல்டா எனக்கு உயிரோடு வேண்டும் என்று கூறி அழுதான். மண்ணைக் கிளறிப் பள்ளம் தோண்டும் வரையில் அதைப் புதைக்க முடியாது என்பதால், பனிபடர்ந்த தரையில் அப்படியே வைத்திருந்தோம். குருதி சொட்டுச்சொட்டாகக் கசிந்து தரை யைச் சிவப்பாக்கியிருந்தது. ஆர்ச்சர் என் மீது சாய்ந்து கொண்டான். அவன் போட்டிருந்த கோட்டால் முகத்தைப் பாதி மறைத்துக் கொண்டான். தாங்க முடியாத சோகத்தில் ஆழ்ந்திருந்தான்.

**சாவு என்றால் என்ன?**

சில நாள்களுக்கு முன்னால் தான் அவனிடம், சாவு என்றால் என்னவென்று தெரியுமா? என்று கேட்டிருந்தேன். காரணம் இருக்கிறது. அவன் மரவட் டைகளை எடுத்துக் கையில் அழுத்திப் பிடித்துக்கொள்வான். அப்படிச் செய்தால் அவை செத்துவிடும் என்பதை உணர்த்தத்தான் அப்படிக் கேட்டேன். “உடம்பிலிருந்து உயிர் போவது தான் சாவு” என்று பதில் அளித்தான். அது இப்போது நினைவுக்கு வந்தது.

திரும்ப வீட்டுக்குள் வந்தோம். “எஸ்மரெல்டாவின் உயிர் பிரிந்த பின்னர் என்ன ஆனது? அது எங்கே போனது?” என்று கேட்டான்.

எஸ்மெரல்டாவின் உடல் மண்ணுக்குள் புதைக்கப்படும். அது தோட்டத்தில் உள்ள தாவரங்களுக்கும் இதர பிராணிகளுக்கும் ஊட்டச்சத்தாகிவிடும் என்று மட்டும் பதில் அளித்தேன். “எஸ்மெரல்டா இட்ட முட்டைகளைச் சாப்பிட்டு வந்ததால் எங்கள் குடும்பத்தின் ஒவ்வொருவ ரிடத்திலும் அவள் வாழ்ந்தாள். அவளுடைய உடல் புதைக்கப்பட்டதும் புற்கள் வளரவும் கோழிக் குஞ்சுகள் தீனியெடுக்கவும் உதவுவாள். அவளுடைய சக்தி எல்லா உயிர்களிலும் கலந்துவிடும்” என்று கூறினேன்.

“அவள் இப்போது டால்பினாகி விட்டாள்” என்றான் ஆர்ச்சர். “ஓம்!” என்று லேசாகச் சிரித்தபடியே ஆமோதித்தேன். இப்போது எல்லாம் சரியாகிவிட்டதாக நினைத்தேன். திடீரெனக் குரலை உயர்த்திய ஆர்ச்சர், “நம்மிடம் துப்பாக்கி இருக்க வேண்டும், அந்தப் பொல்லாத நாயைச் சுட்டுக்கொல்லப் போகிறேன்” என்று கறுவினான்.

அவனை என்னுடைய மடியில் கிடத்திக்கொண்டு பேச ஆரம்பித்தேன், “அந்த நாய்க்குப் பசி. இரை தேவைப் பட்டது. அது உயிரோடு வாழ வேண்டுமென்றால் இதைப் போல எதையாவது சாப்பிட்டாக வேண்டும். நாம் கூடப் பசியாக இருக்கும்போது கோழிக் கறி சாப்பிடுகிறோம்; நாய்களும் பசிக்கும்போது கோழியைப் பிடித்துச் சாப்பிடுகின்றன. அந்த நாயைக் கொல்வதால் நம்முடைய எஸ்மெரல்டா நமக்குத் திரும்பக் கிடைத்துவிட மாட்டாள்” என்றேன்.

“நாம் கோழிக் குஞ்சுகளைக் காப்பாற்றியாக வேண்டுமே?” என்றான்.

“அந்த நாய் நம்முடைய வீட்டுக்கு முன்னால் வந்த தும் எஸ்மெரல்டாவின் கழுத்தைக் கவ்விக் கடித்ததும் நல்லதில்லைதான். அதற் காகவே அந்த நாயைப் பொல்லாதது என்று கூறிவிட முடியாது. சில வேளைகளில் நல்ல நாய்கள் மோசமான செயல்களைச் செய்து விடுகின்றன. பொல்லாத நாய்கள் நல்லதையும் செய் கின்றன.

இதுவே மனிதர்களுக்கும் பொருந்தும்” என்றேன்.

ஆர்ச்சர் அமைதியாக அமர்ந்து நான் சொன்னதையெல்லாம் மனதில் அசைபோட்டுக் கொண்டிருந்தான். வாழ்வு, சாவு, பழி வாங்கல், மன்னித்தல் எல்லாம் அவன் மனதுக்குள் ஓடியிருந்திருக்க வேண்டும்.

எஸ்மெரல்டாவுக்கு என்ன நடந்தது என்று எனது மகனுக்குப் புரிய வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், நான் சொன்னதிலிருந்தும், அவன் பார்த்ததிலிருந்தும் எந்த அளவுக்குப் புரிந்துகொண்டிருப்பான் என்று எனக்கு நிச்சயமாக எதுவும் தெரியவில்லை. துப்பாக்கி வேண்டும் என்று அவன் கேட்டதே, நல்ல தந்தையாக இருக்க நான் தவறிவிட்டேனோ என்ற சந்தேகத்தையும் எனக்குள் ஏற்படுத்தியது. எல்லா தகப்பனார்களையும் போல நான் எதையாவது சொல்லித் திசை திருப்பியிருக்க வேண்டுமோ?

**நாயின் மறுவருகை**

மாதங்கள் உருண்டோடின. வசந்த காலம் வந்தது. எஸ்மெரல்டாவைப் புதைத்த இடத்தில் புற்களும் பூச்செடிகளும் வளர்ந்திருந்தன. அன்றைக்கு மிதமான வெயில் அடித்தது. வாசலைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். அப்போது அந்த நாய் வந்தது. தோட்டத்துக்குப் போட்டிருந்த கதவைத் தள்ளிக் கொண்டு அதனால் உள்ளே வர முடியவில்லை. ஆர்ச்சருக்கு அந்த நாயை அடையாளம் தெரியவில்லை. எனக் குத் தெரிந்துவிட்டது. அந்த நாயை எடுத்து வளர்க்க வேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான். நமக்கு நன்றாகத் தெரியாத நாயை வளர்க்கக் கூடாது என்றேன். அவன் அழுது அடம்பிடித்தான். அவனுடைய அழுகையைச் சமாளிக்கத் தெரியாமல் நான் உண்மையை உளறிவிட்டேன். “இந்த நாய்தான் உன்னுடைய எஸ் மெரல்டாவைக் கொன்றது” என்றேன்.

கண்களை அகல விரித்து அந்த நாயையே பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்து என்ன நடக்கும் என்று தெரியாமலேயே நான் அவனிடம், “இந்த நாயிடம் ஏதாவது சொல்ல ஆசைப்படுகிறாயா?” என்றேன்.

தோட்டத்து வேலிவரை நடந்து சென்றான். வேலியை நெருங்கியதும் அந்த நாயைப் பார்த்துக் குனிந்து மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான். “நாயே! இனிமேல் கோழிகளைப் பிடித்துக் கடிக்காதே” என்றான். நாய் அவனிடம் நெருங்கி வந்தது. ஆர்ச்சரை இழுத்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடிவிடலாமா என்று நினைத்தேன். அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். அந்த வேலி அவனுக்குப் பாதுகாப்பாக இருந்தது.

“இன்னும் ஏதாவது சொல்ல வேண்டுமா” என்று கேட்டேன். ஆமாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினான். நாயிடமிருந்து அவனைப் பிரிக்கும் அந்த வேலி மீது சாய்ந்துகொண்டான். இந்த உலகில் நிலையாதது, கடினமானது எவையெவை என்று மிகச் சிறிய வயதிலேயே அவனுக்கு உணர்த்திய அந்த ஜீவன் அப்போதும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது. நாயைக் கொல்ல எதாவதொரு ஆயுதத்தைக் கேட்கப்போகிறானோ என்ற அச்சத்தில் காதைத் தீட்டிக்கொண்டு காத்திருந்தேன்.

அந்த நாயின் கண்களைப் பார்த்து அவன் பேசினான். “நாயே! நீ செய்தது தவறு. இருந்தாலும் நான் உன்னை மன்னிக்கிறேன்.”

*மூலம்: தி நியூயோர்க் டைம்ஸ், சுருக்கமாகத் தமிழில்: சாரி*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சி.....

# சுவடு

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

நெல் விதைப்பார். சொந்தமாக ஒரு சோடி உழவுமாடு நின்றது. அப்ப இந்த மெஷினுகள் இல்லை. எல்லாம் கை வேலைதான்.

விதைப்புத் தொடங்கினால் ஊர் ஆம்பிளையள் ஒருதரையும் ஊரில காணக் கிடைக்காது. வயலிலதான் நிப்பினம். இப்பிடித்தான் சிவமும். வீட்டுக்கு வர பிள்ளைகள் எல்லாம் நித்திதரையாய் போயிடுங்கள். பிறகும், காலங்காத்தால ஐந்து மணிக்கெல்லாம் சிவத்தை வயலில பார்க்கலாம். பிள்ளைகள் அப்பாவை காண்பதே அரிதாய்த்தான் இருக்கும்.

வயலையொட்டிய வீதி யால்தான் பள்ளிக் கூடம் போகவேணும். பிள்ளைகள் அப்பன் நாளாந்தச் சந்திப்பு அங்குதான் நடக்கும்.

சிவத்துக்கு நான்கு பிள்ளைகள். மூத்தவன் அருண். மற்றது மூன்றும் பொம்பிளைப் பிள்ளையள். அருண் உயர்தரம் படிக்கிறான். மூன்றாவது கஸ்தூரி. அவள் பத்தாமாண்டு படிக்கிறாள்.

வயலில உழுதுகொண்டு நிக்கேக்க, ஏதோவொரு பொருள் வெடிச்சு கருவெள்ளை எருத்தனுக்கு பின்னங்கால் போட்டுது. அண்டையில இருந்து சிவம் வயலுக்குள்ள இறங்கிறதில்லை.

ஒவ்வொரு போகமும் சின்னாம்பி-மாமாவுக்குத்தான் வயலைக் குத்தகைக்கு கொடுத்தவை.

அன்று பிடித்த சனியன்தான் இன்றுவரையும்...!

ஆனாலும் சிவம் சோர்ந்ததில்லை. உழைச்ச உடம்பு சும்மா இராதுதானே. வீட்டில சைக்கிள் கடைபோட்டார். குத்தகை நெல்லு சாப்பாட்டுக்கு மிச்சம். ஆனாலும் மிச்சத் தேவைகளுக்கு என்ன செய்வது. சைக்கிள் வேலையளும் பெரிசா இல்லை. மாமரம்தான் அவ்வப்போது கைகொடுக்கும். குடும்பம் சுளையாய் ஆயிரம் ரூபாய் தாள்களைப் பார்ப்பது மாம்பழ சீசனில் மட்டும்தான்.

"எட தம்பி! நான் செத்துப் போனாலும், எப்பிடியாவது நீ படிச்சிடவேணும். இந்த மாமரம் எத்தினை சந்ததியாய் நிண்டு பலன் தருகுது அதுபோல நீயும் ஒரு டொக்டராய் வந்து இந்த சமூகத்துக்கு சேவை செய்ய வேணும்.

அம்மா சகோதரங்களை கண் கலங்காமல் பார்க்க வேணும்...!" மாமரத் துக்குக் கீழ இருத்தி வைத்து சிவம் அருணுக்கு மீண்டும் மீண்டும் சொன்னவைகள் இவ்வளவும் தான்.

★★★

போர் வந்தது. கந்தக நெடி மூக்குகளை உறுத்தியது. பிணமலையில் ஊன்றி நடந்தபடி உயிர் தப்ப ஓட்டம். பதுங்குழிகள் சொர்க்கமாகின. அதன் மேலேயே வெஷல் விழுந்தபோது நரகத்தைக் கண்முன் காட்டின. நள்ளிரவு வேளை... வழமைக்கு மாறாக எறிகணைகள் சரமாரியாக வீழ்ந்து வெடித்த ஒரு நாளில், வானை கீறிக்கிழித்து வந்த மிகையொலி விமானங்கள், சிவத்தின் தலையைக் கொய்து சென்றன.

கரிய இருளுடன் கலந்த வெடிமருந்துப் புகையும் அடங்கியபோது சிவத்தின் உடல் ஷெல் சிதறல்களால் குதறப்பட்டுக் கிடந்தது. செல்லம்மாவுக்கு வயிற்றில் சிறு காயம். பெண் பிள்கைள் இருவர் குருதியிலே மிதந்து கொண்டிருக்க ஒருத்தி மட்டும் அதிஸ்ட்டவசமாக சிறு உரசல் காயம்கூட இன்றி உயிர் பிழைத்தாள். சாவு ஓலங்கள்கூட யார் காதுகளிலும் கேட்பதாயில்லை. சிவத்தையும், இரு தங்கைமாரையும் அருகிலிருந்த பதுங்குகுழிக்குள்ளேயே போட்டு மூடிவிட்டு, செல்லம்மாவைத் தாங்கியபடி நடக்க ஆரம்பித்தான் அருண். உயிருக்கான போராட்டம் அவனுக்கு இன்னும் மிச்சம் இருந்தது.

முள்வேலிகளுக்குள் அடைபட்டு, அவமானப்பட்டு, ஆன்மாவை இழந்து வீட்டுக்குத் திரும்பி வந்தபோது எல்லாமும் உரு மாறியிருந்தன. அடையாளத்தைத் தொலைத்திருந்தன. ஆனால் மாமரம் மட்டும் ஒய்யாரமாய் நிமிர்ந்து நின்றது. அதன் உடலிலும் பல காயங்கள், வடுக்கள். ஆனாலும் நிமிர்ந்து நின்றது. செல்லம்மாவுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது அந்த மரம்தான்.

★★★

"கீச்... கீச் கீச் கீச்...." குருவிக் குஞ்சுகள் அலறும் சத்தம் அருணின் காதுகளில் தெளிவாகக் கேட்டது. நினைவுகளிலிருந்து மீண்டவனாய், குருவிகளிடம் ஓடிப் போனான். கறுத்தப் பூனையொன்று குறுக்கே பாய்ந்தோடியது. பார்வதி மாமி வீட்டுப் பூனை. பதறியடித்து வேகம் கூட்டினான் அருண். அவன் போவதற்குள் இரத்தக் கறையேறிப்போயிருந்தது குருவிக்கூடு. பூனையால் குதறப்பட்டுக் கிடந்த தாய்க்குருவி குற்றுயிராய் துடித்து அடங்கியது.

★★★

நேரம் அதிகாலை நான்கு மணியிருக்கும். இருள் மண்டிப்போயிருந்தது. சர்ர்ர்ர்.... வாகனமொன்று படலையில் வந்து நின்றது. வாகனத்திலிருந்து இறங்கிய ஐந்தாறு தலைகள், முற்றத்தை அண்மித்துக் கொண்டிருப்பது ஓட்டை ஒடிசல்கள் நிறைந்த தறப்பாள் வெளிக்குள்ளால் தெரிந்தது. இருள் எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 369



அனுப்புபவர் பெயர்:..........................................

பூரணமான தபால் விலாசம்: ..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. இலங்கை அரசில் அங்கம் வகித்த ஓர் தமிழ் அமைச்சர்
6. ஓர் குறியீடு
7. பயன்பல தரும் மரம்
8. மரம்
9. திருடன்
11. (சீர்) கெட்டது
12. உடம்பின் மிகச் சிறய அலகு
13. இவன் ஒரு மகாகவி
15. பூகோளம்
17. எல்லையில் இருப்பது
18. ஒரு வாசனைத் திரவியம்
20. (நல்ல) உபதேசம் செய்பவர்
22. எல்லா
24. சிதம்பரம்
25. உலோக வேலை செய்பவர்

### மேலிருந்து கீழ்

1. ஒரு நாட்டிய வகை
2. ஒன்று சேர்ந்தவற்றை இப்படி அழைப்பர்
3. கரியில் அதிகம் இருப்பது
4. வீடு
5. ஒருவருக்கு இதை வழங்கிக் கௌரவிப்பர்
8. குறி
10. காடு
11. ஒன்றுக்கு மேற்பட்டது
12. பசு, மரை, மான் போன்றவற்றின் குட்டி
13. திண்மப் பொருள் திரவத்துள் ஒன்றிப் போதல்
14. தெரிவி
16. கதாநாயகனின் எதிரி
17. கண் பார்வை அற்றவன்
19. கதவு இருப்பது இங்கே
21. அறுபத்து நான்கு
23. ஒன்று சேர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 367 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) வைகாசி (4) கருமாதி (7) கர்த்தர் (9) தரை (10) திருப்பம் (12) பரம்பல் (14) விசும் (15) தண் (16) சுளை (18) தரணி (19) சபதம் (20) புத்திரி (21) பிணம்

**மேலிருந்து கீழ்**
(1) வைகறை (2) கார் (3) சித்திரம் (4) கர்ப்பம் (5) மாதம் (6) திரை (8) தரும் (11) பல் (12) பசளை (13) கண்ணியம் (14) விசும்பு (15) தர (17) உபரி (18) தம்பி (19) சதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 367 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
செ.சண்முகராசா,
முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
பி.சிவசூரியர்,
இல.17/2, பிரதான வீதி,
சங்கானை.

**3 ஆம் பரிசு**
அ.பரஞ்சோதி,
வேலணை மேற்கு,
வேலணை - 06.

**4 ஆம் பரிசு**
நா.இராசலிங்கம்,
இல.132, ஆலடி வீதி,
தோணிக்கல்,
வவுனியா.

**5 ஆம் பரிசு**
க.சுந்தரேஸ்வரன்,
இல.109, விநாயக முதலியார் வீதி,
பருத்தித்துறை.

**பாராட்டுப் பெறுவோர்**

சு.சிவராஜமலர்,
சம்பியன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மு.அமுதலிங்கம்,
சன்னதி வீதி,
இடைக்காடு,
அச்சுவேலி.

ஸ்ரீனா கிஷோக்குமார்,
இல.14, பொன்னையா வீதி,
ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.369 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (27.05.2015 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.369 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 31.05.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 367 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தசங்கரிக்கு ஒரு பகிரங்க மடல்!



***அன்புள்ள ஆனந்தசங்கரி ஐயாவிற்கு வணக்கம்!***

அகவை எண்பதை தாண்டி மூப்பு உங்களை தழுவ ஆரம்பித்து விட்ட நிலையிலும் முதுபெரும் அரசியல்வாதியாய் முதுமையிலும் நலமாயிருப்பதை தாங்கள் எழுதிவரும் கடிதங்கள் உறுதிப்படுத்துகின்றன. நடைமுறையிலுள்ள நாடாளுமன்றிலோ மாகாணமன்றிலோ நீங்கள் அங்கத்துவம் பெறாதபோதிலும், நீங்கள் எழுப்பிவரும் விமர்சனங்களை இடைக்கிடை செய்திகளில் காணக்கூடியதாக உள்ளது.

உதயசூரியனை சின்னமாகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக விளங்கும் நீங்கள், அண்மையில் தமிழ் முஸ்லீம் தேசிய கூட்டமைப்பு என்றொரு அமைப்பையும் – கீரைக்கடைக்கு எதிர்க்கடையாக – திறந்திருப்பதாக அறிய முடிகிறது. அந்த அமைப்பிற்கு தாங்கள் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள் எனவும் மூத்த உப தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிய வருகிறது.

பரபரப்புடன் எதிர்பார்க்கப்படும் எதிர்வரும் பொதுத்தேர்தலில் இந்த அமைப்பு வடக்கு கிழக்கில் புதியதொரு சின்னத்துடன் வாக்கு கோரலாம் எனவும் எதிர்பார்க்கிறேன். அதற்கான வேட்பாளர் வேட்டையில் நீங்கள் இறங்கியிருக்கிறீர்கள் எனவும் அறியக்கிடைக்கிறது.

2010இலும் இதேபோன்று, நீங்கள் உட்பட்ட ஒன்பது அல்லது பத்துக்கட்சிகளை உள்ளடக்கி தமிழ்க்கட்சிகளின் அரங்கம் என்றொரு கூட்டு உருவாகி பின்னர் கலைந்து கரைந்து காணாமல்போன வரலாறும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தப்புதிய த.மு.தே.கூ.வும் அத்தகைய அபாயங்களுக்கோ அபசகுனங்களுக்கோ உட்படுமோ என்பதை மக்களும் காலமுமே தீர்மானிக்கவேண்டும்.

தமிழ்த தேசிய கூட்டமைப்பில் உங்களுடைய அங்கத்துவம் பற்றி எனக்குள் பெரிய குழப்பம் இருக்கிறது. ஏனெனில் சில காலங்களுக்கு முன்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் வரிசையில் அமர்ந்திருந்து அழகுபடுத்தியவர் நீங்கள். பின்னர் உங்களின் அத்தகைய பிரசன்னங்களைக் காண முடியவில்லை. வடமாகாண சபைக்காகத் த.தே.கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தீர்கள். உங்களுக்கு போனஸ் ஆசனம் வழங்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் உங்களிடமிருந்து வெளிவந்த அறிக்கைகளை வைத்து, உங்களுக்கும் த.தே.கூ.விற்கும் இடையில் கசந்து விட்டதை உணர முடிந்தது. இப்போதோ மற்றொரு கூட்டுக்கு தலைமையேற்றும் இருக்கிறீர்கள்.

2006ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பின் அஹிம்சை மற்றும் சகிப்புத் தன்மைக்கான மதன்ஜீத் சிங் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட நீங்கள், போராட்ட வரலாற்றில் பல இழப்புகளுக்கும் முகம் கொடுத்து வந்தவர். இன்றைக்கு இருக்கக்கூடிய மூத்த தமிழ்த் தலைமைகளுக்குள் ஒருவர். இலங்கை கடந்து வந்த அரசியலில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் உங்களின் வகிபாகம் எல்லாம் தற்போதைய தலைமுறையினருக்கு மறந்துபோனதை – மறந்துபோவதை –கருத்தில் கொண்டு உங்களின் கடிதங்களில் அதை கையாண்டு தெரியப்படுத்தி வரும் நீங்கள், நடைமுறை அரசியலில் கேள்வியில்லாப் பண்டமாக இருக்கும் நிலை வருத்தத்திற்குரியது. ஆனால் கூட்டமைப்பை கேள்வி கேட்பதன் மூலமும் அவர்களுக்குப் புத்தி சொல்வதாக காட்டிகொள்வதன் மூலமும் உங்களுக்கான கேள்வியை ஏற்படுத்திக்கொள்ள முயற்சிப்பதுதான் விவாதத்திற்குரியதாக இருக்கிறது.

ஆரோக்கியமான அரசியலுக்கு காத்திரமான விமர்சனங்கள் தேவை. ஆனால் காய்க்கின்ற மரத்திற்கு கிடைக்கும் கனமான கல்லடிகள் மரத்திற்கு நன்மை பயப்பவை ஆகா. அண்மையில் உங்கள் அன்பிற்குரிய சாம் (இரா. சம்பந்தன்) அவர்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தமிழர் அரசியலில் அதிகம் இழப்புகளை சந்தித்தது தமிழரசு கட்சியா தமிழர் விடுதலைக் கூட்டணியா என்றொரு விவாதத்தையும் நடத்தியிருந்தீர்கள்.

அண்மையில் உருவாகியுள்ள த.மு.தே. கூட்டமைப்பு தமிழர் அரசியலில் ஆற்றப்போகும் வகிபாகத்தை அறிவதில் ஆர்வமாக இருக்கிறேன்.

கடித வழி தொடர்பாடல்கள் மூலமாகத் தலைமைத்துவத்திற்கு தயாராக இருப்பதாக காண்பித்து வரும் உங்களுக்கு, அதனை பரிசோதிப்பதற்காக தயாராகி வரும் களத்தில் எண்பிக்க வாழ்த்தி விடைபெறுகிறேன்.

*நன்றியுடன்,*
***ஸ்டோ ஸ்வாமி***

# பள்ளிக்கு செல்லும் பிள்ளைக்கு காவல் இல்லை உனக்கு கோவில் எதற்கு கொடி எதற்கு

பொங்கு தமிழோடு
பண்பாடு பேணி வளர்த்த யாழ் மண்ணே!
என்ன பதில் ?

நீதி கேட்டு மதுரையை எரித்த
கண்ணகி உறைகிற தீவிலேதான்
என் தேவதையை தின்றார்கள்.
நாற்புறமும் காவல் தெய்வங்கள் காத்திருக்க
என் கண்மணியை கொன்றார்கள்.
அவள் கடைசிகுரல் எந்த கடவுளுக்கும் கேட்கவில்லை.
பற்றி எரிகிறதே என் வயிறு

பள்ளிக்குப்போனவளை பாதையிலே
வதைத்தார்கள்
என் நிலமே
உன் பண்பாடு எங்கே
கந்த புராண கலாச்சாரம் கலை வாழ்வு
வெள்ளை வேட்டிகளும்
புராண படனங்களும் இங்கு விளைத்ததுதான் என்ன?
தாயை தெய்வமென போற்றுகிற பூமியிலே
தனியே போனவளை தவிக்க கொன்றார்கள்

என் நிலமே!
பள்ளிக்கு செல்லும் பிள்ளைக்கு காவல் இல்லை
உனக்கு கோவில் எதற்கு கொடி எதற்கு
பேய்கள் திரிகின்ற  பெருங் காடா. எம்தேசம்

இளம் பிஞ்சை கொன்றாரே
அவள் கனவுகளை எரித்தாரே
தாயை புணருகிற தறுதலையை
யார் வளர்த்தோம்
கயவர்களை காமுகரை
கண்டுகொள்ளாதேன் இருந்தோம்
காவாலி எனஅறிந்தும் கால் கையை எடுக்காமல்
விசப் பயிரை எங்கள் வேலியிலே படர விட்டோமே!




ஓங்கு புகழ்கொண்ட
யாழ் மண்ணே!  பேறடைந்தாய்
இதைவிடவும் கீர்த்தியினி வீரவே வாய்பில்லை
வாழ்ந்து போ!

இந்த புங்கை கடல் எழுந்து பொங்காதா
புயல் அடித்து நொருங்காதா – இத்தேசம்
இப்பூமி பிளந்து விழுங்காதா பாதகரை!

எந்த நீர் என் வயிற்றின் நெருப்பணைக்கும்
இனி எந்த இரவு எனக்கு உறக்கம் தரப் போகிறது.

**வேலணையூர்–தாஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறக்கப்படும் மக்கள் ஆணை

சந்திரசேகர ஆசாத்

நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் என்பன வெகு விரைவில் இடம்பெறுவதற்கான அறி குறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. அவற்றுக்கு முகம் கொடுக்க அரசியல் கட்சிகளும் தம்மை தயார்ப்படுத்த ஆரம்பித்து விட்டன. உறங்கு நிலையில் இருந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட, மக்கள் மத்தியில் தலைகாட்ட ஆரம்பித் துள்ளதுடன், மக்களின் மீள்குடியேற்றம் தொடக்கம் இனப் பிரச்சினை வரைப் பேச ஆரம்பித்துவிட்டனர். தமிழ் மக்கள் அரசியலில் சிலரால் வலிந்து உட்புகுத்தப் பட்ட சில அரசியல்வாதிகளும், களத்தில் முதன்மைப் பாத்திரமாக தங்களை நிலை நிறுத்த முயன்று வருகின்றனர்.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போது, ஓர் அரசியல் தீர்வின் மூலமே நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை நாம் சர்வதேச சமூகத்துக்கும், ஏனைய மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் சொல்லி வைக்க வேண்டுமெனவும் தமிழ் மக்களின் அபிலாஷைகள்தொடர்பாக ஒரு தெளிவான செய்தியை அனுப்பி வைக்க வேண்டுமெனவும் தமிழ் மக்கள் அந்தக் கடமையை நிறைவேற்ற தமிழ் தேசியக் கூட்ட மைப்பைப் பலப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்பு தமிழ் மக்கள் நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் என மூன்று தேர்தல்களை எதிர்கொண்டனர். எமது மக்கள் எந்த ஒரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் பேராதரவு வழங்கி அதைப் பலப்படுத்தத் தவறவில்லை. ஒன்றிணைந்த வடக்குக் கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன்கூடிய அதிகாரப் பகிர்வு என்ற கோரிக் கைக்கு ஆணை வழங்கத் தவறவில்லை.

எத்தனையோ இராணுவ அச்சுறுத்தல் உட்படப் பலவிதமான மிரட்டல்கள், எத்தனையோ ஏமாற்று முயற்சிகள், எத்தனையோ சலுகைகள், அதிகார துஷ்பிரயோகங்கள் என்பன மத்தியிலும் தமிழ் மக்கள் தமது இலட்சிய உறுதியில் தளர்ந்து விடாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது தலைமைச் சக்தியாகப் பேராதரவுடன் தெரிவு செய்தனர்.

அந்த மூன்று தேர்தல்கள் மூலமும் மக்கள் ஆட்சியாளர்களுக்கும் ஏனைய மக்களுக்கும் சர்வதேசத்துக் கும் தமது செய்தியை மிகவும் தெளிவாகவே வெளிப்படுத்தியிருந்தனர். அதுமட்டு மன்றி மீள்குடியேற்றம் தொடர்பான போராட்டங்கள், காணாமற்போனோர் தொடர்பான போராட்டங்கள், அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரும் போராட்டங்கள் எனப் பல்வேறு ஜனநாயகப் போராட்டங்களையும் நடத்தி, உறங்கி விடாத தமது இலட்சிய உறுதியை வெளிப்படுத்தி வந்தனர்.

மாவீரர் அஞ்சலிகள், முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோருக்கான அஞ்சலிகள் என்பனவும் கொடிய ஒடுக்கு முறைகளின் மத்தியிலும் எமது மக்களால் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முடிவெடுக்க முடியாமல் தடுமாறிய போது, தமிழ் சிவில் சமூகமும் தமிழ் மக்களும் உறுதியான முடிவை எடுத்து மஹிந்த ராஜபக்ஷ அரசைப் பதவியிறக்குவதில் காத்திரமான பங்கை வகித்தனர்.

இப்படியான ஒரு நிலையில்தான், விரைவில் எதிர்பார்க்கப்படும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு சர்வதேசத்துக்கு செய்தி சொல்லவும் எமது ஒற்றுமையை வெளிக்காட்டவும் மீண்டும் எமது மக்களிடம் ஆணை கோரப்பட்டுள்ளது.

1956 முதல் சமஷ்டி ஆட்சிக்கு ஆணை கோரிய தமிழரசுக் கட்சியினர் 1965இல் உள்ளூராட்சி அமைச்சுப் பதவியை ஏற்று அரசின் பங்காளியாகினர். 1977இல் தமிழீழத்துக்கு ஆணை கோரிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமிழீழ விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் நடத்திய விடுதலைப் புலிகளை அழிக்க இந்தியாவுடனும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடனும் கை கோர்த்தனர். இப்போது வடக்கு, கிழக்கு ஒன்றிணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் நான்காவது முறையாக ஆணை கோரி தேர்தல் அரங்குக்கு வந்துள்ளது.

இப்போது எமது ஐக்கியமும், அபிலாசைகளும் இந்தத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தப்படவேண்டும் எனக் கோரப்படு கிறது. இப்படியான கோரிக்கையை முன் வைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எவ்வளவு தூரம் இந்த இரு விடயங்களிலும் மனப்பூர்வமான விசுவாசத்தைக் கொண்டிருக்கிறது என்பதும் கேள்விக்கு அப்பாற்பட்ட விடயமாகத் தெரியவில்லை.

கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித குல விரோத நடவடிக் கைகள் என்பன தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருந்தது. எனினும் இலங்கையின் புதிய அரசின் கோரிக்கையின் பேரில் இது செப்ரெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இந்த ஒத்திவைப்பை ஏற்றுக் கொள்வதாக கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரன் கருத்து வெளியிட்டார். இரா.சம்பந்தனோ ஒத்தி வைப்புக்கு எதிர்ப்பும் இல்லை, ஆதரவும் இல்லையெனத் தெரிவித்தார். அதுமட்டுமன்றி தமிழ் மக்கள் 42 வருடங்களாகப் புறக்கணித்து வந்த இலங்கையின் சுதந்திர தின வைபவத்தில் இந்த இருவருமே கலந்துகொண்டனர்.

இவர்கள் இருவரினதும் நடவடிக்கைகள் இலங்கைக்குள் ஒரு நல்லிணக்கம் உரு வாகி வருவதாகவும் இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதில் இலங்கை அரசும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பும் இணைந்து செயற்பட ஆரம்பித்து விட்டதாகவும் தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு சூழலை உருவாக்கின. இது சர்வதேசம் [illegible] குரலை நலிவடைய [illegible] சந்தேகமுமில்லை. ஆனால் வடமா காண சபை இந்தத் தருணத்தில் இனப் படுகொலை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியதன் மூலம் சர்வதேசம் ஒரு தவறான புரிதலுக்குள் தள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சினம் கொள்ள வைத்தது. வடமாகாண முதலமைச்சருக்கு எதிராகக் காட்டமான கருத்துக்களை வெளியிட்டதுடன் அவரை ஓரம்கட்டும் முயற்சிகளிலும் இறங்கி விட்டார்.

அந்த அடிப்படையில் வடபகுதி அபிவிருத்தி தொடர்பாக யாழ்ப்பாணத்தில் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்துக்கு முதலமைச்சர் அழைக்கப்படவில்லை. இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைமை எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்க வில்லை என்பது மட்டுமன்றி பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதில் கலந்து கொண்டும் இருந்தனர்.

மேலும் அண்மையில் வலி. வடக்கு மீள் குடியேற்றம் தொடர்பாக யாழ். செயலகத்தில் இடம்பெற்ற அரச அதிபர், மீள்குடி யேற்ற அமைச்சர் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்துக்கும் முதலமைச்சர் அழைக்கப்பட வில்லை. ஆனால் வடமாகாண சபையின் சார்பில் அதன் ஆளுநர் கலந்து கொண்டார். இந்தப் புறமொதுக்கல் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வாய்திறக்க வில்லை. அது மட்டுமல்ல தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா அதில் கலந்துகொண்டும் இருந்தார்.

கடந்த அரசு வடமாகாண சபையை இயங்க விடாது பல வழிகளிலும் முட்டுக்கட்டை போட்டது. அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலுவாக எதிர்த்தது. தற்போதைய பிரதமரும் அதையே செய்கிறார். அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை வாய்மூடி அங்கீகாரம் வழங்கி வருகிறது.

இனப் படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காகவே பிரதமர் வடமாகாண முதலமைச்சரைத் திட்டமிட்டுஓரம்கட்டுகிறார். அது மட்டுமன்றி அபிவிருத்தி, குடியேற்றம் போன்ற பிரச்சினைகளில் மாகாண சபையை ஒதுக்கி விட்டு மத்திய ஆட்சியின் கைகளில் அவற்றை எடுத்துக் கொள்கிறார். வன்னியில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அவர் தனது நேரடிக் கண்காணிப் பில் பிரதமர் அலுவலகம் ஒன்றை நிறு வப் போகிறார் எனக் குறிப்பிட்டதையும் நாம் மறந்து விட முடியாது.

அந்த நடவடிக்கைகளுக்கு எதிராக ஓர் [illegible] டை எடுக்காமல் தமிழ்த் [illegible] ப்பின் தலைமை மறைமுக அங்கீகாரம் வழங்கி வருகிறதென்றால் அதிகாரப் பரவலாக் கத்துக்கு கடந்த மூன்று தேர் தல்களி லும் மக்கள் வழங்கிய ஆணையின் நிலை என்ன? அவை தேர்தல் மேடைகளுடன் மட்டுப்படுத்தப்படுவது தான் த.தே.கூட்டமைப்பின் கொள்கையா?

பல்லாயிரம் மக்களைப் பலி கொடுத்த தமிழினம் அந்த இனப்படுகொலையை வெளியே சொல்லும் உரிமைகூட இல்லாத ஓர் இனம் என தமிழ்த் தேசி யக் கூட்ட மைப் பின் தலைமை நம்புகிறதா? இப்படியான சரணடைவை தந்திரோபாய போர்வை போட்டு மறைத்துவிட முடியுமா?

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக நின்று அதை அடையும் வரையில் எமது தந்திரோபாயங்களை நகர்த்துவதன் மூலமே நாம் வெற்றியை அடைய முடியும். ராஜதந் திரம் என்ற பேரில் நாம் நரேந்திரமோடி யையோ, ரணில் விக் கிரமசிங்க வையோ திருப்திப்படுத்தும் வகையில் எங்கள் கொள்கையில் தளர் வுகளை ஏற்படுத் தினால் தோல்வியை விட வேறு எதுவுமே மிஞ்சப் போவதில்லை.

தமிழ் மக்களின் ஐக்கியம் பற்றிப் பேசப் படுகிறது. 2005, 2010 நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்கள் என்பன வற்றில் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குப் பேராதரவை வழங் கித் தமது ஐக்கியத்தைத் தெளிவாகவே வெளிப்படுத்தி இருந்தனர். ஆனால் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்குள் ஓர் உறுதியான ஐக்கியத்தை ஏற்படுத்த முடியவில்லை. இன்றுவரை தமிழ் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யுமளவுக்குக் கூட அவர்களிடம் ஓர் ஒருமைப்பாடுஎட்டப்படவில்லை.

தேர்தல் சமயத்தில் மக்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போகின்றனர். தேர்தல் முடிந்த பின்பு ஆளுக் கொரு பக்கம் அறிக்கை விடுகின்றனர். தேர்தல் மேடைகளில் விடுதலைப் புலிகளின் கொள்கையையும் தமிழ்மக்களின் விடுதலை உணர்வையும், அர்ப்பணிப்பையும் சொல்லி வாக்கு கேட் கின்றனர். வடமாகாண சபையில் இனப் படுகொலை பற்றி தீர்மானம் நிறை வேற்றினால் அவற்றை ஒதுக்குகின்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் தமிழர சுக் கட்சியின் முக்கியத்துவம் என்ற பேரில் சுமந்திரன், இரா.சம்பந்தன் ஆகியோர் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் ஏனைய அனைவரும் தலையாட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுவதே இன்று வரை தமிழ் தேசியக்கூட்டமைப்பில் ஓர் உறுதியான ஐக்கியம் உருவாகாமைக்கான காரணம் என்று மற்றவர்கள் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆனால் மக்கள் வழங் கிய ஆணை பற்றியோ அதை நிறை வேற்றுவது தொடர்பான செல்நெறி பற்றியோ எவரும் கவலைப்படுவ தாகத் தெரியவில்லை.

கடைசியாக தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப் போவதில்லை யென வும் அதில் அங்கம் வகிக்கும் கட்சிக ளிடையே ஒரு புரிந்துணர்வு, ஒப்பந் தம் எட்டப்பட்டு அதன் அடிப்படையில் செயற்படப் போவதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை முதலில் ஐக்கியத்தையும், கொள்கை உறுதிப்பாட்டையும் தமது அமைப்புக்குள் ஏற்படுத்த வேண்டும். மக்கள் எப்போதுமே இலட்சிய உறுதி வழுவாமலும் ஒற்றுமை குலையாமலுமே தமது நடவடிக்கைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் அடையாளங்களை அழிப்பதில் இலங்கை ஆட்சியாளர்களும், இந்தியாவும் பல முனைகளிலும் தீவிர அக்கறை காட்டி வருவது நாம் அறிந்ததே. அந்த வகையில் விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடையாளம் இழக்கச் செய்ய அவர்களுடன் இணைந்து தமிழர் தரப்பில் எவராது மறைமுக நோக்கத்துடன் செயற்படுவார்களானால் அவர்கள் தமிழ் மக்களின் அரசியலிலிருந்து தூக்கி வீசப்படுவது மட்டும் நிச்சயம். மக்களின் ஆணையை மறப்பவர்கள் மக்களால் விரட்டப்படுவது தவிர்க்கப்பட முடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றும் புரியவில்லை

● ஐயர்

ஐயா நான் அரசியல்வாதியல்ல. அரசியல் கதைத்ததும் இல்லை, எழுதியதும் இல்லை. அரச அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவன். ஆனால் தேர்தல் கடமைகள் பல புரிந்தவன். அதன் காரணமாக அரசியல் கட்சிகள் பற்றி சிந்திப்பவன். அப்பப்பா எத்தனை கட்சிகள், எத்தனை குழுக்கள்! பங்குடமை வியாபாரம் போல். பங்கு இலாபக் கணக்குப் பார்ப்பதும் பங்குகளின் தொகைக்கு அடிபடுவதும், பிரிந்து போய் புது வியாபாரம் தொடங்குவதும்.... இதில் பங்குகளான மக்கள் பற்றி யாருக்கும் அக்கறையில்லை. மக்கள் பாவம்.

இப்போது கூட்டமைப்பு தொடர்பில் வரும் செய்திகளை பார்க்கும்போது தேர்தல் கடமை அனுபவம் காரணமாக தேர்தல் கடமையாற்றிய காலங்களில் மக்களால் நிராகரிக்கப்பட்டு தோல்வியடையும் கட்சிகள் பற்றியும் ஒரு சில வாக்குகள் மட்டும் பெறும் கட்சிகள் பற்றியும் விகிதாசார முறையால் குறைந்தளவு வாக்குகளை பெற்றபோது ,ஒரு சில வாக்குகள் வித்தியாசத்தில் ஆசனங்களை பெற்றுக் கொண்ட கட்சிகள் பற்றியும், தமது இருப்பைத் தக்க வைப்பதற்காகக் கூட்டுச்சேரும் கட்சிகள் பற்றியும் சிந்தித்துப் பார்ப்பதுண்டு.

மனித உரிமை ஜனநாயகம் சோசலிஸம் என்ற புனிதமான பெயர்களை பாவித்துக் கொண்டாலும், இங்கு நிகழ்வதோ பதவி ஆசையே தவிர மக்கள் செல்வாக்கோ, மக்கள் சேவையோ அல்ல என்பது வெளிப்படை.

கூட்டமைப்பு கட்சியாக பதிவு செய்யப்பட வேண்டும் என முயற்சிப்பவர்கள் கவனத்துக்கு அரசியலறியாத சிறியேனின் விண்ணப்பம் ஐயா!

ஏன் இந்த கூட்டமைப்பு? மக்களுக்காக சேவை செய்ய முன்வரும் தலைவர்களே இருக்கின்ற கட்சிகளையெல்லாம் கலைத்துவிட்டு எல்லோரும் கொண்டு நிற்கின்றனர். தமக்கு தலைமை தாங்கி தமது உரிமைகளைப் பெற தமக்காக குரல் கொடுக்க ஆக்கபூர்வமான பணிகளைச் செய்யக்கூடியவர்கள் ஒன்றிணைந்து ஒருமுகமாக ஒரு கொடியின் கீழ் ஒரே கட்சியாக, ஏகோபித்துக் குரல்கொடுக்க வேண்டும் என்றுதானே விரும்புகிறார்கள்.

அதிக வாக்குகள் பெற்று விக்னேஸ்வரன் ஐயா தெரியப்பட்டதும், மாவை சேனாதிராசா விட்டுக் கொடுத்து ஏகோபித்த வேண்டுகோள் விடுத்ததால் தானே!

இப்பொழுது மீண்டும் தொகுதி தேர்தல் முறை வரப்போகிறது. வட்டுக்கோட்டை அமிர்தலிங்கம், சாவகச்சேரி நவரத்தினம், கோப்பாய் வன்னிய சிங்கம்... அந்த நாள்கள் மீண்டும் வரலாம்....!

இதையெல்லாம் சிந்திக்க யாருமில்லையா? அல்லது தற்போதைய முறிவுக்கு பத்துப்போட்டு மக்களை சமாதானப்படுத்தி, நாங்கள் எல்லோரும் ஒன்று என காட்டி உலகத்தை ஏமாற்றி பங்குடமையை பதிவு செய்து பங்கிலாபம் பெற்று பயணம் தொடரும் நிலையா?

சம்பந்தன் ஐயா காலத்தில், கட்சிக்காக மக்கள் நலனுக்காக முதலமைச்சர் பதவியை விட்டுக்கொடுத்த தலைவர் மாவை சேனாதிராசா காலத்தில் இவை நடந்தால் உண்டு. இல்லையேல் இல்லைதான் எனலாம். அல்லது செல்வநாயகம் ஐயா சொன்னமாதிரி கோயில்களை கட்டுவோம் கடவுள் காப்பாற்றட்டும்.

கடவுள் காப்பாற்றட்டும்.





# இந்தியா பாகிஸ்தான்

## கடும் சலிப்பு

'அட்டெம்ப்ட்' கார்த்திக் (விஜய் ஆண்டனி), 'மெரிட்' மெல்லினாவை (சுஷ்மா) 'லாண்ட் மார்க்' கடையில் சந்திக்கிறார். இருவருமே வழக்கறிஞர்கள். இருவருக்கும் ஆரம்பத்தில் இது தெரியாமல் ஒரே அலுவலகத்தை வாடகைக்கு எடுத்துவிடுகிறார்கள். வீட்டு உரிமையாளர் யோசனைப்படி, இருவரும் அதனைப் பங்கு போடும் அடிப்படையில் அந்த வீட்டை அலுவலகமாக மாற்றிக்கொள்ளச் சம்மதிக்கிறார்கள். அலுவலகத்தை ஆரம்பித்த பின்னர்தான் இருவருமே வழக்கறிஞர்கள் என்று ஒருவருக்கொருவர் தெரியவருகிறது.

ஒரே இடத்தில் ஒரே தொழிலை இருவர் எப்படிச் செய்ய முடியும்? இடம் யாருக்கு என்கிற பிரச்சினை எழுகிறது. யாருக்கு முதலில் கேஸ் கிடைக்கிறதோ அவருக்கே இந்த இடம் சொந்தம் என்று முடிவு செய்கிறார்கள். ஆனால் வழக்குக் கிடைக்கும்போது இருவருக்கும் ஒரே வழக்கே கிடைக்கிறது. வழக்காளி தரப்பில் ஒருவரும் எதிராளி தரப்பில் ஒருவருமாக வாதாட ஒப்புக்கொள்கிறார்கள். நிலத் தகராறில் சென்னைக்கு வரும் பசுபதி, எம்.எஸ்.பாஸ்கர் ஆகிய சொந்தங்களுக்கு இடையிலான சொத்துத் தகறாறே வழக்கு.

கார்த்திக், மெல்லினாவுக்குள் காதல் இருக்கும். ஆனால், அதைக் காட்டிக்கொள்ளாமல் மோதிக்கொண்டே இருக்கிறார்கள். இதற்கு நடுவில் மெல்லினாவைக் கொல்லச் சிலர் துரத்திக்கொண்டே இருக்கிறார்கள். இந்த மர்ம நபர்களின் பிடியில் இருந்து எப்படித் தப்பிக்கிறார்கள்? அந்த வழக்கு என்ன ஆனது? லாண்ட் மார்க்கில் அங்காடியில் காதலுக்கு மரியாதை பட இறுவட்டில் புதைந்து கிடந்த மர்மம் என்ன? என்பனபோன்ற கேள்விகளுக்கு விடைய்ளிக்கும் விதத்தில் படத்தைக் கட்டமைத்திருக்கிறார்கள்.

முந்தைய படங்களில் தனக்குப் பொருத்தமான கதாபாத்திரங்களைத் தேர்வுசெய்த விஜய் ஆண்டனி, இந்தப் படத்தில் சறுக்கியிருக்கிறார். ரொமான்டிக் காமெடி கலந்த திரைக்கதைக்கு விஜய் ஆண்டனியின் முகமும், பாவனையும் பொருந்துவேனா என்று அடம்பிடிக்கிறது. அவர் காமெடி செய்ய முயற்சித்தாலும் எடுபடவில்லை. பாடல் காட்சிகளில்வேறு தடுமாறுகிறார். வசனங்கள் பேசுவதில் மட்டும் முன்னேறியிருக்கிறார்.

அறிமுக நாயகி சுஷ்மா ராஜ், விஜய் ஆண்டனியுடன் பேசும்போது கோபப்படுவது, எம்.எஸ். பாஸ்கர் அண்ட் கோவிடம் மாட்டிக்கொண்டு முழிப்பது, காதலில் உருகுவது என சுமாராக நடிக்கிறார்.

நண்டு ஜெகன், மனோபாலா, எம்.எஸ்.பாஸ்கர், பசுபதி, ஊர்வசி, டி.பி.கஜேந்திரன் எனப் பலர் இருந்தும் படத்தில் சிரிப்புக்கும் பஞ்சம். நடிப்புக்கும் பஞ்சம். புதுமையோ அழுத்தமோ இல்லாத வசனங்களும் காட்சிகளும் பாடல்களும் அலுப்பை மட்டுமே தருகின்றன.

படம் முழுக்க சீரியஸாய் வரும் ஒரே கேரக்டர் இன்ஸ்பெக்டர் ஷரத். ஆனால், இந்தப் பகுதியும் 'த்ரில்லரு'க்கான தன்மையில் அமையாமல் பொறுமையைச் சோதிக்கிறது.

பசுபதி மகனும், எம்.எஸ். பாஸ்கர் மகளும் காணாமல் போய் ஒரு வாரம் ஆனாலும் அவர்கள் ஊரில் யாருமே தேட மாட்டார்களா? எல்லோரையும் ஒரே இடத்தில் வரவழைத்து சுபம் போட்டு முடிக்க வேண்டிய இடத்தில்தான் சிரிப்பு தொடங்குகிறது. அப்பாடா படத்தை முடித்துவிட்டார்களே என்கிற நிம்மதிச் சிரிப்பு.

நாயகனும், நாயகியும் அடிக்கடி மோதிக் கொள்கிறார்கள். அதனால்தான் இந்தியா பாகிஸ்தான் என்னும் தலைப்பு. இந்தக் காரணம் ஏற்படுத்தும் சலிப்பைவிட மோசமான சலிப்பை முழுப் படமும் ஏற்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையோலை இராமன் க(ரு)தைகள்



## வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைத் தொடர்

# மட்டம் தட்டிய காதை

■ ம.பா.மகாலிங்கசிவம்

தனக்குக் கணக்குப் பாடத்தையும் கணித ஆசிரியர்களையும் பிடிப்பதில்லை எண்டு பனையோலை ராமன் சேர் அடிக்கடி சொல்லுவார். ஏன் சேர் அப்படிச் சொல்றனீங்க எண்டு ஒரு நாள் கேட்டேன். மாணவர்கள், ஆசிரியர்களையும், மற்றவர்களையும் மட்டந்தட்டுறதுக்கு கணித ஆசிரியர்களே காரணம் எண்டு அவர் சொன்னார்.

"இதென்ன சேர்? மொட்டந்தலைக்கும் முழுங்காலுக்கும் முடிச்சுப் போடுறியள்?" நான் வாயைக் கிளறினேன்.

"ஏன் தம்பி! ஆக ஒரு லொள்ளனா இருக்கிறாய்" எண்டு என்னிலை பாய்ந்தார். (அவரின்ரை அகராதியிலை லொள்ளன் எண்டா மூளை குறைந்தவன் எண்டு அர்த்தம்.)

"தம்பி! அவங்கதான் முதலாம் தசமதானத்துக்கு மட்டம் தட்டு, 2ஆம் தசமதானத்துக்கு மட்டந்தட்டு எண்டு மட்டந்தட்டிற கணகுகளையும் படிப்பிக்கிறவங்கள். பொடியளும் ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியா ஆக்களிலை வாய் வைக்கிற மாதிரி கணக்கிலை மட்டந்தட்டின பழக்கத்திலை கடைசியா வாத்திமாரை மட்டந்தட்டுறாங்கள்" எண்டு கோபத்தோடை சொன்னார்.

"ஏன் சேர் இப்பத்தைப் பிள்ளையள் வாத்திமாரை மதிக்கிறேல்லையோ?"

"துப்பரவா இல்லைத் தம்பி. மதிக்கிற மாதிரி இருப்பாங்கள். ஆனா மதிக்க மாட்டாங்கள்" எண்டார். "அதென்ன மதிக்கிற மாதிரி இருப்பாங்கள். ஆனா மதிக்க மாட்டாங்கள் எண்டு சொல்லுறியள்?" நானும் விடேல்லை.

"என்ன தம்பி! பேந்தும் லொள்ளன் மாதிரிக் கதைக்கிறீர்! உதாரணம் சொல்லுறன். ஒரு நாள் யாழ்ப்பாணம் போக பஸ்ஸில ஏறினன். என்னைக் கண்டதுதான் தாமதம் என்னட்டைப் படிச்ச ஒரு பழைய மாணவன் உடனை எழும்பினான். அவன் படிக்கிற காலத்திலை சரியான குழப்படி. வாத்திமாரை மதிக்கமாட்டான். என்னைக் கண்டு சீற்தர எழும்பின உடனை எனக்கு உச்சி குளிர்ந்து போச்சு. படிக்கிற காலத்திலை பிழை விட்டாலும் இப்ப திருந்தி மதிக்கிறாங்கள் தானே எண்டு நினைச்சன். வலு புளுகமாய் இருந்தது. தம்பி என்னைக் கண்ட உடனை சீற்தர எழும்பினீரே. அதுதான் பெரிய சந்தோசம். அந்தச் சந்தோசம், ஒண்டே எனக்கு காணும். நீர் இரும் நான் நிண்டு வாறன் எண்டு சொன்னன். சேர் நான் அடுத்த ஹோட்டிலை இறங்கப்போறன். அதுதான் எழும்பினனான் எண்டு முகத்திலை அறைஞ்ச மாதிரிச் சொன்னான் தம்பி. அவங்கள் ஆசிரியரை மதிக்கிற மாதிரி இருப்பாங்கள். ஆனா மதிக்கமாட்டாங்கள் எண்டு இதைத் தான் தம்பி சொன்னான்."

"போரிலை பயன்படுத்திற விதியளைத்தான் மாணவரிட்டை நான் பயன்படுத்திறனான்" என்று பனையோலை ராமன் சேர் சொன்னார். "அப்படியெண்டா!" எண்டு கேட்டன்.

"தம்பி எதிரியைத் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருந்தா அவன் திருப்பித் தாக்கமாட்டான் என்பது போர் விதி. அது மாதிரி மாணவனைத் தொடர்ந்து மட்டந்தட்டிக் கொண்டே இருந்தா அவனுக்கு வாத்திமாரை மட்டந்தட்டச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பது என்ரைவிதி" எண்டார்.

பனையோலை ராமன் சேர் நேரடித் தாக்குதல், கரந்தடித் தாக்குதல், முழுப் பலத்தையும் ஒன்று சேர்த்துத் தாக்குதல் எனப் பல போர் வியூகங்களை மாணவரை மட்டந்தட்டப் பயன்படுத்தியிருக்கிறார். அதிலை முக்கியமானது கதைகளைச் சொல்லிக் கேள்வி கேட்டு மட்டம் தட்டுதல்.

ஒரு நாள் வாயாடியான, திமிர்ப்பிடிச்ச பொம்பிளைப் பிள்ளை ஒண்டை எழுந்து வகுப்புக்கு முன்னே வருமாறு சொன்னார். "நான் ஒரு கதை சொல்லுவன். கேட்டிட்டுப் பதில் சொல்ல வேணும் சரியே!"

"சரி சேர்!"

"ஒரு சின்னப் பெடியன் றோட்டாலை வந்து கொண்டிருந்தான். அப்ப ஒரு குட்டிக் குரங்கு மரத்தாலை விழுந்தது. இவன் அதைப் பிடிப்பம் எண்டு கலைச்சுக் கொண்டு போனான். அது ஓர் அறைக்குள்ளை புகுந்து கொண்டது. இவன் ஓடிப் போய்க் கதவைப் பூட்டிப் போட்டு ஆக்களைக் கூட்டிக் கொண்டு வருவம் எண்டு போனான். அப்ப அந்தக் குட்டிக் குரங்கு எப்படித் தப்பலாம் எண்டு எல்லா இடமும் பார்த்தது. ஒரு மூலையிலே ஏணி சாத்தி வைச்சிருக்கு. இன்னொரு மூலையிலே ஓடுகள் உடைஞ்சு பெரிய இடை வெளி இருக்கு. பிள்ளை, உனக்குரிய கேள்வி இது தான். இந்த ரண்டையும் பாத்திட்டு அந்தக் குட்டிக்குரங்கு என்னயோசிச்சிருக்கும்?"

"அந்த ஏணியை எடுத்துக் கொண்டு போய் மற்ற மூலையிலை சாத்திப் போட்டு ஓடு உடைஞ்ச பகுதிக்குள்ளாள தப்பிப்போவம் எண்டு நினைச்சிருக்கும். சரிதானே சேர்?"

"இல்லை பிள்ளை! இந்தப் பெரிய குரங்கு யோசிச்ச மாதிரித்தான் அந்தக் குட்டிக் குரங்கும் யோசிச்சிருக்கும் எண்டு சொல்லேலாது தானே!"

மாணவர்கள் பெருஞ் சத்தமிட்டுச் சிரித்தனர். அத்தனை மாணவர் முன்னும் தான் பெரிய குரங்கு ஆக்கப்பட்ட நிலையை எண்ணி அவள் தலை குனிந்தாள். அதுக்குப் பிறகு திமிரா நடக்கிறதில்லை.

இன்னொரு நாள் படிப்பித்துக் கொண்டிருந்த போது கவனிக்காம இன்னொருவருடன் கதைத்துக் கொண்டிருந்த மாணவனைக் கோபத்தோடு பார்த்தார்.

"எழும்படா! ஒரு பெரிய சிங்கத்தை ஒரு பெரிய பெட்டிக்கை நாலு ஸ்ரெப்பில அடைபாப்பம்" என்றார்.

சின்னச் சிங்கம் எண்டாலே கிட்டப் போக அவனுக்குப் பயம். அப்படியிருக்கப் பெரிய சிங்கத்தைப் பிடிச்சுப் பெட்டிக்கை அடைக்கிறதெண்டாச் சும்மாவே! கை, கால் எல்லாம் அவனுக்கு உதறத் தொடங்கிவிட்டுது.

"என்னடா! ஆந்தை மாதிரி முழுசுகிறாய்! நான் நாலு ஸ்ரெப்பில அடைச்சுக் காட்டிறன். கவனமாக கேள். சிங்கத்தைக் கொண்டாறது முதல் ஸ்ரெப். பெட்டியைத் திறக்கிறது 2ஆவது ஸ்ரெப். சிங்கத்தை உள்ளே தள்ளிறது 3ஆவது ஸ்ரெப். பெட்டியை மூடிறது நாலாவது ஸ்ரெப். சரியே! விலாசக் கதை எல்லாம் கதைப்பாய் இது தெரியாதே உனக்கு. மடையா! இன்னொரு சந்தர்ப்பம் தாறன். இந்தக் கேள்விக்காவது பதில் சொல்லு பாப்பம். பெரிய பெட்டிக்கை பெரிய யானையை ஐந்து ஸ்ரொப்பிலை அடை பார்ப்பம்."

வாத்தியார் சிங்கத்தைப் அடைச்சுப் போட்டார். பொடியன் யானைக்காக பயப்படுவான். யானையைக் கொண்டாறது முதல் ஸ்ரெப், பெட்டியைத் திறக்கிறது இரண்டாவது ஸ்ரெப். யானையை உள்ளுக்குத் தள்ளுறது மூண்டாவது ஸ்ரெப். பெட்டியை மூடுறது நாலாவது ஸ்ரெப். பெடியனுக்கு ஐந்தாவது ஸ்ரெப்ப என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. தறபுறஎண்டு முழுசத் தொடங்கினான்.

"மடையா பெரிய கெட்டிக்காரன் மாதிரி அலட்டுவாய். இந்தச் சின்னக் கேள்விக்கு விடை சொல்லத் தெரியாம நிக்கிறாய். நான் சொல்லிறன் கேள். யானையைக் கொண்டாறது முதல் ஸ்ரெப். பெட்டியைத் திறக்கிறது இரண்டாவது ஸ்ரெப். இப்பதானே உள்ளுக்க அடைச்சம் சிங்கம். அதை வெளியே எடுக்கிறது மூன்றாவது ஸ்ரெப். யானையை உள்ளுக்க தள்ளுறது நாலாவது ஸ்ரெப். பெட்டியை மூடிறது அஞ்சாவது ஸ்ரெப். இப்ப விளங்கிச்சுதே!"

பொடியன் வேத்து விறுவிறுத்துப் போனான். சிங்கத்தைப் பெட்டிக்கை அடைச்ச கதைக்கும் யானையை அடைக்கிற கதைக்கும் தொடர்பிருக்கும் எண்டு அவன் கனவிலையும் நினைச்சிருக்கேல்லை. வேத்துக் களைச்சுப் போய் தலைதப்பினாத் தம்பிரான் புண்ணியம் எண்டு தன்ரை இடத்திலை போய் இருப்பம் எண்டு திரும்பினான்.

பனையோலை ராமன் சேர், நான் போர் முறைகளைத்தான் மாணவரிட்டையும் பயன்படுத்திறது எண்டு அடிக்கடி சொல்லிறவர்தானே. எதிரி நிலை குலைந்து ஓடும் போது போர் நிறுத்தத்திற்குச் சம்மதிப்பாரோ! "தம்பி கேள்வி முடியேல்லை. எங்க ஓடப் பாக்கிறாய். இஞ்சை வா" எண்டு கூப்பிட்டார்.

"நீ பெரிய கெட்டிக்காரன். விண்ணன் எண்டு உன்னை மாதிரித்தான் நானும் நினைச்சன். இப்பதான் தெரியுது படுபேயன் எண்டு! இந்தா இந்தக் கேள்விக்கெண்டாலும் பதில் சொல்லு. நான் உன்னைக் கெட்டிக்காரன் எண்டு ஏற்றுக் கொள்கிறன்?" எண்டார்.

"இந்தக் கேள்வியாவது சுகமான கேள்வியாக் கேளுங்கோ" எண்டான் காலில் விழுந்து அழாத குறையாக.

"ஓம்! நல்ல சுவமான கேள்விதான். காட்டிலை சிங்கத்தின்ரை மகளுக்கு கலியாண வீடு, சிங்கம் வீடு வீடாய்ப் போய் இன்விற்றேசன் குடுத்து கட்டாயம் கலியாண வீட்டுக்கு வரவேணும். வராதவை இந்தக் காட்டிலை இனி இருக்கேலாது எண்டு சொல்லி எச்சரிச்சுப்போட்டு வந்தது. கலியாண வீட்டிலண்டு எல்லா மிருகங்களும் வந்திருக்குது. ஆனா ஒரே ஒரு மிருகம்தான் வரேல்லை. அது எது?" மீண்டும் விடை தெரியாக் கேள்விக்குள் தான் மாட்டப்பட்டிருப்பதை அந்த மாணவன் உணர்ந்து கொண்டான். பகிடி விடுவதன் மூலம் தப்ப நினைத்த அவன், "நான் அந்தக் கலியாண வீட்டுக்கே போகவில்லை. நீங்க போன ஆள் சொல் லுங்கோ சேர்!" எண்டான்.

"நக்கல் இருக்கலாம். நளினம் கூடாது. தெரியாதெண்டாத் தெரியாது எண்டு சொல்லிப் போடவேணும். யானைதான் கலியான வீட்டுக்கு வரேல்லை" என்றார் அவர். "ஏன் சேர் யானை வரேல்லை?" கேள்வி மட்டும் இல்லை. விடையும் விளங்காத தர்ம சங்கடத்துடன் மெதுவாக அந்த மாணவன் கேட்டான்.

"மடப்பயலே. என்னத்தைப் படிச்சுக் கிழிக்கிறாய். இப்பதானே யானையைப் பெட்டிக்கைவச்சுப் பூட்டினனாங்கள். அது என்னெண்டு கலியாண வீட்டுக்கு வரும்!" எண்டாரே பாக்கலாம்.

## தங்க இலைகள்

*பேனாக்களுடன் வாழ்ந்து கவிதைகள்*
*பெற்ற என் விரல்கள் இப்போது எல்லாம்*
*உன்னுடன் வாழ்ந்து சாம்பலை பிரசவிக்கின்றன*
*விபசாரியான உன்னை விலைகொடுத்து*
*வாங்கி முத்தமிடத் துடிக்கின்றன என் உதடுகள்*
*உன்னை என் மூச்சுக்காற்றுடன்*
*கலந்து என் நெஞ்சுக் குழிக்குள் இறக்கி வைத்து*
*சுகம் காண்கின்றேன்*
*உன் சுவடுகள் என் இதயத்தை நிரப்பிக்*
*கொண்டே வருகின்றன வெகுசீக்கிரத்தில் முற்றாக*
*நிரம்பிவிடும் என் இதயம் உன் சுவடுகளால்*
*இன்று என்னால் சாம்பலாகும் நீ*
*என்றோ ஒருநாள் பழிதீர்ப்பாய் என்னையும்*
*சாம்பலாக்கி*
*இருந்தும் உன்னோடு வாழ்கின்றேன் நீதரும்*
*சில நொடி சுகங்களுக்காக....!!*



*நிலவன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலத்து ஊற்று

தொடர்கதை

தேவி பரமலிங்கம்



"என்றாப்பா... நீங்க மூண்டு பேரும் கதைக் கிறியள்...? எனக்கொண்டும் விளங் கேல்ல....!" மூவரின் பேச்சுகளாலும் மணி யம் அதனை அறிய ஆசைப்பட்டான். "அது மச்சான்...." சொல்ல முனைந்த சுந்தரம் இடையில் நிறுத்திக் கணேசனின் முகத்தைப் பார்த்தான்.

"பாமா என்னை மன்னிச்சுக்கொள்... வெளிக்கிட்ட அவசரத்தில் எல்லாத்தையும் மறந்திட்டன்..." தன்னுள் மெதுவாய் சொல் லிக் கொண்டான்.

அவளை நினைக்காமல் இருக்க எடுத் துக்கொண்ட முயற்சிகள் தோற்றுப் போயின. மீண்டும் மீண்டும் அவளுடைய நினைவுகளே வந்து ஆட்கொண்டன.

"தம்பி கணேசு....எனி எழும்பிக் குளிச்சிட்டு வா.... சமையல் முடியுது சாப்பிட...." குசினிக்குள் இருந்து சின்னத் தங்கத்தின் குரல் ஒலித்தது.

மதிய உணவுக்கான நேரமும் ஆகிவிட் டதா? தாயின் அழைப்புக் காதில் விழுந்த மறுகணமே இந்தக் கேள்வி அவனுடைய நினைவில் எழுந்து மறைந்தது. எவ்வளவு நேரமாகப்படுத்துக் கிடந்து விட்டேன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

படுக்கையால் எழுந்தவன் பல்லை விளக் கியவாறு குளிக்கக் கிணற்றடிக்குப் போனான். அப்பொழுதும் பாமா வீட்டு பாத் ரூம் ஞாபகத்துக்கு வந்தது. கூடவே முதல் நாள் அவள் குளித்து நிற்கையில் திருட்டுத் தனமாகப் பார்த்ததும் நினைவுக்கு வந்து போயிற்று.

கிராமச் சூழலில் பாமாவோடு வாழக் கிடைத்தால்எத்தனைஇனிமை பயக்கும்? கணேசனின் நினைவலைகள் நீண் டன....

"வாவன்.... தம்பி! சாப் பிட...!" குளித்து வந்து நின்ற கணேசனை அழைத்தாள் சின்னத்தங்கம். இவ்விதம் பாமா அழைக்கும் காலம் எப்போ வரும்? அம்மா கஷ் டப்படாமல் ஓய்வெடுத்துக் கொள்ளும் நிலைமை வந்து விடுமல்லவா?

மனம் கோலமிட மகிழ்வு டன் சாப்பிட்டு முடித்த கணே சனுக்கு வீட்டில் நிற்கச் சங் கடமாக இருந்தது. நண் பர்களைச் சந்தித்து அள வளாவவே மனதுக்குப் பிடித்திருந்தது. இந்தநேரம் மதவடிக்கு ஒன்றுகூட வந்திருக்கமாட்டினம் என் னும் நினைவும் எண்ணத் தில் தைத்தது.

"கணேஸ்....மச்சான் கணேஸ்..."

இருப்புக் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளிக்கிட் டிருந்தான் கணேசன். வாசிகசாலையில் இருந் திட்டு நண்பர்களைத் தேடிப் போனபோதே மணியம் கைகளைத் தட்டிக் கூப்பிட் டான்.

"எப்படியப்பா கொழும் பெல்லாம்...!"

நண்பர் வேறெவரும் வந்து சேரவில்லை. தனிய நின்ற மணியமே கணேசனிடம் குசலம் விசாரித்தான்.

"சும்மா பிழையில்லை... அதுசரி! நீ வேலைக்கு றை பண்ணியதுஎப்படிக்கிடக்கு?" பதில் கூறிக்கொண்டே கூட வேறொரு கேள்வியையும் கேட்டான் கணேசன்.

"முயற்சி தொடர்கிறது, வேலை வாய்ப்புக் கிடைக்கவில்லை...." பண்டிதத் தமிழில் பகிடி யாய் சொன்னான் மணியம்!

"கொழும்புக் காரரெல்லாம் வந்திட்டாப் போல கிடக்கு...!"

சுந்தரம் வரும் பொழுதே கிண்டலுடன் வந்து சேர்ந்தான்.

"அப்ப நாங்க பிறத்தியே...! வரக்கூடாதே...?"

"வரக்கூடாதெண்டு ஆரும் சொன்னதே கணேஸ்...!" கணேசன் தொடுத்த கேள் விக்குப் பதில் கூறிக்கொண்டே நெருங்கி வந்தான் மூர்த்தி.

"அது சரி.. தியாகின்ர சிலமனைக் காணேல்லை...?"

"அட! அது உனக்குத் தெரியாதென்ன...! அவன்தான் புத்திசாலி.. கிளிநொச்சில காணியொண்டை மலிவாகத் தட்டிக் கொண்டு.. விவசாயத்தில் இறங்கீட்டான்..." மணியந்தான் கணேசனுக்கு விவரித்துச் சொன்னான்!

"அதெல்லாம் போகட்டும் கணேஸ். நாங் களொரு கதை கேள்விப் பட்டம் உண் மையே...?" புதிதாக அறிந்துகொண்ட செய் தியைக் கேட்டு இடையில் நிறுத்தினான் சுந்தரம்.

"என்ன கதை ...? யார் சொன்னது...?" கணே சனுக்கு ஆச்சரியம் மேலிட்டது. அதனால் கேட்டான். இடையே சுந்தரத்துக்கு மூர்த்தி கண்களைச் சிமிட்டினான். கணேஸ் அத னையும் கவனித்துக் கொண்டான்.

"உனக்கேன் ஆளை... உண்மையோ இல் லையோ...?" விடுத்துக் கேட்டான் சுந்தரம்.

"அதுக்கிடேல்லை... மூர்த்தி எல்லாருக்கும் சொல்லிப்போட்டான்... இவன் ஓட்டை வாயன்தான்." கணேசன் மூர்த்தியைப் பார்த்துச் சொன்னதைக் கேட்டு அவனும் முகத்தை நெளித்து சமாளித்தான்.

"என்றாப்பா... நீங்க மூண்டு பேரும் கதைக் கிறியள்...? எனக்கொண்டும் விளங் கேல்ல....!" மூவரின் பேச்சுகளாலும் மணி யம் அதனை அறிய ஆசைப்பட்டான்.

"அது மச்சான்...." சொல்ல முனைந்த சுந்தரம் இடையில் நிறுத்திக் கணேசனின் முகத்தைப் பார்த்தான்.

"உம்.... ம் சொல்லு ... சொல்லு ஒருவருக்கு மட்டுமே தெரிஞ்சா ரகசியம், இருவருக்குத் தெரிஞ்சாப் பரகசியந்தானே...!" முகத்தில நகைப்புடன் உத்தரவிட்டான் கணேசன்.

"சுந்தரம் பொறு நான் சொல்றன்... கணேசனுக்குக் கொழும்பில கேள்பிரண்ட் கிடைச்சிட்டு அதுதான்..." முந்திக்கொண்டு சொன்னான் மூர்த்தி.

"இதுதானா.. நானும் ஏதோ எண்டு....!" பிரமாதமா விமர்சிக்கப்படுமென்று கருதிக் கொண்டு நின்ற கணேசனுக்கு மணியம் சொன்னதும் முகத்தில் ஏமாற்ற ரேகை களைப் படரச் செய்தன.

"என்டா மணியம் உப்புடிச் சொல்லீட்டாய்! அவன்ர காதல் சும்மா அப்புடி இப்புடி இல்ல...அமரத்துவம் வாய்ந்த காதல டாப்பா...." விமர்சனத்தைத் தொடக்கி வைத் தான் சுந்தரம். சமத்துவ தரிசனத்துக்கும் வழி திறந்து வைக்கும் காதல் விவரித்தான் மூர்த்தி.

"அப்ப... புரட்சிகரமானதும் புதுமையான தெண்டும் சொல்லுங்கோ...!" கேட்டு நின்று விட்டு மணியம் கூறினான். விமர்சனத்துக்கு உட்பட்டிருக்கும் கதாநாயகன் கணேசன் கேட்டு கதாநாயகி பாமாவை மனத்திரை யில் படம் போட்டான்.

"என்ன கணேஸ்...? நாங்க கதைச்சுக் கொண்டிக்கிறம் ஒண்டும் பறையாமல் கனவு காணுறாய்...!" பேச்சுகளிடையே கணேசனில் கண்ணாய் நின்ற மணியம் குழப்பினான்.

"நான் என்னத்தைக் கதைக்கிறது. நீங்கதான் கதைக்கிறியளே...!" சம்பிரதாயபூர்வ பதி லைக் கூறிச் சமாளித்தான் கணேசன். கிராமத்து மதகடியில் நண்பர் நால்வரின் வாதப் பிரதிவாதங்கள் இரு மணி நேரம் நிகழ்ந்து நிறைவுற்றது. பொழுதும் கருகி வந்ததால் வாதங்களை ஒத்தி வைத்துச் சென்றனர்.

கணேசன் ஊரில் கழித்த ஒரு வாரமும் நண் பர்களைச் சந்திக்கும் பொழுதுபோக்கு களில் எப்படிப் போனதென்றே தெரியவில்லை. அவனது உடல் கிராமத்திலும் உயிர்கொழும் பிலுமாக நாள்களும் நகர்ந்தன்.

## காதலுக்கும் கல்வியே அடிப்படை

கே.எஸ்.சிவஞானராஜா

காதலுக்கும் கல்வியே அடிப்படை! அதை
கைவிட்டால் நீயோ உருப்படாய்
காதல் கவர்ச்சியால் வருவதல்ல!அது
கடவுளால் தரப்படுவது
காதல் எளிமையின் பிறப்பிடம் ! அது
கண்கடை தெரியாமல் பறப்பதல்ல
காதலுக்காய் ஒருபோதும் கை நீட்டாதே!அது
கண்ணீரைக் கொண்டு வந்தே தீரும்
காதலுக்கு ஒரு போதும் விலைபேசாதே! அது
கலகத்திலே முடிந்து விடும்

காதலைச் சரிவரப் பேணாவிட்டால், அது
கைதியாக்கிச் சிறையில் அடைந்து விடும்
காதலென்று முதலில் கைவைக்காதே! அது
கைநீட்டி உன்னை அடிக்கும்
காதல் நோதலின் இருப்பிடமுமல்ல, அது
சாதலின் வதிவிடமுமல்ல
காதலுக்கு அப்பா அம்மா பொறுப்பல்ல
கைக் குழந்தைக்குக் கடவுளும் பொறுப்பல்ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரி. அமைச்சரவையில் அதிக பெண்களுக்கு வாய்ப்பு



## லண்டன் முதல்வரும் அமைச்சரவையில்

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இம்முறை முதல் தடவையாக மாற்றுக் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் தமது கொன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்களை மாத்திரம் வைத்து அமைச்சரவையை அமைக்கின்றார். கடந்த வாரம் வியாழக்கிழமை 7ஆம் திகதி நடந்தேறிய பொதுத் தேர்தலில் எதிர்பாராத விதமாக அவரது கொன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுக் கொண்டது. அதனால் முன்போல் லிபரல் ஜனநாயகக் கட்சியின் ஆதரவு அவருக்கும் இம்முறை தேவைப்படவில்லை. இதுவரை அமைச்சரவையில் பங்கு பற்றுபவர்களாக ஐந்து பெண்களின் பெயர்களை கமரூன் அறிவித்துள்ளார்.

திங்கட்கிழமை இணையத்தில் பிரதமர் வெளியிட்ட ஒரு தகவலில் லண்டன் முதல்வர் வோரிஸ் ஜோன்சன் தனது அமைச்சரவைக் கூட்டங்களில் பங்குபற்றுவார் என்று அறிவித்தார். சஜித் ஜாவித் அமைச்சரவையின் வர்த்தக செயலாளராகப் பதவி வகிப்பார் என்றும் அம்பர் ருத் மற்றும் பிரிதி படேல் ஆகியவர்களை உயர்நிலை அரச பதவிகளுக்கு உயர்த்தி இருப்பதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார். ருத் சக்திதுறை செயலாளராகவும் படேல் தொழில் வழங்கும் துறை அமைச்சராகவும் பணி புரிவார்கள் என்றார்.

பிரதமர் செய்துள்ள நியமனங்களைப் பார்க்கையில் பெரும்பாலும் பழையவர்களையே நீடிக்கச் செய்ய விரும்புகிறார் என்று தெரிகிறது. ஜோர்ஜ் ஒஸ்போன், தெரெசாமே, பிலிப் யஹாம்மொண்ட் மற்றும் மைக்கல் போலோன் ஆகியவர்கள் முறையே நிதித்துறை உள்ளக செயலர், வெளியுறவு செயலர் மற்றும் பாதுகாப்பு செயலர் பதவிகளை தக்க வைத்துக் கொள்கிறார்கள். கல்வித்துறை செயலர் நிக்கிமோகன், தொழில் மற்றும் ஓய்வூதிய செயலர் இயயயின் டன்கன் ஸ்மித், பிரபுக்கள் சபையின் தலைவர் ஹிடினா ஸ்டோவன் ஆகிய அனைவரும் அந்தந்தப் பதவிகளில் அமர்த்தப்படுகிறார்கள் தேர்தலுக்கு முன்னர் கலாசார செயலராக இருந்த ஜாவித் தேர்தலில் தோல்வியுற்றுள்ள லிபரல் ஜனநாயகக் கட்சியின் வின்ஸ் கேவல் வகித்த வர்த்தகம் தொடர்பான பதவியைப் பெற்றுக் கொள்கின்றார். படேல் தேர்தலுக்கு முன்னர் திறைசேரியின் நிதித்துறை செயலராக இருந்தவர்.

ருத் முன்னர் சக்தி திணைக்களத்தில் ஒரு இளநிலை அமைச்சராக இருந்தவர். காலநிலை மாற்றம் தொடர்பான பிரிவும் அவருக்குக் கீழேயே இருந்தது. ஐ.நாவின் காலநிலை மாநாடு லீமாவில் நடந்தபோது அதில் கலந்துகொள்ளாமைக்காக அவர் கண்டிக்கப்பட்டிருந்தார்.

கலாசாரம், ஊடகம் மற்றும் விளையாட்டுத்துறை செயலராக ஜோன் வைட்டிங் டேல் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விவரங்களைக் கவனிக்கும் நாடாளுமன்றக் குழுவின் தலைவராக அவர் இருந்துள்ளார். இந்த நியமனமானது பி.பி.சியின் நிதி வழங்கல்களை மறு சீரமைக்க கமரூன் விரும்புகிறார் என்பதைக் காட்டுவதாக இருக்கின்றது.

தேர்தலின்போது கமரூன் வாக்களித்தபடி பிரதமர் பதவியிலிருந்து இடைக்காலத்தில் விலகி லண்டன் முதல்வராகச் செயற்படுவார் என்பது நிறைவேற்றப்படுமானால் கொன்சர் வேடிவ் கட்சியின் தலைவராக போரிஸ் ஜோன்சன் வரக்கூடும் என்றும் அதன் மூலம் பிரதமராகும் வாய்ப்பு இருப்பதாகவும் கருதப்படுகின்றது. ஜோன்சன் 2008ஆம் ஆண்டிலிருந்து லண்டன் முதல்வராக இருந்து வருகிறார். இப்போது மேற்கு லண்டனில் ஆக்ஸ்பிரிஜ் தொகுதியிலிருந்து நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளார். 2016ஆம் ஆண்டு மே மாதம் வரை அவர் முதல் வராகத் தொடர்ந்து பதவி வகிப்பார். கொன்சர் வேடிவ் கட்சியின் பிரதித் தவிசாளராக றொமேர்ட் ஹாபன் என்பவரை கமரூன் நியமித்துள்ளார்.

# எபோலா உயிர்க்கொல்லி நோயிலிருந்து விடுதலை





மேற்கு ஆபிரிக்க நாடான லைபீரியாவில் 4,700 மனித உயிர்களைக் காவுகொண்ட பயங்கர எபோலாவிலிருந்து அந்த நாடு முற்றிலும் விடுவிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகர் வீதிகளில் வரிசையாகக்கூடி எபோலாவிலிருந்து நாடு விடுதலை பெற்றுவிட்டது என்ற அறிவிப்பை விமரிசையாகக் கொண்டாடியுள்ளார்கள். கடந்த வாரம் இறுதிப் பகுதியில் உலக சுகாதார நிறுவனம் இந்த அறிவித்தலை வெளியிட்டது. தலைநகர் மொன்றாலியாவில் தொழிலாளர்களும் பாடசாலை மாணவர்களும் இந்த அறிவித்தலைக் கொண்டாடும் விதத்தில் அரசு, விடுமுறை அறிவித்திருந்தது.

# உலக கடல் மட்டம் வேகமாக உயர்கிறது

உலக கடல் மட்டம் முன்னர் கருதப்பட்டது போலன்றி வேகமாக உயர்ந்து வருகின்றது. உலகின் துருவப் பகுதிகளில் காணப்படும் பனிக்கட்டிப் பாறைகளும் பனிப்பாளங்களும் வேகமாக உருகிவருவதே இதற்குக் காரணம். ஓர் ஆய்வின் மூலம் தெரியவந்துள்ள இந்த விடயமானது. விஞ்ஞானிகளின் கவலையை அதிகரித்துள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் கடல்மட்டம் உயரும் வேகம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கிறது அந்த அறிக்கை. அது இயற்கை காலநிலை மாற்றம் என்ற சஞ்சிகையில் கடந்த திங்களன்று வெளியானது. இந்தக்



கண்டு பிடிப்பானது சமீப காலமாகக் கடல் மட்ட உயர்வு வேகம் குறைவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டு வந்த அறிக்கைகளுக்கு முரண்பாடாக இருப்பது தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் உலகம் முழுவதும் அலைகளின் வேகத்தன்மை தொடர்பான பதிவுகளையும் நீர் மட்டங்கள் மற்றும் நில அமைப்பில் ஏற்படும் நகர்வுகள் தொடர்பான விண்கலத் தரவுகளையும் ஒருங்கே சீர்தூக்கிப் பார்த்ததில் இந்தப் புதிய தகவலைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

கடந்த இரண்டு பத்தாண்டு காலத்தில் பெருங் கடல் நீர்மட்டம் உயர்வதானது வருடத்துக்கு 2.6 மற்றும் 2.9 மில்லி மீற்றர் அளவாக இருந்துள்ளது என்று இந்த ஆய்வில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவரான தஸ்மானிய பல்கலையின் கிறிஸ்தோபர் வாட்சன் கூறியிருந்தார்.

# நைஜீரிய இராணுவத்தில் குழப்பம்

## போராட பலர் மறுப்பு



**உலக நடப்பு**

ரெங்கன்

போகோஹராம் தீவிரவாதிகளை எதிர்த்து போராடி வரும் நைஜீரிய அரசின் இராணுவத்தில் குழப்பமான நிலைமையொன்று தோன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இராணுவத்தினர் போராட மறுக்கிறார்கள். அதனால் நூற்றுக்கணக்கானவர்கள் தூக்குத் தண்டனைக்கு உள்ளாக நேர்ந்துள்ளது.

எங்களுக்கு வீரம் இல்லாமல் போகவில்லை. எமக்குத் தேவையான ஆயுதங்கள் கிடைக்கவில்லை என்று போராட மறுக்கும் இராணுவச் சிப்பாய் ஒருவர் கூறினார். தற்கொலை செய்வது போல் போராடுவது சாத்தியமில்லை என்கிறார்கள் அவர்கள்.

அண்மையில் கலகம் செய்வதில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் குறைந்தது 66 சிப்பாய்களுக்கு இரா ணுவ நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்தது. இன்னும் பலர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு காலத்தில் ஆபிரிக்காவில் பலம் மிக்க இராணுவமாகக் கருதப்பட்ட நைஜீரியா இர்ராணுவம் இப்போது கிளர்ச்சியாளர்களை எதிர்த்துப் போரிடுவதில் தளர்வு நிலைக்கு உள்ளாகியுள்ளது. புதிதாக அதிபர் பதவியில் அமர்ந்துள்ள முகமது புகாரிக்கு இராணுவத்தை சீரமைப்பதே முக்கிய பிரச்சினையாக இருக்கப் போகிறது என்கிறார்கள் விமர்சகர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதற்கும் கிறுங்காத அ.தி.மு.க. அம்மா



> ஜெயலலிதாவுக்கு எப்போதுமே ஒரு ராசியுண்டு. மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகு படுமோசமான தோல்வியும், படுமோச மான தோல்வியைத் தொடர்ந்து மிகப்பெரிய எழுச்சியும்தான் ஜெயலலிதாவின் தனித் தன்மை.



■ அதிரன்

மேன்முறையீட்டு வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவும், சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரும் கர்நாடக உயர் நீதிமன்றத்தால் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கல் டி.குன்ஹாவின் தீர்ப்பை முற்றிலும் நிராகரித்து, கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சி.ஆர். குமார சாமி தலைமையிலான சிறப்பு அமர்வு தீர்ப்பளித்திருக்கிறது.

சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டதை ஜெயலலிதா மீண்டும் தமிழக முதல்வராகப் பதவியேற்க உள்ளதை அ.தி.மு.க தொண்டர்கள் ஆவலோடு எதிர்பார்த்து வருகின்றனர்.

அவர் இன்று தமிழக முதல்வராக பதவியேற்பார் என்று கூறப்பட்டு வந்த நிலையில், தற்போது பதவியேற்பு நிகழ்ச்சியைச் சற்றுத் தள்ளிப்போட முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது. சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்புக் குறித்து பல்வேறு சர்ச்சைகள் எழுந்துள்ளன. தீர்ப்பளித்த நீதிபதி குமாரசாமியே தீர்ப்பை திருத்துவது குறித்து அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். மேலும், தமிழக அரசியல் கட்சிகள் சார்பில், கர்நாடக முதல்வர் சித்தராமையாவுக்கு, மேன் முறையீடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

எனவே, கர்நாடக அரசு அடுத்த என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை தெரிந்த கொண்ட பிறகு, தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொள்வது குறித்து முடிவு செய்து கொள்ளலாம் என்று ஜெயலலிதா தரப்பு முடிவெடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பு அ.தி.மு.க. தொண்டர்களுக்கு மகிழ்ச்சியையும், அரசியல். சாரா சாமானியத் தமிழ் மக்களுக்கு நிம்மதிப் பெருமூச்சையும் அளித்திருக்கிறது.

கடந்த 3 மாதங்கள், யாரையும் சந்திக்காமல் தனித்திருந்து பிரச்சினையை எதிர்கொண்டு வெற்றி பெற்ற ஜெயலலிதாவின் மன உறுதிக்கும், அவரது விடுதலைக்காக வேண்டாத தெய்வமில்லை என்று பிரார்த்தித்த தொண்டர்களுக்கும் கிடைத்திருக்கும் வெற்றி இது. கடந்த ஆறு மாதங்களாக முதல்வர் பன்னீர்ச்செல்வம் உள்ளிட்ட அ.தி.மு.க. அமைச்சரவைக்கு இருந்த எதிர்பார்ப்பெல்லாம் உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு வெளிவந்து, ஜெயலலிதா மீண்டும் முதல்வராகப் பதவி ஏற்க வேண்டும் என்பதுதான். அதனால் பல நல்வாழ்வுத் திட்டங்களில் அவர்களால் முழுமையாகக் கவனம் செலுத்த முடியாததில் தவறு காண முடியாது.

சட்டத்தின் போர்வையில் அரசியல் லாபங்களுக்காக வழக்குத் தொடுக்கப்படுவதை ஊக்குவிக்கக் கூடாது. சட்ட நெறிமுறைகள், அரசமைப்புச் சட்டம், குற்றவியல் நடைமுறைகளுக்கு உட்பட்டுக் குற்றம்சாட்டப்பட்டவர்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடாது. வருமானத்துக்குப் பொருந்தாத சொத்துகள் குவித்ததாகக் கூறப்படும் கணக்குகளை ஆராயக் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு விசாரணை அதிகாரி வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நீதிபதி குமாரசாமியின் கருத்து எதிர்காலத்தில் அரசியல் காரணங்களுக்காகத் தொடுக்கப்படும் இது போன்ற வழக்குகளில் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஜோன் மைக்கல் டி. குன்ஹா தனது தீர்ப்பில் சுட்டிக் காட்டியிருந்த ஒவ்வொரு அம்சத்தையும், உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி தனது 919 பக்கத் தீர்ப்பில் மிகத் தெளி வாக மறு ஆய்வு செய்து, சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை நிராகரித்திருக்கிறார். நீதிபதி குமாரசாமியின் தீர்ப்பு ஏனோதானோ என்று எழுதப்பட்ட தீர்ப்பு அல்ல. விரிவாக அலசப்பட்ட, விவரங்களுடன் கூடிய தீர்ப்பு.

வழக்குப் பதிவு செய்த அன்றைய தி.மு.க. ஆட்சியில், கட்டுமானம் தொடர்பான பொதுப் பணித்துறைப் பொறியாளர்களின் மதிப்பீடுகள் அதிகமாக இருந்தன என்பதாலும், திருமணச் செலவினங்கள் சரியாக மதிப்பிடப் படவில்லை என்பதாலும் அந்தச் செலவினங்களை உயர்நீதிமன்ற நீதிபதி குமாரசாமி மறு மதிப்பீடு செய்திருக்கிறார். அதற்குப் பிறகு கணக்கிடும்போது வருமானத்துக்கு அதிகமான சொத்து மதிப்பு மொத்த வருமானத்தில் வெறும் 8.12 வீதம்தான். இதன் அடிப்படையில்தான் உயர்நீதிமன்றம் அனைவரையும் விடுதலை செய்திருக்கிறது.

அரசு ஊழியர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்குகளில் உச்ச நீதிமன்றமும், ஏனைய உயர்நீதிமன்றங்களும் காட்டியிருக்கும் முன்னுதாரணங்களின் அடிப்படையில்தான் நீதிபதி குமாரசாமி தனது தீர்ப்பை வழங்கி இருக்கிறார்.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆதாரங்களைச் சரியான முறையில் கணிக்க கீழமை சிறப்பு நீதிமன்றம் தவறிவிட்டது என்றும், அதனால் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறானது என்றும் நீதிபதி குமாரசாமி தெரிவித்து, கீழமைச் சிறப்பு நீதிமன்றம் நான்கு பேருக்கும் விதித்த தண்டனை, அபராதத் தொகை ஆகியவற்றை ரத்துச் செய்ததுடன் நான்கு பேரின் பிணைப் பத்திரங்களையும் விடுவித்திருக்கிறார்.

ஜெயலலிதாவுக்கு எப்போதுமே ஒரு ராசியுண்டு. மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகு படுமோசமான தோல்வியும், படுமோசமான தோல்வியைத் தொடர்ந்து மிகப்பெரிய எழுச்சியும்தான் ஜெயலலிதாவின் தனித்தன்மை. ஐந்து முறை தமிழக முதல்வராகப் பதவி ஏற்றவர் என்ற கருணாநிதியின் சாதனையை, மேல்முறையீட்டில் விடுவிக்கப்பட்டு, மீண்டும் முதல்வராவதன் மூலம் ஜெயலலிதா சமன் செய்துவிட்டார்.

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில், குற்றம்சாட்டப்பட்ட 4 பேரும் விடுதலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் அவசர அவசரமாகத் தீர்ப்பு மாற்றி எழுதப்பட்டுள்ளதோ என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த வழக்கில், தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில்மேன்முறையீடு செய்ய கர்நாடக அரசுக்கும், வழக்கைத் தொடர்ந்த சுப்பிரமணிய சுவாமிக்கும் தார்மீக உரிமை உள்ளது. தீர்ப்பு வெளியான போது, தீர்ப்பை எதிர்த்து தான் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்போவதில்லை என்று சுப்பிரமணியசுவாமி கூறிவிட்ட நிலையில், தற்போது, கர்நாடக அரசு மட்டுமே மேல் முறையீடு செய்ய முடியும். அவ்வாறு மேன் முறையீடு செய்யப்படுமா? இல்லையா? என்பது விரைவில் தெரியவரும்.

ஜெயலலிதாவின் விடுதலையால் மீண்டும் பேரெழுச்சி கண்டிருக்கிறது அ.தி.மு.க. தமிழகத்தில் அ.தி.மு.க. மீதான ஆதரவு அலை மேலும் வலுவடைவதற்கான சந்தர்ப்பங்களையே ஜெயலலிதாவின் விடுதலை உருவாக்கி விட்டிருக்கிறது. தமிழக முதல்வர் என்ற பதவியில் மீண்டும் அமரவிருக்கும் ஜெயலலிதாவின் எதிர்காலத் திட்டம் என்னவாகும் என்ற எதிர்பார்ப்பு இப்போதே எழுந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழிதீர்க்கப்படும் பீற்றர்சன்




கிரிக்கெட் உலகில் தற்பொழுது ஐ.பி.எல். தொடருக்கு அடுத்து பிரபல்யமாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் விடயம் கெவின் பீற்றர்சனுக்கும் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இங்கிலாந்து கிரிக்கெட்டுடன் தொடர்புடைய ஏனைய அதிகாரிகளுக்கும் இடையிலான பனிப்போர்தான்.

பீற்றர்சனை இங்கிலாந்து நிர்வாகம் புறக்கணிக்க ஆரம்பித்தது 2012ஆம் ஆண்டில்தான். 2012ஆம் ஆண்டில் இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான தொடரின் போது அப்போதைய இங்கிலாந்தின் தலைவராக இருந்த ஸ்ரோஸ் தொடர்பாக பீற்றர்சன் தென்னாபிரிக்க வீரர்களுக்குகுறுஞ்செய்தியொன்று அனுப்பினார். ஸ்ரோஸின் சுய மரியாதையைக் காப்பாற்றும் விதமாக அந்தக் குறுஞ்செய்தியில் குறிப்பிட்ட விடயத்தை தென்னாபிரிக்க வீரர்களோ அல்லது இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையோ வெளியிடவில்லை. ஆனால் இந்தச் செய்தி ஒரு பாரதூரமான குற்றம் என்று பீற்றர்சன் கண்டிக்கப்பட்டார். இதன் பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் பீற்றர்சனுக்கும் இடையே சில பனிப்போர்கள் வெடித்தன. இதனையடுத்து பீற்றர்சனை கழற்றிவிட வேண்டும் என்று காத்துக்கிடந்த இங்கிலாந்து ஆஸஸ் தொடரில் அடைந்த தோல்விக்கு பீற்றர்சனை பலிக்கடாவாக்கி அணியில் இருந்து புறந்தள்ளியது. ஆனால் பீற்றர்சனை விடவும் சொதப்பியவர்களை தொடர்ந்தும் அரவணைத்தே வைத்திருந்தது.

அன்றிலிருந்து பீற்றர்சன் மீண்டும் அணியில் இணைவதற்காக பல முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் எதுவும் எடுபடவில்லை. பீற்றர்சன் கழகங்களுக்கிடையில் விளாசிய ஒவ்வொரு சதமும் இங்கிலாந்து ஊடகங்களைப் பேசவைத்தன. இங்கிலாந்து மக்கள் பலரும் பீற்றர்சனுக்கு ஆதரவு தெரிவித்தனர். கிரிக்கெட் நட்சத்திரங்களும் பீற்றர்சனுக்கு தமது ஆதரவை தெரிவிக்காமல் இல்லை. இவ்வாறான ஆதரவுக் குரல்களுக்கெல்லாம் ஒரே வரியில் 'பீற்றர்சனின் திறனில் எமக்குச் சந்தேகம்' என்று பதிலளித்துவிட்டு உலகக்கிண்ணத் தொடருக்கு புறப்பட்டுப்போனது இங்கிலாந்து அணி. கேட்டால் 'கிரிக்கெட்டின் தாயகம் ஆனால் காலிறுதிக்குக்கூட தகுதி பெறவில்லை.' பங்களாதேஷிடம் மண்ணைக் கௌவிக்கொண்டு நாடு திரும்பியது.

இங்கிலாந்தின் உலகக்கிண்ணத் தோல்விக்குப் பின்னர் பீற்றர்சன் மீண்டும் இணையும் பட்சத்தில் அணி வலுப்பெறும் என்று சிந்தித்த ஊடகங்கள் பீற்றர்சனுக்கான குரலை ஓங்கச் செய்தன. அதற்கேற்ப பீற்றர்சனும் அடித்து நொருக்கிக் கொண்டிருந்தார். கிரிக்கெட் உலகமே பெரும் கௌரவமாக நினைக்கும் இங்கிலாந்து எதிர் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் நெருங்கும் நிலையில் இந்தத் தொடரில் இடம் பெறவேண்டும் என்ற முனைப்பில் பீற்றர்சன் தீவிரம் காட்டி கழகங்களுக்கிடையிலான தொடரில் சர்ரே கழகத்துக்காக முச்சதத்தைப் பதிவுசெய்தார். பீற்றர்சனின் இந்த அதிரடி நிலைமையில் 'திறனில் சந்தேகம்' என்று கூறமுடியாத இங்கிலாந்துக் கிரிக்கெட் தனது காரணத்தை சிறிது மாற்றி 'நீண்ட நாள்களுக்கு நிலைத்து நிற்கக்கூடிய வீரர்களே அணிக்குத் தேவை' என்கிறது.

நீண்டகாலம் நிலைத்து நிற்கக்கூடிய இளம் வீரர்களை தேடும் இங்கிலாந்துக் கிரிக்கெட் பீற்றர்சனை விட அதிக வயதுடைய ருரொட்டை எதற்காக திருப்பியழைத்தது. பீற்றர்சனின் வயதையொத்த அலிஸ்டர் குக், இயன் பெல் ஆகியோரை எதற்காக இன்னமும் அணியில் வைத்துள்ளது. திறமையைப் புறக்கணித்து இவ்வாறான பழிவாங்கல் போக்கை கடைப்பிடிக்கும் இங்கிலாந்தா 'கிரிக்கெட்டின் தாயகம்'.

# ஜிந்தாவுக்கு ஒரு மடல்

நான் நலம் ஆனால் நீங்கள் நலமா எண்டு கேட்டு வெந்த புண்ணில வேலப்பாய்ச்ச நான் விரும்பல. உங்கட நம்பிக்கையான பஞ்சாப் அணியை எல்லா அணிகளும் தூக்கிப் போட்டு பந்தாடுறதில நீங்கள் மனசுடைஞ்சு இருப்பியள். தோல்வியும் வெற்றியும் வீரனுக்கு சகஜம் எண்ட விதத்தில் இதயெல்லாம் விட்டுத்தள்ளுங்கோ. ஆனால் பாருங்கோ நீங்கள் விடுகிற ஒவ்வொரு அறிக்கையும் தான் ஐ.பி.எல். ரசிகர்களாக இருக்கிற எங்கள உறுத்திக் கொண்டு இருக்குது. உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றின ஆஸ்திரேலியா அணியில் இருந்து அதிகப்படியான வீரர்களை ஏலத்தில எடுத்திட்டு ஏதோ ஐ.பி.எல். கிண்ணத்தையும் கைப்பற்றியமாதிரி 'ஆஸ்திரேலிய வீரர்கள் எனது சொத்துக்கள்' 'மக்ஸ்வெல் எனது தூண்' 'உலகக்கிண்ணம் வென்ற வீரர்களை வைத்து ஐ.பி.எல். கிண்ணத்தையும் கைப்பற்றுவேன்' 'பெய்லி தலை சிறந்த அணித்தலைவர்' எண்டு பக்கம் பக்கமா அறிக்கையள அவிட்டு விட்டியள். கடைசியில உங்கட நிலைமையளப் பாத்தியளே எட்டு அணிகளில எட்டாவது அணியா இருக்கிறியள். இது போதாதெண்டு நீங்கள் யாரிலயெல்லாம் நம்பிக்கை வச்சியளோ (ஜோன்சன், மார்ஷ்) அவயள பாதியிலயே சொந்த நாடுகளுக்கு திருப்பியனுப்பிட்டியள். கேட்டால்' அவர்கள் சர்வதேச ஆட்டங்களில் நம்பிக்கை செலுத்த வேண்டும்' எண்டு அதுக்கும் ஒரு அறிக்கைய தயாராக வைச்சிருக்கிறியள். மற்ற வீரர்களுக்கெல்லாம் சர்வதேச ஆட்டங்கள் இல்லையோ?

இது ஒரு பக்கம் இருக்கட்டும் இதைவிட பெரிய முறைப்பாடு ஒண்டு உங்களில இருக்குது. என்னெண்டு கேட்டியளெண்டா பாருங்கோ நீங்கள் கிரிக்கெட்டைப் பார்க்க வந்தால் ஒரு இடத்தில இருக்கிறதில்லையாமே. ஆடுறியள்ளாம் பாடுறியளாம் துள்ளிறியளாம் குதிக்கிறியளாம் எண்டு மிக நீண்ட முறைப்பாட்டுப் பட்டியல் உங்களில இருக்குது. ஏன் இப்பிடி கடைசியில இப்ப நீங்கள் பஞ்சாப் விளையாடுற ஆட்டங்கள பாக்கவே வாறதில்லையாம். கேட்டால் படப்பிடிப்பில்கவனம்செலுத்துகிறேன்எண்டுபிலாவிடுறியளாம். தெரியாம இல்ல தெரிஞ்சுதான் கேக்குறன் ஏழு ஐ.பி.எல். தொடரிலும் நீங்கள் நடிகையாகத்தான் இருந்தனியள் இவ்வளவுகாலமும் நடிச்சுக் கொண்டுதான் இருந்தனியள் இந்த நடிப்பில ஏழு வரிசமா காட்டாத அக்கறை ஏன் இந்த எட்டாவது வரிசத்தில திடீரெண்டு வந்துச்சுது.

அறிக்கையோட அறிக்கையா 'அடுத்த வரிசம் பஞ்சாப் பட்டைய கிளப்பும்' எண்டு சொல்லிப்போட்டு உள்ளூர் வீரர்கள நம்பிற வழியப் பாருங்கோ. அதவிட மிகமுக்கியம் ஆட்டத்த பார்க்க வந்தால் பிள்ளையள் மாதிரி அமைதியா உட்காருங்கோ. அடுத்த வருசம் சந்திப்பம்.

நன்றி.




## துளித்துளியாய் விளையாட்டு ...

- பாகிஸ்தானுடன் மீண்டும் கிரிக்கெட் உறவு ஆரம்பிக்க வேண்டுமாயின் இந்திய வீரர்களுக்கு 24மணி நேர அதியுயர் பாதுகாப்பு வேண்டும் என்று இந்திய மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.
- 2012ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் நான்கு பேர் கொண்ட நானூறு மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்க வீரர்கள் வெள்ளிப்பதக்கத்தைக் கைப்பற்றினர். அந்த நால்வரில் ஒருவர் ஊக்கமருந்தை உபயோகித்தமை தற்பொழுது உறுதியாகியிருப்பதனால் இந்த நால்வரின் பதக்கங்களையும் தற்பொழுது சர்வதேச ஒலிம்பிக் நிர்வாகம் திரும்பப் பெற்றுள்ளது.
- தொடர்ந்து ஆட்டங்களில் பங்கெடுத்துக்கொண்டிருப்பதனால் தனக்கு சிறிதுகாலம் ஓய்வுவேண்டும் என்று இந்தியாவின் நட்சத்திர வீரர் ஹோக்லி தெரிவித்துள்ளார்.
- லாலிகா தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ரியல் மட்ரிட் கழகம் அரையிறுதியில் தோல்வியடைந்து வெளியேறியுள்ளது. இதற்காக ரியல் மாட்ரிட்டின் நம்பிக்கை வீரர் றொனால்டோ ரசிகர்களிடம் மன்னிப்பும் கேட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org